பக்கங்கள் : 20+VIII=28

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 புரட்டாதி 16 ஞாயிற்றுக்கிழமை (02.10.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 310

# சு.க. தேர்தல் விஞ்ஞாபனம் பற்றி ஜே.வி.பி. அலட்டிக் கொள்ளாது!

## பொது வேட்பாளர் என்ற ரீதியில் மஹிந்தவுக்கு ஆதரவு தொடருமாம்

கொழும்பு,ஒக்ரோபர்2

**ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தயாரிக்க இருக்கும் ஜனாதிபதித் தேர்தல் விஞ்ஞாபனம் தொடர்பாக ஜே.வி.பி. எதுவும் அலட்டிக்கொள்ளாது. தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ பொதுவேட்பாளராக - பொதுச் சின்னத்திலேயே - போட்டியிடுகின்றார். அந்த வகையில் அவரோடு செய்துகொண்ட உடன்பாட்டின் அடிப்படையில் ஜே.வி.பி. அவருக்கு ஆதரவு வழங்கும்.**

**- இவ்வாறு கட்சியின் நிலைப்பாட்டை திட்டவட்டமாகத் தெரிவித்தார் ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினரான சந்திரசேன விஜயசிங்க.**

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் விஞ்ஞாபனம் வரிக்கு வரி சுதந்திரக் கட்சியின் தற்போதைய கொள்கைப்படிதான் அமையும் என்று ஜனாதிபதி குமாரதுங்க அறிவித்திருப்பது பற்றி ஜே.வி.பியின் நிலைப்பாட்டைக் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சியின் தற்போதைய கொள்கைகளுக்கு அமைவாகவே வரிக்கு வரி தேர்தல் விஞ்ஞாபனம் தயாரிக்கப்படவேண்டும் என்றும் -

அந்தத் தேர்தல் விஞ்ஞாபனத்தின் அடிப்படையில் மஹிந்த ராஜபக்ஷ தேர்தலில் போட்டியிடவேண்டும் என்றும் -

ஜனாதிபதி தலைமையில் கூட்டிய சுதந்திரக்கட்சியின் மத்தியகுழு முடிவு செய்திருந்தது.

இந்த முடிவின் பின்னணியில் ஜே.வி.பி.

(20ஆம் பக்கம் பார்க்க)


## ஜனாதிபதி பிரான்ஸ் புறப்பட்டார்

கொழும்பு,ஒக்.2

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் நாளை நடைபெறும் யுனெஸ்கோ அமைப்பின் 3ஆவது பொதுமாநாட்டில் பங்குபற்றுவதற்காக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று அதிகாலை அங்கு பயணமானார்.

இந்த மாநாட்டில் 'அனைவருக்கும் கல்வி' என்ற தலைப்பில் ஜனாதிபதி உரையாற்றுவார். அங்கு தங்கியிருக்கும் காலத்தில் பிரான்ஸின்

(20ஆம் பக்கம் பார்க்க)



தேர்தல் பிரசாரத்துக்காக கிழக்கு மாகாணம் அக்கரைப்பற்றுக்கு வருகை தந்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு அங்கு பலத்த பாதுகாப்பு அளிக்கப்பட்டது.

குண்டுதுளைக்காத கண்ணாடி கூண்டின் உள்ளே நின்றவாறு அவர் உரையாற்றுகிறார். வெளியே காவலுக்கு நிற்கும் படைச் சிப்பாய்.

## பிரதமரின் தொண்டர்களுக்கு வழங்கப்பட்ட தண்ணீர் போத்தல்களால் பெரும் சர்ச்சை

### ஆழிப்பேரலை பாதித்த மக்களுக்கென உதவியாக கிடைத்தவையா?

கொழும்பு,ஒக்.2

ஆழிப்பேரலை இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக மலேஷிய அரசு வழங்கிய சிறிய சுத்திகரிக்கப்பட்ட குடி தண்ணீர் போத்தல்கள் தேர்தல் பணியில் ஈடுபடும் தொண்டர்களுக்கு வழங்கப்படுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்று கொழும்பு செய்தி வட்டாரம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

கிழக்கு மாகாணம், ஒலுவிலில் நேற்று முன்தினம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கலந்துகொண்ட நிகழ்வு ஒன்றில் பங்குபற்றுவதற்காக தெற்கில் இருந்து சுமார் 5 ஆயிரம் கட்சித் தொண்டர்கள் பஸ்கள் மூலம் அங்கு அழைத்துச் செல்லப்பட்டிருந்தனர் என்று கூறப்படு கிறது. அவர்களுக்கு பயணத்தின் போது சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர்ப் போத்தல்கள் வழங்கப்பட்டன.

இந்தத்தண்ணீர்ப் போத் தல்களில் 'சுனாமி உதவி' என அடையாளம் பொறிக்கப்பட்டிருந்தது என்றும் -

பாதிக்கப்பட்ட மக்களுக்கு மலேஷிய அரசு வழங்கிய உதவிப் பொருள்களில் இவை அடங்கியிருந்தன என்றும் -

கொழும்பு செய்தி வட்டாரம் ஒன்று தெரிவித்தது.

இந்த முறைகேடு குறித்துத் தகவல் வெளியாகி இருப்பது பெரும் சர்ச்சையை உருவாக்கியிருப்பதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன. (ஐ-3)

## தமிழரசுக் கட்சியின் தலைவராக இரா.சம்பந்தன் நேற்றுத் தெரிவு

யாழ்ப்பாணம்,ஒக்.2

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நிர்வாகக் குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்தில் உள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. கட்சியின் இடைக்காலத் தலைவராக இதுவரை பணியாற்றி வந்த பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் ஆய்வு தொடர்பாக வெளிநாட்டில் தங்கி இருக்க வேண்டியுள்ளதால் அவரது இணக்கப்பாட்டுடன் அவரைப் பொறுப்பில் இருந்து விடுவிப்பதாகக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

சிற்றம்பலத்தின் இடத்துக்கு இரா.சம்பந்தன் தலைவராக ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

கட்சியின் அமைப்பு, நிர்வாகக் கட்டமைப்பு என்பவற்றை விரிவுபடுத்துவது தொடர்பாகக் கூட்டத்தில் ஆராயப்பட்டது. இதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க

(20ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் தாயகப் பிரதேச மறை மாவட்டங்களை ஒன்றிணைத்து தனி அலகாக்க முயற்சி

### பரிசுத்த பாப்பரசரிடம் கோரிக்கை முன்வைப்பு

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார் ஆகிய மறைமாவட்டங்களை இணைத்து தனி அலகாகச் செயற்பட தமிழ் கத்தோலிக்க அமைப்புகள் முயற்சி மேற்கொண்டுள்ளன.

இது தொடர்பான கோரிக்கை ஒன்றினை யாழ். ஆயர் அதிவண. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை பரிசுத்த பாப்பரசர் 16ஆவது பெனடிக்ரிடம் அண்மையில் முன்வைத்துள்ளார்.

1979ஆம் ஆண்டு இதுபோன்ற கோரிக்கை ஒன்றினை அக்காலப்பகுதியில் யாழ். ஆயராக இருந்த அதிவண. தியாகுப்பிள்ளை முன்வைத்திருந்தார். எனினும், அந்தக் கோரிக்கை சிங்கள இன ஆயர்களால் ஏற்றுக்கொள்ளப்படாமல் செயலற்றுப்போனது.

இந்த நிலையில், 20 வருட கொடிய யுத்தத்தினாலும், கரையோரப் பிரதேச கத்தோலிக்கர்கள் ஆழிப்பேரலை அனர்த்தத்தினாலும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், அவர்களுக்கான மீட்புப் பணி மற்றும் கத்தோலிக்க

(20ஆம் பக்கம் பார்க்க)

## வாழைச்சேனையில் இரு இளைஞர்கள் சுடப்பட்டு மரணம்!

மட்டக்களப்பு,ஒக்.2

வாழைச்சேனை கைலாசபிள்ளையார் கோயில் வளாகத்தில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு இடம்பெற்ற சூட்டுச் சம்பவத்தில் இரு இளைஞர்கள் கொல்லப்பட்டனர்.

வாழைச்சேனையைச் சேர்ந்த தில்லைநாதன் மதிவாணன் (வயது-23), மாதவன் உமாதரன் (வயது - 23) ஆகியோரே கொல்லப்பட்டவர்களாவர்.

இச்சம்பவத்தில் பாலுமகேந்திரா என்ற இளைஞர் காயத்துக்கு உள்ளாகி வாழைச்சேனை

(20ஆம்-பக்கம் பார்க்க)

இலங்கை தரைப்படையின் 56ஆவது ஆண்டு நிறைவை ஒட்டிய மத வைபவம் நேற்று அனுராதபுரம் மகா போதியில் நடைபெற்றது. பெரும் எண்ணிக்கையான சிப்பாய்கள் முன்னிலையில் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சாந்த கோட்டேகொட மலர் தட்டுடன் காணப்படுகிறார்.



## ஹெலி விபத்து!

கொழும்பு, ஒக்.2

அம்பாறை மாவட்டத்தில் உகண விமானத்தளத்தில் நேற்றுமுன்தினம் மாலை 4 மணியளவில் விமானப்படையின் சிறிய ஹெலிக்கொப்டர் ஒன்று விபத்துக்குள்ளானது.

'எச்.ஐ.' ரக ஹெலி ஒன்றே பயிற்சியில் ஈடுபட்டிருந்த சமயம் இயந்திரத்தில் கோளாறு ஏற்பட்டது என்றும் -

உடனடியாக அது தரையிறக்கப்பட்ட போது விபத்துக்குள்ளாகி சிறுசேதத்துக்குள்ளானது என்றும் - விமானப்படை தெரிவித்தது. (ஐ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ஐரோப்பிய ஒன்றியத்தின் தடைக்கு பின்னணியில் செயற்பட்ட ரகசியக் குழு



களியாட்டத்தில் கலந்துகொண்டோர்...

விடுதலைப் புலிகளுக்கு எதிரான ஐரோப்பிய ஒன்றியத்தின் நடவடிக்கைக்குக் காரணமான சிங்கள கொள்கை வகுப்பாளர்கள் லண்டனில் களியாட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர் என்று இணையத் தளம் ஒன்று படங்களுடன் செய்தி வெளியிட்டுள்ளது.

ஸ்ரீலங்காவின் அனைத்து அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளையும் அறிவாளர்களையும் உள்ளடக்கிய குழுவை உருவாக்கியுள்ள அரசு, அக்குழுவை லண்டனைத் தலைமையகமாகக் கொண்டு இரகசியமாக செயற்படவைத்து வருகிறது.

அக்குழுவில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் திருமதி கீர்த்தி சுமனசிறி, துணைச் செயலாளர் நந்தா கருணாநாயக்க, ஜே.வி.பி. பொதுச் செயலாளர் தர்சன ஹெட்டியாராச்சி, ஜாதிக ஹெல உறுமயவின் அனுரா மெடகொட, சிங்கள மையத்தின் விமல் எதிர்வீர, சட்டத்தரணி சந்த சேனாதீர, டி.எச். அமைப்பின் ஜோர்ஜ் வித்தியரட்ண, வரலாற்றுத்துறை பிரபல பேராசிரியர் லக்ஷ்மன் பெரேரா, வகுல குணபால, பிரியந்த பெரேரா, சுமல் விமலசிறி, பிரபல வர்த்தகர் லலித் பெரேரா, சரத் விஜயசிங்க, சட்டத்தரணி மகிந்த பெரேரா, ஊடகவியலாளர் பந்துல ஜெயசேகர உள்ளிட்டோர் இக்குழுவில் இடம்பெற்றுள்ளனர்.



இக்குழுவில் உள்ள 25 பேரும் இணைந்து அனைத்து உலகத் தலைவர்களையும் தனித்தனியே சந்தித்து தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளும்படி பரப்புரைகளைத் தொடர்ந்து நடத்தி வருகின்றனர்.

ஒவ்வொரு நாட்டினதும் குட்டி அரசியல்வாதிகள் முதல் முக்கிய தலைவர்கள் வரை இந்தச் செயற்குழு சந்தித்துப் பேசி வருகிறது.

இவர்களின் ஒரு முயற்சியாக விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஐரோப்பிய ஒன்றியம் தடை விதித்ததை அடுத்து தங்கள் வெற்றியைக் கொண்டாட உற்சாக களியாட்டம் ஒன்றிற்காக உணவு விடுதியில் கூடியிருந்தபோது இந்த முகங்கள் அம்பலமாகின.

அந்தக் களியாட்டக் கூட்டத்தில் ஐரோப்பிய ஒன்றியத் தடைக்காகக் 'கடுமையாக உழைத்தவர்கள்' பாராட்டப்பட்டார்கள்.

இந்தச் சமாதான காலத்தில் சிறிலங்காவுக்கு கொள்கை வகுத்துக் கொடுத்து வருபவர்களும் இவர்களே. இதில் இடம்பெற்றுள்ள அனைவரும் சிங்களவர்கள். சிங்கள அறிவாளர்கள். இந்த இரகசியக் குழுவின் செயற்பாட்டுக்காக சிறிலங்கா அரசு கோடிக் கணக்கான ரூபா நிதியை ஒதுக்கீடு செய்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

- இவ்வாறு அந்த இணையத்தளம் தெரிவித்துள்ளது.

(ஐ)

## புங்குடுதீவு கடற்கரையில் அழுகி ஒதுங்கிய சடலம்

புங்குடுதீவு கடற்பகுதியில் கரையொதுங்கியதாகத் தெரிவித்து அழுகிய நிலையில் சடலம் ஒன்று நேற்று நண்பகல் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை புங்குடுதீவுக் கடற் பகுதியில் சிதைந்த நிலையில் கரையொதுங்கிய இச்சடலத்தை ஊர்காவற்றுறைப் பொலீஸார் எடுத்து வந்து யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைத்தனர்.

சடலம் மிகவும் உருக்குலைந்து துர்நாற்றம் வீசியதால் பொலித்தீன் பையினால் பொதிசெய்யப்பட்டிருந்தது. அது ஆணினுடையதா, பெண்ணினுடையதா என்பது தெரியவில்லை. அடையாளம் காண்பதற்காக சடலம் யாழ். ஆஸ்பத்திரியின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (ஜ-7-15)

## இன்றைய ஆட்டங்கள்

நவக்கிரி எல்லாளன் விளையாட்டுக் கழகத்தின் 14ஆவது ஆண்டு நிறைவு தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்டுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டம் இன்று பிற்பகல் 3 மணிக்கு கழக விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

காட்சிப் போட்டியில் நவசக்தி வி.கவும் எல்லாளன் வி.கவும் மோதவுள்ளன. இறுதிப் போட்டியில் கரணவாய் மத்தி வி.கவும் இளவாலை யங்ஹென்றீஸ் வி.கவும் மோதுகின்றன. (எ-202)

* * *

யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கம், தமிழீழ விளையாட்டுத்துறை ஆகியவற்றின் அனுசரணையுடன் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்தும் 20 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய - கிரிக்கெட் சுற்றுப் போட்டி இன்று ஆரம்பமாகவுள்ளது.

கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் இன்றைய ஆட்டங்களில் கலந்துகொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

- காலை 8.15 மணி கொக்குவில் மத்திய ச.ச.நிலைய வி.க. எதிர் சுன்னாகம் நியூ ஸ்ரார் வி.க.
- நண்பகல் 11.25 மணி - மானிப்பாய் பரிஷ் வி.க. எதிர் யாழ்ப்பாணம் பற்றீஸியன் வி.க.
- பிற்பகல் 2.15 மணி யங்ஸ்ரார் வி.க. எதிர் சுழிபுரம் விக்டோரியன்ஸ் வி.க.

(3-86-190)

# இன்றைய நிகழ்வுகள்

சாவகச்சேரி, ஒக்.2

பருத்தித்துறை மறைக் கோட்ட இளைஞர் எழுச்சி நாள் நிகழ்வு இன்று பருத்தித்துறை தும்பளை லூர்த்து அன்னை தேவாலயத்தில் நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை மறைக் கோட்ட இளைஞர் மன்றங்களுக்கிடையில் நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டிய போட்டியாளர்களுக்கான பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (3-31)

* * *

வட்டு. கிழக்கு ஜனசக்தி நிலையமும் விநாயகர் கிராம நல்லொழுக்க சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கமும் இணைந்து நடத்தும் சமூக மேம்பாட்டு அறிவியல் கருத்தரங்கு இன்று காலை 9.30 மணிக்கு ஜனசக்தி சனசமூக நிலைய மண்டபத்தில் தலைவர் க.மணிராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி. மேற்கு பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸும் சிறப்பு விருந்தினர்களாக வலி.மேற்குப் பிரதேச சபையின் செயலாளர் இ.இராசதுரை உட்பட மற்றும் பலர் கலந்துகொள்வர்.

(எ-29)

* * *

கோப்பாய், ஒக்.2

கோப்பாய் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையம் நடத்தும் பாலவிஹாஸ் தினம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு விருந்தினர்களாக கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரம், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அதிபர் ந.சிவகடாச்சம் ஆகியோர் கலந்துகொள்வர்.

நிகழ்வில் ஆசியுரையை சத்தியசாயி சேவா வடபிராந்திய இணைப்புக் குழுத் தலைவர் இ.வசந்தசேனன் நிகழ்த்துவார்.

(3-72)

* * *

சர்வதேச சிறுவர் முதியோர் தின விழா இன்று பிற்பகல் 2.30 மணியளவில் யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

யாழ்.பெரிய கடை மகளிர் அபிவிருத்தி சங்கத் தலைவி திருமதி இந்திராணி தங்கராசா தலைமையில் நடைபெறவுள்ள மேற்படி நிகழ்வில் யாழ். மாவட்ட சிறுவர் நன்னடத்தை அதிகாரி திருமதி க.சிவராசா முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்வார்.

(3-13)

* * *

கொழும்பு மனிதநேய அமைப்புகளின் கூட்டமைப்பின் அனுசரணையுடன் சமூக அபிவிருத்தி மன்றம் நடத்தும் சமாதானமும் அபிவிருத்திக்குமான செயற்றிட்ட பயிற்சி நெறி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

சமூக அபிவிருத்தி மன்றத் தலைவி திருமதி என்.ஜெகதீசன் தலைமையில் நடைபெறும் இந்தப் பயிற்சி நெறியில் 'சமாதானமும் அபிவிருத்தியும் மக்களின் இயல்வு வாழ்கையும்' என்னும் தலைப்பில் யாழ். மாவட்ட மனிதநேய அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் எஸ்.பரமநாதனும் 'பெண்களும் சமாதானமும்' என்னும் தலைப்பில் அச்செழு சேமிப்புக் கழகத் தலைவர் செல்வி வி.ரி. நல்லதம்பியும் உரையாற்றவுள்ளனர்.

(3-13)

* * *

இலங்கை ஆசிரியர் சங்கத்தினால் நடத்தப்படும் கல்வி நிர்வாக சேவை, அதிபர் சேவை, ஆசிரியர் சேவை முதலாம் வகுப்பு பரீட்சைகளுக்கான தொடர் வழிகாட்டல் கருத்தரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் யாழ். இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இன்றைய தினம் தொடர் கருத்தரங்கின் நேர அட்டவணை வழங்கப்படும். பரீட்சைக்கு விண்ணப்பிக்காத ஆசிரியர்களும் கலந்து கொண்டு பயன்பெற [illegible]

(3-13)

உங்கள் விமானப் பயணத்திற்கு!
Aero Lanka
In Domestic Operation
New way of flying
Head office
No.500, Galle Road,
Wellawatte,
Colombo-06
Tel:2505632-3 Fax:2500626
Jaffna office
No.86, PointPedro Road,
Jaffna. Tel:021-2226242
Fax:021-2225600
Branch
No:14, New Market Building
Chavakachcheri
Tel:021-2227979 Fax: 021-2227979
Trinco Office
No.47, Kandy Road,
Trincomalee.
Tel:026-2221519
Fax:026-2221519
யாழ்⇆கொழும்பு | யாழ்⇆திருகோணமலை⇆கொழும்பு

# கோண்டாவில் களஞ்சிய ஊழியர்கள் பணி நீக்கம் குறித்து முறைப்பாடு

## மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம்

யாழ்ப்பாணம், ஒக்.2

கோண்டாவிலில் இயங்கும் அரச உணவுக் களஞ்சியத்தில் பணிபுரிந்த ஊழியர்கள் தாங்கள் எவ்வித முன்னறிவித்தலும் இன்றி கடமையில் இருந்து இடைநிறுத்தப்பட்டிருக்கின்றனர் எனத் தெரிவித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்திருக்கின்றனர்.

1996ஆம் ஆண்டு முதல் 2002ஆம் ஆண்டு வரை சுமார் ஆறு வருடங்கள் தாங்கள் தற்காலிக ஊழியர்களாகப் பணிபுரிந்து வந்தனர் என்றும் மூன்று மாதங்களுக்கான முற்பணம் தரப்பட்டு திடீரென தாங்கள் பணியில் இருந்து முன்னறிவித்தல் இன்றி விலக்கப்பட்டிருப்பதாகவும் - ஊழியர்கள் தங்கள் முறைப்பாட்டில் தெரிவித்திருக்கின்றனர்.

பருத்தித்துறை துறைமுகத்தில் கப்பல் மூலம் இறக்கப்படும் பொருள்களைக் களஞ்சியப்படுத்தும் களஞ்சியத்திலேயே இவர்கள் பணிபுரிந்துவந்தனர்.

இவர்களது முறைப்பாடு குறித்து விசாரிப்பதற்கு முன்பாக இவர்களது நியமனம் தொடர்பான விவரங்களை மனித உரிமைகள் ஆணைக்குழு பெற்றுக்கொள்ள உள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட ஊழியர்கள் தமக்கு நஷ்ட ஈடு வழங்கப்படவேண்டும் என்று கோரியிருக்கின்றனர்.

(ஐ-ரி)

# தியாகி அறக்கொடை நிலையத்தில் சிறுவர் மைதானம் திறப்பு

யாழ்ப்பாணம், ஒக்.2

தியாகி அறக்கொடை நிறுவனத்தினால் நடத்தப்படும் ரி.சி.ரி. சிறுவர் இல்லத்தில் சிறுவர் தின விழா நேற்று சனிக்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் நிறுவன ஸ்தாபகர் வாமதேவா தியாகேந்திரனின் தாயார் திருமதி சொ.வாமதேவா சிறுவர்களுக்குரிய விளையாட்டு மைதானத்தைத் திறந்துவைத்தார். ரி.சி.ரி. நிறுவனச் செயலாளர் சி.கமலநாதன் தலைமையில் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

உரும்பிராய் இந்துக் கல்லூரி, மகாஜனக் கல்லூரி மற்றும் பெரியபுலம் மகா வித்தியாலய மாணவர்கள் 14 பேருக்கு காலணிகள் இலவசமாக வழங்கப்பட்டன.

(3-9)

விளையாட்டு மைதானம் திறந்துவைக்கப்பட்டபோது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# ஐரோப்பிய ஒன்றியத்துக்கு இது இழுக்கன்றி வேறில்லை

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியம் அண்மையில் விடுத்த அறிக்கை - அறிவிப்பு- தமிழர் தரப்பில் எரிச்சலையும் விசனத்தையும் இவற்றுக்கு மேலாக சீற்றத்தையும் ஏற்படுத்தியிருக்கின்றது.

யுத்தம் நிறுத்தப்பட்டு அமைதி முயற்சிகளுக்கான வாய்ப்பு இருக்கும் சூழ்நிலையில் இத்தகைய தலையீட்டுக்கு வழி செய்யும் அறிவிப்புகள் அவசியம்தானா என்ற கேள்வி எழுகின்றது.

இதற்குப் பதிலளிப்பதற்குப் பொருத்தமானவர் விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம்தான். அமைதி முயற்சிகளில் - சமாதானப் பேச்சுகளில் - தமிழர் தரப்பில் முக்கிய பிரதிநிதியாகப் பங்குபற்றியவர் அவர். இந்த அமைதி முயற்சிகளுக்கு நடுவே -அனுசரணைத் தரப்பு ஊடாக - சர்வதேச சமூகம் எமது பிரச்சினையில் எவ்வாறு முறையற்றுத் தலையீடு செய்கின்றது என்பதை நீண்டகாலத்துக்கு முன்னரே அவர் வெளிப்படுத்தியிருக்கின்றார். தமிழரின் விடுதலைப் போராட்ட வரலாற்றை 'போரும் சமாதானமும்' என்ற நூலில் அவர் ஆவணப்படுத்தியுள்ளார். அதன் தமிழ் வடிவமும் தற்போது வெளிவந்துள்ளது. அந்த வரலாற்று ஆவணத்தின் இறுதிப் பக்கங்கள் இந்தச் சர்வதேசத் தலையீட்டை நாசூக்காக வெளிப்படுத்துகின்றன. அதுதான் அவரது ஆவணத்தில் முத்தாய்ப்பாக அமையும் அம்சமும்கூட:

*சமாதானப் பேச்சுகளின்போது நோர்வே அரச பிரதிநிதிகள் தமது மத்தியஸ்தப் பணியைத் திறம்படச் செய்தனர்; நடுநிலைப் பண்பை நேர்மையுடன் பேணினர்; பகையுணர்வும் விரோதப் போக்கும் தலைதூக்கா வண்ணம் இரு தரப்பினர் மத்தியிலும் பரஸ்பரம் நல்லெண்ணத்தையும் நல்லுறவையும் பேணி வளர்க்க உதவினர்; தர்க்கீகமான வாதங்களையும் கருத்தாடல்களையும் ஊக்குவித்து, பரஸ்பர புரிந்துணர்வை ஆழமாக்க உதவினர்; இவ்விதம் மிகவும் நுட்பமாகப் பேச்சுகளை வழிநடத்திச் சென்ற நோர்வே இராஜதந்திரம் படிப்படியாகச் சர்வதேச நாடுகளின் மேலதிக தலையீட்டுக்கு இடைவெளியை அனுமதித்துத் தவறிழைத்தது. பலம் பொருந்திய நாடுகளின் தனிப்பட்ட புவியியல் - கேந்திர அபிலாசைகளும் அதிகார வீச்சுகளும் பேச்சில் பங்குகொண்ட இருதரப்பினரது அதிகாரம் சமவலு உறவில் பாதிப்பை ஏற்படுத்தின. உலக அரசுகளின் கூட்டணியான சர்வதேச சமூகம், ஸ்ரீலங்கா அரசின் நலன்களுக்குச் சார்பாக நின்றது. இதனால், சம உறவு நிலை எமக்குப் பாதகமாக அமைந்தது. உதவி வழங்கும் சர்வதேச நாடுகள் ஸ்ரீலங்கா அரசின் தூண்டுதல் காரணமாக அரசியல் தீர்வுக்கு வரம்புகளைத் திணிக்கத் துணிந்தன. இத்தலையீடானது. எமது அரசியல் தகைமையையும் தலைவிதியையும் நாமே நிர்ணயித்துக் கொள்ளும் எமது சுயாதீன உரிமையைப் பாதித்தது. சர்வதேச சமூகத்தின் தலையீடு மற்றும் நெருக்குவாரம் மூலம் புலிகளைக் கட்டுப்படுத்தி அமுக்கும் (Containment) தனது அந்தரங்கத் திட்டத்தையே 'சர்வதேசப் பாதுகாப்பு வலைப்பின்னல்' என ரணில் விக்கிரமசிங்க கூறிவந்தார். சமாதானத்தின் பெயரால் சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்புடன் விக்கிரமசிங்க அரசு விரித்து வைத்த சர்வதேச சதிவலைப் பொறிக்குள் சிக்கிவிடாது இருப்பதில் எமது இயக்கத் தலைமை மிகவும் எச்சரிக்கையாக இருந்தது. சமாதானப் பேச்சுகளை எமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி, தமிழரின் தேசிய இனப்பிரச்சினையைச் சர்வதேச மயப்படுத்துவதில் நாம் வெற்றி கண்டோம். ஆனால், அதேவேளை - எமது மக்களின் விடுதலைப் போராட்ட இலட்சியத்தில் சர்வதேச சக்திகள் குறுக்கிட்டு, தலையீடு செய்வதை நாம் வன்மையாக எதிர்த்தோம். மூன்றாம் தரப்பு அனுசரணையாளரின் மத்தியஸ்தத்துடன் எமது மக்களின் பிரச்சினையை நேர்மையுடன் பேசித் தீர்க்கும் பக்குவமும் அதிகாரமும் அற்ற விக்கிரமசிங்கவின் நிர்வாகம் அமெரிக்காவின் தலைமையிலான உலக நாடுகளை அணி சேர்த்துப் புலிகளைப் பொறியிட முனைந்ததும் பேச்சுகள் முடங்கிப் போனதற்கு இன்னொரு காரணமாகும்.''*

- இவ்வாறு தனது நூலின் இறுதிப் பக்கங்களில் மதியுரைஞர் பாலசிங்கம் குறிப்பிட்ட விடயங்களின் ஒரு தெறிப்புத்தான் ஐரோப்பிய ஒன்றியத்தின் தற்போதைய அறிக்கை.

யுத்த நிறுத்த உடன்பாட்டைச் செம்மையாகப் பேணுவது குறித்துப் பேசுவதற்கு இணங்கியுள்ள ஸ்ரீலங்கா அரசும் தமிழீழ விடுதலைப் புலிகளும் அந்தப் பேச்சை எங்கு நடத்துவது என்பது குறித்து ஒரு முடிவுக்கு வரமுடியாமல் முரண்பட்டு நிற்கின்றனர். இந்த விடயத்தில் விடுதலைப்புலிகள் இணங்காத ஓரிடத்தை - கட்டுநாயக்கா விமான நிலையச் சுற்றாடலை - பொருத்தமான இடமாகத் தான் சிபாரிசு செய்வதாகத் தெரிவித்து, ஒரு தலைப்பட்சமாக நோர்வே அனுசரணையாளர்கள் பகிரங்கமாக அறிவித்தமை கூட ஒரு பக்கம் கோடிடும் இந்த வகைச் செயற்பாட்டில்தான் அடங்குகின்றது.

சுமார் இருபது ஆண்டுகள், பதினெண்ணாயிரம் போராளிகளையும் சுமார் ஐம்பதினாயிரம் பொதுமக்களையும் பலிகொடுத்து, பல்லாயிரம் கோடி ரூபா சொத்துக்களையும் உடைமைகளையும் இழந்து, கல்வி முதல் அபிவிருத்திவரை பலதுறைகளிலும் நலன்களைப் பறிகொடுத்து, தாம் நடத்திய விடுதலைப் போராட்டத்தை ஈழத்தமிழர்கள் இன்று இடைநிறுத்தி வைத்துவிட்டு, அமைதித் தீர்வுக்கு - இணக்க முடிவுக்கு - வாய்ப்பளிப்பதற்கு இடமளித்திருக்கின்றார்கள் என்றால் அதற்குக் காரணம் தங்களுக்கு நீதியான, நியாயமான தீர்வு ஒன்றைத் தென்னிலங்கை சிங்களத் தலைமைகள் தந்துவிடும் என்ற நம்பிக்கையால் அல்ல. இலங்கை விவகாரத்தில் சர்வதேச சமூகம் நீதி, நியாயமாக நடந்து கொள்ளும், பக்கம் கோடாமல் செயற்பட்டு, தமிழர்களின் நியாயமான அபிலாசைகளையும் உரிமைகளையும் பெற்றுத்தரும் போக்கில் அது செயலாற்றும் என்ற நம்பிக்கையால்தான்.

ஆனால், விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் சுட்டிக்காட்டியமை போல அந்த நடுநிலைப் போக்கிலிருந்து சர்வதேச சமூகம் விலகும்போது தமிழர் தரப்பும் வேறு வழியின்றி விபரீத முடிவுகளை எடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படும் என்பதை, தமது தனிப்பட்ட புவியியல் - கேந்திர அபிலாஷைகளுக்கும் அதிகார வீச்சுகளுக்குமாகச் சர்வதேச சமூகத்தைப் பக்கம் சாய்வதற்கு வழி நடத்துகின்ற பலம் பொருந்திய நாடுகளும், அந்த நாடுகளைத் தமது பொய்ப்பிரசார நடவடிக்கைகள் மூலம் தவறாகத் திசை திருப்புகின்ற ஸ்ரீலங்காத் தரப்பும் சிந்திக்க வேண்டும்.

ஐரோப்பிய ஒன்றியம் ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை வைத்து - அல்லது இலங்கை அரசுத் தரப்பு சமர்ப்பித்திருக்கக் கூடிய உண்மைக்குப் புறம்பான ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு தமிழர்களின் ஏக - அதிகாரபூர்வ - பிரதிநிதிகளான விடுதலைப் புலிகளின் சர்வதேச அரசியல் பணிகளுக்குத் தடை விதித்ததன் மூலம், பேச்சு மேசையில் ஸ்ரீலங்கா அரசும் புலிகளும் சமம் என்ற- பேச்சுக்கு அடிப்படையான - நிலையைச் சீர்குலைத்து, தமிழர் தரப்பைப் பலவீனப்படுத்தி, சிங்களம் விரும்பும் அரைகுறைத் தீர்வைத் தமிழர் மீது திணிப்பதற்கு ஸ்ரீலங்கா அரசுடன் கூட்டுச் சேர்ந்து முயற்சி எடுக்கின்றது. இப்படி பொங்குதமிழை ஒட்டிய பிரகடனம் மூலம் தமிழர்கள் சுமத்தியிருக்கும் குற்றச்சாட்டு தன்னை நடுநிலைப் போக்குடைய அமைப்பாகப் பாசாங்கு பண்ணி, அதிகம் பேசும் ஐரோப்பிய ஒன்றியத்துக்கு நல்லதோர் சாட்டை.

பலம் பொருந்திய வல்லாதிக்க நாடுகளின் தனிப்பட்ட விருப்பு, வெறுப்பு அபிலாஷைகளைத் தன் தோளில் தூக்கிப் போட்டுக் கொண்டு அவற்றின் ஏவல் நாயாக - வேலைக்காரனாக - கைப் பொம்மையாக - ஐரோப்பிய ஒன்றியம் மாறிவருவது அதில் அங்கம் வகிக்கும் இருபத்தைந்துக்கும் அதிகமான நாடுகளின் தனிப்பட்ட பெருமைக்கும், சிறப்புக்கும், தனித்துவத்துக்கும் இழுக்கேயன்றி வேறில்லை.

# புத்தூரில் மிதிவெடி அகற்றிய பகுதி மக்களின் பாவனைக்கு கையளிப்பு

## பலாலி படைத்தலைமையகம் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.2

புத்தூர், ஆவரங்கால் பகுதியில் இராணுவத்தினரால் மிதிவெடிகள் அகற்றப்பட்ட பிரதேசம் மக்களின் பாவனைக்காக அந்தப் பிரதேச செயலக அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளது என்று பலாலி பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச்செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

புத்தூர், ஆவரங்கால் பகுதியில் சுமார் 5 ஆயிரத்து 357 சதுர அடி நிலத்தில் யாழ். பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகத்தின் கட்டளையிடும் தளபதி மேஜர் ஜெனரல் எஸ்.டி. தென்னக்கோனின் வழிகாட்டலில் மிதிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன.

மிதிவெடிகள் அகற்றப்பட்ட பிரதேசம் கடந்த புதன்கிழமை மக்களின் பாவனைக்கு எனக் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்த மிதிவெடி அகற்றும் பணியில் இராணுவத்தினருக்கு மிதிவெடி செயற்பாட்டு மையம் சகல உதவிகளையும் வழங்கியுள்ளது.

இப்பகுதியில் மிதிவெடிகள் அகற்றப்பட்டமையால் சுமார் ஆயிரம் பேர் வரை நன்மை பெற்றுள்ளனர்.

கடந்த வருடம் ஏப்ரல் மாதம் ஆரம்பிக்கப்பட்ட மிதிவெடிகள் அகற்றும் பணிகள் தவிர்க்கமுடியாத காரணத்தினால் சுமார் மூன்று மாதங்கள் தடைப்பட்டிருந்தன.பின்னர், மிதிவெடி அகற்றும் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு முழுமையாக மிதிவெடிகள் அகற்றப்பட்ட பிரதேசம் கடந்த 26 ஆம் திகதி மக்களின் பாவனைக்கென குறிப்பிட்ட பகுதி பிரதேச செயலக அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டது - என்றுள்ளது. (எ-202)

# பொது நிலையினர் தினத்தை முன்னிட்டு கவிதை, கட்டுரைப் போட்டிகள்

யாழ். மறை மாவட்ட பொதுநிலையினர் ஆணைக்குழு, பொது நிலையினர் தினத்தினை முன்னிட்டு அடுத்தமாதம் 20ஆம் திகதி கட்டுரை, கவிதைப் போட்டிகளை நடத்தவுள்ளனர்.

"நற்செய்தியின் வழியில் ஒளியாக, உப்பாக" என்னும் தலைப்பில் கட்டுரைப் போட்டியும் "கிறிஸ்துவே விடுதலையின் ஊற்று" என்னும் தலைப்பில் கவிதைப் போட்டியும் நடத் தப்படவுள்ளது. கட்டுரை 500 சொற்களுக்கு மேற்படாமலும், கவிதை 35 வரிகளிலும் அமைதல் வேண்டும்.

இப்போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் பொதுநிலையினர், தமது ஆக்கங்களைப் பங்குத் தந்தையர் மூலம் உறுதிப்படுத்தி, நவம்பர் 10ஆம் திகதிக்கு முன்பாக 'தலைவர், பொதுநிலையினர் ஆணைக்குழு, ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்' என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும் என பொது நிலையின் ஆணைக் குழுவின் செயலாளர் கேட்டுள்ளார். (எ)

# வண்ணை பெருமாள் கோயில் திருவிழா

யாழ்ப்பாணம்,ஒக்.2

வண்ணை வெங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலய வருடாந்த பெரும் திருவிழா நாளை திங்கட்கிழமை முற்பகல் 10.15மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

இதில் எதிர்வரும் 11ஆம் திகதி தேர்த்திருவிழா நடைபெறும். காலை 8மணிக்கு வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று முற்பகல் 10 மணிக்கு பெருமாள் தேரில் ஏறி வலம்வருவார்.

மறுநாள் தீர்த்தத்திருவிழா நடைபெறும். காலை 7.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று காலை 9 மணிக்கு சந்திர புஸ்கரணியில் தீர்த்தம் நடைபெறும். தொடர்ந்து மானம்பூ உற்சவம் இடம்பெறும். (ஒ-203)

# வரம்பிலா அருள் சுரக்கும் வல்லிபுர ஆழ்வார் ஆலயம்

**வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் பார்த்திப வருட மஹோற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. அதையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது.**

வல்லிபுர ஆழ்வார் ஆலயம் வரலாற்றுப் புகழ்மிக்கது மட்டுமன்றி வரம்பிலா அருள் சுரக்கும் ஆலயமுமாகும்.

தெட்சண கைலாய புராணத்திலே ஆதக முனிவரால் இந்த ஆலயத்தின் தோற்ற வரலாறு பற்றிக் கூறப்படுவதில் இருந்து இந்த ஆலயத்தின் தொன்மையை நன்கு உணர்ந்து கொள்ள முடியும்.

நாகதோஷத்தினால் பாதிக்கப்பட்டிருந்த வல்லிபுர நாச்சியாரின் மடியிலே குழந்தையாகத் தவழ்ந்த எம்பெருமான் இன்றும் தன்னை நாடிவரும் அடியவர்களின் நாகதோசத்தை நீக்கி வருவது அவரை நாடிவரும் அடியார்கள் அனைவருக்கும் தெரிந்த உண்மையாகும்.

பெரிய புராணத்திலே, தொண்டர்களின் பெருமை எவ்வாறு முன்னிலைப் படுத்தப்படுகின்றதோ அதைவிட மேலாக அவரது அன்பிலே மூழ்கி நின்ற ஆழ்வார்களின் பெயரிலே, வல்லிபுர ஆழ்வார் சுவாமி என்ற பெயரிலே எம்பெருமான் எழுந்தருளியிருப்பது அவரது அன்பர்கள் மீது எம்பெருமானுக்கு உள்ள கருணையைப் புலப்படுத்துகின்றது.

அதனால்தானோ என்னவோ அவரது அடியார்கள் விழாக்காலங்களிலே தமது நாளாந்தக் கடமைகள் அனைத்தையும் விடுத்து அவரது தொண்டிற்காகவே தம்மை பூரணமாக அர்ப்பணித்துக் கொண்டிருப்பதைக் காணமுடிகிறது.

எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் புவியியல் அமைப்பும் இந்த ஆலயத்தின் பெருமையை நன்கு உணர்த்துகின்றது.



நெய்தலும், குறிஞ்சியும் சங்கமிக்கும் இடத்தில் அமைந்துள்ள ஆலயத்தின் தெற்கே, அவரது தேவி எழுந்தருளும் செந்தாமரைக்குளம் அமைந்துள்ளது. இந்த ஆலயத்தின் நாற்புறமும் இளைப்பாறும் மடங்கள் அமைந்திருப்பதுடன் அவை ஒவ்வொன்றும் அவரைச் சூழ்ந்துள்ள வெவ்வேறு கிராமத்து மக்களுக்குச் சொந்தமாக இருப்பது இவ்வாலயத்தின் மற்றொரு சிறப்பம்சமாகும்.

இந்த ஆலயத்தின் திருவிழாக்கள் எம்பெருமானின் அருள் விளையாட்டுக்காக அவரது பக்தர்களை வெளிப்படுத்துவதுடன் பக்தர்களை நெறிப்படுத்துவதாகவும் அமைகின்றன.

முதல் ஆறு திருவிழாக்களும் உள்வீதி உலா. இது கிருஷ்ண பரமாத்மாவின் பிள்ளைப் பிராயத்தை உணர்த்துகின்றது. அடுத்து இறைவன் வெளிவீதி வருகின்றார். வெளி வீதி வந்தவர் தன் திருவிளையாடல்களை ஆற்றுதற்கு முன் விநாயகப் பெருமானின் தரிசனம் [illegible] ஆம், 8ஆம் உற்சவங்களின் [illegible] உணரமுடிகிறது. இதன்மூலம் நாமும் எந்த ஒரு விடயத்தையும் ஆரம்பிப்பதற்கு முன்னர் விநாயகப் பெருமானின் அருள் பெறவேண்டும் என்பதையே எம்பெருமான் எமக்கு நடத்திக் காட்டுகின்றார்.

அடுத்து 9ஆம் உற்சவம். இது வெண்ணைத் திருவிழா. ஆயர்கள் சேர்த்து வைத்த வெண்ணையை தனது ஆயர்பாடிகளுடன் சேர்ந்து திருடித் தின்பது. சொத்துக்களைச் சேர்த்து வைக்காதே 'அதனைத் திருடர்கள் கைப்பற்றி விடுவார்கள்' நீயே அதனை எல்லோருக்கும் பகிர்ந்து கொடுத்து உண்டு மகிழ்' என்பதை இவ்விழாவின் மூலம் உணர்த்துகிறார்.

அடுத்து பாம்புத் திருவிழா. காளிங்கன் என்ற பாம்பு தடாகத்திலே இருந்து கொண்டு நஞ்சைக் கக்கி, ஆநிரைகளையெல்லாம் கொல்கின்றான். அந்தக் காளிங்கனைக் கொன்று அவனது சாபத்தையும் நீக்கி,ஆநிரைகளையும் காப்பாற்ற காளிங்க நர்த்தனம் புரிந்தமை பாம்புத் திருவிழா மூலம் உணர்த்தப்படுகிறது.

**துகில் திருவிழா**

இதுவும் சமூகத்தின் வாழ்க்கை முறையை நெறிப்படுத்துவதையே உணர்த்துகின்றது. ஐம்பூதங்களே எமது உடல். நிலம், நீர், தீ,காற்று, ஆகாயம் இவற்றை அசுத்தப்படுத்தாது தூய்மையாகவும் பேணவேண்டும். அந்த வகையிலேயே எமது பழக்கவழக்கங்கள் நீரைத் தெய்வீகமாகப் பேணவேண்டும். ஆனால், பெண்கள் குளங்களிலே கூட்டமாக நீராடும்போது, ஆடைகள் எதுவுமின்றி பெறுமனே நீராடுகின்ற ஒரு பழக்கத்தைக் கொண்டிருந்தனர்.

ஏ.சோதிலிங்கம்
விசேட ஆணையாளர்,
குச்சவெளி பிரதேச சபை.

இது தலைஜலக்கீரிடை என்று சொல்லி ஆண்களும் பெண்களும் ஆடைகள் இன்றி நீராடுகின்ற ஒரு தீய பழக்கம் சமூகத்தில் நிலவியிருந்தது. இது சமூகச்சீர்கேடு மட்டுமன்றி கங்காதேவியையும் கொச்சைப்படுத்துவதாக அமைந்தது. இதனாலேயே சமூகச் சீர்திருத்தத்தைப் பேணவேண்டி குழந்தைவடிவிலே இருந்த கண்ணன் நீராடிக்கொண்டிருந்த பெண்களின் சேலைகளை எடுத்து ஒளித்ததுடன் அவர்களது மானத்திற்கு எதுவித பங்கமும் ஏற்படாது, எச்சரிக்கையுடன் திரும்பவும் கொடுத்து அவர்களை நெறிமுறையான வாழ்க்கைக்கு இட்டுச் சென்றமை துகில் திருவிழா மூலம் எடுத்துணர்த்தப்படுகிறது.

## உதயவாக்கு

நேர்மையும் சத்தியமும் ஒவ்வொரு பண்புக்கும் அடிப்படையாகும்.

– கன்பூஷியஸ்

## நாளை

புரட்டாதி 17
திங்கட்கிழமை
03.10.2005
திதி: அமாவாசை
பிற்பகல் 04.20 வரை
நட்சத்திரம்: அத்தம்
முழுவதும்
சுபநேரம்: 12.02 - 01.32
ராகுகாலம்: 07.32 - 09.02
[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெடுந்தீவுத் துறைமுகத்தில் படகு திருத்தும் நிலையம்

நல்லூர்,ஒக்.2

நெடுந்தீவு பல நோ.கூ சங்கம் படகுகள் திருத்தும் நிலையம் ஒன்றை நிர்மாணித்து வருகின்றது.

நெடுந்தீவு துறைமுகத்தில் இதற்கான நிலையம் அமைக்கப்படுகின்றது. இதன் வேலைகள் முடிவுற்றதும் படகுகளைத் தரையில் தூக்கி வைத்து அவற்றின் சேத முற்ற உடற்பாகத்தைத் திருத்தும் நடவடிக்கைகளை இலகுவாக மேற்கொள்ளக்கூடியதாக இருக்கும் எனக் கூறப்பட்டது.

நெடுந்தீவுச் சேவையில் உள்ள அரச படகுகள் மற்றும் தீவுப்பகுதிகளைச் சேர்ந்த படகுகளை இலகுவாகக் கரையில் ஏற்றி உரிய வேலைகளைச் செய்வதற்கு இந்த நிலை யத்தைப் பயன்படுத்த முடிவுசெய்யப் பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

(எ-111)

## சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கிய இரண்டு உணவகங்களுக்கு 'சீல்'

வலி.தெற்கு,ஒக்.2

சுன்னாகம் நகரப்பகுதியில் சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கிவந்த இரண்டு உணவகங்கள் மல்லாகம் நீதவான் திருமதி சரோஜினி இளங்கோவனின் பணிப்புரைக் கமைய சுன்னாகம் பொலீஸாரால் 'சீல்' வைக்கப்பட்டுள்ளது.

இப்பகுதி பொதுச் சுகாதார பரிசோதகர்களால் திடீர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட போது சுகாதார விதி முறைகளுக்கு மாறாக சீர்கேடான நிலையில் இரண்டு உணவ கங்கள் இயங்கி வந்தமை கண்டுபிடிக்கப் பட்டது.

இது தொடர்பாக மேற்படி இரு உணவ கங்கள் மீதும் சுகா தாரப் பரிசோதகர்களால் மல்லாகம் நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப் பட்டிருந்தது.

இவ்வழக்கினை விசாரணை செய்த மல்லாகம் மாவட்ட நீதவான் திருமதி சரோ ஜினி இளங்கோவன் சம்பந்தப்பட்ட உணவக உரிமையாளர்களை குற்றவாளிகளாகக் கண்டு இருவருக்கும் தலா மூவாயிரம் ரூபா அபராதம் விதித்து இரண்டு கிழமைக்குள் உணவகத்தை சீர்திருத்தி அறிக்கை சமர்ப்பிக் கப்பட்ட பின்னரே உணவகங்களை மீண்டும் திறக்கவேண்டும் என உத்தரவிட்டிருந்தார்.

ஆனால், குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் உணவகங்கள் சீர்திருத்தம் செய்யப்பட்டு அறிக்கை எதுவும் சமர்ப்பிக்கப்படவில்லை. இதனை அடுத்து சம்பந்தப்பட்ட இரண்டு உணவகங்களும் தொடர்ந்து இயங்காத வண்ணம் 'சீல்' செய்யுமாறு நீதவான் உத்தரவு பிறப்பித்தார்.

(எ-152)


வெற்றிடங்கள்

## வாடிக்கையாளர் சேவை உத்தியோகத்தர்கள்
## (CUSTOMER CARE OFFICERS)

நாடுபூராவும் 10 இலட்சம் வாடிக்கையாளர்களுக்கு மேல் சேவை வழங்கும் முன்னணித் தொலைத தொடர்பு சேவை வழங்குநரான ஸ்ரீ லங்கா ரெலிகொம் அடிப்படை தொலைபேசி சேவை தொடக்கம் முன்னேற்றகரமான தரவு சேவைகளை வழங்கி வருகிறது. பெறுமதிமிக்க எங்களது வாடிக்கை யாளர்களுக்கு சேவை வழங்குவதற்கு சிறந்த வாடிக்கையாளர் கவனிப்பு, வாடிக்கையாளர் தொடர்பு ஆகியன முக்கிய இடத்தை வகிக்கின்றன என்பதை நாங்கள் திடமாக நம்புகின்றோம். இக்குறிக் கோள்களை எய்துவதற்கு ஊக்கம், பணியினை நிறைவேற்றும் ஆற்றல்,சுயஆர்வம் ஆகிய குணாம் சங்கள் கொண்டவர்களை வாடிக்கையாளர் சேவை உத்தியோகத்தர்களாக அமர்த்த விரும்புகின்றோம்.

ஸ்ரீலரெயின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய அலுவலகங் களில் இப்பதவிக்கான வெற்றிடங்கள் உள்ளன.

### பணிவிபரம்

எங்களது உள்ளக, வெளியக வாடிக்கையாளர்களை திருப்திப்படுத்த முனைவதனை தங்கள் பிரதான இலக்காகக் கொண்டுள்ள ஸ்ரீலரெ அணியின் ஓர் அங்கத்தவராக நீங்கள் விளங்குவீர்கள்.

### தகைமை

* வயது 25க்கு குறைவாக இருக்கவேண்டும்.
* க.பொ.த சாதாரண தரத்தில் அல்லது அதற்கு சமமான தேர்வில் ஒரே தடவையில் கணக்கு/ கணிதம், சிங்களம் / தமிழ்மொழி, ஆங்கிலமொழி ஆகிய பாடங்கள் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்திபெற்று ஆறு பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

அத்துடன்

* ஒரே அமர்வில் கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் 3 பாடங்களில் சித்தி பெற்றிருக்கவேண்டும்.

அத்துடன்

* MS Office, MS Windows 2000 ஆகியவற்றில் பூரண அறிவு பெற்றிருப்பதுடன் NIBM, NAITA, National Youth Services Council, Vocational Training Authority of Sri Lanka அல்லது இவற்றிற்கு சமனான நிறுவனமொன்றில் ஆகக்குறைந்தது 6 மாதகாலத்துக்கான தகவல் தொழில்நுட்ப பாடநெறியை பூர்த்தி செய்திருக்கவேண்டும்.

அத்துடன்

* அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் ஓர் ஆண்டு காலத்துக்கு கணனி இயக்குநராக/ தரவு பதிவு இயக்குநராக பணியாற்றிய அனுபவம் பெற்றிருக்கவேண்டும்.

### நாங்கள் கொடுப்பது

நியமனங்கள் ஒரு வருடகாலத்துக்கு ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்படும். உங்களது செயற்றிறனும் அர்ப்பணிப்பும் எங்களது எதிர்பார்ப்புக்கு அமைய இருப்பின் ஆரம்ப சேவைக் காலம் முடிந்தபின்னர் உங்களது சேவைக் காலம் மேலும் நீடிக்கப்படும் அல்லது நிரந்தர நியமனம் வழங்கப்படும்.

மேற்படி தேர்ந்தெடுத்தலானது எழுத்துத் தேர்வு, நேர்முகத் தேர்வு ஆகியவற்றின் மூலம் இடம பெறும்.

www.slt.lk என்ற வெப்தளத்தில் காணப்படும் விண்ணப்பப்படிவத்தில் உங்களது முழு சுய விவரங்களை நிரப்பி பிறப்புச்சான்றிதழ், கல்விச்சான்றிதழ் மற்றும் ஏனைய சான்றிதழ்களுடன் விண்ணப்பத்தை இவ்விளம்பரம் பிரசுரமாகிய 10 தினங்களுக்குள் Head of Personnel Section, Sri Lanka Telecom Headquarters, Colombo 01 என்ற முகவரிக்கு கிடைக்கும் வண்ணம் அனுப்பி வைக்கவேண்டும். தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் "Customer Care Officer" என்று குறிப்பிட வேண்டும்.

மேற்படி பதவியைப் பெறுவதற்கு செல்வாக்கைப் பிரயோகித்தல் தகுதியின்மையாகக் கருதப்படும்.

**மனிதவளப் பகுதித் தலைவர்**
**ஸ்ரீலங்கா ரெலிகொம்**

Sri Lanka Telecom
www.slt.lk


## விசேட கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஒக்.2

யாழ். மாவட்டப் பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் கலாசார உத்தியோகத்தர் களுக்கான விசேட கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மாகாணக்கல்வி அமைச்சினால் எதிர் வரும் செவ்வாய்க்கிழமை யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடத்தப்படவுள்ள இசை, நடன, நாடக விழா தொடர்பாக இதில் கலந்துரையாடப்படும் எனத் தெரிவிக்கப் பட்டது.

(எ)

* * *

யாழ்ப்பாணம், ஒக்.2

யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்க விசேட கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு சங்கத்தில் நடைபெற வுள்ளது

(202)


### கிளிநொச்சியில் இயங்கும் நிறுவனத்திற்கு பின்வரும் தொழிலாளர்கள் தேவை

1. இயந்திரமூலம் சிமெந்துக்கல் அரிவதில் அனுபவம் உள்ளவர்கள்.
2. மேசன்
3. தச்சர்
4. சாதாரண தொழிலாளர்கள்

★ தொடர்ச்சியான வேலை.
தங்குமிட வசதி செய்து தரப்படும்.

திங்கள் முதல் வெள்ளி வரையான நாள்களில் மு.ப. 9 மணிமுதல் பி.ப. 5 மணிவரை தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளவும்.

**T.P: 021 228 5903**

விஸ்வா அல்லது ரொனி அல்லது அன்றா.

(40702)(38-46-11-45)



## BBS இன் விஜயதசமி ஏடு தொடக்கல்...

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 12 ஆம் திகதி

விஜயதசமியை முன்னிட்டு எமது பாலர் பாடசாலைகளில் ஏடு தொடக்கி புதிய அனுமதிகள் வழங்கப்படும்.

ஆங்கில மொழி மூலம் பாலர் பாடசாலை பாட விதானங்கள்

PLAY GROUP [2+ முதல் 3+ வரை]
MONTESSORI SCHOOL [3+ முதல் 4+ வரை]
PRE-SCHOOL [4+ முதல் 5+ வரை]

விசேட அம்சங்கள்
ஆங்கில மொழி மூலமான சிறந்த கற்பித்தல் முறை
தமிழ் ஒரு தனிக் கட்டாய பாடமாக கற்பிக்கப்படும்

சிறார்களுக்கான ஆங்கிலப் பாட நெறிகள்

5+ to 14+ சிறார்களுக்கு

- PRE-FOUNDATION
- FOUNDATION
- LOWER INTERMEDIATE
- INTERMEDIATE
- UPPER INTERMEDIATE

BRITISH BUSINESS SCHOOL

இல:140, கோவில் வீதி, யாழ்ப்பாணம். | பருத்தித்துறை சாலை, இராமக் கோட்டடி, புலோலி. | இல:174, கண்டி வீதி, யாழ்ப்பாணம். | இல:252, யாழ்ப்பாண வீதி, ஆலடிச்சந்தி, மானிப்பாய்.

HOT LINE : 021-222-5796

British BUSINESS SCHOOL
Where Students Come First


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களின் எழுச்சிக்கு சர்வதேசம் மதிப்பளிக்குமா?

பயங்கரவாத இயக்கப்பட்டியலில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பெயரையும் இடம்பெறச்செய்யும் பொருட்டு தீவிரமான பரிசீலனையில் இறங்கியிருப்பதாக அறிவித்திருக்கும் ஈ.யூ என்ற ஐரோப்பிய ஒன்றியம், அதற்கு முன்னோடியாக ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் அங்கத்துவ நாடுகளில் புலிகளின் தூதுக் குழுவினர் பயணங்கள், விஜயங்கள் மேற்கொள்வதற்கும் தடைபிறப்பிப்பதாகவும் உடனடியாக இது நடைமுறைக்கு வருகின்றது என்று கடந்த 27ஆம் திகதி திடீர் அறிவிப்பு ஒன்றை விடுத்துள்ளது.

சமாதான முயற்சிகளில் இருதரப்புகளில் ஒன்றான விடுதலைப் புலிகள் அமைப்புக்கு எந்தவித முன்னறிவிப்பும் விடுக்காத நிலையில் இந்த அறிவிப்பை ஒரு தலைப்பட்ச மாக ஐரோப்பிய ஒன்றியம் விடுத்துள்ளது.

இலங்கையில் சமாதான முயற்சிகள் நோர்வே அனுசரணையாளர்கள் ஊடாக நடைபெற்று வருகின்றன. இந்தச் சமாதான முயற்சிகளில் சம பங்காளிகளாக சம வலுவுள்ள- இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும். சம்பந்தப்பட்டுள்ளன.

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் சுட்டுக்கொல்லப்பட்டமைக்கான பொறுப்பை புலிகள் மீது இலங்கை அரசு போட்டுள்ளது. இக்கொலையை யார் செய்தார்கள் என்பது தொடர்பான விசாரணைகள் பூர்த்தியடையாத போதும் கூட இலங்கை அரசு புலிகள் மீதே குற்றச்சாட்டு சுமத்திக் கொண்டிருக்கின்றது.

இக் கொலையின் பின்னணியில் பல சக்திகள் சம்பந்தப்பட்டிருப்பதாக அவ்வப்போது தகவல்களை இலங்கை புலனாய்வாளர்கள் வெளியிட்டுக் கொண்டிருக்கின்றனர். உண்மையில் இந்தக் கொலையின் பின்னணி குறித்து இதுவரை உண்மை நிலை கண்டறியப்படவில்லை.

இந்நிலையில் லக்ஷ்மன் கதிர்காமர் கொலை தொடர்பாகவும் அண்மைய சில வாரங்களாக நடைபெற்று வரும் வேறு பல கொலைகள் குறித்தும் கண்டனத்தை ஐரோப்பிய ஒன்றியம் தனது அறிக்கையில் வெளியிட்டுள்ளமை விசனத்துக்குள்ளாக்கியுள்ளது.

**பக்கசார்பான அறிக்கை**

''சமாதான முன்னெடுப்புகள் அனைத்தும் முடங்கிப்போயுள்ள ஒரு சூழ்நிலையில் ஐரோப்பிய ஒன்றியத்தின் அறிக்கை வந்துள்ளது.

''குறிப்பாக விடுதலைப் புலிகளை படுகொலைகளுடன் சம்பந்தப்படுத்தும் பக்கசார்பான அறிக்கையாகவே அது வந்துள்ளது.

''யுத்த நிறுத்த காலத்தில் எமது போராளிகள், பொறுப்பாளர்கள் எனப் பொரும் எண்ணிக்கையானவர்கள் கொல்லப்பட்டனர். இக் கொலைகளுக்கு முழுக்க முழுக்க அரசுத் தரப்பும் இராணுவமுமே பொறுப்பாகும்.

''அரச பயங்கரவாதம் பெரிய அளவில் கட்டவிழ்த்துவிடப்பட்ட போது அது தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியம் கண்டனம் எதனையும் விடாதது உண்மையில் அரசின் நடவடிக்கையை நியாயப்படுத்துவது போலத்தான் இருக்கின்றது.''

இப்படி விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

சமாதான நடவடிக்கைகள் எல்லாம் ஸ்ரீலங்கா அரசால் முடக்கப்பட்டு தமிழ்மக்களுக்கு எதிராக பெரும் போர் ஒன்றை திணிப்பதற்கான செயற்பாடுகள் முனைப்புப் பெற்றுள்ள நிலையில், ஐரோப்பிய ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கை தமிழ்மக்கள் மீது யுத்தத்தை இலங்கை அரசு திணிப்பதற்குப் பச்சைக்கொடி காட்டியது போன்று உள்ளது என்று தமிழ்மக்கள் கருதுகின்றனர்.

கடந்த 20 வருட காலத்தில் நடந்த யுத்தத்தில் உயிர், உடைமைகளை இழந்து இருப்பிடம் இன்றி, சுதந்திரமான தொழில்வாய்ப்புகள் இன்றி, சுதந்திரமான நடமாட்டம் இன்றி தமிழ்மக்கள் சொல்லெணாத் துன்பங்களை அனுபவித்துவரும் காலகட்டத்தில் யுத்தம் நிறுத்தப்பட்டது. யுத்தம் நிறுத்தப்பட்டதும் சர்வதேசத்தின் பிரசன்னத்துடன் சமாதானம் மூலம் விடிவுகிட்டும் என மக்கள் நினைத்தனர்.

யுத்தம் நிறுத்தப்பட்டு நான்கு வருடகாலம் அண்மித்த போது மக்களுக்கு நிம்மதியான வாழ்வு கிட்டடியதா என்பது கேள்விக்குரிய விடயம்தான்.

-இந்த யுத்தநிறுத்த காலத்தில் எமது மக்களின் அவலங்களை, இன்னல்களை தமிழர் தரப்பான விடுதலைப் புலிகள் சர்வதேச சமூகத்துக்கு விளக்கிக் கூறியிருந்தனர்- என்கிறார் தமிழ்ச்செல்வன்.

2004ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்திலும் 2005ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலும் விடுதலைப் புலிகளின் உயர்மட்ட அரசியல் குழு ஐரோப்பிய நாடுகளுக்கு இரு தடவைகள் விஜயம் செய்து தமிழ் மக்களின் நிலைமையை விளக்கியிருந்தது.

விடுதலைப் புலிகளின் உயர்மட்டக் குழுவில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், நீதி, நிர்வாகப் பொறுப்பாளர் பரா, சமாதான செயலகப் பொறுப்பாளர் புலித்தேவன் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

நோர்வே, சுவிஸ், ஜேர்மனி, டென்மார்க், சுவீடன், பின்லாந்து, பெல்ஜியம், அயர்லாந்து, ஒஸ்ரியா, தென்னாபிரிக்கா, இத்தாலி போன்ற நாடுகளுக்குச் சென்று உயர்மட்டத் தலைவர்களைச் சந்தித்தனர்.

சமாதானத்தில் உள்ள பற்றுறுதியை - அர்ப்பணிப்பை- அவர்களுக்கு விளக்கிய இக் குழு, மக்களின் அவலங்களை நீக்க உதவு மாறும் பணிவான வேண்டுகோளையும் விடுத்தது.

இலங்கை அரசு தமிழ்மக்கள் மீது கொண்டுள்ள இனவாதப் போக்குக் குறித்தும் விளக்கமாக எடுத்துக் கூறியது உயர்மட்ட அரசியல் குழு.

தமிழ்மக்களின் உண்மை நிலையைப் புரிந்துகொண்ட அந்தத் தலைவர்கள் தமிழ் மக்களுக்கு உதவவும் முன்வந்திருந்தனர்.

இலங்கை அரசின் பொய்ப் பிரசாரங்களை முறியடிக்க புலிகளின் இந்த இராஜதந்திர நகர்வு பெரிதும் உதவியது.

சர்வதேச சமூகம் தமிழர் தரப்பு நியாயங்களைப் புரிந்து தமிழர்களுக்கு உதவ முன்வந்த நிலையில், இலங்கை அரசு தமது தூதரகங்கள் ஊடாக புலிகளுக்கு எதிரான பிராசாரத்தை முழு அளவில் முன்னெடுத்தது.

அத்துடன், வெளிநாடுகளில் இருந்து கொழும்பு வந்த இராஜதந்திரிகள் புலிகளைச் சந்திக்க விரும்பிய போதும், வன்னியில் பாதுகாப்பு நிலைவரம் சரியில்லை என்று காரணம் கூறி அவர்கள் அங்கு செல்ல அனுமதி மறுத்தது.

அரசு கடந்த ஒரு வருடகாலத்துக்குள் மேற்கொண்ட பிரசாரத்தின் வெளிப்பாடாகவே ஐரோப்பிய ஒன்றியத்தின் அறிக்கை வந்துள்ளது. வெறுமனே லக்ஷ்மன் கதிர்காமரின் கொலைமட்டும் இதற்குக் காரணம் இல்லை என்றுதான் கூறபடுகின்றது.

அமெரிக்கா- ஜப்பான் -நோர்வே- ஐரோப்பிய ஒன்றியம் ஆகியன இணைந்து ஒரு தலைப்பட்சமாக உருவாக்கியுள்ள இணைத் தலைமை நாடுகளின் அறிக்கை வெளிவந்து சில நாள்களில் ஐரோப்பிய ஒன்றியத்தின் அறிக்கை வந்துள்ளது.

விடுதலைப் புலிகளை - தமிழ் மக்களை - எச்சரித்து சமாதான முயற்சிகளில் இருந்து விலகக் கூடாது என்ற அழுத்தம் கொடுக்கும் வகையில் ஐரோப்பிய ஒன்றியம் இந்த அறிக்கையை விடுத்திருக்கலாம் என சமாதான நோக்கர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

**மக்கள் எழுச்சி**

சர்வதேச மயமாகியுள்ள தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்காக சர்வதேச சமூகம் தனது பங்களிப்பை வழங்க வேண்டும் என்று தமிழ்மக்கள் எழுச்சிகொண்டு தமிழர்


ஐரோப்பிய நாடாளுமன்றம் முன்பாக விடுதலைப் புலிகளின் உயர்மட்டக்குழு

மாநிலங்களில் எழுச்சி நிகழ்வுகளை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். மக்களின் எழுச்சிக்கு மதிப்பளித்து செயற்பட வேண்டியது சர்வதேச சமூகத்தின் கடப்பாடாகும். அவ்வாறு செயற்படாமல் தமிழ் மக்களுக்கு எதிராக அறிக்கைகளை விடுத்து தெற்குப் பேரினவாத சக்திகளுக்கு ஊக்கமளிப்பார்களேயானால், தமிழ்மக்கள் யுத்தத்தை எதிர்கொள்வது தவிர்க்க முடியாததாகிவிடும்

இலங்கையில் மீண்டும் ஒரு யுத்தம் ஏற்பட்டு அழிவுகள் உருவாக சர்வதேச சமூகம் தனது நகர்வுகளை மேற்கொள் ளப்போகின்றதா? அல்லது தமிழ்மக்கள் கோரும் சுயாட்சியுடன் வாழும் நிலை தோற்று விக்கப்பட உதவப் போகின்றதா?

இவைதான் இன்று எழும் கேள்விகள்.

# ஆப்பிழுத்த நிலையில் மகிந்த

**தெற்கில் அரசியல் சூடு**

இந்நிலையில் தெற்கில் ஜனாதிபதித் தேர்தல் சூடு பிடிக்க ஆரம்பித்துள்ளது.

ஐ.தே.கட்சிசார்பில் போட்டியிடும் ரணில் விக்கிரம சிங்கவும் சு.கட்சி சார்பில் போட்டியிடும் மஹிந்த ராஜபக்ஷவும் பல்வேறு காய் நகர்த்தல்களை மேற்கொண்டுள்ளனர்.

ஜே.வி.பி. - ஹெல உறுமய போன்ற பேரினவாதச் சக்திகளுடன் உடன்பாடுகள் கண்டு 'நானே சிங்கள தேசியத்தின் தலைவர்' எனக் கோஷமிட்டுச் சிங்கள தேசத்தைக் காக்கப் புறப்பட்டு நிற்கின்றார் மஹிந்த ராஜபக்ஷ.

மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக வியூகம் ஒன்றை அமைத்து, தமிழர் பிரச்சினையை கையில் எடுத்து, சுதந்திரக் கட்சியுடன் கைகோத்து தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாணப் போகிறேன் என்று புறப்பட்டு நிற்கிறார் ரணில்.

இரண்டுபேருக்கும் இடையில் சுதந்திரக் கட்சியின் கொள்கையை தூக்கிப்பிடித்துக் கொண்டு நிற்கின்றார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் கொள்கைகளை மீறிச்சென்று இனவாதம் பேசி, கட்சியை இனவாதிகளின் கூடாரமாக்கப் போகிறீர்களா என்று கட்சி உறுப்பினர்களிடம் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

கடந்த புதன்கிழமை நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் தனது நிலைப்பாட்டை அள்ளிக்கொட்டினார் அவர்.

காரசாரமான வாக்குவாதங்களுடன் நடந்த அந்தக் கூட்டத்தில் ஒரு கட்டத்தில் பிரதமரும், ஜனாதிபதியும் வெளியேற முனைந்தபோது சக அமைச்சர்கள் இருவரையும் சமாதானப் படுத்தினராம்.

நேற்றுமுன்தினம் நடந்த மத்திய குழுக் கூட்டத்திலும் காரசாரமான விவாதம் இடம்பெற்றுள்ளது.

கட்சியின் கொள்கைகளுக்கு அமைய தேர்தல் விஞ்ஞாபனத்தைத் தயாரிக்க வேண்டும். அதன் அடிப்படையில் மஹிந்த ராஜபக்ஷ தேர்தலில் போட்டியிடவேண்டும் என்று அறுதியாகத் தெரிவித்துவிட்டார் ஜனாதிபதி.

மஹிந்த ராஜபக்ஷவைத் தலைவராகக் கொண்டு தேர்தல் விஞ்ஞாபனத்தைத் தயாரிக்கும் குழுவையும் நியமித்துவிட்டு பரிஸ் புறப்பட்டுவிட்டார் ஜனாதிபதி.

'சுதந்திரக் கட்சியின் கொள்கைகளுக்கு ஏற்ப தேர்தல் விஞ்ஞாபனத்தைத் தயாரியுங்கள் அதை மத்திய குழு அங்கீகரித்த பின் வெளியிடலாம்' என்று அறிவுரையும் கூறியுள்ளார் ஜனாதிபதி.

அந்தக் குழுவில் கூட தனக்கு நம்பிக்கையானவர்களுக்கே இடம்மளித்துள்ளார். ஜே.வி.பி. உடன்பாடு எட்டக் காரணமாக இருந்த மங்கள சமரவீரவுக்கு இடம் கொடுக்கவில்லை ஜனாதிபதி.

**வாராந்த அரசியல் அலசல்**

**குகா**

எதிர்வரும் 7ஆம் திகதி நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்யப்படப் போகின்றன. அச்சமயம் பாரிஸில் இருக்கப்போகும் ஜனாதிபதி அதன்பின் நாடு திரும்பி தேர்தல் விஞ்ஞாபனத்தை அங்கீகரித்து வெளியிடப் போகின்றார்.

ஜனாதிபதி வகுத்துள்ள வியூகத்துக்குள் சிக்கி'' ஆப்பிழுத்த குரங்கின் நிலையில் உள்ளார் மஹிந்த ராஜபக்ஷ.

அந்த தேர்தல் விஞ்ஞாபனத்தின் அடிப்படையில் மஹிந்த போட்டியிடுவதாக இருந்தால், ஜே.வி.பியுடனும் ஹெல உறுமயவுடனும் பிரதமர் செய்துகொண்ட ஒப்பந்தங்கள் செல்லுபடியற்றதாகிவிடும்.

ஒரு புறத்தில் ஜே.வி.பி., ஹெல உறுமயவையும் சமாளித்து, மறுபுறத்தில் ஜனாதிபதியையும் சமாளித்து தேர்தலில் நிற்வேண்டிய இக்கட்டு நிலை மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் அவர் என்னவகையில் காய்நகர்த்தல்களைச் செய்யப் போகின்றார் என்பதற்கு அடுத்த சில தினங்களில் விடை கிட்டும். ✱

அகவிழி
ஆசிரியத்துவ நோக்கு...
வருட சந்தா ரூ300 மட்டுமே
தொடர்புகளுக்கு
இல 3 டொறிங்ரன் அவனியூ
கொழும்பு - 07
தொலைபேசி - 011 2506272
தமிழ் மொழி மூல ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளின் தீர்வுகளை விவாதிக்க...
விழுது



நமது செய்தி
Namathu Seithi

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Vacancy

Housekeeper/Cook in private household in Jaffna
(area hospital road near temple road)

**Jobdescription:**
- keeping clean a new builded house (according european standard)
- using washingmachine and ironing clothes,
- cooking dinners, sometimes for guests,
- Workingtime: 6 hours per day,one day holiday, about 2.30 - 8.30 p.m.

**Qualifications:**
-experience in housekeeping and cooking,
-priority for English or German speaking person

**Salary:** Appropriate according to qualification and experience,
Send a application letter before 7th of October. (40597)

**ADVT. No. 2707, C/O, UTHAYAN.**

## கடைகள் வாடகைக்கு வழங்குதல்

பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணத்தில் புதிதாகக் கட்டப்பட்ட ஏழு கடைகளும் வாடகைக்குக் கொடுக்கப்படவுள்ளன.
தொடர்புகளுக்கு:
சி.ரூபாவதி
(40598) 021-222 5801, 077 6948470 (21.13.45.42)

## On-Line Classes

ANIMATIONS IN FLASH MX
1 MONTH. Rs. 2000/=
வீட்டுப் படங்களும் வரைந்து கொடுக்கப்படும்.
ENGINEERING DRAWINGS, 3D VIEWS ect. A4 SIZE Rs.300/=
TP. 077.9086864
15(47) யாழ்.வீதி, சிறாம்பியடி, யாழ்ப்பாணம்.

## விற்பனைக்கு

நல்ல நிலையில் பாவனையில் உள்ள ELF - 350 Aluminium body, Toyota town ACE ஆகிய வாகனங்கள் விற்பனைக்குண்டு.
தொடர்பு:
R.Selvanayagam,
T.P.: 077 6454994.
(40611)(42.13.45)

## Active Theatre Movement
WALK IN INTERVIEW.

**Post of field officer for psychosocial programme (02)**
Qualifications: G.C.E (A/L) Qualified
Experience in social services and cultural activities.
Applicants should have valid motor bike license.
Age limit : 22- 35 yrs
Salary : Negotiable

**Post of finance Assistant**
Qualifications: G.C.E (A/L) Qualified in Commerce.
Minimum credit passes in accountancy
Age limit : 18- 30 yrs
Salary : Negotiable

Interested candidates, who possess the specified qualifications and work experience, please should be present to the office directly at 3 – 5 pm within 5days.

Active Theatre Movement
"Arulaham", Adiyapatham Rd,
Thirunilvely.

## திருமறைக் கலாமன்றம்
நடத்தும்

# கலைநிலா அரங்கு

(மாதாந்த அரங்க நிகழ்வுகள் - ஒக்ரோபர் - 2005)

காலம்: இன்று (02.10.2005) ஞாயிற்றுக்கிழமை
நேரம்: மாலை 6.45 மணி
இடம்: திருமறைக் கலாமன்ற அரங்கு

## நிகழ்ச்சிகள்

★ நடனம்
*(கவின் கலைகள் பயிலகம், திருமறைக்கலாமன்றம், யாழ்ப்பாணம்)*
★ கோலாட்டம், கும்மி
*(சென்.ஜேம்ஸ் கல்வி முன்னேற்றக் கழக சிறார்கள், குருநகர்)*
★ சூரிய தேசம் - நாடகம்
*(இளைஞர் மன்றம், புனித விக்ரோரியார் ஆலயம், சாவகச்சேரி)*
★ ஜெனோவா - தென்மோடி நாட்டுக்கூத்து
*(மகளிர் அவை, திருமறைக் கலாமன்றம், யாழ்ப்பாணம்)*

பிரவேசம் இலவசம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்,
தொலைபேசி. 021 222 2393.
– திருமறைக் கலாமன்றம்.

## MOON BEAUTY CARE

*இன் விசேட சலுகை*
யாழ்.பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் பங்குபற்றும் யுவதிகளுக்காக இச்சலுகை வழங்கப்படுகின்றது.
- Face Clear up
- Eye brow shapping
- Saree drape
- Simple makeup

*கட்டணம் 2500/= மட்டுமே*
skin *தன்மைக்கு ஏற்ற* facials *செய்துவிடப்படும்.*
*கட்டணம் 1200/= மட்டும்*
முக்கியகுறிப்பு: பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும்.
Personal Grooming Class
(பெண்கள் தங்களின் சரும கேச பராமரிப்பை தாங்களே மேற்கொள்வதற்கான பயிற்சி).
*கட்டணம் 4500/=. ஆரம்பமாகின்றது.*
*மேலதிக விவரங்களுக்கு*
திருமதி B. அகிலா
*0777 570138* (Dip.in.Beauty culture, Dip.in.Dance)
இல.92, பருத்தித்துறை வீதி, ஆ ரப்பந்தி, யாழ்.
(சனி, ஞாயிறுகளில் சந்திக்கலாம் (9.30-12.30)
(40575)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி
# கிறேஸ் பூரணம் தங்கராஜா
*(குஞ்சம்மா ரீச்சர்)*
*தோற்றம்: 31-10-1921*
*மறைவு : 02-09-2005*

இயேசு சொன்னது "உயிர்த்தெழுதலும் ஜீவனும் நானே, என்னில் விசுவாசம் வைக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான் உயிரோடிருந்து என்னில் விசுவாசம் வைக்கிறவன் எவனும் என்றென்றைக்கும் மரிப்பதேயில்லை"
யோவான் 2:25.26

கருகப்புலம்,
கணேஸ்வரம்,
அளவெட்டி வடக்கு.
(40468)(42-45-13)
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை.

## 31ஆம் நாள் நினைவலைகள்

மண்ணில் 28 - 08 - 1959



விண்ணில் 02 - 09 - 2005

திருமதி ரஞ்சினி கப்ரியல் *(ББА)*

*"சீவியத்தில் நேசித்தோம் மரணத்திலும் மறவோம்"*
*அன்னாரின் நினைவாக கரவெட்டி புனித அந்தோனியோர் ஆலயத்தில் இன்று (02.10.2005) ஞாயிற்றுக்கிழமை திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படுகிறது.*

மாலிசந்தி,
வதிரி,
கரவெட்டி.
(40583)(42-45-13)
தகவல்:
வே.சேனாதிராஜா
*(சகோதரன்).*


# Panasonic
ideas for life

# நீர் இறைக்கும் இயந்திரம்

விசேஷ அம்சங்கள்
- சக்திவாய்ந்ததும், பாவனை கூடியதும்
- சத்தம் குறைந்ததும், சக்தி சேமிப்பும்
- வேகம் கூடியது
- பாவனைக்கு இலகுவானது
- வெப்பத்தை தாங்கக்கூடியது



***Model GP-200JA**

| | |
|---|---|
| இயந்திரவலு | 200W |
| வெளிப்பாய்ச்சல் வலு | 45 liter/min (Max) |
| உயர வலு | 35 meters (Max) |

***Model GP-125JB**

| | |
|---|---|
| இயந்திரவலு | 125W |
| வெளிப்பாய்ச்சல் வலு | 30 liter/min (Max) |
| உயர வலு | 30 meters (Max) |

***Model A-200JAE**
*(Auto pressure pump)*

| | |
|---|---|
| இயந்திரவலு | 200W |
| அதிகபட்ச வெளிப்பாய்ச்சல் வலு | Max 45 L/min |
| உயர வலு | Ht12m 29 L/min |
| அழுத்த ஆளியுடன் | Max 19 meter |
| அழுத்த ஆளிஇன்றி | Max 35 meters |
| | ON 1.1kgf/cm2 |
| | OFF 1.8 kgf/cm2 |

ஏகவிநியோகஸ்தர்கள்
CAPRICORN®

* ஒரு வருட உத்தரவாதம்
(தயாரிப்பாளர் குறைபாட்டிற்கு மாத்திரம்)
* உத்தரவாதப் பத்திரத்தை பெற்றுக் கொள்ளவும்

## கப்ரிகோன் என்ரபிரைசஸ் பிரைவேட் லிமிட்டட்

காட்சி அறை அலுவலகம்:
வெள்ளவத்தை காட்சி அறை : 298 A & B காலி வீதி வெள்ளவத்தை தொலைபேசி: 2582154, 2360919
புறக்கோட்டை காட்சி அறை : 59, மெலிபன் வீதி கொழும்பு 11 தொலைபேசி: 473140
காலி காட்சி அறை : 04 வாட் வீதி காலி தொலைபேசி: 091-2234104
தலைமை அலுவலகம் 47, டெம்பிளர்ஸ் வீதி கல்கிசை தொலைபேசி: 2735584, 2714631
பெக்ஸ் : 2735586 மின் அஞ்சல் : caprico1@sltnet.lk

- நாடளாவிய ரீதியிலான விநியோகம் -


## மத்திய கிழக்கு நாடுகளில் உடனடி வேலைவாய்ப்பு

குவைத், துபாய், சவுதிஅரேபியா ஆகியநாடுகளில் பின்வரும் தொழில் வாய்ப்பு

| | |
|---|---|
| பாதுகாப்பு உத்தியோகத்தர் | (SECURITY GUARD) |
| விமான நிலைய பொதி சுமப்பவர் | (PORTER) |
| விமான நிலைய சுத்திகரிப்பு | (CLEANING WORK) |
| கட்டிட தொழிலாளர்கள் | (LABOURER) |
| ஷட்டரிங் வேலை அனுபவம்கொண்ட தச்சுத்தொழிலாளர்கள் | (SHUTTERING CARPENTER) |
| மேசன்மார் | (MASON) |
| மாபிள் கல் பதிக்கும் அனுபவம் வாய்ந்த மேசன்மார் | (MARBLE/TILES MASON) |
| மின் இணைப்பாளர்கள் | (ELECTRICIAN) |
| உருக்கு பொருத்துநர்கள் | (STEEL FIXER) |
| பிளம்பர்மார் | (PLUMBERS) |
| சுவர் வர்ணம்தீட்டுவோர் | (WALL PAINTER) |

தொடர்புகளுக்கு:
**RAIN BOW TRAVELS &TOURS**
32 1/2 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
ராஜா திரும் கவுசுக்கு அருகாமையில் Tel: 0777,328219,021,2223237

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரீட்சைக்காகப் பட்டபாடுகளை பகிர்கின்றனர் சாதனையாளர்கள்

**அண்மையில் வெளியான ஜி.சீ.ஈ. உயர்தர பெறுபேறுகளில் வடபகுதியில் மூன்று பாடங்களிலும் 'ஏ' சித்திபெற்ற மாணவர்கள் எத்தகைய வழிகளைக் கையாண்டு இத்தகைய பெறுபேற்றினைப் பெற்றார்கள் என்பதை இனிவரும் மாணவர்களுக்கு எடுத்துக் காட்டும் முகமாக சாதனை படைத்த மாணவர்களைச் சந்தித்து அவர்களின் கருத்துகளைத் தருகின்றோம்.**

**இந்த மாணவர்கள் எத்தகைய இலக்கினை நோக்கிச் செல்கிறார்களோ? அத்தகைய இலக்கினை வெற்றிகரமாக அடைந்து எமது தாயக மண்ணில் சேவையாற்ற வேண்டுமென்று ஊக்கமளிக்கும் வகையில் உதயனின் இந்தத் தொடர் அமைகிறது.**

**3**

### நல்ல நண்பர்கள் கிடைக்கவேண்டும்!



நாகேந்திரம் - பானுகோபன்
யாழ். இந்துக்கல்லூரி
கணிதப்பிரிவு
தேசியமட்டத்தில் 4 ஆவது நிலை

அள்வெட்டியைச் சொந்த இடமாகக் கொண்ட இவர் ஆரம்பக்கல்வியை அருணோதயக் கல்லூரியிலும், இடம்பெயர்வுக்குப் பின்னர் சண்டிலிப்பாய் வடக்கு தமிழ்க்கலவன் பாடசாலையிலும் கற்றார்.

தந்தை யாழ்.செயலகத்தில் கடமையாற்றுகிறார். தாய் வீட்டுப்பணி செய்துவருபவர்.

இவரின் சாதனைபற்றிக் கேட்டேன்.

ஆரம்பக்கல்வியை இடம்பெயர்வு காரணமாகப் பல பாடசாலைகளில் கற்றேன். இருப்பினும் விடாமுயற்சியினால் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தேன். சாதாரணதரத்தில் 5ஏ,4பி,சி பெறுபேற்றைப் பெற்றேன்.

கணிதத்துறையினை ஏன் தேர்ந்தெடுத்தீர் எனக் கேட்டேன்.

சிறிய வயதிலிருந்து கணிதத்துறையினை ஆழமாகப் படிக்கவேண்டும் என்ற உணர்வு என்னுள்ளே இருந்தது. அதைவிட அண்ணாவும் கணிதத்துறையில்தான் கற்றார். அவருடைய தூண்டுதலின் பேரிலும் இந்தத்துறையினைத் தேர்ந்தெடுத்தேன்.

எத்தகைய வழிமுறைகளைக் கையாணடீர் என்று கேட்டதற்கு...

இரவு 7 மணியிலிருந்து 10 மணிவரை தான் படிப்பேன். அதற்குள்ளே நிறையப் பயிற்சிகளைச் செய்துகொள்வதுண்டு.

நாளாந்தம் மூன்று மணித்தியாலம்தான் வீட்டில் படித்துக்கொள்வது. அதில் அன்றனறு படிக்கிற பாடக்குறிப்புகளைப் படித்துவிட்டு எஞ்சிய நேரங்களில் படித்ததைப் பயிற்சிகளாகச் செய்துகொள்வதுண்டு. வேறு துறைகளில் ஈடுபாடு அறவே இல்லை என்றுதான் சொல்லலாம்.

இறுதியாக என்ன சொல்லவிரும்புகிறீர்....

எந்தவொரு மாணவனும் தன்னுடைய அதீத முயற்சியுடன் முன்னோக்கிச் செல்ல வேண்டும். பெற்றோர்கள் பிள்ளைகளுக்குப் படி என்ற ஆர்வத்தைத் தூண்ட வேண்டுமே தவிர படிக்கத்தான் வேண்டும் என்ற கட்டாயத்திணிப்பினை மேற்கொள்ளக்கூடாது.

அத்துடன் நல்லநண்பர்களை எம்மோடு இணைத்துக்கொள்ளவேண்டும். அவர்களூடாக நல்ல விடயங்களைப் பகிர்ந்து கொண்டு போட்டித்தன்மையுடன் ஒருவரை ஒருவர் விட்டுக்கொடுக்காமல் படிக்க வேண்டும்.

***

### டாக்டராகி தாயக பூமிக்கு பணியாற்றுவேன்



சிறிகரன் பரதன்
சாவகச்சேரி இந்துக்கல்லூரி
உயிரியல் பிரிவு
யாழ்.மாவட்டத்தில் 2 ஆவது இடம்

கொடிகாமத்தைச் சொந்த இடமாகக் கொண்ட இவர், தரம் 5 வரை கொடிகாமம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் கல்வி கற்றுப் பின்னர் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில இணைந்து கொண்டார்.

தந்தை ஆசிரியராகக் கடமையாற்றுகிறார். தாயார் வீட்டுப்பணி செய்பவர். இவருடைய இத தகைய பெறுபேறு பற்றி அவரிடம் கேட்டோம்.

நான் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தேன். ஜி.சீ.ஈ. சாதரண தரத்தில் 9ஏ,பி பெறுபேற்றினைப் பெற்றேன் - என்றார்.

உயிரியல்துறையை ஏன் தேர்ந்தெடுத்தீர்கள் என்று கேட்டதற்கு சிறிய வயதிலிருந்து விஞ்ஞானபாடம் என்றால் எனக்கு அலாதி பிரியம் அதனை நன்கு ஆழமாகப் படிக்கவேண்டும் என்ற உணர்வு என்னுள்ளே இருந்தது. அதனால், உயிரியல் துறையினைத் தேர்ந்தெடுத்தேன்.

அதிகம் பகல் நேரங்களில் தான் படிப்பேன். இரவு நேரங்களில் குறைந்தது ஒன்பது மணிவரையும்தான் படித்துக்கொள்வேன். காலையில் எழுந்து படிப்பது குறைவு என்றுதான் சொல்லலாம்.

ஒரு வருடமாக நண்பர்களுடன் சேர்ந்துதான் படித்தேன். அப்படி சேர்ந்து படிப்பதினால் நன்மை ஏதும் உண்டா? என்று கேட்டேன்.

நிச்சயமாக, நாங்கள் எல்லாமாகப் பத்துப்பேர் ஒன்றாகச் சேர்ந்து படித்தோம். அதிலும் ஒருவரை ஒருவர் விட்டுக்கொடுக்காமல் போட்டித்தன்மையுடனும் ஒருவருக்குப் புரியாத கேள்விகளை இன்னொருவரிடம் கேட்டும் இப்படி பரஸ்பர மனதுடன் படிக்கக் கூடிய வாய்ப்பு சேர்ந்து படிப்பதில் நிறைய உண்டு.

நிறைவாக ஜி.சீ.ஈ. உயர்தரத்தைப் பொறுதவரை ரியூசன் கட்டாயம் செல்ல வேண்டும். வகுப்பில் ஆசிரியர் கற்பிக்கின்ற போது அவர் கூறுகின்ற விடயங்களை வைத்துக் கொண்டு அத்துடன் மாணவர்கள் சுயமாகத் தேடல் கொள்ளவேண்டும். அப்போது தான் ஒரு பரந்துபட்ட அறிவுகிடைக்கும்.

அதன்மூலம் எந்த வினாக்களையும் சர்வ சாதரணமாக எதிர்கொள்ளலாம்.

என்னுடைய முதலாவது இலக்கினை எட்டிவிட்டேன். அடுத்தது வைத்தியராக வர வேண்டும் என்ற இலக்குடன் நகர்கிறேன். வெற்றியடைந்தால் நிச்சயமாக எனது தாயக பூமிக்கு அளப்பரும் சேவையாற்றுவேன்.

**சந்திப்பு: அபிமானன்**

# அரச உதவிகள் போதாது!

## நிவாரணப் பணிகள் குறித்து மனம் திறக்கிறார்கள் மக்கள் 2

ஆழிப்பேரலைகள் கரையோரப்பகுதி மக்களின் வாழ்வையும் ஊர்களையும் சிதைத்து கோரத்தாண்டவமாடி 10 மாதங்கள் கடந்து விட்டன.


உடைமைகளை, உறவுகளை, ஊர்களை இழந்து அநாதைகள் போல் இடம்பெயர்ந்த மக்கள் இப்போது இடைத்தங்கல் முகாம்களில வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இடைத்தங்கல் முகாம்களில் இந்த மக்கள் அனுபவிக்கின்ற இன்னல்கள் சொல்லிமாளாதவை.

பல அரச சார்பற்ற நிறுவனங்கள் இந்த மக்களின் வாழ்வை மேம்படுத்துவதற்கு பல்வேறு உதவிகளை வழங்கிவருகின்றன. இருந்தாலும் அந்த மக்களின் வாழ்க்கை முற்று முழுதாக இயல்பு நிலைக்குத் திரும்பவில்லை.

தொழிலை இழந்தவர்களில் பலருக்கு இனனமும் உபகரணங்கள் கிடைக்கவில்லை. நிவாரணம் வழங்குவதில் பல்வேறு குறைபாடுகள் நிலவுகின்றன. இந்த நிலையில் இடைத்தங்கல் முகாம்களில் வசிக்கின்ற மக்கள் எதிர் நோக்குகின்ற இன்னல்கள் வசதியீனங்கள், பிரச்சினைகள் என்பவற்றை வாரந்தோறும் 'உதயன்' வெளிக்கொண்டு வந்தான்.

தற்போது இந்தப் பிரச்சினைகள் தொடர்பாக நிவாரணப் பணிகளுடன் சம்பந்தப்பட்ட சிலரைச் சந்தித்துக் கேட்போம்.

### கண்காணிப்பு நடவடிக்கையில் நிவாரணப் பணிகள்



இரா.வரதீஸ்வரன
(பருத்தித்துறை பிரதேச செயலர்)

*கேள்வி:* ஆழிப் பேரலை அனர்த்தம் இடம் பெற்று 10 மாதங்களாகின்றன. பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணப் பணிகள் எந்தளவில இருக்கின்றன?

*பதில்:* ஆழிப்பேரலை அனர்த்தத்தால் எமது பிரிவில் 6 ஆயிரத்து 857 குடும்பங்கள் பாதிப்புற்றுள்ளன. இவர்கள் தற்போது தற்காலிக முகாம்களிலும் உறவினர்கள் வீடுகளிலும் உள்ளார்கள்.

இதுவரை இரண்டு கட்டமாக உலர் உணவு, இடைக்காலப்படி போன்றவை வழங்கப்பட்டுள்ளன.

மூன்றாம் கட்டமாக வங்கிகளில் முழு நிரந்தர வருவாய் உள்ள அரச ஊழியர்கள் ஓய்வூதியம் பெறுவோர் தவிர 6 ஆயிரத்து 065 குடும் பங்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளன.

வீடுகளை இழந்து பாடசாலைகளிலும் பொது இடங்களிலும் உள்ளவர்களுக்கு அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் 186 தற்காலிக தங்குமிட முகாம்கள் அமைத்துக்கொடுக்கப்பட்டுள்ளன.

343 குடும்பங்கள் அவர்களின் உறவினர் வீடுகளில் தங்கியுள்ளதால் அவர்களுக்கு நிரந்தர வீடுகள் கட்டுவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆயிரத்து 657 வீடுகள் முற்றாக சேதமடைந திருக்கின்றன. அவற்றில் ஆயிரத்து 271 வீடுகள் மீளக்கட்டு வதற்கான தகுதி பெற்றுள்ளதாக இருப்பதால் அவை அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலம் கட்டுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றன.

402 வீடுகள் கட்டுவதற்கான கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அவற்றில் ஒரு சில வாரங்களில் 100 வீடுகள் கட்டப்பட்டு பூர்த்தியாகும் நிலையில் உள்ளன.

*கேள்வி:* அரசின் உதவிகள் குறித்து...?

*பதில்:* எமது அரசு இதுவரை உலர் உணவு நிவாரணம், சமுர்த்தி நிதிகளை வழங்கியுள்ளது. ஆனால், தென்பகுதிகளில் ஆழிப்பேரலையால் பாதிப்புற்ற மக்களுக்குச் செய்யும் பணிகளைப் பார்க்கும் போது எமது மக்களுக்குப் பெரிதாக எதுவும் செய்யவில்லை என்றே கூறவேண்டும்.

எனினும், பாதிப்புற்ற மக்களின் நிவாரணப் பணிகளில் பெரும்பாலானவற்றைச் செய்வது அரசசார்பற்ற தொண்டு நிறுவனங்களும் வெளிநாட்டு நிறுவனங்களும் தான்.

*கேள்வி:* நிவாரணப் பணிகளில் ஊழல் என்று கூறப்படுகிறதே...?

*பதில்:* ஆரம்பத்தில் பல தொண்டு நிறுவனங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள் என்பன அரச அதிபர், உதவி அரச அதிபர் ஊடாகவே தங்கள் சேவைப்பணிகளைச் செய்து வந்தார்கள் பின்பு திடீரென தாங்கள் தங்கள் எண்ணப்படி சேவையினை மேற்கொண்டதால் ஒரு திட்டமில்லாத சேவை நடைபெற்றது.

நிவாரணங்கள் கிடைத்தவர்களுக்கு மேலும் மேலும் கிடைக்கவும் செல்வாக்கு அடிப்படையிலும் கிடைக்கவும் வாய்ப்பு ஏற்பட்டுவிட்டது.

இவை தற்போது எமது கவனத்திற்குள் கொண்டு வரப்பட்டதைத் தொடர்ந்து மீண்டும் எமது கண்காணிப்பு நடவடிக்கையில் செயல்படுத்த வழி செய்துள்ளோம்.

*கேள்வி:* நிரந்தர காணி, வீடு, இல்லாதவர்கள் நிலை எந்த அளவில் உள்ளது?

*பதில்:* பாதுகாப்பு வலயம் பகுதி நீக்கப்படுவதால் முன்பு இருந்த வீடுகளைப் புனரமைக்க முடியும். வலிகாமம் வடக்குப்பிரதேசத்தைச் சார்ந்தவர்களில் தற்போது 204 குடும்பங்களை கோப்பாய்ப் பிரதேச பிரிவிலுள்ள வளலாய் தொண்டைமானாறு காற்றாடிப்பிரதேசத்தில் வீடுகள் அமைத்துக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளன.

மீதி 182 பேருக்கு வடமராட்சி வடக்கு ஆனைவிழுந்தான் பகுதியில் காணிகள் வழங்கி நிரந்தர வீடுகள் கட்டிக்கொடுக்கப்படவுள்ளன.

*கேள்வி:* ஆழிப்பேரலையால் முற்றாகச் சேதமடைந்த வல்வை சிவகுரு வித்தியாசாலையை புனரமைக்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதா?

*பதில்:* தற்போது பாதுகாப்பு வலயம் எடுக்கப்பட்டுள்ளமையால் மேற்படி வித்தியாலயம் அதே இடத்தில் அமைப்பதற்கான அனுமதியை அரசு வழங்கியுள்ளது.

இதைக் கட்டிக்கொடுப்பதற்கு யுனிசெவ் நிறுவனம் முன்வந்துள்ளது. விரைவில் மேற்படி வித்தியாலயக் கட்டடப்பணி ஆரம்பமாகவுள்ளது.

### விதவைகளின் சுயதொழிலை மேம்படுத்த நடவடிக்கை



திரு.சி.சிவபாலசிங்கம்
(கிராம சேவையாளர் வல்வை வடக்கு ~ மேற்கு)

*கேள்வி:* தங்கள் கிராம சேவையாளர் பிரிவிலுள்ள விதவைகள் கணவனால் கைவிடப்பட்டவர்களிற்கு இதுவரை போதிய நிதி, நிவாரணம் வழங்கப்படவில்லையென இடைத் தங்கல் முகாமில் உள்ள பெண்கள் முறைப்பாடு செய்கின்றார்கள். இதுபற்றி என்ன சொல்கின்றீர்கள்?

*பதில்:* விதவைகளுக்கு சுனாமிக்கு முன்பு 'கெயர்' நிறுவனத்தால் 30 ஆயிரம் ரூபா சுழற்சி முறைக்கடன் வழங்கப்பட்டது. அதில் விதவைகள் கருவாடு பதனிடும் தொழில் செய்து தமது சீவியத்தைப் போக்குவதற்கு உதவியாக இருந்தது.

ஆனால், அவர்களுக்குத் தற்போது ஆழிப பேரலையால் பாதிப்புற்ற நிலையில் போதிய நிதியின்மையால் ஒன்றும் செய்யமுடியாத நிலை உள்ளது.

அதேபோல் கணவனால் கைவிடப்பட்டவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. இவர்கள் விடயத்திலும் கவனமெடுத்து பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தினூடாக தனியார் நிறுவனங்களை அணுகி வருகின்றேன்.

*கேள்வி:* தங்கள் பிரிவில் ஆழிப்பேரலையால் பாதிப்புற்றவர்களின் வீடுகளின் நிலை எப்படி இருக்கின்றது?

*பதில்:* எனது பிரிவில் தற்போது குறிப்பாக ஆழிப்பேரலையால் பாதிப்புற்ற இடமான ஆதிகோயிலடிப் பகுதியிலிருந்த வீடுகள் 66 முற்றாகச் சேதமடைந்தன.

207 வீடுகள் கட்டப்படவேண்டியுள்ளது. இதற கான நிதி தற்போது ஒதுக்கப்பட்டுள்ளது. எனினும், ஒரு சில வேலை மட்டுமே தற்போது நடைபெற்று வருகின்றன.

*கேள்வி:* முன்பள்ளி மாணவர் பிரச்சினைக்கு தீர்வு இல்லையா?

*பதில்:* இதுவிடயத்தில் நான் அதிக அக்கறை எடுத்து வருகின்றேன். போதிய காணி இல்லை. நிதிப்பிரச்சினை என்பனவற்றால். இந்தப் பணிகள் பாதிக்கப்படுகின்றன.

யாழ்.கிறிஸ்தவ ஒன்றியம், பாலர், பாடசாலை கட்டித்தருவதற்கு முன்வந்துள்ளது.

*கேள்வி:* வல்வெட்டித்துறையில் காணிப் பிரச்சினை உள்ளது என்பது உண்மை எனினும், பாதிப்புற்ற மக்களின் வீட்டையும், வாழ்வையும் மீளக்கட்டியெழுப்ப முடியாதா?

*பதில்:* முடியும் தற்போது மக்கள் குடியிருப்புகளில் இராணுவத்தினர் வெளியேறினால் அவ்வேலை இலகுவாக முடியும்.

சிதம்பராக் கல்லூரிக்கு எதிராக உள்ள தென் இந்தியச் திருச்சபைக்குச் சொந்தமான காணியை இராணுவத்தினர் 1980 ஆம் ஆண்டு முதல் தம்வசம் வைத்துள்ளார்கள். அது வெறு மனே தான் உள்ளது. இராணுவத்தினர் அங்கு வெளியேறினால் பாதிப்புற்ற மக்களுக்கான பொதுவசதிகளுடனான வீடுகள் கட்டிக் கொள்ள முடியும்.

*கேள்வி:* சொந்த வீடு, நிலம் இல்லாத எத்தனை குடும்பங்கள் உள்ளன?

*பதில்:* ஆழிப்பேரலையால் பாதிப்படைந்த மக்களும் அதற்கு முன்பிருந்த மக்களும் என 50 குடும்பங்கள் உள்ளனர்.

*கேள்வி:* வீடு கட்டுவதற்கு சொந்தக்காணி இருந்தால் தான் நிரந்தர வீடு கட்டமுடியும் எனப் பேசப்படுகின்றது. அப்படி இல்லாதவர்களுக்கு வீடு அல்லது காணி வாங்குவதற்கும் என உதவும் வரையறுக்கப்பட்ட வைப்பீடாக அவர்கள் பெயரில் வைப்பீடு செய்தால் காணி நிலம் வாங்குவதற்கும் வீடு கட்டுவதற்கும் பயன்படாதா? உதவ வந்த நிதி திரும்பிப் போகவேண்டுமா?

*பதில்:* இது ஒரு நல்ல யோசனைதான் அவர்கள் தவறான வழிகளில் அந்நிதியைப் பயன்படுத்தாமல் தேவையான காணி, வீடு, வாங்குவதற்கென வரையறுக்கப்பட்ட வங்கி வைப்பீட்டில் வைத்தால் பாதிப்புற்றவர்களின் கஷ்டம் போகும் இதை உரியவர்களும் கவனத்தில் எடுத்தால் உதவியாக இருக்கும். ✳

**செவ்வி: சி.சுந்தரலிங்கம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
06-02-1944

ஆண்டவன் அரவணைப்பில்
02-10-2000

எம்மிரு கண்களாயிருந்து இல்லக்குலவிளக்காய் சுடர்வீசி
அன்பாலே எம்மை அரவணைத்து அறிவோடும்
பண்போடும் எமக்கு வழிகாட்டி எம்மை
ஆளாக்கி வாழவைத்த
அன்புத் தெய்வமே ! ஐந்து ஆண்டுகள்
ஆனாலும் ஆறவில்லை எம் துயரம்
புன்னகை தவழும் உங்கள் மதிமுகம்
இன்னமும் எங்கள் கண்களில்
தெரிகின்றதே - அம்மா!
அன்பிற்கும் பண்பிற்கும் இலக்கணமாய்
பாசத்தின் உறைவிடமாய்
திகழ்ந்த எம் இனிய தெய்வமே!
ஏங்குகின்றோம் உங்கள் வரவுக்காய்
பாரினில் எம்மைச் சிறப்புடன் வாழ வழிகாட்டிவிட்டு
நிரந்தரமாய் பிரிந்து சென்றீரே !
உம் நினைவுகள் தொடரும் ...
எங்களின் இறுதி மூச்சுவரை

உங்கள் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



திருமதி
## தையல்நாயகி பொன்னம்பலம்
(கனகாம்பிகை)

தகவல்:
பொ. கோடீஸ்வரன் (மகன் - கனடா).

என்றும் உங்கள் நினைவில் வாழும்:
கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
சகோதரி அருந்ததி காசிப்பிள்ளை, குடும்பத்தினர்கள்.
பெறாமக்கள் (கனடா).

# Sri Lanka Red Cross Society

SRI LANKA RED CROSS SOCIETY

## Working in conjunction with the Australian Red Cross (ARC)

ARC has begun working on the construction of nearly 500 permanent houses for families affected by war and the tsunami in Vadamarachi East. We are presently expanding our operations team and are seeking to fill the below positions. **A very competitive salary will be offered to well qualified applicants.** All positions are based in Kilinochchi.

### 1. Community Liaison Officer

Seeking an individual who has very well developed discussion/negotiation skills, a strong grasp of concepts of community participation in decision-making, is able to work independently, and is willing to travel within Kilinochchi District.

**Specific responsibilities**

(i) Acting as the primary contact between the ARC project manager and beneficiary communities.
(ii) Hold regular meetings with community representatives in order to gauge their opinion and wishes.
(iii) Ensuring that the communities' viewpoints are clearly articulated in the process of house and infrastructure design.
(iv) Prepare and implement community surveys, and analyse the data collected.
(v) To contribute to project management and work with varied stakeholders that include architects, engineers, project managers, and local authorities.

**Qualifications**

(i) Degree level education, preferably in social work, anthropology or related discipline.
(ii) Minimum three years experience in similar position.
(iii) Good spoken English and a car/motorcycle license are a considerable advantage.

### 2. Field Officer

Seeking an individual with a background in logistics or a construction-related discipline. The successful applicant will work closely with project and construction managers in order to monitor activities and ensure effective project implementation. Considerable travel to sites in Kilinochchi district will be required.

**Specific responsibilities**

(i) Monitoring the progress of house and infrastructure construction in accordance with project plans.
(ii) Ensuring adherence to agreed construction standards.
(iii) Liaise with contactors and consultants to ensure standards and schedules are adhered to.
(iv) Managing all construction-related administration.
(v) Managing ARC logistics as needs require in Kilinochchi and Jaffna.

**Qualifications**

(i) Diploma level education in logistics or construction-related discipline.
(ii) Good spoken and written English.
(iii) Proficient with PC functions, specifically word-processing software.
(iv) Motorcycle or car license.

### 3. Interpreter

Seeking individual to work closely with expatriate staff members. The successful applicant will be fluent in both Tamil and English. INGO experience and demonstrable initiative are advantageous.

**Specific responsibilities**

(i) Interpreting between Tamil and English.
(ii) Minor logistics and administrative tasks, as needs arise.

**Qualifications**

(i) Diploma level English

### 4. Driver

Seeking careful, experienced drivers with knowledge of 4x4 vehicles. Knowledge of radio procedures and good spoken English is a considerable advantage.

**Specific responsibilities**

(i) Driving national and expatriates to site locations in Kilinochchi and to Jaffna, with occasional travel elsewhere in Sri Lanka.
(ii) Managing vehicle in accordance with Red Cross procedures.
(iii) Ensuring vehicle is well maintained and has regular services.

**Qualifications**

(i) Secondary school certificate.

The deadline for application is 7 October. Only short-listed candidates will be contacted. Bio-data and a covering letter outlining why you consider yourself suitable for the position should be sent under registered mail to:

**Branch Executive Officer,**
**Sri Lanka Red Cross Society,**
**Jaffna Branch, no. 73 Kandy Road, Jaffna.**

Clearly mark envelopes with 'ARC vacancies'.

For all positions, applicants with additional skills (over and above those noted above for the specific positions applied for) relevant to community development and construction project management will be a considerably advantage. Applicants are encouraged to outline all relevant skills and experience.

(C/45333)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் அபிவிருத்தி சமாதான முயற்சிகளுடன் தொடர்புபட்டது

பொ.பாலசுந்தரம்பிள்ளை
சிரேஷ்ட புவியியல் பேராசிரியர்

**வீ**டுகள் அமைத்தல், மெய்யாதன அபிவிருத்தி 2002 இற்குப் பின்னர் ஓரளவுதுரிதப் படுத்தப்பட்டுள்ளன. காணிவிலை திடீரென அதிகரித்துள்ளது. இப்பிரதேசங்களில் விவசாய நிலங்கள் பல குடியேற்ற நிலங்களாக மாற்றப்பட்டு வருவதைக் காணலாம். மேலும் வெளிநாடுகளில வாழும் மக்கள் வீடு கட்டுவதிலும் மெய்யாதன விருத்தியிலுமே கூடுதலாக முதலிடுகின்றனர். கட்டுமானப்பணிகள் அதிகரித்ததினால் கட்டுமானத்துறைத் தொழிலாளர்களுக்கும் கட்டடப்பொருள்களுக்கும் பெரும் கிராக்கி நிலவுகின்றது.



யாழ்.மாவட்டப் பிரதேசங்களின் எதிர்கால அபிவிருத்தித் திறமுறைகள் 3

பெரும் எண்ணிக்கையில் இன்று கட்டுமானப் பணிகள் தொடங்கியுள்ளதால் விவசாய கூலித்தொழிலாளர்கள், மற்றும் துறைகளில் கீழ் உழைப்பில் இருந்தவர்கள் கட்டுமானப் பணித்துறைக்கு நகருகின்றனர். மேலும் கட்டடங்களுக்குத் தேவையான கல் அகழ்தல் முக்கியத்துவம் பெற்று பல கல்லுடைக்கும் ஆலைகள் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன. முன்னர் விவசாயத் தேவைக்கான நிலத்தைப் பெறுவதற்கு கலட்டுக்காணிகளில் கல் அகழ்ந்து, மண்வெட்டி நிலத்தைச் சீர்செய்யுவர். ஆனால், தற்போது கட்டடத்தேவைக்கான கல்லின் பெறுமதி அதிகரித்துள்ளதால் கற்தேவைக்காக கல் அகழ்தல் இடம்பெறுகின்றது.

யாழ்ப்பாணத்திலும் அதன் அயல் பகுதிகளிலும் அதிகளவு முதலீடு நடைபெறுகின்றது. யாழ்ப்பாணம் கல்வி, சுகாதாரம் மற்றும் வேலை வாய்ப்புக்களில் முதன்மையாக இருப்பதால் சிறந்த வாழ்விடமாகவும், தொழில் செய் இடமாகவும் கருதப்படுகின்றது. தீவுப்பகுதிகள், தென்மராட்சி மற்றும் பல பகுதிகளில் வேலை செய்வோர் யாழ்ப்பாணத்தையே தங்களது வதிவிடமாகக் கொண்டுள்ளனர். கடந்த எட்டு வருடங்களுக்கு மேலாக பாதிக்கப்பட்ட கரையோரப்பகுதிகள் தனியார்துறையினரிடமிருந்து அதிகளவு முதலீட்டைப்பெறவில்லை. இப்பகுதிகளில் அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் மூலம் அடிப்படைத்தேவைகள் சார்ந்த செயற்பாடுகளே கூடுதலாக இடம்பெற்றுள்ளன.

வடமராட்சியிலும் நெல்லியடியைச் சூழவுள்ள பகுதிகள் சிறு வளர்ச்சியைக் கண்டுள்ளன. வடமராட்சியின் ஏனைய பகுதிகளில் வளர்ச்சி மிகக் குறைவு அல்லது ஆழிப்பேரலையால் அழிவுகளே ஏற்பட்டுள்ளன.

யாழ்ப்பாண மாவட்டத்தின் அபிவிருத்தி நிலையின் பொதுப்பண்புகளை இதுவரை பார்த்தோம். இம்மாவட்டத்தின் இடஞ்சார் அபிவிருத்தியை எவ்வாறு முன்னெடுக்க வேண்டுமென இனிப்பார்போம்.

1. பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் அபிவிருத்தியைக் குறித்தகாலத்தில் முன்னெடுப்பது.

2. நீண்டகால இடஞ்சார் அபிவிருத்தித் திறமுறையை உருவாக்குவது.

பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் அபிவிருத்தி இன்று சமாதான செயற்பாடுகளுடன் நெருக்கமாகவுள்ளது. இராணுவம் இங்கிருந்து விலகுமிடத்து இப்பகுதிகளின் அபிவிருத்தி துரித கதியில் இடம்பெறும். இடம்பெயர்ந்து, தங்கள் வீடுகளுக்குச் செல்ல காத்து நிற்கும் மக்கள் உடன் திரும்புவர். அபிவிருத்தியிலும் பார்க்க மீள் கட்டுமானம் துரித கதியில் இடம்பெறும். இதற்கான வளஒதுக்கீடுகள் கிடைக்குமிடத்து சிறிது காலத்தில் மக்கள் ஒத்துழைப்புடன் இது சாத்தியமாகும்.

நீண்டகால இடஞ்சார் அபிவிருத்தியை முன்னெடுக்க இம்மாவட்டத்தின் நிலப்பரப்பு, மக்கள் பரம்பல் பொருளாதார நடவடிக்கைகள் ஆகியவற்றை கவனத்திற்கொள்வோம்.

### புதிய மாவட்டங்கள் உருவாக்கம்

1978 இல் முல்லைத்தீவு மாவட்டமும் 1983 இல் கிளிநொச்சி மாவட்டமும் உருவாக்கப் பட்டதனால் யாழ்ப்பாண மாவட்டத்தின் நிலப்பரப்பு 2ஆயிரத்து588 சதுர கிலோ மீற்றரிலிருந்து ஆயிரத்து23 சதுரகிலோமீற்றராகக் குறைவடைந்துள்ளது. யாழ்ப்பாண மாவட்டத்தின் தற்போதைய பரப்பளவு முன்னைய பரப்பளவின் 39.5 வீதமாகவுள்ளது. மேலும் குடாநாட்டின் ஒரு பகுதியான பச்சிலைப்பள்ளி கிளிநொச்சி மாவட்டத்தின் ஒரு பகுதியாகவுள்ளது. யாழ்ப்பாண மாவட்டம் கிளிநொச்சி மாவட்டம், யாழ்ப்பாண மாவட்டம் என இரண்டாகப் பிரிக்கப்பட்டது. 1981 ஆம் ஆண்டு சனத தொகையின்படி இரண்டு மாவட்டங்களை உள்ளடக்கிய யாழ்ப்பாண மாவட்டம் 8 லட்சத்து 31 ஆயிரத்து 112 பேரை கொண்டிருந்தது. மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்ட போது 7லட்சத்து 39ஆயிரத்து 481 பேரை யாழ்ப்பாணமும் 91ஆயிரத்த631 பேரைக் கிளிநொச்சியும் பெற்றன. கிளிநொச்சி மாவட்டம் 11.1 வீதமக்களையும் 54.4 வீத நிலப்பரப்பையும் பெற, யாழ்ப்பாண மாவட்டம் 88.9 வீதமக்களையும் 46 வீத நிலப்பரப்பையும் பெற்றது. கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களின் குடிசன அடர்த்தி 1981 ஆம் ஆண்டுக்கணிப்புகளின்படி சதுர கிலோமீற்றருக்கு முறையே 83 பேராகவும் 725 பேராகவும் இருந்தது.

புதிய நிர்வாக மாவட்டங்கள் உருவாக்கப்பட்டதனால் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு உட்பட்ட பெருநிலப்பகுதி நிலக் குடியேற்றங்கள், நீர்ப்பாசனத்திட்டங்கள், விவசாயப்பரப்புக்கள், காட்டுப்பகுதிகள், இலகுவாக அபிவிருத்தி செய்யக் கூடிய நிலங்கள் மற்றும் பச்சிலைப்பள்ளித் தென்னந்தோட்டங்கள் போன்றவை மாவட்ட நிர்வாகத்திற்கு வெளியே சென்றுவிட்டன. யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்தி முயற்சிகளில் பல தசாப்தங்களாகப் பெரு நிலப்பகுதி அபிவிருத்தி முக்கிய இடத்தைப் பெற்றிருந்தது.

இம்மாவட்டத்தின் வருங்காலப் பொருளாதாரம், கைத்தொழில், சேவைத்தொழில்களின் வளர்ச்சியிலேயே கூடுதலாகத் தங்கியுள்ளது. சிறிய, உயர் தொழில் நுட்பக் கைத்தொழில் வளர்ச்சிக்கு இங்கு நல்ல வாய்ப்புண்டு. மாவட்டப் பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையாக துறைமுகம், விமான நிலையம், வீதி வலைப்பின்னல், வீடமைப்பு போன்ற உட்கட்டமைப்புகளில் கூடிய மூலதனம் இடப்படவேண்டும். பொருளாதார வளர்ச்சிக்கு உட்கட்டுமான விருத்தி அடிப்படையாகவும் உந்து சக்தியாகவும் அமையும்.

### இடஞ்சார் அபிவிருத்தித் தந்திரோபாயங்கள்

துறைசார் அபிவிருத்தியுடன் மாவட்டத்தில் மிகச்சிறந்த இடஞ்சார் அபிவிருத்தி ஏற்படுமிடத்து அது பல சமூக பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்க்கவும், மூலவளங்களை நல்லமுறையில் பயன்படுத்தவும், பிரதேச ரீதியில் சமமான அபிவிருத்தியைத் தோற்றுவிக்கவும் வழிவகுக்கும். யாழ்ப்பாண மாவட்டத்தில் பிரதேசரீதியில் காணப்படும் பல பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண மாவட்டத்திற்குப் பொருத்தமான இடஞ்சார் அபிவிருத்தித் திறமுறையொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். இன்று யுத்தத்தாலும் சுனாமியாலும் ஏற்பட்ட பிரச்சினைகளால் பல பகுதிகளின் பொருளாதாரம், சமூகக் கட்டமைப்புகள் பெரும் அழிவுக்குட்பட்டுள்ளன. இயற்கை வளவேறுபாடுகளாலும் மேலும் பல பிரதேசங்கள் உயர்பாதுகாப்புப் பகுதிகளாக வரையறை செய்யப்பட்டதாலும் மக்கள் மீள் குடியேற்றம், புனர்வாழ்வு, புனருத்தாணம் பின்தள்ளப்பட்டுக்கொண்டு போகின்றன. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசப் பிரச்சினைகளுக்கு சமாதான செயற்பாடுகளைத் துரிதமாக முன்னெடுத்து இப்பிரச்சினைகளுக்குத் தீர்வுகண்டு முன்னைய நிலையை அடையவேண்டும்.

அபிவிருத்தி நோக்கில் மாவட்டத்தை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை யாவன:- - (அட்டவணையைப் பார்க்க)

**2003 இல்**

| | பரப்பு கி.மீ. | மக்கள் தொகை | கு.அடர்த்தி | பரப்பு (வீதம்) | குடிசனவீதம் |
|---|---|---|---|---|---|
| தீவுகள் | 197.54 | 47,903 | 243 | 19.31 | 8.09 |
| யாழ்ப்பாணம் மேற்கு | 331.43 | 360,182 | 1087 | 32.39 | 60.86 |
| யாழ்ப்பாணம் கிழக்கு | 494.25 | 183,743 | 372 | 48.30 | 31.05 |
| மாவட்டம் | 1023.22 | 591,828 | 578 | 100 | 100 |

தீவுகள், தீவுகள் தெற்கு, தீவுகள் வடக்கு, நெடுந்தீவு, காரைநகர் ஆகிய நான்கு உதவி அரச பிரிவுகளையும், யாழ்ப்பாணம் மேற்கு யாழ்ப்பாணம், நல்லூர், வலிகாமம் மேற்கு, வலிகாமம் தென்மேற்கு, வலிகாமம் தெற்கு, வலிகாமம் வடக்கு, வலிகாமம் கிழக்கு ஆகிய பிரிவுகளையும் யாழ்ப்பாணம் கிழக்கு வடமராட்சி கிழக்கு, வடமராட்சி வடக்கு, வடமராட்சி தெற்கும்மேற்கும், தென்மராட்சிப் பிரிவுகளையும் உள்ளடக்குவனவாகும்.

இம் மூன்று பிரிவுகளும் முறையே தீவுகள், வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி ஆகிய புவியியற் பிரதேசங்களை ஒத்தன. வலிகாமப் பகுதியில் மக்கள் தொகை அதிகமாகவும் குடிசன அடர்த்தி உயர்வாகவும் செறிவானதும் சிக்கலானதுமான நிலப்பயன்பாடுகளும் நில ஆட்சிமுறைகளும் காணப்படுகின்றன. நிலப்பற்றாக்குறை, நிலப்பயன்பாட்டு மாற்றங்கள், நீர் [illegible]

படுதல் போன்ற இங்கு முக்கிய பிரச்சினைகளாகக் காணப்படுகின்றன. இங்கு காணப்படும் குடிசனநெருக்கத்தைக் குறைப்பதற்கும், செம்மண் விவசாய நிலத்தை பாதுகாப்பதற்கும், குடிசன இடப்பெயர்வை மாவட்டத்திற்கு வெளியிலும் உள்ளேயும் ஊக்குவிக்க வேண்டும். யாழ்ப்பாண மாவட்டத்திற்கு ஐந்து லட்சமே உத்தமமான மக்கள் தொகையென பொதுவாகக் கருதப்படுகின்றது. மாவட்டத்தில் மக்கள் தொகை குறைந்து மீண்டும் மக்கள் தொகை ஆறு லட்சத்திற்கு மேல் சென்றுவிட்டது. இப்பிரச்சினைக்குத் தீர்வாக மாவட்டத்திலிருந்து பெருநிலப்பகுதிக்கு மக்கள் இடம்பெயர்தல் வேண்டும். அல்லது மாவட்டத்தின் மேற்குப் பகுதியிலிருந்து கிழக்குப் பகுதிக்கு மக்களை இடம்பெயர நடவடிக்கைகள மேற்கொள்ள வேண்டும். இந் நோக்கத்தை நிறைவேற்ற மாவட்டத்திற்குப் பொருத்தமான பிரதேச அபிவிருத்திக் கொள்கைகள், அபிவிருத்தித் தந்திரோபாயங்கள், இடவமைவுத் தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டும்.

மாவட்டப் பிரதேச அபிவிருத்தித் திறமுறையில் யாழ்ப்பாணம் கிழக்குப் பிரதேசத்தை அபிவிருத்தி செய்தல் முக்கியமான கொள்கைத் தீர்மானமாகக் கொள்ளப்பட வேணடும். அதனை அடைவதற்கான செயற்பாடுகளும், முதலீடுகளும் மேற்கொள்ளப்பட வேண்டும். மாவட்டத்தின் கிழக்குப்பகுதி மொத்த நிலப்பரப்பில் ஏறக்குறைய அரைவாசியைக் கொண்டிருப்பதுடன் இப்பகுதி நிலம் விவசாயத்திற்கு சாதக நிலை குறைந்த




தாகவுள்ளது. யாழ்ப்பாணம் மேற்குப்பகுதி நிலங்களுடன் ஒப்பிடுமிடத்து தரம்குறைந்ததாகவும் உள்ளது. ஆகவே, இப்பகுதி நிலத்தை கைத்தொழில்கள் குடியிருப்புகள் அமைப்பதற்குப் பயன்படுத்தலாம். யாழ்ப்பாணம் கிழக்குப் பகுதியை விருத்தி செய்து குடிசனத் தொகையை ஈர்க்க இங்கு கொடிகாமத்தை முக்கியநகரமாக விருத்தி செய்ய வேண்டும் இம் மாவட்டத்தில் யாழ்ப்பாணத்துக்கு அடுத்து கொடிகாமம் இரண்டாவது பெரிய நகரமாக விருத்தி செய்ய ஒரு கொள்கைத் தீர்மானம் எடுக்கப்பட வேண்டும். கொடிகாமம் இரண்டாவது பெரிய நகரமாக வருவதற்கு, அதனது இடவமைவும் பின்னணி நிலவளங்களும் பொருத்தமாகவுள்ளன. கொடிகாமத்தை அபிவிருத்தி மையமாகக் கொண்ட யாழ்ப்பாணக் கிழக்குப் பிரதேச அபிவிருத்தி மாவட்டத்தின் சமமான இடஞ்சார் வளர்ச்சிக்கு வழி வகுக்கும்.

தென்மராட்சி, வடமராட்சிப் பகுதிகளின் விருத்திக்கு கொடிகாமத்தின் வளர்ச்சி மிக முக்கியமானதொன்றாகும். வடமராட்சி, தென்மராட்சி ஆகிய பகுதிகளுக்கும் குறிப்பாக இப்பகுதிகளின் வளர்ச்சியடையாத கிழக்குப் பிராந்தியங்களுக்கு மத்தியில் கொடிகாமம் அமைந்திருப்பதால் இப்பிரதேசங்களின் வளர்ச்சி இருபிரதேசங்களின் விருத்திக்குப் பெரும்பங்காற்ற முடியும்.

கொடிகாமம் மாவட்டத்தின் இரண்டாவது பெரிய நகரமாக விருத்தி செய்வதற்கு சாதகமாகியிருக்கும் காரணிகள் பின்வருமாறு:-

1. கொடிகாமம் ஏற்கனவே சிறிய சந்தை நகராக இருப்பதுடன் தென்மராட்சி கிழக்கின் பிரதான சேவை நிலையமாகவும் உள்ளது.

2. வடமராட்சி, தென்மராட்சிப் பிரதேசங்களின் போக்குவரத்தில் கொடிகாமம் முக்கியத்துவம் பெற்றுள்ளது. வடமராட்சி மக்கள் கொடிகாமம் ஊடாகவே தென்பகுதிக்கான பயணங்களை மேற்கொள்கின்றனர்.

3. கொடிகாமம் பகுதியை சூழவுள்ள நிலம் விவசாய வளம் குறைந்த மணற்பிரதேசமாகவும், தரவைப்பகுதியாகவும் இருப்பதால் கைத்தொழில் வீடமைப்புக்குத்தேவையான நிலங்களைப் பெறலாம்.

4. கொடிகாம நகர வளர்ச்சிக்குத் தேவையான நீரை மணற்காட்டுப்பகுதியிலிருந்து பெறலாம். தற்போது இரணைமடுக்குளத்திலிருந்து குடாநாட்டிற்கான நீர்விநியோகத் திட்டம் பற்றி ஆய்வு நடைபெறுகின்றது. இத்திட்டம் வெற்றியடையக்கூடிய வாய்ப்புகள் உண்டு. இது நிறைவேற்றப்படும் போது கொடிகாமமே முதலில் பயனடையும். அல்லது கைவிடப்பட்ட சந்தை நகர்கள் நீர்விநியோகத் திட்டத்தை மீள ஆரம்பித்து இதற்குள் கொடிகாமத்தையும் சேர்க்கலாம்.

கொடிகாம அபிவிருத்திப் பிரதேசம் கொடிகாமம், கச்சாய், மிருசுவில், உசன், எழுதுமட்டுவாள், இடைக்குறிச்சி, இயற்றாலை, மந்துவில் ஆகிய பரந்த பிரதேசங்களை உள்ளடக்கியதாக அமைதல் வேண்டும். கொடிகாமத்தையும் அதன் அயற்பகுதியையும் விருத்தியாக்க பின்வரும் தந்திரோபாயங்களைக் கடைப்பிடிக்கலாம்.

1. யாழ்ப்பாணம் கிழக்கு பிரதேசத்திற்கான பல பொது அலுவலகங்கள் இடவமைவு பெறவேண்டும்.

2. மாவட்டத்தின் கைத்தொழில் வளர்ச்சிப்பகுதியாகக் கொள்ளவேண்டும்.

3. இப்பகுதியில் பெரிய வீடமைப்புத் திட்டங்கள் உருவாக்கப்பட்டு யாழ்ப்பாணம் மேற்குப்பகுதியிலிருந்து கூடியளவு மக்களை புதிய கொடிகாமம் நகரிற்கு இடம்பெயர வைக்கவேண்டும்.

4. கொடிகாமத்தில் பஸ் டிப்போ அமைக்கப்படவேண்டும்.

5. உயர்கல்வி நிறுவனங்கள் இடவமைவு பெறவேண்டும்.

6. கலை, கலாசார செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படல் வேண்டும்.

7. புதிய பாதைகள் அமைக்கப்பட்டு கொடிகாமத்தை இணைக்க வேண்டும்.

பல்வேறு நகர அபிவிருத்தித் தந்திரோபாயங்களைக் கடைப்பிடித்து இந்த நகரை விருத்தி செய்தால் குடாநாட்டின் மேற்கில் செறிந்து வாழும் மக்களை கிழக்கிற்கு நகர்த்தலாம். மேற்குப் பகுதியில் நில அழுத்தம் குறைவதுடன் தென்மராட்சி கிழக்கு, வடமராட்சி கிழக்கு, பச்சிலைப்பள்ளிப் பகுதிகள் துரித வளர்ச்சிபெறும். இதனால், யாழ்ப்பாணம் கிழக்கும், அதனுடன் இணைந்த கொடிகாம நகரின் வளர்ச்சியும் மாவட்டத்தின் இடஞசார் அபிவிருத்தியில் பெரியமாற்றத் தைக் கொண்டு வரும். கிழக்குப்பகுதியின் வளர்ச்சியை மேலும் வலுப்படுத்த நெல்லியடி, சாவகச்சேரி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, கைதடி, உடுப்பிட்டி, எழுதுமட்டுவாள், வரணி செம்பியன்பற்று ஆகிய சிறு நகர்கள் சேவை நிலையங்களை ஒருங்கிணைத்த அணுகும் முறையில் இப்பிரிவின் அபிவிருத் தியை முன்னெடுக்கூடிய நிலையில் விருத்தி செய்ய வேண்டும். மாவட்டத்திற்கு வெளியே குடாநாட்டிற்குள் அமைந்திருக்கும் பளையும் இயக்கச்சியும் முக்கிய சேவை நிலையமாக வளர்த்தெடுக்க வேண்டும். முள்ளிப்பற்று பிரதேசத்தின் அபிவிருத்தி இயக்கச்சி சேவை நிலையத்தின் வளர்ச்சியுடன் தொடர்புபட்டதாகவுள்ளது.

### தீவுகள்

தீவுப்பகுதியின் இன்றைய மக்கள் தொகை அப்பகுதியில் காணப்படும் வள அளவுக்கு போதுமானதாகவுள்ளது. இதனது வளர்ச்சியை 1991 ஆம் ஆண்டு இடப்பெயர்வு பெரிதும் பாதித்துள்ளது. தீவுப் பகுதியின் அபிவிருத்தித்திற முறையில் சமூக முன்னேற்றமும், சுற்றுச்சூழல் பாதுகாப்புமே முக்கியத்துவம் பெற வேண்டும். இப்பகுதி பெரியளவு குடியுள்ளவரவை தாங்கக் கூடிய வளங்களைக் கொண்டதாக இல்லை. இப் பகுதியின் சிறந்த செயற்பாட்டிற்கு இன்றய குடிசனத் தொகையைத் தக்கவைத்தால் போதும். ஒவ்வொரு தீவிலும் காணப்படும் பிரச்சினைகள் ஒன்றுடன் ஒன்று சற்று வேறுபட்டதாகக் காணப்படுகின்றன. இத்தீவுப்பகுதியின் வளர்ச்சியில் சுற்றுச்சூழல் சார்ந்த சுற்றுலாத்துறை வளர்ச்சி முக்கியமானதொன்றாகும். ஊர்காவற்றுறை வேலணையில் வங்களாவடி, புங்குடுதீவில் பெருங்காட்டுச்சந்தி, காரைநகரில் வலந்தலை, நெடுந்தீவில் சந்தைக்கடையடி ஆகிய இடங்களை புவியியற் தன்மைகளைக் கருத்திற் கொண்டு சிறு சேவை நிலையங்களாக விருத்தி செய்ய வேண்டும். இந்த நிலையங்கள் நன்கு விருத்தியாக்கப்படுமிடத்து நடுத்தர வர்க்கப்பிரிவினரை இப்பிரதேசத்தில் தக்க வைத்து அபிவிருத்தியை முன்னெடுக்க வழிவகுக்கும்.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NRP Northern Rehabilitation Project


# நிலைத்து நிற்கக்கூடிய அ

## புவியியல்சார் தகவல் பிரிவு / திட்டம் (Geographical Information System)

யாழ்.மாவட்டத்தில் பிரதேச அபிவிருத்தி திட்டத்தின் கீழ் நிலையான அபிவிருத்தியை ஏற்படுத்தும் நடவடிக்கைகளுக்கு உதவியாக, அபிவிருத்திப் பணிகளில் ஈடுபடும் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களில் பணியாற்றும் பணியாளர்களின் செயற்பாட்டுத் திறனை மேம்படுத்தும் வகையில் ஜேர்மன் அரச சார்புடைய அமைப்பாகிய GTZ-NRP ஆனது அரச அதிபர் மற்றும் திட்டமிடல் திணைக்களத்தினுடன் சேர்ந்து யாழ்.செயலகத்தில் புவியியல் சார்ந்த தகவல் அமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

யாழ்.பல்கலைக்கழகத்தின் புவியியல் பிரிவு, யாழ்.மாவட்டச் செயலகம் ஆகியவற்றுடன் இணைந்து NRP இதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளது. யாழ்.மாவட்டத்தின் பல்வேறு வளங்கள், புவியியல்சார் தரவுகள், விபரங்களை கணனி முறையில் ஆவணப்படுத்தும் செயற்பாட்டிற்காக ஜேர்மன் ஜீசன் பல்கலைக்கழகத்தின் சிரேஸ்ட விரிவுரையாளராகிய கலாநிதி தோமஸ் கிறிஸ்டியன்சன் அவர்கள் இதற்குரிய பயிற்சியை வழங்குவதற்காக விசேடமாக இங்கு வருகை தந்துள்ளார். இவருடன் யாழ் பல்கலைக்கழக புவியியல் பிரிவைச் சேர்ந்த சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி அன்ரனி ராஜன் அவர்களும் இணைந்து செயற்பட்டு வருகின்றார்.

புவியியல்சார் தகவல் பிரிவு



யாழ்.மாவட்டத்தின் புவியியல் ரீதியான தரவுகள், தகவல்கள் என்பவற்றை ஓர் ஒழுங்கமைப்பின் கீழ் திரட்டி, அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளும் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பயன்பாட்டிற்காக, கணனிமுறையில் களஞ்சியப்படுத்துவதற்கான இந்தச் செயற்பாட்டில் 8 அலுவலர்கள் தற்போது பயிற்சி பெற்று வருகினறனர். யாழ். அரச செயலகத்தைச் சேர்ந்த 4 திட்டமிடற்பிரிவு அதிகாரிகள், கோப்பாய் தென்மராட்சி ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளைச் சேர்ந்த அபிவிருத்தி இணைப்பாளர்கள், மருதங்கேணி பிரதேச செயலகப் பிரிவில் உள்ள அபிவிருத்தி உதவியாளர் மற்றும் யாழ்ப்பாணத்தில் உள்ள நகர அபிவிருத்தி அதிகாரசபையின் அதிகாரி ஒருவர் ஆகியோருக்கே இந்தப் பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகப் பிரிவுகள், கிராமசேவகர் பிரிவுகள் ஆகியவற்றின் எல்லைகளைக் குறிக்கும் விரிவான புவியியல் வரைபடங்களை அடிப்படையாகக் கொண்டு, அங்குள்ள வீதிகள், குளங்கள், அரச மற்றும் பொதுக் கட்டிடங்கள், பாடசாலைகள், குடிசனப் பரம்பல், ஏனைய பொது வளங்கள் தொடர்பான தரவுகள், விபரங்கள் என்பன இந்த புவியியல்சார் தகவல் பிரிவில் கணணிமயப்படுத்திப் பாதுகாப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

2.4 மில்லியன் ரூபா செலவில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தச் செயற்திட்டமானது இரண்டு வருடங்களுக்கு மேற்கொள்ளப்படவுள்ளது என்றும் முதற்கட்டமாக 1.9 மில்லியன் ரூபாவை ஜேர்மன் அரச பொருளாதாரக் கூட்டுறவு அமைச்சு வழங்கியுள்ளது என்றும் இந்தத் திட்டத்திற்கான விசேட நிபுணத்துவ ஆலோசகரான கலாநிதி கிறிஸ்டியன்சன் அவர்கள் தெரிவித்தார். யாழ். அரசாங்க அதிபரின் வழிகாட்டலில் யாழ்.செயலக திட்டமிடல் பிரதி பணிப்பாளரின் உதவியோடு, யாழ் செயலகத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள விசேட அலுவலகத்தில் இந்தத் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

மரபு ரீதியாக அட்டவணை முறையில் களஞ்சியப்படுத்திப் பாதுகாக்கப்பட்டு வருகின்ற தரவுகள், விபரங்களை, 'காட்சிப்படுத்தல்' (Visualize) முறையின் கீழ் புவியியல் வரைபடங்களை இணைத்துப் பாதுகாக்கும் கணணிமுறை இந்தத் திட்டத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும் கலாநிதி கிறிஸ்டியன்சன் அவர்கள் தெரிவித்தார். இந்தத் திட்டத்தின் கீழ் ஆரம்பநிலையாக 2 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட நிதி முதலீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற வேலைத்திட்டங்கள் தொடர்பான சகல விபரங்களும் சேகரிக்கப்பட்டு வருகின்றன. இது ஒரு முன்னோடித் திட்டமாகவே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என அவர் மேலும் கூறினார். அத்துடன், யாழ்.மாவட்டத்தின் ஒரு பிரதேசத்தில் மேற்கொள்ளப்படுகின்ற ஓர் அபிவிருத்திக்கும், இன்னுமொரு பிரதேசத்தில் மேற்கொள்ளப்படுகின்ற வேலைத்திட்டத்திற்கும் இடையிலான தொடர்புகள், இணைப்புகள் என்பவற்றைப் பார்ப்பவர்கள் இலகுவில் புரிந்து கொள்வதற்கும், அவற்றை மதிப்பீடு செய்வதற்கும், துல்லியமான செயற்கைக்கோள் வரைபடங்கள், சரியான தரவுகள் மற்றும் உள்ளூரில் காணப்படும் வளங்களை அடிப்படையாகக் கொண்டு, புதிய அபிவிருத்தி வேலைத்திட்டங்களை திட்டமிடுவதற்கும் இந்த புவியியல்சார் தகவல் பிரிவு பேருதவியாக இருக்கும் என்றும் கலாநிதி கிறிஸ்டியன்சன் அவர்கள் தெரிவித்தார்.

யுத்தச் சூழ்நிலை காரணமாக மக்கள் பெருமளவில் இடம்பெயர்ந்தமையினால், இடம்பெயர்ந்தவர்களுக்கான புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ் உணவு, குடிநீர் வழங்குதல், சுகாதார வசதிகளைச் செய்து கொடுத்தல், உலருணவு வழங்குதல் போன்ற நடவடிக்கைளிலேயே அதிக கவனஞ் செலுத்த நேரிட்டது. போர்நிறுத்த ஒப்பந்தம் அமுலுக்கு வந்தபின்பும், சுனாமி பேரழிவு ஏற்பட்ட பினனரும் பல்வேறு அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் பெரிய அளவில் அபிவிருத்தித் திட்டங்களைச் செயற்படுத்தி வருகின்றன. இவ்வாறான வேலைத்திட்டங்களைச் செயற்படுத்துவதில் ஏற்பட்டுள்ள ஒரு பாய்ச்சலுக்கு - வேலைத்திட்ட வேகத்திற்கு - ஈடுகொடுப்பதற்கு மரபு வழியில் சேகரித்துப் பாதுகாக்கப்பட்டுள்ள தரவுகள், விபரங்களின் ஊடாக, விபரங்களையும் தேவைகளையும் சரியானமுறையில் பெற்றுக் கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. இதற்கு ஈடுகொடுக்கும்வகையில் இந்தப் புவியியல் சார் தகவல்களைச் சேகரிக்கும் முறை அமைந்துள்ளது. இலகுவாகவும் தெளிவாகவும் தேவைகளைப் புரிந்துகொள்ளும் வகையில் இதன் மூலம் தகவல்களைக் கொடுக்கக் கூடியதாக உள்ளது என்று, இந்தத் திட்டத்தின்கீழ் பயிற்சி பெறும் அலுவலர் ஒருவர் கூறினார்.

அபிவிருத்தி இலக்குகள் அந்தந்த இடங்களில் உள்ள வளங்கள், அவற்றின் தன்மைகளுக்கேற்ப தீர்மானிக்கப்பட வேண்டும். மீன்பிடி பிரதேசங்கள், விவசாயப் பிரதேசங்கள் என அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டிய பிரதேசங்கள் வேறுபட்டிருக்கின்றன. இப்போதைய அபிவிருத்தித்திட்டமிடல் தந்திரோபாயம் புவியியல் சார்ந்ததாக உள்ளது. எனவே, புவியியல் ரீதியான தகவல்களின் அடிப்படையிலேயே அபிவிருத்தித் திட்டங்களை வகுக்கவேண்டியுள்ளது. இந்த வகையில், புவியியல்சார் தகவல் திட்டமானது ஒரு கொடையாகவே எமது மாவட்டத்திற்குக் கிடைத்துள்ளது என்றும் அந்த அலுவலர் தெரிவித்தார்.

## முல்லைத்தீவு, வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர்களுக்கான ஜேர்மன் அனுசரணை

மல்ரிசார் சர்வதேச நிறுவனமும் (Malteser International), NRPயும் இணைந்து சுனாமியினால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மற்றும் வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர்களின் வாழ்க்கையைப் புனரமைக்கும் முகமாக கடற்றொழிலுக்கான உபகரணங்களை வழங்கும் செயற்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துகின்றது. இந்தத் திட்டத்தின் கீழ் 200 மீனவ குடும்பங்கள் பயனடையவுள்ளன. இதன் முதற்கட்டமாக 40 மீனவ குடும்பங்களுக்கான கடற்றொழில் உபகரணங்கள், கண்ணாடி நாரிழைப் படகு ஒன்று, வெளியிணைப்பு இயந்திரம் ஒன்று, 20 சூடை வலைகள், 20 அறக்கொட்டியான் வலைகள்,



முல்லைத்தீவு கடற்றொழிலாளர்களுக்கான மீன்பிடி உபகரணங்கள்

இவற்றுக்குத் தேவையான மிதவைகள், போயாக்கள், நைலோன் கயிறுகள் என்பன வழங்கப்பட்டுள்ளன.

இந்தத் திட்டத்தின் பங்காளர்களாக முல்லைத்தீவு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசமும், வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசமும் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. இந்த சமாசங்கள் தமது அங்கத்துவ சங்கங்களின் ஊடாக இந்தத் திட்டத்தின் மூலம் பயனடைவோரை முன்னுரிமை அடிப்படையில் இனம் கண்டு தெரிவுசெய்து பெயர்ப்பட்டியலைத் தந்துள்ளன.

மல்ரிசார் சர்வதேச நிறுவனம் (Malteser International) கேட்டுக்கொண்டதற்கிணங்க, இந்தத் திட்டத்தின் கீழ் பயன்பெறுவோருக்கான அடிப்படைத் தரவு சேகரிப்பு கேள்விக்கொத்து ஒன்று இந்த சமாசங்களின் ஊடாக முல்லைத்தீவு மாவட்டத்திலும், வடமராட்சி கிழக்குப் பிரதேசத்திலும் கடற்




மீன்பிடி உபகரணங்கள் வழங்குதல்

றொழிலாளர்களுக்கு பிரயோகிக்கப்பட்டுள்ளது. இதைவிட இந்தப் பிரதேசங்களிலிருந்து மேலதிகமாக 50 பேர் கட்டுப்பாட்டுக் குழுக்களாகத் தெரிவு செய்யப்பட்டு, அவர்களுக்கும் இந்தக் கேள்விக் கொத்து விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

சுனாமிக்கு முன்னரான பொருளாதார நிலைமைகளையும், அதற்குப் பின்னரான பொருளாதார நிலைமைகளையும், ஆய்வுக்கு உட்படுத்துவதற்கு ஏதுவாக அதற்கான கேள்விகளும், தரவுகள் அடிப்படையில் இந்தக் கேள்விக் கொத்தில் உட்படுத்தப்பட்டு விபரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. இதில் எண்ணிக்கை ற்றும் சுருக்க அடிப்படையிலான விடைகளுக்குரிய கேள்விகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்தக் கேள்விக்கொத்துக்கள் NRPயினால் ஆய்வு செய்யப்பட்டு, சம்பந்தப்பட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களுக்கும், சம்பந்தப்பட்ட ஏனையோருக்கும் வழங்கப்படவுள்ளன.

இந்தத் திட்டத்தின் கீழ் உதவி பெறுபவர்களைத் தெரிவுசெய்வதற்குரிய வரைவுகள் குறித்த விபரங்களும் இந்த சமாசங்களுக்கு வழங்கப்பட்டிருந்த குடும்ப அங்கத்தவர்களுக்கு ஏற்பட்ட உயிரிழப்பு, அங்கவீனம், தங்கி வாழும் அங்கத்தவர்களின் எண்ணிக்கை போன்ற விபரங்களுடன், ஏற்கனவே ஒரு கடற்றொழிலை சுயமாகக் கொண்டிருந்தவர்கள் பற்றிய விபரங்களும், முன்னுரிமை அடிப்படையில் தெரிவுசெய்யப்பட வேண்டிய குடும்பங்களில் கவனிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர்களுக்கான குளிர்பதன வாகன விநியோகம்

## வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர்களுக்கான பொருளாதார வளங்களை விருத்திசெய்தல்

பொருளாதார செயற்பாடுகளை ஊக்குவிக்கும் திட்டத்தின் கீழ் NRP நிவாரண புனர்வாழ்வு நல்லிணக்கத்திற்கான அமைச்சு (Ministry of RRR) உலக உணவு விவசாய நிறுவனம் (Food Agricultural Organization) என்பன இணைந்து ஏற்கனவே, இரண்டு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசங்களுக்கு இரண்டு குளிர் பதன வாகனங்களையும், இரண்டு குளிர்பதன அறைகளுக்கு அனுசரணை வழங்கியுள்ளன. இதன் இரண்டாம் கட்ட நடவடிக்கையாக வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் விருத்திக்கென இந்த மாதத்தின் முற்பகுதியில் மேலும் இரண்டு குளிர்பதன வாகனங்களுக்கு அனுசரனை வழங்கியுள்ளது. இந்நிகழ்வானது பருத்தித்துறையில் நடைபெற்றது.

NRPயின் சிரேஸ்ட ஆலோசகர் வுல்ப்கங் கரட்வா (Wolfgang Garatwa) அவர்களும், கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகளும், NRPயின் அலுவலர்களும் கலந்து சிறப்பித்தனர். இடைத்தரகர்களின் தலையீட்டைத் தவிர்த்து கடற்றொழிலாளர்களிடமிருந்து, கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசமே கடலுணவுகளைக் கொள்வனவு செய்து, நேரடியாகக் கொழும்புக்கு அனுப்பி, தமது உற்பத்திக்கு வடபகுதியிலும் பார்க்க ஒரு நியாயமான விலையைப் பெறவும், அதன் மூலம் கிடைக்கும் இலாபத்தில் சிறு பகுதியை சமாசத்தின் செயற்பாடுகளுக்கு ஒதுக்கிக்கொண்டு, மிகுதியை கடற்றொழிலாளர்களுக்கே மீள வழங்கும் வகையில் இந்த திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

சுனாமியினால் மிகவும் பாதிக்கப்பட்ட வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திற்கு ஏனைய நிறுவனங்கள் கடற்றொழிலுக்குத் தேவையான பல உள்ளீடுகளை வழங்கி



கடற்றொழிலாளர்களுக்கு குளிர்பதன வாகனம் ஒப்படைப்பு

யுள்ளபோதிலும், சந்தைப்படுத்தல், சந்தை வாய்ப்புக்கான திட்டங்களில் எவரும் கவனம் செலுத்தியிருக்கவில்லை. சுனாமி பேரழிவின் பின்னர் கடற்றொழிலாளர்கள் படிப்படியாக மீட்சிபெற்று வரும் இந்தச் சந்தர்ப்பத்தில் சந்தைப்படுத்தல் மற்றும் சந்தை வாய்ப்பை ஏற்படுத்தும் இந்தத் திட்டம் மீனவர்களுக்குப் பெரிதும் பயன்தரத்தக்கதாக இருக்கும் என்ற நம்பிக்கை NRPக்கு உள்ளது. வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் தனது அங்கத்துவ சங்கங்களுக்கும், கடற்றொழிலாளர்களுக்கும் இந்தத் திட்டத்தின் கீழ் மேலும் சிறந்த சேவையை வழங்க வழியேற்படும் என்றும் NRP நம்புகின்றது.

இந்தத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டுள்ள குளிர்பதன அறைக்கான மின்பிறப்பாக்கி இன்னும் கொழும்பிலிருந்து தருவிக்கப்படவில்லை. இதனை விரைவாகத் தருவித்து குளிர்பதன அறையை இயங்கவைப்பதற்கான நடவடிக்கையை NRPயானது நிவாரண புனர்வாழ்வு நல்லிணக்கத்திற்கான அமைச்சுடன் சேர்ந்து மேற்கொண்டுள்ளது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## தட்டுவன்கொட்டி கிராமத்திற்கான இரண்டாம் கட்ட புனரமைப்புத் திட்டம்

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள தட்டுவன் கொட்டி கிராம புனரமைப்புத் திட்டத்தின் இரண்டாம் கட்டச் செயற்பாடுகளை NRP செயற்படுத்துகின்றது. இச்செயற்பாட்டின் கீழ் 6 வகுப்பறைகளையுடைய 120 X 25 அடி அளவிலான ஒரு பாடசாலைக் கட்டிடம், ஆசிரியைகளுக்கான ஒரு விடுதி, சகல வசதிகளுடன் கூடிய 77 X 30 அடி அளவுடைய ஒருமுன்பள்ளி, உள்ளக விளையாட்டுக்களுக்கான ஒரு விளையாட்டு அறை (Play pen), 100 வீடுகள் கொண்ட வீட்டுத்திட்டம் என்பன அமைக்கப்படவுள்ளன.

ஜேர்மன் அபிவிருத்திக் கூட்டானது NRPயினூடாக 60வீத நிதியுதவியை இந்த 100 வீடுகள் அமைக்கும் வீட்டுத்திட்டத்திற்கு வழங்கவுள்ளது. மிகுதி 40 வீத நிதியை TRO வழங்கியுள்ளது. இதேவேளை, இந்த வீடுகளுக்கான கழிப்பறைகளை அமைத்துக் கொடுப்பதற்கு யுனிசெவ் நிறுவனம் முன்வந்துள்ளது. அத்துடன், NRPயின் வேண்டுகோளுக்கமைய மாணவர்களுக்கான மலசல கூடங்களையும், குடிநீர்த்தாங்கி ஒன்றையும் அமைப்பதற்கு யுனிசெவ் நிறுவனம் இணங்கியுள்ளது. அதற்கான ஒப்பந்தமும் கைச்சாத்திடப்பட்டுள்ளது. 6 வகுப்பறைகளைக் கொண்ட இன்னுமொரு பாடசாலைக் கட்டிடத்தை அமைத்துக் கொடுப்பதற்கும் யுனிசெவ் நிறுவனம் முன்வந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த அபிவிருத்தித் திட்டங்களுக்கான வேலைகள் எதிர்வரும் டிசம்பர்மாத முடிவுக்குள் முற்றுப்பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தட்டுவன்கொட்டி கிராம புனரமைப்புத் திட்டத்தின் முதலாம் கட்டத்தில் 110 வீடுகள் அமைக்கப்பட்டு அந்தக் கிராமத்திலிருந்து இடம்பெயர்ந்த குடும்பங்கள் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. இரண்டாம் கட்ட புனரமைப்புத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு வீடும் சுமார் 3 லட்ச ரூபா செலவில் அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

NRPயினால் அமைக்கப்படவுள்ள பாடசாலை கட்டிடத்திற்கு சுமார் 32 லட்ச ரூபாவும், ஆசிரியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிவிருத்தியை நோக்கி

Sri Lankan - German Development Cooperation

Ministry of Relief, Rehabilitation & Reconciliation

kfw NKENGRUPPE

gtz German Technical Cooperation

ன விடுதிக்கு சுமார் 15 லட்ச ரூபாவும், ளி மாணவர்களுக்கான விளையாட்டு முழுமையான வசதிகளுடன் அமைப் லட்சத்து 60 ஆயிரம் ரூபாவும், மலசல மற்றும் தளபாடங்கள் உட்பட சகல ளையும் கொண்டதாக அமையவுள்ள முன் ட்டிடத்திற்கு சுமார் 22 லட்ச ரூபாவும், நிதி பட்டுள்ளது.

ன்கொட்டி கிராமத்தின் நிலையான அபி க்கும் முன்னேற்றத்திற்குமாக வேறு பல ங்களின் ஒத்துழைப்பும் NRPயினால் டுள்ளது. இப்பகுதி பிரதேச சபையின் ப்பைகளையும், கழிவுகளையும் திட்ட றையில் அகற்றுவதற்கும் ஒழுங்குகள் ள்ளப்பட்டுள்ளன.

ன் இக்கிராம மக்கள் தமது வைத்திய காக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு செல்வதைத் தவிர்ப்பதற்காக கிளி மாவட்ட பிரதிமாகாண சுகாதார சேவை ரிப்பாளரின் ஒத்துழைப்புடன் இக்கிராமத் கிளினிக் சேவையை நடத்துவதற்குரிய கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. க இங்கு அமைக்கப்பட்டுள்ள சனசமூக த்தில் ஏற்கனவே NRPயின் அனுசரணை இரண்டு அறைகள் நிர்மாணிக்கப்பட்டு, ான தளபாடங்களும் வழங்கப்பட்டுள் ந்த கிளினிக் சேவை ஒக்டோபர் மாதம் திகதியிலிருந்து வாரந்தோறும் நடை ற்குரிய ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளன.

## ஆனையிறவு உப்பள ளிர் விடுதிக்கான தளபாடங்கள்

பிறவு உப்பளத்தில் பணியாற்றும் 96 மக ரியாளர்களின் தங்குமிட வசதிக்காக NRP, புனர்வாழ்வுக் கழகத்தின் ஒத்துழைப்புடன் வ நிர்மாணித்துள்ள, 12 கட்டிடங்களைக் விடுதிக்கு NRP தளபாடங்களை வழங்கி முதல் கட்ட நடவடிக்கையாக 70 லட்ச செலவில் அமைக்கப்பட்டுள்ள இந்த ல், சமையலறை, உணவருந்தும் அறை, ளுடன் கூடிய பொழுது போக்கு அறை நிர்மாணிக்கப்பட்டுள்ளன. இந்தச் செயற் தின் திறப்பு விழா வைபவத்தின்போது ப்பட்ட வேண்டுகோளை ஏற்று இந்த குத் தேவையான சகல தளபாடங்களை ங்குவதற்கு NRPயின் சிரேஸ்ட ஆலோ ல்வ்கங் கரட்வா அவர்கள் முன்வந்துள்

பிறவு உப்பளத்தில் பணியாற்றும் மகளி வசதிகளை ஏற்படுத்தும் இந்த இரண கட்ட நடவடிக்கையின் மூலம், உண ம் தட்டுக்கள் கோப்பைகளை வைப்பதற் ராக்கைகள் (Plate racks with space for 25 and cups) உணவருந்தும் அறைக்கான ரைகள், ஓய்வறைக்கான 96 கதிரைகள் ற்றுடன் உடைகளை மினுக்கும் பெட்டிகள் lectric Iron Boxes), அவற்றுக்குரிய ம் மேசைகள் 24 (Folding Iron Tables) வும் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் இங்கு ற்றும் யுவதிகள் அனைவருக்கும் தேவை ரத்திலான கட்டில்கள், நுளம்பு வலைகள் அலுமாரிகள் என்பவற்றை வழங்குவதற் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

## யாழ். அபிவிருத்தி வேலைத்திட்டங்கள்

ணத்தில் உள்ள NRP அலுவலகத்திற்கு அரச செயலகத்திற்குக் கிரமமான முறை




தியுதவி கேட்டு கோரிக்கைகள் வந்த ுள்ளன. NRPயின் அபிவிருத்திக்கான, ழப்பு அணுகுமுறை', அதன் அபி விருத்தி ான கொள்கைகள் என்பவற்றிற்கு ஏற்றதாக கோரிக்கைகள் அல்லது வேலைத்திட்டக் கைகள் அமைவதில்லை. இருப்பினும், கோரிக்கைகள் NRPயின் நல்லெண்ணம் கவனத்தை ஈர்ப்பதாக இருக்கின்றன. இதன் ாக ஜேர்மன் பொருளாதாரத்திற்கான ழப்பிற்கான அமைச்சின் உதவியோடு NRP முன்னெடுப்புகளுக்கு உதவும் வகையில் நிதியம் ஒன்றுக்கான நிதி யாழ்ப்பாண த்தி நிதி என்ற பெயரில் ஒதுக்கீடு செய்யப் ளது.

உதவிகோரி வரும் அனைத்து கோரிக்கைகளையும் சமமாகவும், வெளிப்படையான முறையிலும் ஆராய்ந்து தேர்வு செய்வதற்கென குழுவொன்று யாழ் அரசாங்க அதிபரின் கீழ் அமைக்கப்பட்டுள்ளது. இதில் அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் பிரதிநிதிகள், இருதரப்பு இணக்கப்பாட்டு அமைப்புகள், ஐக்கிய நாடுகளின் அமைப்புகள் ஆகியோர் இக்குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

இந்த குழுவினால் பரிசீலனைக்கு உட்படுத்தப்படும் உத்தேச வேலைத்திட்டங்கள் -

- நிலையான நன்மையை ஏற்படுத்தும் வகையில் வறுமையை ஒழித்து, பயனாளிகளின் வாழ்வாதாரத்திற்கு உதவுதல்
- முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டத்தின் 20 வீதமான முதலீடு அல்லது வேறு வகையிலான நேரடி பங்களிப்பு செலுத்துவதுடன், செயற்திட்டப் பிரதேசத்தில் பணியாற்றும் ஏனைய நிறுவனங்களுடன் நிறுவன ரீதியாக இணைந்து செயற்படுதல்
- சமாதான முன்னெடுப்புக்களுக்கு உறுதுணை புரிவதுடன் முரண்பாட்டுத் தீர்வுக்கு உதவும் வகையில் வெற்றி - வெற்றி என்ற ரீதியில் இணைந்த நிலைமைக்கான முன்னெடுப்புக்களைக் கொண்டிருத்தல்
- பால்நிலை இலக்கு, சிறுபான்மையின குழுக்களின் முன்னேற்றத்திற்கு வாய்ப்பைப் கொண்டிருப்பதுடன், சூழல் வாழ்வாதார நன்மைகளுக்கும் சந்தர்ப்பமளிப்பதாக இருத்தல் என்பன போன்ற நிலைப்பாடுகளின் அடிப்படையில் அமைந் திருத்தல் வேண்டும் என NRP விரும்புகின்றது.

ஜேர்மன் அரசாங்கத்தின் நிதியானது பரிசீலனையின் பின்னர் தேர்வு செய்யப்படும் வேலைத் திட்டங்களுக்கு யாழ். அபிவிருத்தி நிதியத்திலிருந்து யாழ் அரசாங்க அதிபர் மற்றும் NRPயின் பொறுப்பில் ஒதுக்கீடு செய்யப்படும். வேலைத் திட்டங்கள் யாவும் பொது மக்களின் தேவைகளை முன்னுரிமை அடிப்படையில் பூர்த்தி செய்வதுடன், சம்பந்தப்பட்ட பிரதேச மக்களின் பங்களிப்போடு நிறைவேற்றப்படவும் வேண்டும் என்பதும் NRPயின் நிலைப்பாடு.

தெரிவுசெய்யப்பட்ட வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படும் இடத்தில், திட்டத்திற்கான கொடையாளி, தீர்மானம் மேற்கொண்டவர்கள், திட்டத்தின் பங்காளர்கள் ஆகியோரின் விபரங்கள் அடங்கிய அறிவிப்பு பலகை வைக்கப்பட வேண்டும். அதில் குறிப்பிட்ட வேலைத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி தொடர்பான விபரமும் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

இந்த அடிப்படையில் கோப்பாய் பிரதேசத்தில் அச்சு வேலி இந்துசிட்டி கிராமத்தில் கள்ளுற்பத்திக்கான வேலைத்திட்டம் சுமார் 3.36 லட்ச ரூபா செலவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அச்சுவேலி பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கத்தின் பங்களிப்புடன் இந்தத் திட்டம் தற்போது செயற்படுத்தப்பட்டு வருகின்றது. கள்ளுற்பத்திக்குத் தேவையான புதிய கட்டிடத்திற்கான வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த வேலைத்திட்டம் குறித்து கருத்து தெரிவித்த அச்சுவேலி பனை, தென்னை வள கூட்டுறவுச் சங்கத்தினர், 600 அங்கத்துவ குடும்பங்களின் நேரடி நன்மைக்காக இந்தத் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது எனக் கூறினர்.

யுத்தச் சூழ்நிலை காரணமாக பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து மீண்டும் சொந்த இடங்களில் மீளக்குடியமர்ந்துள்ள இப்பகுதி மக்கள் தங்களது பனை, தென்னைகளின் மூலவளங்களிலேயே தமது ஜீவனோபாயத்திற்காகத் தங்கியுள்ளனர். இவர்களின் கள்ளுற்பத்திக்குரிய சரியான சந்தை வாய்ப்பில்லை. இதனால் கள்ளுற்பத்தி காலத்தில் நாளாந்தம் 2000 போத்தல் கள்ளை நிலத்தில் ஊற்றி அழிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் இப்பகுதி மக்கள் இருக்கின்றனர். இந்த அவல நிலைமையைப் போக்கி, உற்பத்தி செய்யப்படும் கள்ளை போத்தல்களில் அடைத்து சேமித்து வைத்து, கள்ளுற்பத்தியில்லாத காலத்தில் சந்தைப் படுத்தும் முயற்சி இந்தத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றது.

திக்கத்தில் உள்ள வடிசாலைக்கு மதுசாரத்திற்காகத் தமது உற்பத்தியைத் தாங்கள் வழங்கி வந்ததாக அச்சுவேலி பனை, தென்னை வள கூட்டுறவுச் சங்கத்தினர் தெரிவித்தனர். கடந்த 2002 ஆம் ஆண்டு 7 இலட்சத்திற்கும், 2003 இல் 4 இலட்சத்திற்கும், 2004 இல் ஒரு இலட்சத்திற்கும், இந்த ஆண்டு 36 ஆயிரம் ரூபாவுக்கும் தாங்கள் மது சாரத்திற்கான கள்ளை வழங்கியதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர். திக்கம் வடிசாலையில் உற்பத்தி செய்யப்பட்ட சாராயம் மற்றும் மதுவகைகளுக்கிருந்த சந்தைவாய்ப்பு போர்நிறுத்த ஒப்பந்தத்தின் பின்னர் யாழ் குடாநாட்டுக்கான தரைவழி மார்க்கமான ஏ9 வீதி திறக்கப்பட்டதும், யாழ் குடாநாட்டிற்குள் நாட்டின் தென்பகுதியில் உற்பத்தி செய்யப்படும் மதுவகைகளும், வெளிநாட்டு மதுவகைகளும் வரத்தொடங்கியதையடுத்தும், வீழ்ச்சியடைந்தது. அத்துடன், யாழ் குடாநாட்டின் சமூக, பொருளாதார, அரசியல் சூழ்நிலைகளினாலும் தமது உற்பத்தியைத் தொடர்நது திக்கம் வடிசாலைக்கு வழங்க முடியாத நிலைமை ஏற்பட்டதாகவும் இந்தச் சங்கத்தினர் தெரிவித்தனர்.

இந்த நிலையில் நாளாந்த உள்ளூர் சந்தை வாய்ப்பை மாத்திரமே தங்களின் உற்பத்திக்காகத் தங்கியிருக்க வேண்டிய நிர்ப்பந்தம் இந்தச் சங்கத்தினருக்கு ஏற்பட்டது. இதன் மூலம் உற்பத்தி காலத்தில் கிடைக்கும் 6000 போத்தல்களில் 4000 போத்தல்களை மாத்திரமே இவர்கள் விற்பனை செய்து வருவாயைப் பெறக் கூடியதாக உள்ளது. பெருமளவில் வீணாகும் கள்ளை போத்தல்களில் அடைத்துப் பாதுகாக்கும் முயற்சியை சேதமடைந்துள்ள இந்துசிட்டி கள்ளுற்பத்தி நிலையத்தின் ஊடாக மேற்கொண்டதன் பயனாக கடந்த பெப்ரவரி மாதம் தொடக்கம் ஜுலை மாதம் வரையிலான காலப் பகுதியில் 73 ஆயிரம் போத்தல்களில் கள் அடைக்கப்பட்டு உற்பத்தி இல்லாத காலத்தில் சந்தைப்படுத்துவதற்குத் தயாராக இருப்பதாக அச்சுவேலி பனை, தென்னை வள கூட்டுறவுச் சங்கத்தினர் தெரிவித்தனர்.

மக்கள் பங்களிப்புடன், உற்பத்தி செய்யப்படும் கள்ளை போத்தல்களில் அடைக்கும் வேலைத் திட்டத்தை இச்சங்கத்தினர் மிகுந்த நம்பிக்கையோடு ஆரம்பித்துள்ளனர். தமது அங்கத்துவ குடும்பங்களாகிய 600 குடும்பங்கள் மட்டுமல்லாமல், தமது அயல் பிரதேசத்தைச் சேர்ந்த குடும்பங்கள் உட்பட சுமார் 1700 குடும்பங்கள் நன்மை பெறக்கூடிய வாய்ப்பு இந்தத் திட்டத்தின் மூலம் கிட்டும் என்றும் அவர்கள் எதிர்பார்க்கின்றனர். அத்துடன், இந்த குடும்பங்களைச் சேர்ந்த பெண்களுக்கும் இந்தத் திட்டத்தின் கீழ் வேலை வாய்ப்பை ஏற்படுத்த முடியும் என்றும் அவர்கள் நம்புகின்றார்கள். உற்பத்தியாகும் கள்ளை வீணாகாமல் பாதுகாத்து சந்தைப்படுத்துவதன் ஊடாக கள்ளுற்பத்தியில் ஈடுபடும் குடும்பங்களின் வருவாயை அதிகரிக்கவும் முடியும் என்றும் அவர்கள் கூறுகின்றார்கள்.

தற்போது பாவனையில் உள்ள பழைய இயந்திரத்தின் மூலம் நாளொன்றிற்கு 300 போத்தல் களிலேயே கள்ளை அடைக்க முடியும். புதிய திட்டதின் கீழ் கொள்வனவு செய்வதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய இயந்திரத்தின் உதவி கொண்டு 2000 போத்தல்களில் நாளொன்றுக்கு கள்ளை அடைக்க முடியும் என்று நம்பப்படுகின்றது.

பதினொரு கிளைகளைக் கொண்ட அச்சுவேலி பனை, தென்னை வள கூட்டுறவுச் சங்கத்தினர் 9 லட்சத்திற்கும் மேற்பட்ட ஒரு நிதியை ஒதுக்கி தமது உறுப்பினர்களான பெண்களின் சுயதொழில் வாய்ப்புக்கான சுழற்சி முறைக்கடன் திட்டம் ஒன்றைச் செயற்படுத்தி வருகின்றனர் என்பதும், பனை, தென்னை வளங்களைக் கொண்டு பனங்கட்டி மற்றும் பனங்கற்கண்டு ஆகியவற்றை உற்பத்தி செய்யும் வருவாய் முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## அல்லாரை உற்பத்திக் கிராம உற்பத்திப் பண்ணை

மேலும் இன்னொரு திட்டமாகிய கிராமிய கைத்தொழிற்றுறை அமைச்சினால் வழங்கப்பட்ட மூன்றரை லட்ச ரூபா நிதியுதவியுடன் கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்டு, மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்பட்ட அல்லாரை உற்பத்திக் கிராம நாற்றுப் பண்ணையின் முன்னேற்றத்திற்கு NRPயின் அனுசரணையிலான யாழ் அபிவிருத்தி நிதியம் கை கொடுத்து உதவியுள்ளது.

நீர்ப்பாசனச் செயற்பாட்டை மேற்கொள்வதில் எழுந்த சிக்கல்களை, சீரான ஒரு நீர் முகாமைத்துவ அடிப்படையில் தீர்த்து, உற்பத்தியை மேம்படுத்துவதற்கு இந்த உதவி பெரிதும் பயன்பட்டுள்ளதாக இந்தப் பண்ணைக்குப் பொறுப்பான அல்லாரை உற்பத்திக் கிராமக் குழுவினர் தெரிவித்தனர்.

சேதன பசளைப் பயன்பாட்டைக் கொண்டு செயற்பட்டு வரும் இந்தப் பண்ணைக்குரிய கிணற்றில் நீர்ப்பற்றாக்குறை ஏற்பட்டது. மணற்பாங்கான தரையில் காணி அமைந்திருப்பதனால் வாய்க்கால் வழி நீர்ப்பாசனத்தில் அதிக நீர் விரயமாகியது. இதனால் பயிர்களுக்குப் போதிய நீரைப் பாய்ச்ச முடியாத நிலையேற்பட்டது. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக நீர்த்தொட்டி, நீரிறைக்கும் மின்சார இயந்திரம், 3 பேஸ் கொண்ட மின்னிணைப்பு, நீர்ப்பற்றாக்குறையைப் போக்குவதற்காக [illegible] காலங்களில் பாதுகாப்பான முறையில் நாற்றுக்களை உற்பத்தி செய்வதற்கான வலை மண்டபம் ஆகிய அம்சங்களைக் கொண்ட வேலைத்திட்டத்திற்கு 7 லட்சத்து 75 ஆயிரம் ரூபா யாழ் அபிவிருத்தி நிதியத்திலிருந்து உதவியாக வழங்கப் பட்டுள்ளது. இந்த உதவிக்கு மேலாக கமநல சேவை நிலையத் திடமிருந்து மானியத்தில் கிடைத்த 15 ஆயிரம் ரூபா கடனுதவி தூவல் நீர்ப்பாசனத்திற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் இங்கு இப்போது உற்பத்தியாகும் வல்லாரை, பொன்னாங்காணி, கங்குங், கற்பூரவல்லி, பொற்றிலைக்கையான் போன்ற மூலிகை இலைவகைகளை ஆயுர்வேதம், சித்த மருத்துவம் ஆகிய பாரம்பரிய வைத்தியத்துறையில் ஈடுபடும் வைத்தியர்கள் பெற்றுச் செல்கின்றனர். கைதடியில் உள்ள சித்த மருத்துவ பீடத்தினரும் இந்த மூலிகைகளைக் கொள்வனவு செய்வதற்கு விருப்பம் தெரிவித்துள்ளதாக இந்தப் பண்ணைக்குப் பொறுப்பான கிராம உற்பத்திக் குழுவினர் தெரிவித்தனர்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி, அல்லாரை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, வீரசிங்கம் மகா வித்தியாலயம், மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலயம் போன்ற பாடசாலைகள் இங்கு உற்பத்தியாகும் வல்லாரை போன்ற கீரை வகைகளை சத்துணவுக்காகக் கொள்வனவு செய்து வருவதாகவும் இக்குழுவினர் தெரிவித்தனர்.




இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்டு பயிர் செய்யப்பட்டுள்ள - நாள் தோறும், வருடம் முழுதும் விளைச்சலைத் தரும் - நல்லின முருங்கை மர நாற்றுக்களும் இங்கு விற்பனை செய்யப்படுகின்றன. தென்னை, மா, செண்பகவரியன் ரகப் பலா ஆகிய மரக்கன்றுகளும் இங்குள்ள நாற்று மேடைகளில் உற்பத்தி யாகின்றன. இந்தப் பண்ணையின் வல்லாரை உற்பத்தி, தூவல் நீர்ப்பாசன முறை என்பன இப்பிரதேச விவசாயிகள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களின் முன்னேற்றத்திற்குச் சிறந்ததொரு வழிகாட்டியாகத் திகழ்கின்றன.

# வடபுனரமைப்புத் திட்டம்

## கோப்பாய், தென்மராட்சி ஆகிய பிரதேச செயலர்பிரிவுகளில் மேற்கொள்ளப் படவுள்ள வேலைத் திட்டங்கள்

ஜேர்மன் சமஷ்டிக் குடியரசின் நிதியுதவியில் NRPயானது நிவாரண புனர்வாழ்வு நல்லிணக்கத்திற்கான அமைச்சின் பங்களிப்புடன் கோப்பாய் மற்றும் தென்மராட்சிப் பிரதேச செயலாளர் பிரிவுகளில் 120 வீடுகளும், 8 பொது மண்டபங்களும் அமைக்கப்படவுள்ளன.

### கோப்பாய் பிரதேசம் – 60 வீடுகள்

| | |
|---|---|
| உரும்பிராய் வடக்கு | தலா 10 வீடுகள் |
| உரும்பிராய் கிழக்கு | |
| நீர்வேலி வடக்கு | |
| புத்தூர் வடக்கு | |
| பத்தமேனி | |
| அச்சுவேலி தெற்கு | |

### பொது மண்டபங்கள்

- நவக்கிரி
- புத்தூர் மேற்கு
- சிறுப்பிட்டி கிழக்கு

### தென்மராட்சி பிரதேசம் – 60 வீடுகள்

| | |
|---|---|
| மிருசுவில் | 22 வீடுகள் |
| கல்வயல் | 14 வீடுகள் |
| கோவில் தடியிருப்பு | 10 வீடுகள் |
| சரசாலை தெற்கு | 14 வீடுகள் |

### பொது மண்டபங்கள்

- குழந்தைகள் பராமரிப்பு நிலையம் – மந்துவில் கிழக்கு
- தச்சு வேலைத்தளம் – தச்சன்தோப்பு
- கல்வயல்
- மகளிர் மேம்பாட்டுப் பயிற்சி நிலையம் – கரம்பைக்குறிச்சி
- வரணி

இந்நிதியுதவியானது ஜேர்மன் அபிவிருத்தி வங்கி (KfW) ஊடாக வழங்கப்படுகிறது. இப்பிரதேச மக்களின் விருப்பத்திற்கும், தேவை முன்னடிப்படையிலும் தெரிவுசெய்யப்பட்டுள்ள இந்த வேலைத் திட்டங்கள் பொதுமக்களின் பங்களிப்போடு மேற்கொள்ளப்படவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. ◆

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதாபிமானத்துடன் களத்தில்....

## டெனிஷ் கண்ணிவெடியகற்றும் குழு

வடக்கு - கிழக்கில் பொதுமக்களின் குடியிருப்புப் பிரதேசங்களிலும் மற்றும் விளை நிலங்களிலும் பல லட்சக்கணக்கான வெடிபொருள்கள் புதைந்திருக்கின்றன. இதன் காரணமாகவும் தமிழ் மக்களின் பொருளாதாரத்தில் பெரும்பாதிப்பு ஏற்பட்டுள்ளது. வெடிபொருள்களை அகற்றி நிலங்களை பொதுமக்களின் பாவனைக்கு விடுவது அவசியமான நடவடிக்கையாகும்.

புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர் பல்வேறு தன்னார்வ அமைப்புகள் வடக்கு - கிழக்கில் வெடிபொருள்களை அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளன. டெனிஷ் கண்ணி வெடியகற்றும் குழு இவற்றில் குறிப்பிடத்தக்க ஓர் அமைப்பாகும். அந்த அமைப்பின் தொழில்நுட்ப ஆலோசகரும் யாழ்.மாவட்டப் பொறுப்பாளருமான கரிபெல் ஜக்கா, டெனிஷ் கண்ணிவெடியகற்றும் குழுவினர் வடக்கு - கிழக்கில் மேற்கொண்டுவரும் செயற்பாடுகள் தொடர்பாக உதயனுக்கு தகவல்களை வழங்கினார். அவை இங்கே தரப்படுகின்றன.

குடாநாட்டு மக்கள் கடந்த காலத்தில் தமது சொந்த வீடு வாசல்களை விட்டு இடம் பெயர்ந்து சென்றார்கள். அவ்வாறு இடம் பெயர்ந்து சென்ற மக்கள் தமது வீடுகளில் குடியமரவும் தமது நிலங்களில் விவசாயம் மற்றும் தொழில் முயற்சிகளை மேற்கொள்ளவும் வேண்டும் என்பதே தமது அமைப்பின் முக்கியநோக்கம் என்றார் - கரிபெல்.

நாங்கள் மிதிவெடிகளை அகற்றியுள்ள பகுதிகளைச் சேர்ந்தமக்களைப் பொறுத்த வரையில் அவர்கள் உயர்ந்த வாழ்க்கைத் தரத்தைக் கொண்டவர்கள் அல்லர். அவர்கள் சாதாரண வாழ்க்கை வாழ்பவர்களாகவே உள்ளார்கள். கூலித்தொழிலாளர்களாகவே அவர்கள் காணப்படுகின்றார்கள்.



வெடிபொருள்கள் அகற்றப்பட்ட உடுவில் பிரதேச செயலாளர் பிரிவுக்கான ஒரு பகுதி உடுவில் பிரதேசச் சமுக சேவை உத்தியோகத்தரிடம் கையளிக்கப்படுகின்றது.

"தற்போதைய அமைதிச் சூழ்நிலையில் நிம்மதியான வாழ்க்கை மக்களுக்குக் கிடைக்கவேண்டும். குறிப்பாக சிறுவர்கள் மற்றும் பெண்கள் அமைதியாகவும் பயமின்றியும் வாழவேண்டும் என்பதும் எமது அமைப்பின் நோக்கங்களில் ஒன்றாகும். இதற்காகவே நாம் எமது பணியைத் தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றோம்.

"தற்போது எமது செயற்பாடுகள் யாழ்ப்பாணத்தில் நவக்கிரி, அளவெட்டி, ஊர்காவற்றுறை, பருத்தித்துறை, வல்லிபுரம், கற்கோவளம் ஆகிய பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

"குறிப்பாக வல்லிபுரம், கற்கோவளம் ஆகியன ஆழிப்பேரலை அனர்த்தத்திற்கு உட்பட்ட பகுதிகள் ஆகும். இந்த ஆண்டில் இவ் இடங்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டு வெடிபொருள்கள் அகற்றும் செயல்பாட்டினை முன்னெடுத்துள்ளோம்.

"இந்த இடங்களிலும்கூட சிலபகுதிகளில் வெடிபொருள்களை அகற்றும் நடவடிக்கைகள் முடிவடைந்ததை தொடர்ந்து அபபகுதிகளை பிரதேச செயலாளரிடம் கையளித்தும் உள்ளோம். மிகுதிப் பகுதிகளின் வேலைகளையும் விரைவுபடுத்திப் பூர்த்திசெய்து கையளிக்கவுள்ளோம்.

### ஆழிப்பேரலைக்குப் பின்னர்....

"ஆழிப்பேரலைப் பாதிப்பைத் தொடர்ந்து பாதிக்கப்பட்ட பகுதிகள் 1,2,3 என முன்னுரிமை அடிப்படையில் இனங்காணப்பட்டு (மக்களின் மீள்குடியேற்றம் விரைவில் இடம்பெற வேண்டும் என்ற அடிப்படையில் முன்னுரிமைகள் கொடுக்கப்பட்டு) செயற்பாடுகள் இடம்பெற்றுக்கொண்டும் இருக்கின்றன.

"எம்மால் துப்புரவு செய்யப்பட்டு பிரதேச செயலாளரிடம் கையளிக்கப்படும் பகுதிகளில் மக்கள் மீளக்குடியேறுவதற்கு வசதியாக அரசு மற்றும் அமைபுகளும் வீடமைப்புத் திட்டங்களைச் செயற்படுத்தமுடியும்.

"ஏற்கனவே புன்னாலைக்கட்டுவனுக்கும் மல்லாகத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் கடந்த ஒரு வருட காலத்தில் சுமார் 13 கிலோமீற்றர் தூரம் வரையிலான பகுதி துப்புரவு செய்யப்பட்டுப் பிரதேச செயலாளரிடம் கையளிக்கப்பட்டது. அப்பகுதியில் தற்போது மக்கள் குடியமர்ந்துள்ளனர்.

"சுமார் 80 பேர் முதல் 120 பேர் வரையானோர் நாளாந்தம் பணியில் ஈடுபடுத்தப்பட்டே இப்பிரதேசத்தின் துப்புரவுப் பணிகளை நாம் மேற்கொண்டோம் இங்கு பயன்படுத்தப்பட்ட குழுவினர் தற்போது வேறு இடத்திற்குத் துப்புரவுப் பணிக்கு அனுப்பப்பட்டு உள்ளார்கள்.

"ஊர்காவற்றுறைக்கு ஒரு பகுதியினர் அனுப்பப்பட்டுள்ளார்கள். நீண்டகால யுத்தம் காரணமாக இப்பகுதி மிகவும் பாதிக்கப்பட்டிருப்பதை நாம் காண்கின்றோம். அங்கு இளையோருக்கு வேலைவாய்ப்புகள் அற்ற நிலைமையும் அவதானிக்கப்பட்டது.

"எமது அமைப்பைப் பொறுத்தவரையில் வெடிக்காத வெடிபொருள்களை அகற்றும் பணியில் எப்பகுதியில் கூடுதலாக ஈடுபடுகின்றோமோ அப்பகுதியில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து வேலைக்கும் ஆள்களை சேர்த்துக்கொள்கின்றோம் அவர்களுக்கு நாம் பயிற்சி கொடுக்கின்றோம். அவர்கள் கடமைக்கு வந்துவிட்டு நாளாந்தம் தமது வீடுகளுக்குச் சென்றுவரக் கூடிய வாய்ப்பும் காணப்படுகிறது.

"இவ்வாறு நாம் அந்தந்தப் பகுதி இளைஞர்களைத் தெரிவு செய்வதன் மூலம் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தப்படுகின்றன. அதனால், பொருளாதாரமும் அந்தப் பகுதிக்கே சென்றடைகின்றது.


வெடிபொருள்களை அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள டெனிஸ் கண்ணிவெடி நிறுவன ஊழியர்.

"எமது இந்த நடவடிக்கை, பாதிக்கப்பட்ட பகுதிமக்கள் கூடிய பயனைப்பெற வாய்ப்பளிக்கும்.

"நாம் பாரிய இயந்திரங்களைப் பயன்படுத்தி வேலைகளை மேற்கொள்வதைத் தவிர்த்து அப்பகுதி மக்களைக் கொண்டே எமது பணிகளை மேற்கொள்கின்றோம். அதன் மூலம் இப்பணம் அப்பகுதி மக்களைச் சென்றடைகின்றது.

"எமது செயற்பாடுகள் பாதிக்கப்பட்ட மக்களின் குடும்பங்களின் நிம்மதியான வாழ்க்கைக்கும் வழி சமைக்கின்றன. இதனை ஒரு மனிதாபிமான முயற்சியாகவே நாம் முன்னெடுக்கின்றோம்.

### குடாநாட்டில் மட்டுமல்ல....

"எமது பணிகள் யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி திருகோணமலை, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களிலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

"இப்பணியில் பரவலாக கிட்டத்தட்ட 450 பேர் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள். இதிலும் கூட சாதாரணமானவர்களே பயிற்சிகளுக்குப் பின்னர் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றார்கள்.

"யாழ்.மாவட்டத்தில் வெடிபொருள்களை அகற்றும் செயற்பாட்டில் எம்முடைய எட்டுக் குழுவினர் செயற்பட்டுக்கொண்டு இருக்கின்றார்கள். இதில் ஆறு செயற்பாட்டுக் குழுக்களும் இரண்டு மதிப்பீட்டுக் குழுக்களும் அடங்குகின்றன.

"வெடிபொருள்களை அகற்றும் ஒரு குழுவில் 38 பேர் அங்கம் வகிக்கின்றார்கள். வெடிபொருள்களைத் தேடி அகற்றும் பணியில் 30 பேரும், மருத்துவர் இருவரும், சாரதிகள் இருவரும், பகுதித் தலைவர்கள் மூவரும், அணித்தலைவர் ஒருவருமாக மொத்தம் முப்பத்தியெட்டுப்பேர் அடங்குகின்றார்கள்.

"கடந்த மாதம் வரை எம்மால் ஒரு லட்சத்து 74 ஆயிரத்து 664 சதுரமீற்றர் பரப்பு துப்புரவு செய்யப்பட்டுள்ளது.

இதேபோன்று 5 ஆயிரத்து 959 வெடிக்காத வெடிபொருள்கள் கண்டெடுக்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன.

"எமது யாழ்ப்பாண நிறுவனத்தில் 285 பேர் கடமையாற்றுகின்றனர். இதில் சர்வதேச மட்டத்தில் ஒருவர் தொழில்நுட்ப ஆலோசகராகவும் அலுவலக செயற்பாட்டிற்கு நிர்வாக ரீதியாக இருவரும் அலுவலக உதவியாளர்களாக மூன்று பேரும் கடமையாற்றுகின்றார்கள்.

"எங்களைப் பொறுத்தவரையில் அலுவலகத்தில் இருந்து கடமையாற்றுவதிலும் பார்க்க களத்தில்நின்று பணிகளை மேற்கொள்வதற்கே நாம் அனைவரும் முக்கியத்துவம் கொடுத்து வருகின்றோம்.

"யாழ்ப்பாணத்தில் உள்ள எமது நிறுவனத்தில் கடமையாற்றும் அனைத்து ஊழியர்களுமே யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்தவர்களே ஆவர். இவர்கள் இப்பணியில் கூடிய கவனத்துடனும் அக்கறையுடனும் செயற்படுகின்றார்கள்.

- நேசன் -

"யாழ். மாவட்ட அரச அதிபர் காரியாலயத்தில் இருந்து அதிகமான ஒத்துழைப்பும் உதவிகளும் எமக்குக் கிடைக்கின்றன. இத்துடன் அவர்களின் சார்பில் இருந்துவரும் தரக்கட்டுப்பாட்டாளர்கள் நால்வர் வெடிபொருள்கள் அகற்றிய பகுதிகளைச் சோதனையிடுகின்றார்கள். தரநிர்ணயமும் செய்கின்றார்கள்.

வெடிபொருள்கள் பூரணமாக அகற்றப்பட்டுள்ளன என்பது நூறுவீதம் உறுதிப்படுத்தப்பட்ட நிலங்களே எம்மால் பொதுமக்களுடைய பாவனைக்காகப் பிரதேசச் செயலாளர்களிடம் கையளிக்கப்படுகின்றன.

2005 ஆம் ஆண்டுக்குரிய வேலைத் திட்டம் அரச அதிபரினால் தரப்பட்டுள்ளது. அந்த வேலைத் திட்டத்திற்கு அமையவே எமது செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இந்தநிலையில் எமது டெனிஷ் கண்ணிவெடிப் பிரிவு தொடங்கிய வேலைகள் முழுவதையும் பூர்த்தி செய்து முடிப்பதே எமது எதிர்கால நோக்கமாகும்.

# புகை, மது இரண்டையும் தூர விரட்டுவோம்!

நல்லொழுக்கம் என்பது கடையில் வாங்கும் பொருளுமல்ல - 'நல்ல உ[illegible] போடுவதும், நகைநட்டு அணிவதும் அல்ல. எனவே, ஒவ்வொருவரது குடும்பத்திலும் நல்லொழுக்கத்தைப் பேணவேண்டும். தாய், தந்தையர் நல்லொழுக்கத்தைப் பேணாமல் விட்டுவிட்டு எப்படி எமது பிள்ளைகள் நல்லொழுக்கமாக வாழமுடியும்? எத்தனையோ குடும்பங்களில் பிள்ளைகள் முன்னால் தாய், தந்தையர் சண்டை பிடிப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. எத்தனையோ தந்தையர்கள் மதுவிற்கு அடிமையாகி வாழ்க்கையைச் சின்னாபின்னமாக்குவதைக் காணக்கூடியதாகவுள்ளது. எனவே, இப்படியான குடும்பங்களில் உள்ள பிள்ளைகள் எப்படி நல்லொழுக்கத்தைப் பேணமுடியும்? 'தந்தை எவ்வழியோ தனையனும் அவ்வழியே'. ஆகவே, பிள்ளைகளுக்காகவாவது முன் உதாரணமாகத் தந்தையர்கள் வாழ்ந்து காட்ட வேண்டும்.

நோயற்ற வாழ்வே உலகின் சிறந்த சுகம் என்பார்கள். இதேபோல் மனிதர்களாகிய நாங்கள் வாழ வேண்டுமாயின் நாம் சில கெட்ட பழக்கவழக்கங்களைக் கைவிடவேண்டும். அந்த வகையில் மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவனும் போதை தரும் வஸ்துகளையும், புகைத்தலையும் கண்டிப்பாகக் கைவிட்டு நல்லொழுக்கமாக வாழப்பழகவேண்டும். நமது நாட்டில் தற்பொழுது நல்லொழுக்கம் என்பது குதிரைக்கொம்பாகப் போய்விட்டது. நம் நாட்டுப் பத்திரிகைகளைப் பார்க்கும் பொழுது அண்மையில் தாய் கண்டித்ததனால் 11 வயது மாணவன் ஒருவனும் 14 வயது மாணவி ஒருவரும் தூக்கில் தொங்கியுள்ளார்கள். மேலும், வயதுக்கட்டுப்பாடின்றி பாலியல் வல்லுறவு, சமூகச் சீரழிவுகள் போன்ற செயல்கள் நடைபெறு



வதைக் காணக்கூடியதாகவுள்ளது. மேலும், சிறுவர்கள் மீதான துஷ்பிரயோகத்தில் உலகிலே மூன்றாம் இடத்தை இலங்கை வகிக்கிறது என்ற மிகக்கசப்பான தகவலை ஐ.நா. சிறுவர் பாதுகாப்பு நிதியம் தெரிவித்துள்ளது. இலங்கையில் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் மிகமோசமான நிலையில் இடம் பெற்று வருகிறது. 20 சதவீதமான சிறுவர்கள் இவ்வாறான துஷ்பிரயோகத்தில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். உலகம் முழுவதும் 10 லட்சத்திற்கும் மேற்பட்ட சிறுவர்கள் பாலியல் தொழிலில் [illegible] னர். மேலும் இலங்கையில் [illegible] 40 ஆயிரம் வரையான சிறுவர்கள் இவ்வாறு பாலியல் ரீதியான துஷ்பிரயோகங்களில் ஈடுபடுத்தப்பட்டுவருகின்றனர். எனவே, இந்த நிலை தொடர்பான விழிப்புணர்வு இலங்கையில் ஏற்படுத்தப்பட வேண்டும். ஆகவே, சிறுவர்கள் ஒவ்வொருவரும் நல்லொழுக்கத்தைக் கண்டிப்பாகப் பேணிவரவேண்டும்.

### மதுபாவனை

நாளை நல்லொழுக்க தினமாகும். உலகம் பூராகவும் இன்றைய தினத்தை நினைவு கூர்ந்து விழா எடுக்கின்றார்கள். அந்த வகையில் நல்லொழுக்கத்திற்கு எதிரான தீய பழக்கவழக்கங்கள் பற்றி ஆராய்ந்து பார்க்க வேண்டும். அந்த வகையில் முதல் இடம்பெறுவது போதைப்பொருளும் புகைத்தலும்தான். எனவே, முதலில் மதுவை எடுத்துக்கொண்டால் வள்ளுவன் குறள்தான் ஞாபகத்திற்கு வரும். 'கள்ளுண்டான் நஞ்சுண்டான்' என்பது உலக மக்களிடையே செவிடன் காதில் ஊதிய சங்காகவேயுள்ளது. மது என்பது உலக மக்களிடையே நாகரிக பானமாக மாறியுள்ளது. அதேவேளை, எமது நாட்டைப் பொறுத்தமட்டில் ஒருவனுடன் மல்லுப்பிடிக்க வேண்டுமாயின், மனைவியுடன் சண்டைபிடிக்க வேண்டுமாயின், கவலையைப் போக்கவேண்டுமாயின் அல்லது கூச்சமின்றிக் கதைக்க வேண்டுமாயின், நண்பர்களைத் திருப்திபடுத்த வேண்டுமாயின், ஒரு சிலரைத் திருப்திப்படுத்த வேண்டுமாயின் கூடுதலாக மதுவை நாடுவார்கள். இதனால் ஏற்படும் தீமைகள் பற்றி அவர்கள் சிந்திப்பதில்லை. மதுவை உட்கொள்பவன் சுகதேகியாக வாழ்ந்த சரித்திரமே இல்லை. ஆனால், மது அருந்துபவன் குறைந்தது 10 வருடங்களுக்கு முன்பே மரணத்தைத் தழுவுகிறான். எனவே, இப்படி ஒரு குடும்பத்தலைவனுக்கு ஏற்படுமாயின் அவன் விட்டுச்சென்ற குடும்பம் மாலுமி இல்லாத கப்பலாகத்தான் முடியும். இதனால், அவனது பிள்ளைகளின் கல்வி சீரழியும். குடும்பம் வாழ்வதற்குக் கஷ்டமாய் இருக்கும். இதனால் குடும்பத்திலுள்ள பிள்ளைகளின் நல்லொழுக்கம் கேள்விக்குறியாக மாறும் நிலை ஏற்படும். எனவே, மது பாவிப்பவர்கள் இன்றிலிருந்து சிந்தித்துப் பார்க்கவேண்டும். மேலும் போதைப் பொருளால் 25 வயது தொடக்கம் 45 வயதிற்கு இடைப்பட்டவர்கள்தான் பாதிப்படைகின்றனர். எனவே, இந்த வயதிற்கு உட்பட்டவர்கள் கட்டுப்பாடாக வாழப்பழகினால் மதுவில் இருந்து விலகிக்கொள்ளலாம்.

### புகைத்தல்

அடுத்தது நல்லொழுக்கத்திற்கு இரண்டாம் எதிரி புகைத்தலாகும். புகைத்தலை விட்டால் செல்வம், சிறப்பு, சுகம் உண்டாகும் என்பது நாம் அறிந்த உண்மை. ஆனால், இந்த உண்மையை அறியாமல் பல லட்சம் மக்கள் இதற்கு அடிமையாகின்றார்கள். புகைவிடுபவர்கள் தன்னையும் மற்றும் தன் குடும்பத்தினரையும் அயலவர்களையும் நோய்க்கு உட்படுத்துகின்றார்கள். இதம் என்று புகைப்பவர்களும் கவலையை மறக்கப் புகைப்பவர்களும் கூடிய கெதியில் தங்கள் உயிரை மாய்க்கின்றார்கள். புகைப்பவன் ஒருவன் ஒரு நாளைக்கு 10 சிகரெட் புகைத்தால் 11 நிமிடம ஆயுளைக் குறைக்கிறான். இதனால் தனது ஆயுளை 12 வருடங்கள் தொடக்கம் 15 வருடங்களிற்கு முன் இழக்கின்றான். மேலும்

செ.குமாரசிங்கம்
செயலாளர்,
வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனம்,
சித்தன்கேணி.

(18ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க தற்கொலைத் தாக்குதலைத் திட்டமிட்ட சூத்திரதாரிகளில் ஒருவருக்கு 27 வருடம் சிறை

ஒஸாமா பின்லேடனின் ஐரோப்பிய வலைப்பின்னலில் ஐரோப்பாவில் சம்பந்தப்பட்டிருந்தவர்கள் என்று கருதப்படும் ஒரு கோஷ்டியினர் மீது ஸ்பெயின் நாட்டில் நடைபெற்றுவந்த நீண்டகால விசாரணையின் பின் அவர்களுக்குத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

ஸ்பெயினில் இருந்து செயற்பட்டுவந்த அல்கெய்டா அமைப்பின் சிரியாப் பிரிவுத் தலைவருக்கும் அவருடன் சேர்ந்த மேலும் 17 பேருக்கும் ஸ்பெயின் நீதிமன்றம் ஒன்று சிறைத்தண்டனை விதித்தது.

2001ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11ஆம் திகதி அமெரிக்காவில் விமானங்களைக் கொண்டு தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்றவகையில் இவர்கள் மீது விசாரணை நடத்தப்பட்டு வந்தது. அல் - ஜெஸீரா தொலைக்காட்சி நிறுவன செய்தியாளர் ஒருவரும் இதில் அடங்குவர். 3 ஆயிரம் பேருக்குமேல் கொல்லப்பட்ட செப்ரெம்பர் 11ஆம் திகதிய தாக்குதல் சம்பவத்தைத் திட்டமிட்டவர்களில் ஒருவராக இமாம் எடின் பரக்காத் யர்க்கஸ் அல்பது அபு தாதா மீது தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கில் அவருக்கு ஸ்பெயின் நீதிமன்றம் 27 வருடச் சிறைத்தண்டனை விதித்தது. ஸ்பானிஷ் நாட்டில் நிலைகொண்டிருந்த



அன்றும் இன்றும்: போலந்து நாட்டின் அதிபர் - பிரதமர் பதவிகளைக் கைப்பற்ற முயலும் சகோதரர்களின் தோற்றம்.

அல்கெய்டா பிரிவுக்கு இவரே தலைவராக இருந்துள்ளார் என்று தெரியவந்துள்ளது. அமெரிக்கா மீதான தாக்குதலில் உடந்தையாய் இருந்தமை பயங்கரவாத இயக்கமொன்றில் உறுப்பினராக இருந்தமை ஆகியவற்றுக்காக இவருக்குச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. தாக்குதலைச் செயற்படுத்தியதில் இவருக்கிருந்த ஈடுபாடு நிரூபிக்கப்படவில்லையென்று நீதிபதிகள் கூறியுள்ளனர். ஆனால், அல்கெய்டாவின் பயங்கரவாதத் திட்டங்களுடன் அவர் தொடர்புகொண்டிருந்துள்ளார் என்பதை நீதிபதிகள் ஏற்றுக்கொண்டுள்ளனர் என்று தெரிகின்றது.

தாதாவும் மொரக்கோவைச் சேர்ந்த பிரிஸ் செல்பி என்பவரும் 2001 ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஸ்பெயினில் வடகிழக்கிலுள்ள டாரகொன்ன என்ற இடத்தில் கூட்டமொன்றுக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள் என்றும் அக்கூட்டத்தில் செப்ரெம்பர் 11ஆம் திகதி விமானக் கடத்தலில் முக்கிய தலைவரான மொகம்மது அட்டாவும் கலந்துகொண்டிருந்தார் என்றும் அரச தரப்பு வழக்கறிஞர்கள் தெரிவித்தனர். இந்தக் கூட்டத்தில்தான் அமெரிக்கா மீதான தாக்குதலுக்கான திகதி பெரும்பாலும் தீர்மானிக்கப்பட்டது என்று அவர்கள் வாதிட்டனர்.

அல்கெய்டாவுடன் இணைந்துசெயற்பட்டமைக்காக செபிலிக்கு 6 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

சிறு குற்றங்கள் சாட்டப்பட்டிருந்த ஆறு பேர் விடுதலை செய்யப்பட்டனர்.

***

# போலந்து அதிகாரப் பதவிகளை கைப்பற்ற முயலும் இரட்டையர்கள்

### பிரதமர் - அதிபர் பதவிக்கு இரட்டையர் போட்டி

நாளையதினம் போலந்தில் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் ஒரே விதத் தோற்றமுடைய இரட்டைச் சகோதரர்கள் போட்டியிடுகிறார்கள். ஒரு காலத்தில் சிறுவராய் இருந்தபோது சிறுவர்களுக்கான சினிமா படமொன்றில் இருவரும் சேர்ந்து நடித்துள்ளனர். இப்பொழுது 56 வயதான இவர்கள் அரசியலில் உயர் பதவிக்குப் போட்டியிட இருக்கின்றனர்.

இவர்களில் ஐரோஸ்லாவ் காஸின்ஸ்கி என்பவர் மற்றவரைவிட 45 நிமிடங்கள் மூத்தவர். சட்டம், நீதி கட்சியின் தலைவர் - பெரும்பாலும் அடுத்துவரும் பிரதமர் பதவி இவருக்குக் கிடைக்கலாம் என்று கருதப்படுகின்றது. இளையவர் தற்பொழுது வர்ஸோ நகர மேயராக இருந்துவருகிறார். போலந்தின் அதிபர் பதவிக்கான போட்டியில் முன்னணியில் நிற்பவர்.

அதிபர் தேர்தல் ஒக்ரோபரில் நடைபெற இருக்கின்றது. அதில் இவர் வெற்றிபெறுவாரானால் மிக விரைவில் போலந்து நாடு இரு இரட்டையர்களின் ஆட்சிக்கு உட்படும் சந்தர்ப்பம் ஏற்படும் என்று அவதானிகள் கருதுகிறார்கள்.

இரு சகோதாரர்களும் ஒரே மாதிரி இருப்பதால் இருவரையும் அடையாளம் காண்பதில் அநேகர் சிரமப்படுவதுண்டு. இளையவரான ஐரோஸ்வில் லெக்சின் இடது கன்னத்தில் அடையாளம் காணக்கூடியதான மறுவொன்று இருக்கின்றது.

சிறு வயதில் 'சந்திரனைத் திருடிய இருவர்' என்ற படத்தில் 1962ஆம் ஆண்டில் நடித்து புகழ்பெற்றனர். ஒரே பாடசாலையில் படித்தனர். வார்ஸோ பல்கலையில் சட்டம் படித்து பட்டம் பெற்றனர். 1980இல் போலந்து கம்யூனிஸ்ட் கட்சியுடன் சொலிடாரிட்டி தொழிற்சங்கத்துக்கு ஏற்பட்ட மோதலின்போது பிரபல்யமாகினர்.

***

### ஷெரோன் திட்டம் தோற்குமா?

பலஸ்தீன ஹமாஸ் அமைப்பு இஸ்ரேல் மீதான தாக்குதல்களை நிறுத்துவதாக அறிவித்த நிலையிலும் காஸாவிலும் ஏனைய பகுதிகளிலுமுள்ள தீவிரவாத அமைப்பு நிலைகள் மீது விமானத் தாக்குதல் நடத்துவதை இஸ்ரேலியப் படைகள் நிறுத்தவில்லை.

இஸ்ரேலிய விமானத் தாக்குதல் காஸா மற்றும் மேற்குக்கரைப் பகுதிகளில் கெரில்லா நிலைகளைத் தாக்குவதை மேலும் விஸ்தரித்திருப்பதாகத் தகவல்கள் கூறின.

கடந்த புதனன்று நடத்தப்பட்ட தாக்குதலில் காஸா நகரில் மின்சாரம் முற்றாகப் பாதிக்கப்பட்டுவிட்டது. வேறு இரு மேற்குக் கரை நகரங்களின் மீதும் விடியற்காலை தாக்குதல் நடத்தப்பட்டன.

காஸாவிலிருந்து இஸ்ரேலியர் வெளியேறியதால் பலஸ்தீனத்தில் அமைதியேற்படும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையை இந்தப் புதிய தாக்குதல் விஸ்தரிப்பினால் அமைதி நம்பிக்கைகள் சிதறடிக்கப்பட்டுள்ளன.

காஸாவில் நான்கு தீவிரவாதிகளின் நிலைகள் மீது இஸ்ரேலிய விமானங்கள் ஏவுகணைகளை வீசித் தாக்குதல் நடத்தின. இதனால், முக்கிய பத்தா அமைப்பின் காரியாலயமும் வேறு இரு போராளி அமைப்புக்களின் நிலைகளும் நொறுக்கப்பட்டுவிட்டதாக அறிவிக்கப்பட்டது. இஸ்ரேலியரின் இன்னுமொரு ஏவுகணை வட காஸாவில் பாலம் ஒன்றை அழித்துவிட்டதாகவும் நேரில் பார்த்தவர்கள் கூறியுள்ளார்கள். இந்தத் தாக்குதல் மூலம் தீவிரவாதிகளுக்கான முக் கிய பொருள் விநியோகப் பாதை அழிக்கப்பட்டுவிட்டது என்று இஸ்ரேலிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த செவ்வாயன்று இஸ்ரேலிய செரொட் நகரத்தில் [illegible] ஒன்று வீசப்பட்டதையடுத்து புதன் இரவில் பலஸ்தீனியரின் ரொக்கட் ஏவும் நிலைகள் மீது தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டதாக இஸ்ரேலியர் கூறியுள்ளனர். 'தீவிரவாதிகள், இந்த விளையாட்டில் புதியவிதிகள் உண்டு என்பதை விளங்கிக் கொள்ளும்வரை மீண்டும் மீண்டும் தாக்கப்படுவார்கள்' என்று இஸ்ரேலியப் பாதுகாப்பு அமைச்சர் ஷாஷல் மொபாஸ் கூறியுள்ளார். மேற்குக் கரைப்பகுதிகளிலும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ள இஸ்ரேலியர் ஏராளமான தீவிரவாத சந்தேக நபர்களையும் கைது செய்துள்ளார்கள்.

காஸா மற்றும் மேற்குக் கரையிலிருந்து விலகிச்செல்வது இஸ்ரேலின் பாதுகாப்பை மேலும் உறுதிசெய்யும் என்று பிரதமர் ஷெரோன் கூறிவந்துள்ளதை இப்போதைய நடவடிக்கைகள் பொய்யாக்கிவிடுமோ என்ற அச்சம் தோன்றியிருப்பதாக அவதானிகள் கருதுகிறார்கள்.

***

# ஈரானின் அணுத்திட்டத்தில் மாற்றம்?

### ஈரானின் அணு நிலைப்பாட்டில் மாற்றம்?

ஈரான் தனது அணுப் பயன்பாட்டுத் திட்டம் பற்றி எந்த ஒரு நாட்டுடனும் ஆலோசனை நடத்த ஆயத்தமாய் இருப்பதாக அறிவித்துள்ளது.

நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்காகவும் ஈரானிய அணுத்திட்டம் மக்கள் பயன்பாட்டு முயற்சியிலிருந்து ஒருபோதும் மாறுபடமாட்டாது; அமைதி நோக்கத்துக்காகவே அது மேற்கொள்ளப்படுகிறதென்று உறுதியளிப்பதற்காகவுமே இவ்வாறு ஏனைய நாடுகளுடன் ஆலோசனை கலக்க ஈரான் தயாராய் இருப்பதாக ஈரானின் அணுக் கொள்கை பற்றிய பேச்சுகளில் கலந்துகொள்ளும் குழுவின் பிரதம அதிகாரி அலி லரிஜானி தெரிவித்துள்ளார்.

ஈரான் தனது யுரேனியத்தைச் செறிவூட்டும் திட்டத்தைக் கடந்த ஓகஸ்டில் மீண்டும் தொடங்கியதையடுத்து ஈரானுக்கும் ஐரோப்பிய நாடுகளுக்குமிடையிலான அணு பற்றிய பேச்சு நிறுத்தப்பட்டுவிட்டன. இதன் காரணமாக ஐரோப்பிய யூனியனின் வடிவமைப்பான ஈரானின் அணுக் கொள்கை தொடர்பான தீர்மானம் ஒன்றை சர்வதேச அணு சக்தி முகவர் அமைப்பு நிறைவேற்றியது. சர்வதேச அணுப் பாதுகாப்பு ஏற்பாடுகளை மீறிவிட்டதாக இந்தத் தீர்மானத்தில் ஈரான் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. அதேசமயம், அமைப்பில் நவம்பரில் நடக்கவிருக்கும் மாநாட்டுக்கு முன்னதாக ஈரான் தனது உணர்வுமிக்க அணுச் செயற்பாடுகளைக் கைவிட்டு வெளிப்படையான ஒத்துழைப்பை வழங்கப்போகிறதா இல்லையெனில் இது பற்றி ஐ.நா. பாதுகாப்புச் சபைக்கு அறிவிக்கப்படும் என்றும் அத்தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானம் பற்றி ஈரானிய அமைச்சர் கருத்து வெளியிடுகையில், தீர்மானத்தில் சட்டபூர்வ வலுவில் நாடு சர்வதேச அணு சக்தி முகவர் அமைப்புத் தீர்மானத்தை மறு பரிசீலனை செய்யவேண்டும் என்று கூறியுள்ளார்.

ஈரானின் அணுக் கொள்கை பற்றிய ஆவணத்தை அவசரப்பட்டுப் பாதுகாப்புச் சபைக்குப் பாரப்படுத்துவதனால் அமெரிக்காவுக்கோ ஐரோப்பிய நாடுகளுக்கோ பயன் ஏற்படப் போவதில்லை. இப்பிரதேசத்தில் ஸ்திரத் தன்மை நிலவுவது அவசியம். நிலைமை கட்டு மீறுமானால் அவர்களுக்குத்தான் பிரச்சினையாகவிருக்கும் என்றார்.

அத்தீர்மானத்தை மாற்றி அமைப்பது பற்றி ஐரோப்பிய யூனியன் மேற்கொள்ளும் நடவடிக்கைகளைப் பொறுத்தே ஈரானின் அடுத்த நடவடிக்கை அமைந்திருக்கும் என்றும் அவர் கூறினார்.

ஈரானின் அணுக் கொள்கை தொடர்பாக அந்த நாட்டின் நட்பு நாடுகள் சிலவற்றின் நிலைப்பாடு மாறத் தொடங்கியிருப்பதாகப் பொதுவாகக் கருதப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகவலம் மேனா

***

### ஐ.ஆர்.ஏ. ஆயுதக் களைவு

ஐ.ஆர்.ஏ. ஐரிஷ் குடியரசு இராணுவம் ஒப்புக்கொண்டபடி கலைக்கப்பட்டவுடன் அதை உறுதிசெய்யும் அறிக்கைகள் பிரிட்டன் அரசிடமும் ஐரிஷ் அரசிடமும் கையளிக்கப்படவிருக்கின்றன.

ஆயுதக்களைவை மேற்பார்வை செய்ய உருவாக்கப்பட்டுள்ள அமைப்பின் தலைவர் ஜெனரல் ஜோன் டி சாஸ்டலெயின் பின்னர் செய்தியாளர் மாநாடொன்றை நடத்தி அதை அறிவிப்பார். ஆயுதக் களைவு நடவடிக்கையை அவதானித்துக்கொண்டிருப்பவர்களான கத்தோலிக்க குருவானவர் பிதா அலெக்ஸ் றெயிட் மற்றும் ஓய்வுபெற்ற மெதடிஸ்த குருவானவர் ஹரோல்ட் குட் ஆகியவர்களும் இதற்குச் சாட்சிகளாய் இருப்பர்.

கடந்த ஜூலையில் ஐ.ஆர்.ஏ. ஆயுதப் போராட்டத்தைக் கைவிடுவதாக அறிவித்திருந்தது.

***

### பறவைக் காய்ச்சல் பரவாமல் தடுக்க...

பறவைக் காய்ச்சல் நோய் உலகில் பரவாமல் தடுக்கும் நோக்குடன் குழுவொன்றை அமைத்துச் செயற்பட இந்தோனேஷியா முடிவுசெய்துள்ளது.

பறவைக்காய்ச்சல் பரவுவதைத் தடுக்கவும் வெளிநாட்டு உதவிகளை ஒருங்கிணைக்கவும் நிதி ஆதாரங்களைக் கண்டுபிடிக்கவும் இந்தக் குழு பணியாற்றும் என்று இந்தோனேஷிய சுகாதார அமைச்சர் அறிவித்துள்ளார்.



ஸ்பெயினில் செயற்பட்ட அல்கெய்டா அமைப்பின் சிரியா நாட்டவரான தலைவர்.

இந்தோனேஷியாவில் ஆறு பேர் அண்மைக்காலத்தில் பறவைக் காய்ச்சலுக்குப் பலியானதால் இந்த எச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

2003ஆம் ஆண்டிலிருந்து பறவைக் காய்ச்சலுக்கு ஆஸிய நாடுகளில் 66 பேர் பலியாகியுள்ளனர். ரஷ்யா மற்றும் ஐரோப்பியாவிலும் இந்நோய் காணப்பட்டுள்ளது.

Cambrian College of Applied Arts and Technology

# Welcome to the First Canadian campus in Sri Lanka

Cambrian College is the largest College of Applied Arts and Technology, in Northern Ontario, Canada.

## 2nd Intake

**We are Now in Canada**

**Subramaniam Thayananthan**



I'm happy to declare that my ambition to study in Canada has fulfilled through Governor's College.

**Prasad Rasika Mendis**



I have experienced true Canadian education from Governor's College before leaving to Canada for continuing my education.

FOR THE SECOND INTAKE
Contact : Soumya / Kavitha

## SCHOLARSHIPS
### Scheme Available

**Courses Offered**

- HOTEL AND RESTAURANT MANAGEMENT
- TRAVEL AND TOURISM MANAGEMENT
- SOFTWARE ENGINEERING TECHNOLOGY
- BUSINESS ADMINISTRATION - ACCOUNTING

- Complete TWO semester (one year) at Sri Lankan campus, and transfer to CANADA
- Free ESL course (English as a second language)
- Course fee can be paid in installments
- Loan facilities on request

Advertise 3200



## GOVERNOR'S COLLEGE
"COLLEGE CAMPUS"
376, Galle Road, Colombo 03, Sri Lanka.
Tel : +94 11 2375371, +94 11 2375222 Fax : +94 11 2375374
E-mail : governors@sltnet.lk



# YOGI'S
## EXIBITION
## CAKES AND SUGAR CRAFT

**கேக் அலங்காரக் கண்காட்சி**

யாழ்.பெட்டா எசன்ஸ் சப்ளையர்ஸ் ஆதரவில்
எமது அக்கடமி மாணவிகள் வழங்கும் கேக், மாச்சினி மலர்
அலங்காரக் கண்காட்சி
05-10-2005 முதல் 09-10-2005 வரை நடைபெறவுள்ளது.
இக் கண்காட்சியை யாழ்.அரச அதிபர்
**கே.கணேஷ்** ஆரம்பித்து வைப்பார்.
இடம்: 75 ,அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
(நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயில் முன்பாக)
காலம் : 5ஆம் திகதி காலை 11மணி முதல் இரவு 7மணிவரை.
6-9ஆம் திகதி வரை காலை 9 மணியிலிருந்து இரவு 7மணிவரை.
ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(40526)(46-19-15)



# தபால் மூல ஆங்கில பாடநெறிகள்

நீங்கள் இருக்கும் இடத்தில் இருங்கள் நாம் அங்கு உங்களுக்கு ஆங்கிலம் கற்பிக்கின்றோம்

## இதோ இலவச அழகிய குடை ஒன்று

UNION கல்வி நிலையத்தின் இரண்டாவது வருட பூர்த்தியை முன்னிட்டு பாடநெறியில் இணையும் அனைத்து மாணவ/ மாணவிகளுக்கும் அழகிய குடை ஒன்று இலவசமாக வழங்கப்படும். நீங்களும் முந்திக்கொள்ளுங்கள்.

விபரங்களுக்கு சுயவிலாசத்துடன் 5.00 பெறுமதியான 3 முத்திரைகள் அனுப்பி பெறவும்

## UNION EDUCATIONAL INSTITUTE
P.O. BOX 143, KANDY, SRI LANKA. Tel: 077-3123523



# அறிமுகமாகிறது

இறக்குமதி செய்யப்பட்ட உன்னத தரம் வாய்ந்த பக்க விளைவுகள் எதுவுமற்ற உயர்புரதம் விட்டமின்கள் மற்றும் தாதுக்கள் அடங்கிய ஊட்டசத்துமிக்க பால்மா பல்வேறு சுவைகளில் அறிமுகமாகிறது.

**Gain Mass :-**



* கூடுதலான விசேடமாகத் தயாரிக்கப்பட்ட மாப்பொருள் அடங்கிய இலகுவில் சமிபாடடையக்கூடிய பால்மா.
* குறுகிய காலத்தில் உடல் எடையைக் கூட்டவல்லது.
* உடற் சக்தி மட்டத்தை உயர்த்தவல்லது.
* பல்வேறு இனிய சுவைகளில் கிடைக்கும்.
* 500gm மற்றும் 1Kg பக்கெற்றுகளில் இப்பொழுது கிடைக்கிறது.

**Muscle Grow :-**



* அதிகளவு புரதச்சத்தும் (65%) விட்டமின்கள், தாதுக்கள் அடங்கியது.
* உடற் தசைகளைப் பலப்படுத்தும் ஆற்றலுள்ளது.
* உடலுக்கு தீங்கு விளைவிக்கும் கொழுப்புகள் அற்றது.
* விசேடமாக உடற்பயிற்சி ( Body building ) மற்றும் பளுதூக்கும் ( Weightlifting ) வீரர்களுக்காகத் தயாரிக்கப்பட்டது.
* பல்வேறு இனிய சுவைகளில் கிடைக்கும்.
* 500gm மற்றும் 1Kg பக்கெற்றுகளில் இப்பொழுது கிடைக்கிறது.

**Egg Pro :-**



* சுத்தமான முட்டைப் புரதச்சத்தாலானது.
* எல்லோராலும் உபயோகிக்கக் கூடிய ஒரு முழு புரதம். மற்றும் விட்டமின்கள், தாதுக்கள் அடங்கிய பால்மா.
* பல்வேறு இனிய சுவைகளில் கிடைக்கும்.
* 500gm மற்றும் 1Kg பக்கெற்றுகளில் இப்பொழுது கிடைக்கிறது.

**உடற்பயிற்சி மட்டும் போதாது என்பது அறிந்ததே! சரியான ஊட்டச்சத்துடன் கூடிய உடற்பயிற்சி மட்டுமே உடல் எடையை / தசை வளர்ச்சியை அதிகரிக்கும்.**

*அன்னைத்து முன்னனி பாமஸிகளிலும் பெற்றுக்கொள்ள முடியும்*

யாழ் முகவர் : Life Style Fitnes Club
சுழாவடி, ஆனைக்கோட்டை.
Tel : 021 2225697, 0777174895, 0773256557

ஏக விநியோகஸ்த்தர்கள் : NeutriMax
21/1 Terrance Ave, Mt Lavinia.
Tel : 0777788991, 0777700716

எல்லோரும் வாங்கும் விலையில்



# அபூர்வமான மூலிகைகளின் ஒன்றிணைப்பு பரிபூர்ணமான நோய் நிவாரணத்திற்கான வழி.

பரிசோதனை மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது

**Baraka**
பரகா

தற்பொழுது உங்கள் யாழ் நகரிலும்!

ஆயுர்வேத திணைகளத்தின் அனுமதி இலக்கம் 3/1/5/4/94/30

**DIABsol** (Black Seed Oil)



இயற்கையாக நீரழிவு நோயிலிருந்து நிவாரணம் பெற வேண்டுமா?

Baraka கருஞ்சீரகத்தினால் தயாரிக்கப்பட்ட வில்லைகள் மருத்துவ ஆய்வுகளின் மூலம் நிருபிக்கப்பட்ட 100% இயற்கையான கருஞ்சீரக எண்ணெய்யினால் தயாரிக்கப்பட்டு நீரிழிவு நோயிலிருந்து நிவாரணத்தை தருவதோடு உடலின் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கின்றது. ஏனைய ஆங்கில மருந்துகளுடன் உபயோகிக்கலாம்.

**GarliCHOL** (Garlic)



இயற்கையாக கொலஸ்ட்ரோலின் அளவை கட்டுப்படுத்த வேண்டுமா?

Baraka வெள்ளைப்பூண்டு கருஞ்சீரக எண்ணெய் வில்லைகள் 100% இயற்கையாக வெள்ளைப்பூண்டு கருஞ்சீரக கூட்டமைப்பில் தயாரிக்கப்பட்டு உடலிலுள்ள மேலதிக கொலஸ்ரோல் அளவை கட்டுப்படுத்துகின்றது.

**CODseas** (Cod Liver Oil)



உடலை ஆரோக்கிய நிலையில் பேண வேண்டுமா?

கருஞ்சீரகத்துடன் கூடிய மீன் எண்ணெய் (Cod Liver Oil) வில்லைகள் உடலுக்கு தேவையான ஒமேகா-3 மூலகத்துடன், விற்றமின்கள், கனியுப்புக்கள் மற்றும் மேலதிக கல்சியத்தை வழங்கி, உடலை ஆரோக்கியமாக பேண உதவும் மேலும் தடிமன், இருமல் என்பவற்றை தவிர்த்து கண்பார்வை என்பு, பல் என்பவற்றின் தொழிற்பாட்டை அதிகரிக்கும்.

**BeeVIT** (Bee Honey)



இயற்கை மூலிகைகளின் மூலம் உடலுக்கு தேவையான புரதங்கள், விற்றமின்கள், கனியுப்புக்களை பெற வேண்டுமா?

பிரபலமான இரு மூலிகைகளான கருஞ்சீரகம் மற்றும் தேன் என்பவற்றின் கூட்டமைப்பில் தயாரான Baraka கருஞ்சீரக தேன் வில்லைகள் நாளாந்தம் உடலுக்கு தேவையான ஆரோக்கிய சக்தியை வழங்குகின்றது மேலும் உடலுக்கு தேவையான மேலதிக புரதங்கள்,விற்றமின்கள், கனியுப்புக்களை வழங்கி உடலின் நோயெதிர்ப்பு சக்தியை அதிகரித்து உடலை பாதுகாக்கின்றது.

Piccaso Ads

100% இயற்கை மூலிகையினால் தயாரிக்கப்பட்டதினால் ஏனைய மருந்துகளுடன் பாவிக்க முடியும்.

HFAC SRI LANKA

அனைத்து பரகா உற்பத்திகளையும் ஏகவிநியோகஸ்தர்களான WESCO PHARMACY JAFFNA இடம் பெற்றுக்கொள்ளலாம்.
Tel : 021 2223188



EXPOLANKA PHARMACEUTICALS (PVT) LTD.
11A, Mile Post Avenue, Colombo - 03 Tel :- 0112 676398/9
email. expopharma@expo.slt.lk, www.barakaoil.com

Your health partner in life


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சுந்தரமூர்த்தி நற்குணவதி *(யோய்)*

**(உரிமையாளர்- யோய் பார்மசி)**



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் பண்டத்தரிப்பை வதிவிடமாகக் கொண்டவரும், தற்பொழுது இணுவில் வீதி, மானிப்பாயில் வசித்தவருமாகிய திருமதி சுந்தரமூர்த்தி யோய் நற்குணவதி 26.09.2005 திங்கட்கிழமை இறைபதமடைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.10.2005) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக பிப்பிலி (மானிப்பாய்) இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தொ.பே.இலக்கம்:*
*222 2754,*
*4591960.*

*தகவல்:*
*ச.சுந்தரமூர்த்தி (கணவர்),*
*சு.சுதந்தன்*
*(மகன்-யோய் பார்மசி-மானிப்பாய்).*

(40592) (39-11-15)

## ஆறுமுகம் சின்னத்துரை

**(கிளாக்கர்- நீர்வேலி யூனியன்)**



கோப்பாய் தெற்கு, விதானையார் ஒழுங்கையைப்பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சின்னத்துரை அவர்கள் 30.09.2005 லண் டனில் காலமானார்.

அன்னார் மனோன்மணியின் அன்புக் கணவரும் இராசலட்சுமி, யோகநாதன், பகவதி (லண்டன்), கனகலிங்கம் (லண்டன்), நிர்மலாதேவி (ஜேர்மனி), சிறிதரன், சிவநாதன் (நோர்வே), பாலசுப்பிரமணியம் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*V.H.லேன்,*
*கோப்பாய் தெற்கு,*
*இருபாலை.*
*T.P.:0044208 7150029*
*00442086851509* } லண்டன்
*0776116883*

*தகவல்:*
பிள்ளைகள்.

(40616) (39-11-45)

---


## HND

விசேட பிரிவுக்கான
விண்ணப்பங்கள்
கோரப்படுகின்றன.

**Higher National Diploma**

கற்கை நெறிக்கான விசேடபிரிவு 05-10-2005 அன்று ஆரம்பிக்கப்பட இருக்கின்றது. மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள்-என்பதால் உங்கள் பதிவுகளிற்கு முந்திக்கொள்ளுங்கள்.

மேலதிக விவரங்களுக்கு:

Director
**IIS CITY CAMPUS**
**#181, Navalar Road, Jaffna.**
☎ 021 222 8060

(சி/45344)(26-15-19)


---

## ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்



**திருமதி கலைமணி இராசதுரை**

அன்னை மடியில் 22.10.1954 — ஆண்டவன் மடியில் 26.09.2000

அம்மா அம்மா எங்கள் தெய்வமே அறிவுரைகள்
பலகூறி நல்வழியில் வாழ வழிகாட்டிய நீங்கள்
ஒரு நொடியில் எங்கு சென்றீர்கள்?
எனம்மா ஒரு கணமேனும் எங்களை காண ஓடோடி
வரமாட்டீர்களா?

*என்றும் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய*
*இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

குடமியன், வரணி.

பிரிவால் துயருறும்:
**குடும்பத்தினர்.**

(40634) (39-11-15)

---

## இன்று கேதாரேஸ்வரர் அபிஷேகம்

*இணுவில் பிரதான வீதியில் அமைந்துள்ள சிவன் ஆலயத்தில் கேதாரேஸ்வர அபிஷேகபூசை இன்று நடைபெற உள்ளது. கௌரிவிரதம் அனுஷ்டிக்கும் அடியார்கள் அனைவரும் கேதார நாதரை வழிபட்டு அருளைப் பெறுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.*

*இன்று (02.10.2005) ஞாயிற்றுக்கிழமை*
*மாலை 5 மணிக்கு அபிஷேகம்*
*5.30 மணிக்கு- விஷேடபூசை*
*6.00 மணிக்கு- வசந்தமண்டபப் பூசை*
*6.30 மணிக்கு- கேதாரநாதர் உடனுறை*
*கௌரிஅம்மன் உற்சவம்*

பிரதமகுரு:
**தாணு- வாசுதேவக்குரு**
**(சபரீசதாசன்)**

உபயம்:
**A.லிங்கன் மருந்துக்கடை**
**இணுவில்**

**கேதார கௌரிவிரதம்** ஆரம்பம் 12.10.2005 புதன்கிழமை விரதகாரர் முன் கூட்டியே பெயரைப் பதிவு செய்யவும.

**சனீஸ்வர ஹோமம்** 15.10.2005 ஐந்தாவது வார சனி காலை 8 மணிமுதல் 12 மணிவரை நடைபெறும். சனீஸ்வர தோஷம்- வியாழ தோஷம் உள்ளவர்கள் இதில் பங்கு கொள்ளவும்.

**சீ.பரமேஸ்வரன்**
தர்மகர்த்தா.

(40596) (39-11-15)

---

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் நாகலிங்கம் பூபாலராஜா
*திதி: 02.10.2005*

மண்ணில் 14.05.1938 — விண்ணில் 05.10.2002

இன்று அப்பாவின் நினைவாக சண்டிலிப்பாய் நாகபூசணி அம்பாள் ஆலயத்தில் நடைபெறும் அன்னதான நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.

தகவல்:
சசி *(மகள்)*
பிரான்ஸ்.

மனைவி, பிள்ளைகள்,
மானிப்பாய்.

(40614) (39-11-15)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 02.09.2005 எமைப்பிரிந்து இறையடிசேர்ந்த எமது குடும்ப ஒளிவிளக்கு

**அமரர் சரஸ்வதி கணபதிப்பிள்ளை**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (02.10.2005) ஞாயிற்றுக்கிழமை காலை 5 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

'தேனாவளவு'
கரணவாய் கிழக்கு,
கரவெட்டி.

**குடும்பத்தினர்.**

(40628) (39-11-15)

---

# மரண அறிவித்தல்



## T.கந்தையா பாலசுப்பிரமணியம்

**(இளைப்பாறிய M.C.P.O.- இலங்கைக் கடற்படை, ஓமான் கடற்படை)**

செட்டிகுறிச்சி, பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் தற்போது நியூசிலாந்தில் வசித்தவருமான கந்தையா பாலசுப்பிரமணியம் 29.09.2005 அன்று நியூசிலாந்தில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற கந்தையா- சிவக்கொழுந்து தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற சிவசம்பு- பொன்னுப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் யோகேந்திரியின் அன்புக் கணவரும் சுபோதரன் (லண்டன்), சுபத்திரா (நியூசிலாந்து), பாலமுரளி (லண்டன்), கிருபரன் (லண்டன்) ஆகியோரின் தந்தையும் ரவீந்திரன் (பொறியியலாளர், நியூசிலாந்து), ஜெயந்தி (லண்டன்), ஸ்ரீகௌசிகா (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் டெய்சன், டெய்சினி, அகல்யா, தர்ஷனா ஆகியோரின் பாசமிகு பேரனாரும் ஏகாம்பரம் (முன்னாள் உதவிச் செயலாளர், வடக்கு-கிழக்கு மாகாணசபை ) புவனேஸ்வரி, பரமானந்தம் (முன்னாள் பரிசோதகர், இ.போ.ச. வவுனியா டிப்போ), பரமேஸ்வரி (லண்டன்), மனோகரன் (பொறியியலாளர், டுபாய்) ஆகியோரின் சகோதரனும் சிவக்கொழுந்து, காலஞ்சென்ற மகாதேவன் (மேற்பார்வையாளர், துறைமுகக் கூட்டுத்தாபனம், திருகோணமலை), சரஸ்வதி, சோதிப்பிள்ளை, பகவதித்தாய் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.10.2005) ஞாயிற்றுக்கிழமை நியூசிலாந்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**செட்டிகுறிச்சி, பண்டத்தரிப்பு.**
தொலைபேசி: 077 3276507
நியூசிலாந்து தொலைபேசி இலக்கம்:
006495251444

*தகவல்:*
*(சகோதரர்கள்)*

(சி-45378) (39-15-11)

---

## நிவாரணப்பொருள் அன்பளிப்பு

யாழ்,ஒக்.2

தமிழர் புனர்வாழ்வுக்கழகம் போரினால் பாதிக்கப்பட்ட வரணி, தாவளை, இயற்றாலை கிராமங்களைச் சேர்ந்த 75 குடும்பங்களுக்கு ஒரு லட்சம் ரூபா பெறுமதியான நிவாரணப்பொருள்களை வழங்கியது.

இந்த நிகழ்வு கடந்த 26 ஆம் திகதி நடைபெற்றது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடுபுடைவைகளும், சிறுவர்களுக்கு பால்மா வகைகளும் வழங்கப்பட்டன.

(எ-204)

---

## நெஞ்சை விட்டகலா நினைவஞ்சலி

முதலாம் ஆண்டு



தோற்றம் 17.01.1927
மறைவு 13.10.2004

அமரர் **கார்த்திகேசு தெய்வேந்திரம்**

10ஆம் ஆண்டு



தோற்றம் 19.06.1928
மறைவு 04.10.1995

திருமதி **தெய்வேந்திரம் பாலாமணி**

எம்மை வாழ வைத்த எம் அன்புத் தெய்வங்களே!
தீராத நோயினால் நீங்கள் பட்ட துன்பங்களை
தினம் தினம் நினைத்து துடிக்கின்றோம்.
கண்ணீரைப் பூக்களாக காணிக்கையாக்குகின்றோம்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்...

46/1, அம்மன் றோட்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(40613) (39-11-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழிப்பின் பதிவுகள்

உதயன்

## தவிக்கின்ற பொது மக்களும் தண்டிக்கப்பட வேண்டிய அரசியல்வாதிகளும்



இலங்கையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பொதுமக்களை மீட்டெடுக்க, அவர்களுக்கு புனர்வாழ்வு வழங்க முட்டுக்கட்டையாக இருப்பது இலங்கையின் அரசியல் முரண்பாடுகளே என முன்னாள் அமெரிக்க ஜனாதிபதியும் தற்போது சுனாமி புனர்வாழ்வு சர்வதேச குழுவில் அங்கம் வகிக்கின்றவருமான பில் கிளின்டன் தெரிவித்திருப்பது இலங்கை அரசாங்கத்தின் பொதுமக்கள் மீதான அலட்சியத்திற்கு கிடைத்திருக்கின்ற ஒரு மரண அடியாகும். குறிப்பாக வட கிழக்கில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதற்கு பாரிய அளவில் உதவும் என நம்பப்பட்ட சுனாமி அதிகார சபை உயர்நீதிமன்றத்தால் முடக்கப்பட்டமையானது நிவாரண புனர்வாழ்வு செயற்பாடுகளை பாதித்திருப்பதாக கிளின்டன் வெளிப்படையாக தெரிவித்திருக்கின்றமையானது தொடர்ந்தும் நாட்டு நிலைமையை உலகத்திற்கு திரித்து காட்டும் இலங்கை அரசாங்கத்திற்கு கிடைத்த பாரிய தோல்வியாகும். அத்தோடு தொடர்ந்தும் இவ்வாறு உலகத்தை ஏமாற்ற முடியாது என்பதை இது எடுத்து காட்டுகிறது.

இலங்கையின் 1585 கிலோ மீற்றர் நீளமான கரையோர பகுதியில் 985 கிலோ மீற்றர் கரையோர பகுதிகள் சுனாமியால் பாதிக்கப்பட்டன. இதனால் 40,000 இற்கும் அதிகமானவர்கள் உயிரிழந்ததுடன் 234,000 குடும்பங்கள் பாதிக்கப்பட்டன என அரசாங்க தகவல்கள் கூறுகின்றன.

தற்போது இவ்வாறு பாதிக்கப்பட்ட மக்களில் சுமார் ஆறு இலட்சம் வரையான இடம்பெயர்ந்த மக்கள் அடிப்படை வசதிகள் இல்லாமல், குடியிருப்புகள் இல்லாமல் பெரும் துன்பத்தில் உழலுகின்றனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் வெப்பத்தில் தவிக்கின்ற தற்காலிக கூடாரங்களில் வசிக்கிறார்கள்.

சுனாமி அனர்த்தம் ஏற்பட்டு 9 மாதங்கள் கடந்துவிட்ட நிலையிலும் சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்கள் அடிப்படை வசதிகள் கொண்ட குடியிருப்புகளில் இன்னும் குடியமர்த்தப்படவில்லை. தெற்கில் மட்டும் அரசாங்கம் பல அபிவிருத்திகளை மேற் கொண்டிருந்தது. இது தவிர பொதுமக்கள், தமது முயற்சியாலும் அரசசார்பற்ற உதவி நிறுவனங்களின் உதவியோடும் வீடுகளை புணரமைத்துள்ளனர். இது சுனாமியால் பாதிக்கப்பட்ட மொத்த வீடுகளில் 2 வீதம் மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது. அதாவது 98 வீதமான அழிவுற்ற வீடுகள் கட்டியெழுப்பப்படவில்லை என்பது கவனிக்கத்தக்கதாகும். சுனாமியனர்த்தம் ஏற்பட்டு 9 மாதங்கள் கடந்து விட்ட நிலையிலும் இத்தகைய சூழல் காணப்படுவது மிகவும் மோசமான நிலையாகும். இதற்கான முழுப்பொறுப்பையும் ஏற்க வேண்டியவர்கள் ஆட்சியாளர்களும் அரசியல்வாதிகளுமே.

சுனாமி அனர்த்தத்தால் அதிகமாகப் பாதிக்கப்பட்ட வடகிழக்கினை கட்டியெழுப்பு வதற்கான சுனாமி அதிகாரசபை பெரும் இழுபறிகளுக்கு மத்தியிலேயே முன் வைக்கப்பட்டது. உடனடியாக செயற்பட வேண்டிய விடயத்தினை மாதக்கணக்கில் இழுத்தடித்து மக்கள் துன்பத்தில் வதங்கிக் கொண்டிருந்த நேரத்தில் காலதாமதமாக இச்சபை ஏற்படுத்தப்பட்டது. ஆனால் இதற்கு எதிராக ஜே.வி.பி கட்சியும், ஹெல உறுமய கட்சியும், சில முஸ்லிம் அமைப்புக்களும் காட்டிய எதிர்ப்பினால் சபை செயலிழக்கும் நிலை ஏற்பட்டது. இறுதியாக ஜே.வி.பி தொடுத்த வழக்கானது இச்சபையை கர்ப்பத்திலேயே கலைத்துவிட்டது.

இதன் விளைவு பாதிக்கப்பட்ட மக்கள் துயரமான வாழ்வையே நடத்துகிறார்கள். வெப்பத்திலும், மழையிலும் பல்வேறு நோய்களாலும் பாதிக்கப்படுகின்றனர். அதிகமாக பாதிக்கப்பட்ட மீனவர்கள் தொழில் இழந்து அகதி முகாம்களில் அடைக்கலமாகியிருக்கின்றனர். குழந்தைகள் தமது கல்வியை தொடரமுடியாது உள்ளனர். பெண்கள் பொது இடங்களில் வாழ்வதால் இன்னோரன்ன துயரங்களுக்கு முகம் கொடுக்கிறார்கள்.

சர்வதேச சமூகம் அள்ளிக்கொடுக்க முன் வந்தும் அரசியல் வாதிகளும், அரசாங்கமும் தமது சுயநலத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கிள்ளிக் கொடுக்கக்கூட முன்வரவில்லை.

ஏற்கனவே வடகிழக்கில் போரால் மக்கள் பாதிக்கப்பட்டு பெருமளவில் அகதிகளாக இருக்கின்ற சூழலில் இந்த சுனாமியினால் பாதிக்கப்பட்ட அகதி மக்களும் சேர்ந்துள்ளனர். இது மிகப் பெரும் தொகையாகும். எனினும் இம்மக்களுக்கு விடிவைத்தர எவரும் முன்வரவில்லை.

- என். ஜீவேந்திரன்

இத்தகைய துயர சூழலில் ஜனாதிபதி தேர்தல் வந்துள்ளது. ஏற்கனவே ஒன்பது மாதங்கள் வரை எதுவித நடவடிக்கையையும் மேற்கொள்ளாத அரசியல்வாதிகள் இப்போது நவம்பர் மாதம் இடம் பெறவுள்ள ஜனாதிபதி தேர்தலிலேயே குறியாக இருக்கின்றனர். பாதிக்கப்பட்ட மக்கள் குறித்து, கண்ணீர் சிந்துகின்ற மக்கள் குறித்து இவர்களுக்கு எதுவித அக்கறையும் இல்லை.

லட்சக்கணக்கான மக்கள் இயற்கையால் பாதிக்கப்பட்டு வாழ்விழந்து இருக்கின்ற சூழலில் இது குறித்த எந்த அக்கறையும் இந்த ஜனாதிபதி வேட்பாளர்கள் காட்டவில்லை. அவர்கள் சார்ந்த கட்சிகளும் கூட பாதிக்கப்பட்ட மக்கள் குறித்து எந்தவித கரிசனையும் காட்டவில்லை. மாறாக ஜனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷ சுனாமி அதிகாரசபையை கலைக்க வேண்டும் என்ற ஜே.வி.பியின் நிபந்தனையை ஏற்று கைச்சாத்திட்டிருக்கிறார். இது இன்றைய சூழலில் மிக மோசமான குற்றமாகவே கருதப்படவேண்டி உள்ளது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவவேண்டிய அரசியல்வாதிகள் பாதிக்கப்பட்ட மக்களை மேலும் பாதிக்கச் செய்யும் செயல்களில் ஈடுபடுவது நிச்சயமாக குற்றமாகவே கருதப்பட வேண்டும். விசேடமாக பொறுப்பற்ற முறையில் தேவையற்ற இனவாத பிரச்சாரங்களை பரப்பி நிலைமையை மேலும் மோசமாக்கி வருகின்ற ஜே.வி.பி கட்சியின்ரின் செயற்பாடுகள் சட்டரீதியாக ஆராயப்பட வேண்டியவையாகும்.

பாதிக்கப்பட்ட மக்களின் அபிவிருத்திக்கும், நாட்டின் சகல மக்களின் மேம்பாட்டுக்கும் தடையாக உள்ள ஜே.வி.பி, ஹெல உறுமய போன்ற கட்சிகளின் செயற்பாடுகள் கட்டாயமாக ஆராயப்பட்டு அவர்களது நடவடிக்கைகள் முடக்கப்பட வேண்டிய காலம் வந்தள்ளதாக தெரிகின்றது. தவறிழைக்கின்ற பொது மக்களுக்கு தண்டனை வழங்குகின்ற சட்டம் பொதுமக்களது நல்வாழ்வுக்கும், நாட்டின் எதிர்காலத்திற்கும் அச்சுறுத்தலாக உள்ள இந்த இனவாத கட்சிகளுக்கும், அரசியல்வாதிகளுக்கும் தண்டனை வழங்க வேண்டியது அவசியமாகும். இதுவே இன்றைய காலகட்டத்தின் தேவையாகும்.

## தீர்மான சக்திகள் யார்?

சுதந்திரமடைந்த காலத்திலிருந்து ஒரு குறித்த பொருளாதார அல்லது அரசியல் கொள்கையினூடாக எமது நாடு கட்டியெழுப்பப்படவில்லை. காலனித்துவவாதிகளினது பிடியிலிருந்து இலங்கை விடுபட்டாலும் அவர்கள் உருவாக்கிய அரச முறைமையே வெவ்வேறான அரசாங்கங்களினூடாக இங்கு நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது. இதன் விளைவு இலங்கையின் அனைத்து பொருளாதார மட்டங்களிலுமுள்ள அல்லது அனைத்து இனங்களையும் திருப்திபடுத்தக் கூடிய ஒரு அரசியல், பொருளாதார பாரம்பரியத்தை எம்மால் உருவாக்க முடியாது போனது. பிரித்தானியர்கள் நாட்டிலிருந்து வெளியேறும் போதே இவற்றை பற்றி எல்லாம் சிந்திப்பதற்கு வாய்ப்பளிக்காத வகையில் தமது பிரித்தாளும் பாரம்பரியத்தை இலங்கையிலும் விதைத்துவிட்டு சென்றுவிட்டார்கள். எனவே எமது மக்களும் தத்தமது இனத்துக்கான அதிகாரத்தை கைப்பற்றி கொள்ளும் முயற்சியில் ஆரம்பத்தில் இருந்தே போட்டியிட தொடங்கி விட்டனர். குறிப்பாக சிறுபான்மை இனங்கள் பெரும்பான்மையினரின் மேலாதிக்கத்திற்குள் தள்ளப்பட்டனர். இது நாளடைவில் பாரிய கொந்தழிப்பை நாட்டில் உருவாக்கி நீண்டதொரு சிவில் யுத்தமொன்றே இலங்கையில் தோன்றுவதற்கு ஏதுவாக அமைந்துவிட்டது. அடிப்படையில் இலங்கை ஒட்டுமொத்த தேசமாக எதிர்நோக்கிய தேசிய பிரச்சனைகளான வறுமை, கல்வி வளர்ச்சி, ஸ்திரமான பொருளாதார நிலை போன்ற பிரச்சனைகளுக்கு தீர்வு காணமுடியாத நிலையிலேயே ஏறத்தாழ அரை நூற்றாண்டை கடத்த வேண்டிய நிலையை நாட்டில் உருவான பிற்போக்கு அரசியல் முரண்பாடுகள் ஏற்படுத்திவிட்டன.

எனினும் ஒவ்வொரு முறையும் ஆட்சிக்கு வருகின்ற அரசாங்கங்களும், ஜனாதிபதியும் தம்மை கொள்கை அடிப்படையில் இயங்கும் தலைவர்களாகவும், தம்மிடம் இலங்கையின் அரசியல், பொருளாதார பிரச்சனைகளுக்கு தீர்வு இருப்பதாகவும் கூறி கூறியே ஆட்சிக்கு வருகின்றன. இன்று மக்கள் உருவாக்க இருக்கும் புதிய ஜனாதிபதியும் இத்தகைய வாக்குறுதியுடன் தான் ஆட்சிக்கு வருவார். எனினும் இந்த வாக்குறுதிகளின் நிலையும் வழமைபோன்றதே என்பதை தயக்கமின்றி கூறலாம்.

இங்கு முக்கியமான விடயம் என்னவென்றால் இரு பிரதான கட்சிகளான ஐக்கிய தேசிய கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியும் தம்மை வெவ்வேறான வெளிநாட்டு உள்நாட்டு கொள்கையுடையவர்களாக காட்டிக்கொண்டாலும் அவர்கள் செயற்பாடுகளின் அடிப்படை ஒன்றாகவே இருக்கின்றது. இதற்கு பிரதானமானதொரு காரணம் இருக்கின்றது ஏனெனில் இன்றைய நவீன உலக ஒழுங்கில் எந்தவொரு வளர்முக, அல்லது 3ம் உலக நாடும் தமது கொள்கைகளின் அடிப்படையில் இயங்குவதை விட பிராந்திய மற்றும் சர்வதேச வல்லரசுகளின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்பவே இயக்க வேண்டிய நிர்ப்பந்தம் உள்ளது. எனவே அந்த தலைவர் நாட்டுக்கு வந்தாலும் பாரிய மாற்றங்களை உள் நாட்டில் உருவாகுவதற்கான சந்தர்ப்பம் மிகவும் அரிதாகும்.

- இக்பால் அஜீட்

இறைமையுள்ள நாடுகள் உலகில் எத்தனை உள்ளன என கேள்வி எழுப்பும் அளவில் சர்வதேச வல்லாதிக்க அரசுகளின் தலையீடுகள் வளர்முக மற்றும் மூன்றாம் உலக நாடுகளில் பாரியளவில் நிலவுகின்றன. தத்ததமது நாட்டுக்கான அரசியல் பொருளாதாரத் திட்டங்களை வளர்முக நாடுகள் உருவாக்கினாலும் அவை வல்லரசுகளின் ஒப்புதலுக்கு விடப்பட்டே அமுல்படுத்த வேண்டிய நிலை ஏறத்தாழ அனைத்து நாடுகளிலும் நிலவுகிறது. இந்நிலை இலங்கைக்கு மட்டும் விதி விலக்கானது அல்ல. இன்றைய முதலாளித்துவ உலகில், உலகை தமது பொருட்களுக்கும் தமது சிந்தனைகளுக்குமாக சந்தையாக மாற்றுவதற்கான முயற்சியின் பிரதிபலிப்பே வல்லரசுகளின் இத்தகைய தலையீடாகும். உலகமயமாதலை பெரும் சர்வதேசப் புரட்சியாக இனம்காட்டும் இந்த வல்லரசுகள் தமது பல்தேசிய கம்பனிகளை ஏனைய நாடுகளில் ஸ்தாபிப்பதன் மூலமாகவும், சர்வதேச உதவி மற்றும் மேற்பார்வை நிறுவனங்களின் தலையீடுகளின் ஊடாகவும் வறியநாடுகளுக்குள் இலகுவாக நுழைந்து விடுகின்றன. இவ்வாறு நுழையும் போது நாட்டுக்கு நாடு வேறுபாடான கலாச்சாரங்களையும் பொருளாதார மரபுகளையும் இவர்கள் சந்திக்கின்றனர். அவை இவர்கள் விரும்பும் முழுமையான மேலாதிக்கத்தையும் பொருளாதார வலுவடைவையும் அடைந்து கொள்வதற்கு ஏதுவாக காணப்படுவதில்லை. எனவே இவர்கள் உலகின் ஒவ்வொரு பிராந்தியத்திலும் தமது சிந்தனைசார் அரசியல், பொருளாதார சமூகமொன்றை ஏற்படுத்துவதன் மூலம் இந்த பிராந்தியங்கள் தம்மை அனுசரித்து செல்லக்கூடிய அல்லது தமது சிந்தனைகளையும் பொருட்களையும் நுகரக்கூடிய மனோபாவத்தை ஏற்படுத்த திட்டமிட்ட முறையில் இயங்குகின்றனர். உலகமயமாதலை, அனைவருக்குமான உலகம், கிராமமாக மாறிவரும் நவீன உலகென விதம் விதமாக பிரச்சாரப்படுத்தி வரும் வல்லரசுகளின் உண்மை இலக்கு இதுவேயாகும் என்பதை சர்வதேச விவகாரங்களில் அவை அடிக்கடி காட்டி வரும் முரண்பட்ட நிலைப்பாடுகளின் ஊடாக இலகுவாக புரிந்து கொள்ளலாம்.

எனவே இலங்கையின் இனப் பிரச்சினைத்தீர்வாக இருந்தாலும் அல்லது எதிர்கால பொருளாதார மேம்பாடாக இருந்தாலும் அது பிராந்திய வல்லரசுகளான இந்தியா, சீனாவினது அல்லது சர்வதேச வல்லரசுகளான அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தினது நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்பவே அமையப்போகின்றன. பொருளாதாரத்தன்னிறைவு இல்லாத, அனைத்துக்கும் வல்லரசுகளின் கையை எதிர்பார்த்து நிற்கும் இலங்கையை பொருத்த வரையில் இந்த நிகழ்ச்சி நிரலை பின்பற்றுவதையே அது தீர்வாகக்கொள்ளும். எனவே நாட்டின் புதிய தலைவரோ, அரசியல் கட்சிகளோ, அல்லது மக்களோ இலங்கையின் பிரதான தீர்மான சக்திகள் அல்ல. மாறாக நவ காலனித்துவத்தின் மூலம் உலகை ஆண்டுவரும் முதலாளித்துவ வல்லரசுகளே பிரதான தீர்மான சக்திகள் என்பதே யதார்த்தமாகும்.

## புரிந்துணர்வுடன் இளைய தலைமுறை

இனங்களுக்கு இடையே புரிந்துணர்வு வளர்க்கப்படுகின்ற போது அங்கு ஐக்கியமும், ஒற்றுமையும், சமாதானமும் ஏற்படும் என்பதற்கு கடந்த 17ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரை வவுனியா மாவட்டத்தில் இடம் பெற்ற இளைஞர் முகாம் சிறந்த ஒரு எடுத்து காட்டாகும். மேலும் இன, மத, மொழி போன்ற காரணிகள் நாட்டின் ஐக்கியத்துக்கும், ஒற்றுமைக்கும் தடைகளல்ல என்பதை இவ்விளைஞர்களின் ஒன்றுகூடல் உணர்த்துகின்றது. இனத்தால், மதத்தால், மொழியால், பிரதேசத்தால் வேறுபட்ட நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் போருட் நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேசிய இளைஞர் முகாமில் பங்கு கொண்டு ஒன்றிணைந்து செயலாற்றியமை அனைவரினதும் கவனத்தை ஈர்ப்பதாக அமைந்தது.

- ஏ. உசாமா

நாட்டின் நாலா பகுதிகளில் இருந்து சுமார் 800 இற்கும் மேற்பட்ட தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் இளைஞர் யுவதிகள் கலந்து கொண்ட இவ்விளைஞர் முகாம் ஆளுமைவிருத்தி, பால் சமத்துவம், முரண்பாட்டு தீர்வு என்ற மூன்று பிராதான விடயங்களை அடிப்படையாக கொண்டிருந்தது. இம்முகாமானது இங்கு பங்கு கொண்ட இளைஞர்களின் திறன்களையும், ஆற்றல்களையும் வளர்த்து கொள்வதற்கு சிறந்த ஒரு களமாக இருந்தது. தமது ஆற்றல்களையும், திறமைகளையும் இனம் கண்டு அவற்றை நெறிப்படுத்தி கொள்வதற்கு ஒரு மேடையாக அமைந்தது. இங்கு நடைபெற்ற கலை, கல்வி கலாசார மற்றும் விளையாட்டு நிகழ்ச்சிகளில் முழு ஈடுபாட்டுடன் இளைஞர்கள் பங்கு கொண்டதுடன் பல ஆய்வு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டனர். இன, மத, மொழி வேறுபாடுகளை கடந்து சகோரதத்துவத்துடன் பழகுவதற்கும், தமது அபிப்பிராயங்களையும், கருத்துகளையும் பரிமாறிக் கொள்வதற்கும் இம்முகாம் இவர்களுக்கு பெரிதும் துணை புரிந்தது.

அதேபோல் இந்த நிகழ்வில் கலந்து கொண்ட இளைஞர்கள் யுத்தத்தின் பாரதூரத்தையும் அது ஏற்படுத்திய வடுக்களையும் அதனால் பாதிப்புற்ற மக்களின் தற்போதைய வாழ்க்கை நிலையையும் புரிந்து கொள்வதற்கு ஒரு சிறந்த வாய்ப்பாக இம்முகாமை பயன்படுத்தி கொண்டனர். மேலும் இவர்கள் பல குழுக்களாக பிரிந்து வவுனியா மாவட்டத்தில் காணப்படுகின்ற அகதி முகாம்கள், கிராமங்கள் மற்றும் பாடசாலைகள் என்பவற்றுக்கு சென்று அந்த மக்களின் தற்போதைய நிலையையும் அவர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சனைகளையும் அறிந்து கொண்டதோடு அவர்களுக்கு பல உதவிகளை செய்தது சிறந்த ஒரு அனுபவமாக அவர்களுக்கு இருந்தது. அதேபோல் நடைபெற்ற கலை கலாசார நிகழ்வுகளூடாக அந்தந்த சமூகங்களினது கலாசார பண்பாடுகளையும், நடவடிக்கைகளையும் பற்றியதொரு சிறந்த ஒரு அறிமுகம் இவர்களுக்கு கிடைத்தது. இது இவர்களுக்கு இடையிலான உறவை மேலும் வலுப்படுத்தியது. மொத்தத்தில் வவுனியா மாவட்டத்தில் போர்கால சூழல்களில் மக்கள் பயணிப்பதற்கு தயங்கிய ஒரு நிலைமாறி இன்று இவ்வாறு சுதந்திரமாகவும், சநதோசமாகவும் இந்த நான்கு நாட்களையம் இவ்விளைஞர், யுவதிகளுக்கு கழிக்கமுடிந்தது மட்டுமல்லாது வவுனியா வாழ் மக்களுக்கும் கூட இந்நிகழ்வு புதியதொரு அனுபவத்தையும், புத்துணர்வையும் அளித்தது என்றே கூறவேண்டும்.

**இவ்வார விழிப்பில்...**

- காணித்தட்டுப்பாடும் அம்பாறையின் புனரமைப்பும்
- சுனாமிப்பணியில் உதவும் கரங்கள்
- சமாதானத்தூரிகை
- வவுனியாவில் இளைஞர் சந்திப்பு
- 'தீர்த்த' ஓவியக்கண்காட்சி

விழிப்பின் பதிவுகள் தொடர்பான மேலதிக விடயங்கள் ரூபவாஹினி 'ஐ' அலைவரிசையில் திங்கள் இரவு 7.30 மணிக்கும் TNL அலைவரிசையில் செவ்வாய் இரவு 7.25 மணிக்கும் ஒளிபரப்பாகும்.
விழிப்பு நிகழ்ச்சி தொடர்பான உங்கள் அபிப்பிராயங்கள் வரவேற்கப்படுகின்றன. அனுப்பவேண்டிய முகவரி :- விழிப்பு, யங் ஏசியா டெலிவிஷன், இல 713, டி.பி. விஜயசிங்க மாவத்தை, பெலவத்தை, பத்தரமுல்லை. தொலைபேசி இல 0112787041-9 தொலைநகல் இல 0112787051 மின்னஞ்சல் முகவரி villippu@yatv.net இணையத்தள முகவரி www.yatv.net

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகமே எங்களைப் புரிந்துகொள்! உரிமைப் போராட்டத்தை அங்கீகரி!!

இலங்கைத் தீவிலே மிக நீண்ட காலமாகத் தொடர்ந்து கொண்டிருக்கின்ற இனப் பிரச்சினை தொடர்பாக - அதன் உண்மை நிலை குறித்து - எதுவுமே தெரியாத நிலையில் சர்வதேசம் இருக்கின்றது என்பது ஆச்சரியத்துக்குரிய விடயம்தான்.

அதுவும் தமிழ் மக்களுடைய விடுதலைப் போராட்டம் சர்வதேச மட்டத்துக்கு வளர்ச்சியடைந்திருக்கின்ற இன்றைய நிலையில் எமது போராட்ட நியாயப்பாடுகளை உணர்ந்து கொள்ளாத - புரிந்துகொள்ளாத - சக்தியாக உலகம் இருந்து கொண்டிருக்கிறது.

ஸ்ரீலங்கா அரசின் பிரசாரங்களையும் விளக்கங்களையும் அப்படியே ஏற்றுக்கொண்டு நம்பிவிடுகின்ற சர்வதேசம் தமிழர் பக்கம் உள்ள நியாயங்களைச் செவிமடுப்பதற்குக் கூடத் தயாராக இருக்கவில்லை.

சமீபத்தில் ஐரோப்பிய ஒன்றியத்தினால்




தமிழீழ விடுதலைப் புலிகள் மீது போடப்பட்டிருக்கின்ற தற்காலிகத் தடை இதனை வலியுறுத்துகின்றது; புலப்படுத்தி நிற்கிறது.

விடுதலைப் புலிகள் தமிழ் மக்களுக்காக, அவர்களது விடுதலைக்காகப் போராடுகின்றனர் என்ற உண்மையைப் புரிந்து கொள்வதற்கு ஐரோப்பிய ஒன்றியத்தினால் முடியாமல் போயிருக்கிறது.

உலகில் வாழுகின்ற ஒடுக்கப்பட்ட இன மக்களுக்காக குரல் கொடுப்பதாக - அவர்களுக்கு உதவிக்கரம் நீட்டுவதாக வெறுமனே வாய்ச்சவடால் அடிக்கின்ற ஐரோப்பிய நாடுகள் ஈழத்தமிழ் மக்களுடைய விவகாரத்தில் தமது உண்மை நிலையை - சுயரூபத்தை - வெளிப்படுத்தியிருக்கின்றன என்றே கொள்ளலாம்.

### தவறிழைத்தது சர்வதேசம்

இந்த நிலையில்தான் மீண்டும் ஒரு தடவை தமிழ்மக்கள் தமது அபிலாஷை



களை வெளிப்படுத்தியிருக்கின்றனர்.

ஈழத்தில் வாழ்வுரிமை உடைய தமிழினம் நடைமுறையில் தனக்கென ஒரு அரசுக் கட்டமைப்பை வரித்துக் கொண்டுள்ளது. இவ்வாறு தமிழர்கள் தமக்குத் தனியான அரசுக்கட்டமைப்பை ஏற்படுத்திக் கொள்வதற்குப் பின்னணியாக இருந்த - தூண்டுதலாக இருந்த காரணங்களை ஆராய்ந்து பார்ப்பதற்கு சர்வதேசம் தவறிவிட்டது; அதன் விளைவாக தவறிழைத்துவிட்டது.

இந்த உண்மைகளைப் பறைசாற்றியிருக்கிறது இந்தமுறை நடந்தேறிய பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வு.

### இனியாவது சர்வதேசம் உண்மையைப் புரிந்துகொள்ளுமா?

பலம் பொருந்திய - உலக அளவில் செல்வாக்கு மிக்க ஓர் அரசுக்கு எதிராக - பெரும்பான்மை இனத்துக்கு எதிராக பலம் குறைந்த ஒரு சிறுபான்மை இனம் விலைமதிப்பற்ற உயிர்களைத் தியாகம் செய்து போராடிக்கொண்டிருக்கின்றதென்றால் அதிலே இருக்கக்கூடிய நியாயப்பாட்டை சர்வதேசம் உணரத் தலைப்பட்டிருக்க வேண்டும். உலக வல்லரசுகள் என்றும் நவீன அறிவியலில் உயர்ந்தோங்கியிருப்பவர்கள் என்றும் தங்களைக் கூறிக் கொள்கின்ற ஐரோப்பிய நாடுகள் இந்த அடிப்படை உண்மையைப் புரிந்துகொள்ளத் தவறியிருப்பது ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது.

எடுத்ததுக்கெல்லாம் நீதி, நியாயம், சுதந்திரம், விடுதலை, சமத்துவம், ஜனநாயகம் என்று கொள்ளை நீதிகளை அள்ளிவீசுகின்ற ஐரோப்பிய வல்லரசுகள் ஈழத்தமிழர் விடயத்தில் மட்டும் தமது குரலை அடக்கிக்கொண்டிருப்பது - வேடிக்கைக்குரியது.

ஈழத்தமிழர்களின் இனப்பிரச்சினை தொடர்பான உண்மை வெளிப்பாடுகளை, தமிழ்மக்களின் விருப்பங்களை எல்லாம் அறிந்து கொள்வதற்கான சரியான வாய்ப்பு முன்னர் சர்வதேசத்துக்கு இருந்திருக்கவில்லை என்பது உண்மைதான்.

### உண்மையை உலகறியச் செய்ய எழுந்ததே பொங்குதமிழ்

அந்த நிலைமையைக் கருத்தில் கொண்டு தமிழ்மக்களின் உண்மை நிலையை எடுத்துச் சொல்வதற்காகவே கடந்த 2001 ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மாபெரும் பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வு ஒன்று நடத்தப்பட்டது.

அப்போதைய தமிழரின் உணர்வுகளைக் கண்ணுற்ற சில நாடுகள் 2001 ஆம் ஆணடு நடந்த பொங்குதமிழ் நிகழ்வோடு தமிழ் மக்களின் பிரச்சினையை ஓரளவுக்குப் புரிந்து கொண்டிருந்தன.

அதன்பயனாக விடுதலைப் புலிகளோடு அமைதிவழியில் பேசி சமாதானத்தை ஏற்படுத்துமாறு அரசதரப்புக்கு உலக நாடுகள் அழுத்தம் கொடுத்தன.

### உலகப் பிரதிநிதிகளின் வருகை

சர்வதேச அனுசரணையுடன் இருதரப்புக்கும் இடையில் அமைதிப் பேச்சுக்கள் நடந்தன. இந்த நிலையில் உலகின் பல நாடுகளினதும் பிரதிநிதிகள் இலங்கைக்கு வநது தமிழர் தாயகப் பகுதிகளுக்கும் சென்று நிலைமைகளைக் கண்டு கேட்டு ஆராய்ந்தார்கள்.

அவர்கள் இங்கு வருகின்ற ஒவ்வொரு தடவையும் ஊடகங்களுக்குக் கருத்துக் கூறிய போது, தாம் தமிழ் மக்களின் பிரச்சினைகளை நன்கு அறிந்து கொண்டுவிட்டனர் எனவும் விடுதலைப் புலிகளின் சமாதான விருப்பமும் அதற்கான அவர்களது முயற்சிகளும் முழுத்திருப்தி அளிக்கின்றன என்றும் கூறினார்கள். அப்போதெல்லாம் அவர்களுடைய கருத்துக்களைக் கேட்ட தமிழ்மக்கள் புளகாங்கிதம் அடைந்தார்கள். உலகம் எங்களின் நியாயப்பாட்டைப் புரிந்துகொண்டு விட்டது இனி எம்மை ஸ்ரீலங்கா பேரினவாதிகள் அடக்கி ஒடுக்கி அழிவு செய்ய முடியாது என்ற நம்பிக்கை அவர்களுக்கு ஏற்பட்டது. இப்படியிருக்கும் போது மீண்டும் சர்வதேசம் தனது பக்கச் சார்புத் தன்மையைப் பறைசாற்றியிருக்கிறது.

### பக்கச்சார்பை மீண்டும் பறைசாற்றியது உலகம்!

இலட்சக் கணக்கில் மக்கள் திரண்டு ஒவ்வொரு தடவையும் கோஷமிட்ட போது அதனைப் பார்த்த பிறகும் சர்வதேசம் மீண்டும் ஒரு தடவை எம்மை பயங்கரவாதிகள் என்று கூறி வசைபாடியிருப்பது தமிழ் மக்கள் மத்தியில் [illegible] லையையும் [illegible] தமிழ்மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியான - அமைதி வழியிலான எந்தத் தீர்வையும் வழங்குவதற்கு ஸ்ரீலங்கா அரசு தயாரில்லை என்பது மாத்திரமின்றி அவ்வாறான ஒரு முயற்சியில் வெற்றியடைவதற்கு திறமையில்லா அமைபபாக ஸ்ரீலங்கா அரசு இனங் காணப்பட்டிருக்கிறது.



இந்த யதார்த்த உண்மையை சர்வதேசம் புரிந்துகொள்ளவில்லையா அல்லது புரிந்தும் புரியாதது போல நாடகமாடுகிறதா என்பது தான் இன்றுள்ள கேள்வி.

### உலகின் மனச்சாட்சியை உலுக்கிய பொங்குதமிழ்

இப்போது ஈழத்தமிழர்கள் எல்லோரும் சேர்ந்து தமது ஒட்டுமொத்தமான அபிலாஷைகளை மீண்டும் மீண்டும் வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

முதலில் வவுனியாவில் தொடங்கப்பட்ட எழுச்சிப் பிரகடன மாநாடு தமிழர் தாயகத்தில் சகல மாவட்டங்களிலும் இடம்பெற்று வருகிறது.

அந்த வரிசையில் இப்போது யாழ்ப்பாணத்திலும் வரலாறு காணாத மக்கள் கூட்டம் ஒன்று திரண்டு தனது உரிமைப் பிரகடனத்தை வலியுறுத்தியிருக்கிறது.

நேற்றுமுன்தினம் மாலை யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் அலைகடலெனத் திரண்டு வந்து சன சமுத்திரம் உலகின் மனச்சாட்சியை நிச்சயம் உலுப்பிவிட்டிருக்கும்.

### மக்கள் குரலை இனியாவது செவிசாய்க்குமா சர்வதேசம்?

தமிழர் தாயகத்தில் கட்டுக்கோப்பான - ஊழல் மோசடிகள் அற்ற நடைமுறை அரசு ஒன்று இருக்கின்றது. அந்த அரசை அங்கீகரித்து தமிழரின் விடிவுக்கு சர்வதேசம் வழிவகுக்க வேண்டும் என்று மக்கள் ஒருமித்துக் குரல் எழுப்பியிருக்கின்றார்கள்.

எனவே, இந்த மக்களின் குரலைச் செவிசாய்த்து. தனது நேர்மையை உலகம் வெளிப்படுத்த வேண்டும்.

## அலங்காரன்

அணிதிரண்டுள்ள தமிழ்மக்களின் மனக் கதவுகள் திறக்கப்பட்டு அவர்கள் தமது அடிமனக்கிடக்கைகளை உரத்தகுரலில் சொல்லியிருக்கிறார்கள். பூகோள வரைபடத்தில் ஒரு புதுப்புள்ளி பிரசவத்துக்குத் தயாராகிக்கொண்டிருக்கிறது என்பதைப் பொங்குதமிழ் உலகுக்குப் வெளிப்படுத்தியிருக்கிறது.

இதனை சர்வதேசம் புரிந்துகொள்ளும் வரை - தமிழ்மக்களின் உள் உணர்வுகளை விளங்கிக்கொள்ளும் வரை - ஈழத்தில் மட்டுமல்லாது பூமிப்பந்தில் தமிழர்கள் வாழுகின்ற திசையெங்கும் ஆயிரம் பொங்கு தமிழ்கள் பொங்கிப் பிரவகிக்கும் என்பதில் ஐயம் இருக்காது.


சிங்கர் நீர் பம்பியினால் முடியாதது என்றோ....... செய்ய இயலாதது என்றோ..... எவருக்கும் கூற முடியாது.




இப்பொழுது நாடு பூராவும் கிடைக்கும் அளவிற்கு.........
ஆமாம்! நாடெங்கிலுமுள்ள சிங்கர் காட்சியறைகள், அங்கீகரிக்கப்பட்ட விற்பனை முகவர்கள் மூலம் நாட்டின் மூலைமுடுக்கெல்லாம் இது சாத்தியமாகின்றது.

உதிரிப்பாகங்கள் வேண்டியளவிற்கு .......
ஆமாம்! சிங்கர் பம்பிகள் இலங்கையிலேயே உற்பத்தி செய்யப்படுவதால் உதிரிப்பாகங்கள் பற்றிய அச்சமே உங்களுக்குத் தேவையில்லை. இவை தாராளமாக் கிடைக்கின்றன.

இலகு தவணை கொடுப்பனவுத் திட்டத்தில் .....
ஆமாம்! இலகு தவணைக் கொடுப்பனவுத் திட்டத்தில் சிங்கர் பம்பிகள் வழங்கப்படுவதனால் எத்தரத்தவரும் இதனை வாங்கிக் கொள்ள முடிகின்றது.

தண்ணீர் பம்பிகள் என்றதும் எப்போதும் ஞாபகத்திற்கு வரவேண்டியது சிங்கர் பம்பிகள் !!!

இப்போது ISO 9002 சர்வதேச தரச் சான்றிதழ்களுடன்

யாழ் குடாநாட்டில் இவற்றைப் பெற்றுக் கொள்ள நாடுங்கள்....
சிங்கர் காட்சியறைகள்
அங்கீகரிக்கப்பட்ட விற்பனை முகவர்
இல.538, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 021-2225408
விற்பனை கிளைகள்
[illegible] வீதி, யாழ்ப்பாணம்.
இல.150, கண்டி வீதி, சாவகச்சேரி. 0777-3174629

SINGER
மாசற்ற மேன்மை
சிங்கர் (ஸ்ரீலங்கா) வரையறுக்கப்பட்டது
இல. 320, டாக்டர் கொல்வின் ஆர்.டி.சில்வா மாவத்த, கொழும்பு. தொலை: 022-421462/3, 2430301
www.singersl.com
CREATIVE SERVICES


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## பாலை, முதிரை விற்பனைக்கு

வீடு கட்டுவதற்கும் தளபாடங்கள் செய்வதற்குமாகிய பாலை, முதிரை மரம் (பலகை சிறிய தொகை)உடன் விற்பனைக்குண்டு. மானிப்பாயில் எமது வீட்டில் இருக்கிறது. எடுப்பவர்கள் முற்றிலுமாக எடுக்கவேண்டும். தொடர்பு: 'சீத்தாராம்', சுதுமலை வடக்கு, மானிப்பாய் (இணுவில் றோட்).T.P.: 0779084848, 021 222 3484. (40626)

## கார் விற்பனைக்கு

டாக்டர் ஒருவரின் பாவனையிலுள்ள 15- தொடரிலக்கமுடைய வெள்ளை நிற ரொயாட்டா கொரல்லா (REAR WHEEL DRIVE) KE வகன் மொடல் கார் உடன் விற்பனைக்குண்டு. இன்றும் நாளையும் பிற்பகல் (4 - 6) மணிவரை நேரில் பார்வையிடலாம். தொடர்பு: 95A, கோயில் வீதி (கைலாசபிள்ளையார் கோயிலடி), யாழ்ப்பாணம். (40162)

## கடை விற்பனைக்கு

K.K.S. வீதியில் சத்திரத்துச் சந்திக்கும் முட்டாசுக்கடைச் சந்திக்கும் இடையில் மேல் மாடியுடன் கூடிய கடை விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.No.: 0776154204 முகவரி: 385, K.K.S. வீதி, யாழ்ப்பாணம். (40636)

## களஞ்சியம் வாடகைக்கு

யாழ்ப்பாணம் வைரவர் கோயில் வீதி, ஆஸ்பத்திரி வீதியில் களஞ்சியம் வாடகைக்குண்டு. சகல தேவைக்கும் ஏற்றது. தொடர்பு: 021 222 7687, 0777915224 (40623)

## திருமண சேவை

தங்கள் எதிர்பார்ப்பு ஜேர்மனி மணமகனா? கவலை வேண்டாம்! திருமண ஆற்றுப்படுத்துநர் குரும்பசிட்டியூர் வேல்அமுதனிடம் இருபத்தெட்டு முதல் நாற்பத்தொன்பது வயது வரை பத்து ஜேர்மன் மணமகன்மாரின் கடிதக் கோப்புகள் இன்று கைவசம் உண்டு! மேலதிக விவரங்களுக்குக் கிழமை நாள்களில் மாலை 4.30 மணிக்கு மேல் வேல் அமுதனுடன் தொடர்புகொள்க. தொலைபேசி: 2360488, 4314396. முகவரி 8/3/3, Metro A Partment, 55, Lane, Colombo - 06. (சி/45350)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப்பட்ட Orignal Prima Broiler குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் 03.10.2005 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை - நெல்லியடிக் கிளைகளிலும் சுட்டி பாம் - வட்டுக்கோட்டை, சன்னதி பாம் - தொண்டைமானாறு, ஐங்கரன் களஞ்சியம் - திருநெல்வேலி, முருகன் - சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர் - இல. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (40294)

## மணமகள் தேவை

மன்னார், றோமன் கத்தோலிக்கம் R.C., 1973, உயரம் 5'4'', G.C.E. A/L AAT கூட்டுத்தாபனத்தில் பிரதம லிகிதராகக் கடமையாற்றும் மணமகனுக்கும், இலங்கை பெந்தக்கோஸ் சபை, 1972, உயரம் 5'6'', COMPLETED Dip. in TECHNOLOGY (Computer) தனியார் கம்பனியில் பணிபுரியும் மணமகனுக்கும் படித்த, அழகான மணப்பெண் தேவை. தொடர்பு: சிவாலயா சர்வதேச திருமண நிலையம், இல. 11, யமுனா வீதி, நல்லூர்.(40620)

யாழ். இந்து கௌரவ குடும்பம், 1973, அனுஷம் 2ஆம் கால், விருச்சிகம், 4இல் செவ்வாய், கிரகபாவனம் 20½, 6'5'' உயரம், கம்பியூட்டர் டிப்ளோமா (SCHLARSHIP HOLDER THAILAND) அரச பணி திட்டமிடல் அமைச்சில் பணிபுரிபவருக்கும் 1978, பூசம், 5'4'' உயரம், கிரகபாவம் 9½, B.Com. (Hons) அரச பணி வகிக்கும் மணமகனுக்கு அழகான, பட்டதாரி பணிபுரியும் மணப்பெண் தேவை. தொடர்பு: சிவாலயா சர்வதேச திருமண நிலையம், இல.11, யமுனா வீதி, நல்லூர். T.P.: 0776528641 (40532)

யாழ். இந்து கௌரவ குடும்பம், 1977, மூலம், உயரம் 5'5'', கிரகபாவம் 38, பிரித்தானியாவில் குடியுரிமையுடைய கம்பியூட்டர் எஞ்சினியர் மணமகனிற்கு அழகான பட்டதாரி மணப்பெண்ணும் 1958, அச்சுவினி, மேட ராசி, 2இல் செவ்வாய், உயரம் 5'4'', கிரக பாவம் 56, பிரித்தானியக் குடியுரிமையுடைய கம்பியூட்டர் எஞ்சினியர் M.S.C. Bank இல் பணிபுரியும் மணமகனுக்கு 10 வயது குறைந்த, டாக்டர், எஞ்சினியர், பட்டதாரி அழகான மணப்பெண் தேவை. தொடர்பு: சிவாலயா.T.P.: 0776528641 (40532)

யாழ். இந்து கௌரவ குடும்பம் தற்போது லண்டனில் Computer Science இறுதி ஆண்டு கல்விகற்கும் 30 வயதுடைய, கிரக பாவம் 8 ¼ மணமகனுக்கு லண்டனில் P.R. உள்ள மணமகள் தேவை. தொடர்பு: P.சிவகுரு, கச்சாய் வீதி, சாவகச்சேரி. (40417)

## மோட்டார் வாகனம் விற்பனைக்கு

84 SRI xxxx Vespa (இத்தாலி) மோட்டார் வாகனம் விற்பனைக்குண்டு. தொடர்பு: 2/2, மருதடி லேன், நல்லூர், யாழ்ப்பாணம். T.P.No.: 0773146127. (40564)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

German Shepherd (அல்சேசன்), Dachshurd, Dobermann கலப்பு நாய்க்குட்டிகள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.தனபால சிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (39657)

## வீடு விற்பனைக்கு

கோண்டாவில் கிழக்கு, நாகபூசணி அம்மன் வீதியில் காளி கோயிலுக்கு அருகில் 2½ பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 0777111389. (40538)

உரும்பிராய் தெற்கு, முந்திரிகைத் தோட்ட ஒழுங்கையில் 2 பரப்புக் காணியில் அமைந்துள்ள புதிய வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: T.P.No.: 021 222 7166 (40631)

சுதுமலை கிழக்கு, மானிப்பாயில் (மலை வேம்படி ஒழுங்கை) சுற்றுமதிலுடன் சகல வசதிகளுடன் வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.No.: 0776020660 (40615)

## மணமகன் தேவை

யாழ். இந்து, 1971, பூசம், முதலாம் கால், 5 அடி, வெள்ளை நிறம், 23 கிரகபாவம், B.A. பட்டதாரி மணமகளுக்கும் திருமலை இந்து, 1962, புனர்பூசம், 8இல் செவ்வாய், 32 கிரக பாவம், G.C.E. O/L ஆசிரியைக்கும் பட்டதாரி, அரச பணி, சுயதொழில் வகிக்கும் மணமகன்கள் தேவை. மேலும் தகவல் அறிய சிவாலயா, இல. 11, யமுனா வீதி, நல்லூர். T.P.No.: 077 6521641 (மந்திரி அரண்மனை எதிரில்). (40621)

**பணியாள்கள் தேவை**

எமது பாமிற்கு பண்ணை வேலையாள்கள் (ஆண்,பெண் இருபாலாரும்) தேவை.
*நேரில் தொடர்பு கொள்ளவும்.*
**வினஸ்பாம்**
79/5A, பலாலி வீதி,
(நல்லூர் AGA Office முன்பாக),
திருநெல்வேலி.
(40530) (46-45-15-24)

## கலைவிழா

சங்கானை, ஒக்.2

சங்கானை மாவடி இந்து இளைஞர் மன்றம் மகளிர் மன்றம் ஆகியன இணைந்து நடத்தும் 6ஆவது வருட கலைவிழா நிகழ்வு பிற்பகல் 3 மணிக்கு மாவடி ஞான வைரவர் ஆலய முன்றிலில் நடைபெறவுள்ளது.

இந்து இளைஞர் மன்றத்தின் உபதலைவர் தி.நகுலேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ். அலுவலக உதவிப் பணிப்பாளர் தி.சிவதட்சணாமூர்த்தி பிரதமவிருந்தினராகவும் சிறப்பு விருந்தினர்களாக சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய அதிபர் திருமதி ச.யோகேஸ்வரன், சங்கானை தெற்கு கிராம அலுவலர் ந.சர்வானந்தன், மாவடி ஞானவைரவர் ஆலயப் பிரதம குரு பிம்மஸ்ரீ வை.ஜீவநாதக்குருக்கள் மற்றும் ஆலய பரிபாலன சபைத் தலைவர் த.சிவசுப்பிரமணியம் ஆகியோர் கலந்துகொள்வர். (எ-29)

## விற்பனைக்கு

தரமான மெசின் மூலம் அரிந்த கொங்கிறீற் கற்கள், கொங்கிறீற் வேலித் தூண்கள், கட்டடத் தூண்கள், அலங்காரத் தூண்கள், அலங்காரப் பூக்கற்கள், பூச்சாடிகள் என்பன வேண்டிய அளவுகளில் விற்பனைக்குண்டு. தொடர்பு: அகிலன், 17, ஐயனார் கோயில் வீதி (கெங்காதரன் வைத்தியசாலை அருகில்), யாழ்ப்பாணம். T.P.: 077 3144884(40603)

'நல்ல நிலையிலுள்ள Sony கலர் T.V. 19'' விற்பனைக்குண்டு. விலை ரூபா 15,000 மட்டுமே. தொடர்பு: ஸ்ரீகுகன் விநாயகர் வீதி, நல்லூர் வடக்கு, கல்வியங்காடு. T.P.: 0776146345, 021 4590746 (துளசி Net Com) (40632)

மிகவும் நல்ல நிலையிலுள்ள LAP TOP (Compaq) கம்பியூட்டர் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.No.: 222 7286 (40625)

## காணி விற்பனைக்கு

கல்வியங்காடு, இராசவீதி, கோப்பாய் தெற்கில் 9 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (கோப்பாய் பொலீஸ் நிலையத்தில் இருந்து ¼ km தூரத்தில்) வீடு கட்டுவதற்கும், தோட்டம் செய்வதற்கும் உகந்தது. தொடர்பு: தயாளன், மே/பா. தயா ஸ்ரோர்ஸ் G.P.S. வீதி, கல்வியங்காடு T.P.: 0776904378. (40578)

கொக்குவில் கிழக்கு, மணியகாரன் வீதியில் 2 பரப்புக் காணி தண்ணீர்ப்பங்குடன் விற்பனைக்குண்டு. தரகர் அவசியமில்லை தொடர்பு: இ.சிவபாதசேகரம், 115, புகையிரத வீதி, கொக்குவில். (40510)

உடுவில், மானிப்பாய் வீதியில் ஆலடிச் சந்தி முருகமூர்த்தி கோயிலுக்கு அண்மையில் (ரான்ஸ்போமர் அருகில்) 6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: இ. இராதாகிருஸ்ணன், பழங்கிணற்றடிப் பிள்ளையார் கோயில் வீதி, கலாசாலை வீதி) திருநெல்வேலி வடக்கு. T.P.: 021 222 5597. (40610)

நவக்கிரியில் 15 பரப்புத் தோட்டக் காணி மற்றும் 13½ பரப்பு வெறும் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: 0776569570 (40562)

## வீடு வாடகைக்கு

யாழ்ப் ணம், திருநெல்வேலி, பலாலி வீதியில் சகல வசதிகளையும் கொண்ட வீடு வாடகைக்குண்டு.
தொடர்பு: T.P.: 0776087896. (40554)

## தவறிவிட்டது

செம்பியன்பற்று வடக்கைச் சேர்ந்த இம்மானுவல் மரியதாரிஸ் என்பவரது தேசிய அ.அட்டை, வாகன சாரதி, அனுமதிப் பத்திரம், பாஸ் என்பன பேர்ஸுடன் 30-09-2005 அன்று நெல்லியடிக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மேற்காணும் முகவரியுடன் அல்லது 0776664235 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (40629)

# புகை, மது...

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

புகைப்பவன் ஒருவன் விடும் புகையைச் சுவாசிப் பவன் 'நிக்கொட்டின்' என்னும் நச்சுத் திரவம் வெளியேற்றி மற்றவர்களையும் நோயாளி யாக்குகின்றான். மேலும் புகைப்பவனுக்குப் பக்கத்தில் சிறுபிள்ளைகள் இருப்பின் அவர்களின் மூளை வளர்ச்சி குன்றும் என்று ஆராய்ச்சிமூலம் கண்டறியப்பட்டுள்ளது. மேலும் எமது நாட்டைப் பொறுத்த மட்டில் வருடம் தோறும் 22 ஆயிரம் பேருக்கு மேல் மரணத்தைத் தழுவிக்கொள்கின்றனர். மேலும் இலங்கையில் 12 வயதுக்கு மேற்பட்ட ஆண்களில் 55 சதவீதத்தினர் புகைப் பழக்கம் உடையவர்கள். புகைத்தல் காரணமாக 52 சதவீதமானவர்கள் இருதய நோயினாலும் 42 சதவீதமானவர்கள் புற்றுநோயினாலும் மரணிக்கின்றனர். புகைப்பதால் ஏற்படும் நோய்கள் பற்றி இந்த நல்லொழுக்க நாளில் கண்டிப்பாக அறிந்துகொள்வது அவசியம். புகைத்தல் உடம்பின் சகல பகுதிகளையும் பாதிக்கின்றது. இரத்த சுற்றோட்டம் தடைப்படுகிறது. மாரடைப்பு, பாரிசவாதம், இரத்த அழுத்தம், கண்பார்வை இழத்தல், பாலியல் உணர்வை மழுங்கடித்தல், சுவாச உறுப்புக்கள் பாதிப்படைதல், நோய் எதிர்ப்பைக் குறைத்தல் மற்றும் நரம்பு மண்டலங்களைப் பாதிப்படையச் செய்தல், தொடர்சசியான இருமல் போன்றவையாகும்.

எனவே, நல்லொழுக்கத்தின் எதிரியான மதுபானம், புகைத்தல் ஆகிய இரண்டையும் எங்களது குடும்பத்தில் இருந்து விரட்டியடிப் போமாயின் எங்கள் குடும்பம் சீரும் சிறப்புமாக வாழ முடியும். எதிர்கால உலகம் இன்றைய சிறுவர்களில் தங்கியுள்ளது. எனவே, சிறுவர்களின் எதிர்கால நலனில் அக்கறை செலுத்தி நல்லதொரு சமுதாயத்தை உருவாக்க நல்லொழுக்க தினமான நாளை உறுதி பூண்டு செயல்படுவோம். மேலும் வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தின் ஆலோ சனையைப் பெற்றுக்கொள்ளலாம்.

Scholarship Up To 80%
Ministry of Education - Singapore
'O' & 'A' Level Candidates are invited to apply !

18TH INTAKE REGISTRATION IN PROGRESS
Important points to note
- Job after Graduation
- Permanent Residency (Green Card)
- Part-time work to meet expenses
- Easy Visa Procedure
- Close to Home
Universities
National University of Singapore (NUS)
Nanyang Technological University (NTU)
Singapore Management University (SMU)
Polytechnics
Temasek Polytechnic
Republic Polytechnic
Singapore Polytechnic
Ngee Ann Polytechnic
Nanyang Polytechnic
SINGAPORE EDUCATION SERVICES (PVT) LTD.
3rd Floor, Confidence Building, No 05, St Anthony's Mawatha, Colombo 03, Sri Lanka.
Tel:94-11-2564149, 94-11-2564008 Fax:94-11- 2370980 E-Mail:singedu@sltnet.lk
OFFICES IN SINGAPORE, MALAYSIA, MALDIVES & INDIA

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விபத்தில் காயமடைந்த குடும்பஸ்தர் மரணம்!

யாழ்ப்பாணம், ஒக்.2

வன்னி, உடையார்கட்டுப் பகுதியில் இடம்பெற்ற விபத்து ஒன்றில் சிக்கி படுகாயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவந்த குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்தார்.

விஸ்வமடு 'றெட்பானா' 13ஆம் கட்டையைச் சேர்ந்த சின்னையா - செல்லத்துரை வயது 56 என்பவரே உயிரிழந்தவராவார்.

(ஐ-7)


**S.L.E.A.S**
அதிபர் சேவை
போட்டிப் பரீட்சை வகுப்புகள் இன்று ஆரம்பம்.
2 p.m.
**D.C.C.A.**
ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்
(40645) (16-12-33)



## ADVENTIST INTERNATIONAL PRE.SCHOOL ADMISSION - 2006

Applications are invited for admission to year 2006. Age limited 3th to 5 th application forms are available. For further Particulars Please Contact

DIRECTOR,
Adventist Interanational Pre. School
850, Hospital Road, Jaffna.
T.Phone: 021 2222843

**Closing Date: October 20 th**

(40556)



## நெல்லை சில்க் அதிர்ஷ்டம்

நெல்லை சில்க் புரட்டாதி மாதாந்தப் பட்டுச் சேலைக்கான அதிர்ஷ்டலாபச் சீட்டு இல.4827 அதிர்ஷ்டசாலிகள் நேரில் வந்து பட்டுச்சேலையைப் பெற்றுக்கொள்ளவும்.

(C-45386)

நெல்லை சில்க்
உரிமையாளர்
S.அகிலதாஸ்.



## தேவை

எமது பனிக்கட்டி ஆலையில் வேலை செய்வதற்கு பணியாளர் (HELPER) காசாளர் (CASHIER) தேவை. நேரில் தொடர்புகொள்ளவும்.

**திட்ட முகாமையாளர்**
**புறோமோட்டேர்ஸ் என்ஜினியரிங் கம்பனி**
844, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (40633)


## Teachers Day Celebration

St.John's College, Jaffna.
Old Boys' Association
International Teachers Day
6th October 2005.

The Old Boys' Association extends an invitation to the members to join the International Teachers Day Celebration on 6th October 2005.

| | |
|---|---|
| 8.45 a.m. | Service |
| 10.30 a.m. | Meeting in Peto Hall |
| 11.45 a.m. | Cultural Show |
| 12.00 noon | Cricket Match |

(C/45358)


## A/L பௌதிகவியல், இணைந்த கணிதம் வகுப்புகள்

பல வருடங்களாக மேற்படி பாடங்களைக் கற்பித்து வரும் ஆசிரியரினால் மிகச் சிறப்பாக 20 வருட A/L வினாத்தாள்கள் உட்பட ஏராளமான பயிற்சிகளுடன் கற்பிக்கப்படும். M.C.Q. இற்கான விளக்க விடைகளுடன் கொடுக்கப்படும். தனிப்பட்ட முறையிலும் கற்பிக்கப்படும். பயிற்சிகள் வழங்கி திருத்திக் கொடுக்கப்படும். பெற்றோர் தொடர்பு விரும்பத்தக்கது. மீட்டல் உண்டு.

T.P:077 - 6648751 **R.பாலசுப்பிரமணியம்**
B.Sc.(Cey)Dip. in Ed.
17/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

(40622)
(16-33-12)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 30 - 06 - 1928



மறைவு 02 - 09 - 2005

### அமரர் வேலுப்பிள்ளை மகாலிங்கம்

மாதமொன்று ஆனதுவோ! அவனியினைப் பிரிந்து
ஆறவில்லை எம் துயரம்! மாறவில்லை எம் கவலை!
வாடியே நாமிங்கு உங்கள் வதனமதைத் தேடுகின்றோம்
நாடி வருவீர்களென நம்பி நாமும் துதிக்கிறோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

எமது குடும்பத் தலைவரின் பிரிவால் நாம் துயருற்றிந்த போது எமது துயரத்தில் பங்குகொண்ட அனைவரும் இன்று (02-10-2005) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிரியைகளிலும் தொடர்ந்து இடம் பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

விளையாட்டரங்க வீதி,
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம். (40635) (16-12-33)

மனைவி,
பிள்ளைகள்,
மருமக்கள்.

## வாழ்த்துப்பசாரம்



பேராசிரியர் கலாநிதி
எஸ்.சிவலிங்கராஜா அவர்கள்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையில் பேராசிரியராக நியமிக்கப் பட்டமையைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்புகூர்ந்து அழைக்கின்றோம்.

காலம் : **02.10.2005**
நேரம் : **பி.ப.6.30 மணி**
இடம் : **"திருமண மண்டபம்"**
பழங்கிணற்றடி,
ஸ்ரீவீரகத்தி விநாயகர் ஆலயம்,
திருநெல்வேலி.

நண்பர்கள், திருநெல்வேலி.


**மனோகரா** யாழ்ப்பாணம்
இளைய தமிழன் ஸ்ரீகாந் நடித்த
**ஒருநாள் ஒருகனவு**
காட்சிநேரம்:- பு.நே. 10.30, 2.30 6.30, 9.30.
(சி-44110)

**நாகம்ஸ்** சினிமா சுன்னாகம்
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு
ஜெயம் ரவி, கலாபவன்மணி, வடிவேல் நடித்த
**மழை** (சில்வ்)
காட்சிநேரம்:- பு.நே. 11.00, 3.00, 7.00, 9.30.

**ராஜா** யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
சூர்யா, அசின், நயன்தாரா, பிரகாஸ்ராஜ் நடித்த
**கஜினி**
காட்சிநேரம்:- பு.நே. 10.30, 2.30 6.30, 9.30.
(ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்)

**நாதன்ஸ் சினிமா** ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம்.
சரத்குமார், வைகைப்புயல் வடிவேலு, நமிதா நடித்த
**சாணக்யா**
காட்சிநேரம்:- பு.நே. 2.30 6.30, 9.30.


# மரண அறிவித்தல்

## சின்னத்தம்பி இராசரத்தினம்



சுன்னாகத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி இராசரத்தினம் அவர்கள் நேற்று (01.10.2005) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சிவசித்திரபூவதியின் அன்புக் கணவரும் செல்வறஞ்சிதமலர், செல்வரவீந்திரராசா (மாருதி ரெக்ஸ், மிருணா பான்சி), செல்வராசா, செல்வவிக்கினேஸ்வரராசா (விக்கி ரெக்ஸ், முனீஸ்வரன் வீதி, யாழ்ப்பாணம்), செல்வஸ்கந்தராசா (காந்தன் ரெக்ஸ், சுன்னாகம் மார்க்கட்), காலஞ்சென்ற செல்வமாணிக்கராசா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயக்குமார் (கட்டார்), சத்தியநாதன், மிருணாளினி, பிறேமநளினி (இணுவில் இந்துக் கல்லூரி ஆசிரியை), தயாநிதி (செம்பியன்பற்று அ.த.க. பாடசாலை, ஆசிரியர்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் சாருகான் (சென். ஜோன்ஸ் கல்லூரி), துஷாரா (உடுவில் மகளிர் கல்லூரி) கோபிக்கிஷான், பூமிகா, ஜிஷான் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.10.2005) ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மார்க்கட் லேன்,
சுன்னாகம். (சி/45390) (16-12-33)

தகவல்:
மனைவி,
பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்கள்

## பொன்னுத்துரை (தம்பிஐயா) சரவணபவன் (ராசா) (மண்டைதீவு)



6ஆம் வட்டாரம், மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் இல.59, பொற்பதி வீதி, கொக்குவிலை வதிவிடமாகவும் கொண்ட பொ.சரவணபவன் நேற்று (01.10.2005) சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் கிருபவாணியின் (எழுதுநர், யா/பெரியபுலம் ம.வி.) அன்புக் கணவரும் கிருபவன் (கிருபன் - 2005, வர்த்தகப் பிரிவு), சாம்பவன் (தரம் 8- கொக்குவில் இந்து மாணவர்கள்), பிரணவன், சாயுக்சன் ஆகியோரின் அன்புத் தந்தையும் பொன்னுத்துரை - இராசம்மா தம்பதியரின் மகனும் தபானந்தம், சங்கநிதியின் மருமகனும் குலமணிதேவி (கிளி), சுந்தரேஸ்வரி (ராணி), மனோரமா (மனோ - பிரான்ஸ்), சந்திரிகா (சாந்தி - பிரான்ஸ்), ஸ்ரீராமலிங்கதுரை (செல்வந்தன் - சுவிஸ்), தமிழரசி (உமா - இத்தாலி), இரவீந்திரன் (ரவி - பிரான்ஸ்), தேவமனோகரி (தேவா - லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஒளிவண்ணன், கேமமாலினி (மாலினி - கனடா), கோகுலவண்ணன், விஜயபாமன் (விஜி - ICRC கிளிநொச்சி) ஆகியோரின் அருமை மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

கொக்குவில். (40649) (16-12-33)

தகவல்:
ச.கிருபவாணி (மனைவி)
குடும்பத்தினர்.

## கந்தையா விநாயகமூர்த்தி

நவக்கிரி, புத்தூரைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா விநாயகமூர்த்தி 29.09.2005 வியாழக்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் இராசம்மாவின் அன்பு மகனும் தானையா - புவனேஸ்வரி தம்பதியரின் மருமகனும் தயாநிதியின் அன்புக் கணவரும் சுகந்தன் (பிரான்ஸ்), நிசாந்தினி (பிரான்ஸ்), அலோசன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவபாதம் (கனடா) வேலும் மயிலும் (கனடா), சச்சிதானந்தன் (பிரான்ஸ்), விவேகானந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நவக்கிரி,
புத்தூர். (40619) (16-12-33)

தகவல்:
ந.நிர்மலானந்தம் (சிவம்).

## சோமசுந்தரம் சண்முகநாதன்

(முன்னாள் உரிமையாளர், யாழ். பாதுகாதேவி ஸ்ரோர்ஸ்)

யாழ்ப்பாணம், பிறவுண் வீதியை பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் சண்முகநாதன் அவர்கள் 30.09.2005 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற **M.T.**சோமசுந்தரம் மற்றும் மங்கையர்க்கரசி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சின்னத்தம்பி மற்றும் பூமணி தம்பதியரின் அன்பு மருமகனும் தில்லைநாயகியின் அன்புக் கணவரும் சண்முகப்பிரியா, சண்முக்கதர்ஷினி (கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, மாணவிகள்), சண்முகசுந்தரம் சண்முகஹாசன் (கொழும்பு, பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி, மாணவர்கள்), சண்முகஹாந்தினி (கொழும்பு, இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, மாணவி) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், கமலாதேவி (லண்டன்), புஸ்பராணி, விஜயலட்சுமி, வனிதா, நவநீதன், லோகேஸ்வரன், சிவாஜினி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சண்முகமூர்த்தி, வேதாட்சனநாயகி, பேரின்பநாயகி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.10.2005) திங்கட்கிழமை பொரளை ஜெயரட்ணம் மலர்ச்சாலையில் பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அவைரும் ஏற்றுக்கொள்ளவும்.

(40710) (16-12-33)

192, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
T. இராஜேந்திரன்
(இராஜேந்திரா ஸ்ரோர்ஸ்).

## சின்னத்தம்பி சின்னத்துரை



வரணி, இயற்றாலையைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சின்னத்துரை அவர்கள் நேற்று (01.10.2005) சனிக்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் நடைபெறும்.

மேலதிக விவரம் நாளைய உதயனில் வெளிவரும்.

வரணி, இயற்றாலை,
வரணி. (40716) (16-12-33)

தகவல்:
மார்க்கண்டு
(சகோதரன்).

திருமதி

## ஸ்ரீ வசந்தினி கனகராசா

ஸ்ரீ வசந்தம், கோப்பாய் வடக்கு, கோப்பாயை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி ஸ்ரீ வசந்தினி கனகராசா அவர்கள் நேற்று (01.10.2005) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசபிள்ளை தம்பதியினரின் புதல்வியும், கனகராசா (அதிபர், வயாவிளான் ம.வி.) அவர்களின் அன்பு மனைவியும் செல்வி க.அபிராமி அவர்களின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கோப்பாய் இல்லத்தில் இன்று (02.10.2005) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெற்று, கோப்பாய் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீ வசந்தம்,
கோப்பாய் வடக்கு,
கோப்பாய். (40718) (16-12-33)

தகவல்:
க.கனகராசா
(கணவர்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனத்தின் பராமரிப்பின்கீழ் இயங்கி வருகின்ற 'செந்தளிர்' சிறுவர் இல்லத்தில் நேற்று சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. முல்லைத்தீவில் இயங்கிவந்த இந்த இல்லம் ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் முற்றாக அழிந்ததோடு இல்லச் சிறுவர்கள் பலரும் பணியாளர்களும் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

தற்போது வள்ளிபுனம், புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள 'செந்தளிர்' சிறுவர் இல்லத்தில் நேற்று மு.ப. 10 மணியளவில் ஆரம்பமாகிய சிறுவர்தின நிகழ்வில் ஆரம்ப நிகழ்வாக ஆழிப்பேரலை அனர்த்தத்தால் உயிர்நீத்த இல்லச் சிறுவர்களின் உருவப்படங்களுக்கு சுடரேற்றி மலர்மாலை அணிவித்து அகவணக்கம் செலுத்தப்பட்டது.

தொடர்ந்து பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தினரால் இல்லச் சிறார்கள் மலர்மாலை அணிவித்து பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வில் எடுக்கப்பட்ட படங்கள் இவை. (ஐ-3)



## நாட்டுப்பற்றாளர் கௌரவம்

கிளிநொச்சி,ஒக்.2

மட்டக்களப்பு நகரப்பகுதியில் நேற்று முன்தினம் சுட்டுக்கொல்லப்பட்ட 'ஈழநாதம்' பத்திரிகையின் மட்டக்களப்பு மாவட்ட முகவரான யோக்குமார் கிருஷ்ணபிள்ளை நாட்டுப்பற்றாளர் என்று விடுதலைப் புலிகளால் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

விடுதலைப் புலிகள் நேற்று வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் இது தொடர்பான அறிவிப்பை விடுத்துள்ளனர். (ஐ-3-203)

## ஆறு பதில் அமைச்சர்கள் நியமனம்

கொழும்பு,ஒக்.2

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வெளிநாடு சென்றுள்ளதையடுத்து அவரின் கீழ் உள்ள ஆறு அமைச்சுகளுக்கும் பதில் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்று ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

பதில் பாதுகாப்பு அமைச்சராக ரட்ணசிறி விக்கிரமநாயக்கவும், பதில் பாடசாலைக் கல்வி அமைச்சராக மங்கள சமரவீரவும் பதில் உயர் கல்வி அமைச்சராக தினேஷ் குணவர்த்தனவும் பதில் ஊடகத்துறை அமைச்சராக டிலான் பெரேராவும் பதில் போக்குவரத்து அமைச்சராக லஸந்த அழகியவனவும் பதில் நிவாரண மற்றும் புனர்நிர்மாண அமைச்சராக டி.எம். தஸநாயக்கவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.(3-13)

## கோண்டாவிலில் மோதல் நால்வர் படுகாயம்!

கோண்டாவில் பகுதியில் நேற்றிரவு 11 மணியளவில் இரு குழுக்களுக்கிடையே இடம்பெற்ற கோஷ்டிமோதலில் இரு சகோதரர்கள் உட்பட நால்வர் படுகாயமடைந்துள்ளனர்.

இச் சம்பவத்தில் கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த சகோதரர்களான பரமநாதன் சதீஸ் (வயது 18), பரமநாதன் விமல்ராஜ் (வயது 25) ஆகியோரும் கோண்டாவில் வடக்கைச் சேர்ந்த ரவி-பிரசாத் (வயது 17), நவரட்ணம் சுரேஸ் (வயது 18) ஆகியோரும் படுகாயமடைந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர். படுகாயமடைந்த நால்வரும் வாள்வெட்டுக்கு இலக்காகி தலையிலும் கையிலும் பலத்த காயங்களுக்குள்ளாகியுள்ளனர். (3-13)

## சு.க.தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்ன நிலைப்பாட்டை எடுக்கப்போகின்றது என ஜே.வி.பியின் உறுப்பினரும் முன்னாள் மீன்பிடித்துறை அமைச்சருமான சந்திரசேன விஜயசிங்கவிடம் கேட்டபோது அவர் மேலும் கூறியதாவது:-

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சுதந்திரக் கட்சியின் வேட்பாளராகத் தேர்தலில் போட்டியிடுகிறார் என்று ஜே.வி.பி. கருதவில்லை. அக்கட்சியின் சின்னத்திலும் அவர் போட்டியிடவில்லை. பொது வேட்பாளராக - வெற்றிலைச் சின்னத்திலேயே - அவர் தேர்தலில் நிற்கின்றார்.

எமது அமைப்புடன் உடன்பாடு கண்டபடி இனப்பிரச்சினைக்கு ஒற்றை ஆட்சிக்குள் தீர்வு, இறுதித் தீர்வு பற்றியே பேச்சு என்ற கோட்பாடுகளுடன்தான் அவர் போட்டியிடுகின்றார்.

ஜே.வி.பியின் கொள்கைகளை ஏற்றுத்தான் எங்களோடு உடன்பாடு கண்டு களத்தில் குதித்துள்ளார்.

சுதந்திரக் கட்சியின் கொள்கை பற்றி எமக்கு அக்கறையில்லை. அவர்களின் கொள்கையுடன் அக்கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளிவரட்டும் அதைப்பற்றி அலட்டிக்கொள்ளப் போவதில்லை.

பொது வேட்பாளராக மஹிந்த நிறுத்தப்படுவதால் சுதந்திரக் கட்சியின் கொள்கைகளைக் கொண்ட தேர்தல் விஞ்ஞாபனம் செல்லுபடியற்றதாகவே அமையும்.

- இப்படி அவர் கூறினார். (ஐ-3)

## தமிழர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மதப்பிரசாரங்கள் போன்ற பல்வேறு செயற்பாடுகளுக்காக தமிழ்ப் பிரதேசங்களில் தனித்துச் செயற்படுவதற்கான கோரிக்கை பரிசுத்த பாப்பரசரிடம் முன்வைக்கப்பட்டது.

இந்தக் கோரிக்கை இலங்கையில் பாப்பரசரின் பிரதிநிதி மற்றும் கத்தோலிக்க ஆயர் சபை ஆகியவற்றின் கவனத்திற்காக பரிசுத்த பாப்பரசரினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்தப் புதிய கட்டமைப்பு ஏற்றுக்கொள்ளப்படாது விடினும் யாழ்ப்பாணம், மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மறை மாவட் ங்கள் இணைந்து செயற்பட ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தமிழ் கத்தோலிக்க ஆயர் தரப்புகள் தெரிவித்துள்ளன. (ஐ-13)

## வாழைச்சேனை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஆலயத்தில் இடம்பெறும் கட்டடத் திருப்பணி வேலைகளில் ஈடுபடுவதற்காக இந்த இளைஞர்கள் அங்கு தங்கியிருந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சம்பவத்துக்கான காரணம் உடனடியாகத் தெரியவரவில்லை. விசாரணைகளைப் பொலீஸார் மேற்கொண்டுள்ளனர். (ஐ-3)

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயர்மட்டத் தலைவர்களை ஜனாதிபதி சந்தித்துப் பேச்சுக்கள் நடத்துவார்.

பிரான்ஸ் விஜயத்தின் பின்னர் அடுத்த சில தினங்களில் ஜனாதிபதி ஜப்பானுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார். அவரது பதவிக் காலத்தின் கடைசி வெளிநாட்டுப் பயணம் இதுவாகும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

## தமிழரசுக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைப்புக்குழு ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது. இம்மாத இறுதியில் கட்சியின் பொதுக் குழுவைக் கூட்டுவது என்றும்-

அக்கூட்டத்தில் கட்சியின் மாநாட்டை நடத்தும் திகதியைத் தீர்மானிப்பது என்றும்- கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. (ஐ-3)


அன்பார்ந்த வர்த்தகர்களே!

செலிங்கோ காப்புறுதியின் மூன்றாவது VIP காப்புறுதிக் கிளை இன்று (02.10.2005) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.31 மணியளவில் செலிங்கோவின் யாழ். மாவட்டக் கிளை சாவகச்சேரியில் திறந்து வைக்கப்படவுள்ளது. அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

செலிங்கோ VIP யின் புதிய கிளை சாவகச்சேரியில்

தகவல்:
திரு. சே. தவசீலன்
முகாமையாளர்,
செலிங்கோ காப்புறுதிக்கம்பனி(பொது)
யாழ்ப்பாணம்.
077 3124603

(46593)(11-45)

பொருளியற் கல்லூரி
யாழ்ப்பாணம்
பிரிவு-II
A/L DAY CLASS
தமிழ்
மீரா
திங்.,செவ்.,புதன்,வெள்ளி
7-8 a.m.
ஆரம்பம்-
05.10.2005
(40719) [புதன்]
அனுமதிகளை முன் கூட்டிப் பெற்றுக்கொள்ளவும்.
பிரிவு-1 சனி, ஞாயிறு 1-2 நடைபெறுகின்றன.

SCIENCE CENTRE
நெல்லியடி
A/L DAY CLASS
(40585)
Maths - ஜெயந்தன் Che. - அன்பழகன்
Bio. - அல்போன்ஸ் Phy. - பிரபா


## மரண அறிவித்தல்கள்

### சின்னத்தம்பி நாகலிங்கம்



புங்குடுதீவு, 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் பிறவுண் வீதி, முதலாம் ஒழுங்கையில் வசித்தவரும் தற்போது பிரான்ஸில் வசித்தவருமான சின்னத்தம்பி நாகலிங்கம் அவர்கள் நேற்று (01.10.2005) சனிக்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பிரான்ஸில் நடைபெறும்.

விவரம் நாளைய உதயனில் வெளிவரும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

283/13, புகையிரத வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
(40722)(33-18-12)

தகவல்:
நா.தெட்சணாமூர்த்தி
(மகன்).

### திருமதி கனகசபை மனோன்மணி (பூமணி)

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை மனோன்மணி நேற்று (01.10.2005) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபையின் அன்பு மனைவியும் பகவதி (சின்னமணி), இராமசாமி ஆகியோரின் சகோதரியும் மோகனேஸ்வரி, கோணேஸமூர்த்தி, யோகமூர்த்தி, காலஞ்சென்ற சிவமூர்த்தி, கிருஷ்ணமூர்த்தி ஆகியோரின் அன்புத் தாயாரும் விக்கினேஸ்வரன், ஜெயமலர், விஜிதா, பிரதீபா ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.10.2005) ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைகள் நயினாதீவு இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

முதலாம் வட்டாரம்,
நயினாதீவு.
(40724)(33-12-18)

தகவல்:
க.கோணேஸமூர்த்தி
(மகன்).


EXPOAIR எக்ஸ்போ ஏயார்
your friend in the skies... வானத்தில் உங்கள் நண்பன்...



தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail: reservations@expoavi.com jaffna@expoavi.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.10.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# சூரியகாந்தி

உதயன்
ஞாயிறு சிறப்பம்சம்
02.10.2005



# சர்வதேச அழுத்தங்களையும் மீறி போர் வெடிக்கும் சூழ்நிலை உருவாகின்றதா?

இலங்கை சமாதானச் செயலகத்தின் செயலாளர் ஜயந்த தனபால மற்றொரு கதிர்காமராக மாறியிருப்பதாகக் கருத வேண்டியுள்ளது.

தாம், இந்த நாட்டில் வாழும் இனங்கள் மத்தியில் நல்லுறவை ஏற்படுத்தும் நோக்கில் உருவாக்கப்பட்ட அமைப்பொன்றின் செயலாளர் என்பதை முற்றாக மறந்துவிட்டு, சாதாரண அரசியல்வாதி ஒருவரைப் போன்று செயற்பட அவர் ஆரம்பித்துள்ளார். அண்மையில் தாம் அமெரிக்காவுக்கு மேற்கொண்ட விஜயத்தின்போது படுகொலை செய்யப்பட்ட வெளிநாட்டமைச்சரின் படுகொலையை முன்னிலைப்படுத்திக் குறிப்பிட்டு விடுதலைப் புலிகள் அமைப்பின் மீது அழுத்தம் பிரயோகிக்குமாறு அமெரிக்க அரசின் உயரதிகாரிகளிடம் அவர் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறாத வகையில் அதனை உரியவகையில் கடைப்பிடிக்குமாறு - விடுதலைப் புலிகள் அமைப்பின் மீது சர்வதேச சமூகம் அழுத்தம் பிரயோகிக்வேண்டுமெனவும் அவர் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

கடந்த மூன்றரை ஆண்டு கால சமாதான முயற்சிகளுக்கு பின்னடைவுகளை ஏற்படுத்தியமைக்கான பொறுப்பு சிங்கள இனத்தைச் சார்ந்ததா? அல்லது தமிழினத்தைச் சார்ந்ததா? என்பதனை, நாட்டின் அமைதி நிலவிய காலப் பகுதியில் இடம்பெற்ற செயற்பாடுகளைக் கூர்ந்து அவதானித்த எவரொருவராலும் சரியாகக் கணிப்பிட முடிந்திருக்கும். இவை குறித்த தகவல்கள் அமெரிக்க அரசுக்குத் தெரியாதவையல்ல. இலங்கையிலுள்ள அமெரிக்க தூதுவர் அலுவலகத்தைப் போன்றே இலங்கையில் சமாதான நடவடிக்கைகளில் ஆர்வம் காட்டும் ஏனைய நாடுகளும் கூட, இலங்கையில் நாளாந்தம் இடம்பெறும் அரசியல் சம்பவங்கள் அனைத்தையும் கூர்ந்து அவதானித்து வருகின்றன. இத்தகைய நிலையில், ஜயந்த தனபால அமெரிக்காவுக்குச் சென்று இலங்கையின் அரசியல் நிலைவரம் குறித்து கருத்து வெளியிட வேண்டிய அவசியம் எதுவும் ஏற்படவில்லை என்றே கருத வேண்யுள்ளது.

இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைவரம் குறித்து சர்வதேச சமூகம் மிக முக்கிய மூன்று அம்சங்களைக் கருத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகும். இந்த நாட்டில் மீண்டும் யுத்தமொன்று உருவாவதைத் தவிர்ப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளல், பொது மக்களுக்கான இயல்பு வாழ்க்கையை மீண்டும் உருவாக்கிக் கொடுக்க முயலுதல் மற்றும் நாட்டின் இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கான முயர்சிகளை முன்னெடுத்தல் என்பவையே அந்த மூன்று முக்கிய அம்சங்களாகும். இந்த மூன்று அம்சங்களும் ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ந்து முன்னெடுக்கப்படுதல் அவசியமாகும். இந்த மூன்று அம்சங்களும் ஒன்றுடன் ஒன்று நெருங்கிய தொடர்பு கொண்டவையாகும்.

முதலில் பிரச்சினையுடன் சம்பந்தப்பட்ட இரு தரப்புக்களையும் சமமான நிலையில் வைத்துக் கருதப்படுவதுடன் யுத்த நிறுத்த உடன்பாடு சம்பந்தப்பட்ட இரு தரப்பினராலும் உரிய வகையில் கடைப்பிடிக்கப்படுதல் மிக முக்கியமானதொன்றாக அமைகிறது. அதன் தொடர்ச்சியாகச் சிரமத்துக்கு உள்ளாகியிருக்கும் பொதுமக்கள் வாழ்க்கையில் இயல்பு நிலையை உருவாக்கத்தக்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுதல் அவசியமாகும். அத்துடன், யுத்தம் இடம்பெற்ற கால கட்டத்தில் பொது மக்கள் முகம் கொடுக்க நேர்ந்த சகல வித சிரமங்களுக்கும் முற்றுப்புள்ளி இடப்படும் வகையிலான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் அவசியமாகிறது. யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்து வாழ நேர்ந்துள்ள பொதுமக்கள் தத்தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் சென்று வாழத்தக்க சந்தர்ப்பத்தை அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். பொது மக்களது வழிபாட்டுத் தலங்கள், அவர்கள் ஒன்று கூடும் முக்கிய இடங்கள் என்பவற்றை அவர்கள் பயன்படுத்தத்தக்க வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்படல் வேண்டும். விவசாயிகள் தமது விவசாய நிலங்களில் உற்பத்தி முயற்சிகளை மேற்கொள்ளத்தக்க வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல் அவசியமாகும். இவ்வித வாய்ப்புகளின் மூலம் பொதுமக்கள் தத்தமது சமூக, பொருளாதார அபிலாசைகளை அடையத்தக்கதான நிரந்தர அரசியல் தீர்வொன்றை எட்டுவதற்கான நடவடிக்கைகள் நிறைவு செய்யப்படுதல் அவசியமாகும்.

இவ்வித நடவடிக்கைகள் முன்னெடுக்கப்

## தமிழர் தரப்பின் வெற்றி நெருங்கி வருகிறதா?

படும் சமயம் அதனை விரும்பாத பேரினவாத கடுங்கோட்பாட்டாளர்கள் யுத்தம் இடம்பெறாதிருக்கவேண்டுமென்பதில் மட்டும் அக்கறை செலுத்துவார்களேயொழிய, இயல்பு நிலை உருவாக்கப்படுதல் குறித்தோ, நிரந்தர தீர்வொன்று காணப்பட வேண்டுமென்பதற்கோ ஆதரவு தெரிவிக்க முன்வரப் போவதில்லை. ஆனால், அவர்கள் மீது கடும் அழுத்தம் பிரயோகிக்கப்படுமானால் தமது கடும் நிலைப்பாட்டைக் கைவிடவேண்டிய நிலைக்கு அவர்கள் தள்ளப்படுவார்கள். தாம் இதுவரை காலமும் அனுபவித்த பேராண்மைத் தன்மையைஇழப்பதற்கு எந்தவொரு பேரினவாத போக்குடைய இனத்தவர்களும் இலேசில் ஒப்பமாட்டார்கள். கடும் அழுத்தத்துக்கு உட்பட நேர்ந்தாலன்றி அவர்கள் தமது பேராண்மைத் தன்மையைக் கைவிட விரும்பமாட்டார்கள். இவ்வித அழுத்தங்களுடன் கூடிய நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு மத்தியஸ்தத் தரப்பொன்று அவசியமாகும். அதேசமயம் யுத்தத்தை நிறுத்திக் கொண்ட போதிலும் யுத்தத்துக்குத் தயார் நிலையைக் கடைக் கொள்ளும் போக்கை நிறுத்திக் கொள்ள முன் வராவிடில் அரசியல் சிக்கல் ஒருபோதும் தீரப்போவதில்லை. ஆகவேதான், [illegible]

தரப்புக்கு ஜனநாயக ரீதியிலமைந்த தமது நடவடிக்கைகளை முன்னெடுக்கத்தக்க பின்னணி ஏற்படுத்திக் கொடுக்கப்படல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட விடயங்களை நிறைவேற்றும் நோக்கிலேயே போர் நிறுத்த உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டது. இவ்வித நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதை இலகுபடுத்தி உதவும் நோக்கிலேயே அனுசரணையாளர் தரப்பாகச் செயற்பட நோர்வே அரசு முன்வந்தது. போர் நிறுத்த உடன்பாடு கைச்சாத்திடப்பட்டதன் மூலம், சம்பந்தப்பட்ட இரு தரப்புக்களும் சமமான அதிகாரத் தரப்புகளாக உறுதிப்படுத்தப்பட்ட நிலை உருவாகியது. அது மட்டுமன்றி, அரச கட்டுப்பாட்டுப் பகுதியல்லாத பிரதேசங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த நிர்வாக நடைமுறை உத்தியோகபூர்வமாக மேற்கொள்ளப்படும் நடைமுறையாக மாற்றம் கண்டது. தேசிய ரீதியில் அனுமதிக்கப்பட்டதாகக் கொள்ளப்பட்ட அத்தகைய நடைமுறை சர்வதேச ரீதியில் அனுமதிக்கப்பட்டதாகக் கொள்ளப்



படும் நிலைவரை அபிவிருத்தியுற்றது. இதன் மூலம் விடுதலைப் புலிகள் அமைப்பு அரச கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளிலும் தமிழ் மக்களுக்கான அரசியல் நடவடிக்கைகளிலும் ஈடுபடத்தக்க நிலையை உருவாக்க முடிந்தது. ஆனால், இவை யாவும் கடும் போக்குக் கொண்ட பெரும்பான்மையின மக்களின் பூரண விருப்புடன் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளல்ல. ஆனால், சர்வதேச சமூகம் அத்தகைய நிலைக்கு ஆதரவாகச் செயற்பட்டது. இதன் தொடர்ச்சியாகத் தாய்லாந்திலும், நோர்வேயின் ஒஸ்லோவிலும் என ஆறு சுற்றுப் பேச்சுகளில் அரசு மற்றும் விடுதலைப் புலிகள் அமைப்பு ஆகிய இரு தரப்புகளும் ஈடுபட முடிந்தது. ஆனால், இப் பேச்சுகளின் முடிவில் இருதரப்புக்களாலும் இணக்கம் காணப்பட்ட விடயங்களைச் செயலுருப்படுத்துவதற்கு பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த கடும் கோட்பாளர்கள் தடைகளை ஏற்படுத்தினர். இதனாலேயே இடைக்கால தன்னாட்சி அதிகார யோசனையை நடைமுறைப்படுத்த இயலாது போயிற்று.

அதேசமயம் மற்றொருபுறம் ரணிலின் தலைமையிலான ஐ.தே.முன்னணி அரசு வஞ்சகமான முறையில் சர்வதேசப் படைகளைத் தமிழ்ப்பகுதிகளுக்கு வரவழைக்கவும் தமிழ்ப் பகுதிகளால் சர்வதேச பொருளாதாரத் தடையை ஏற்படுத்தும் நோக்கிலும் அமெரிக்கா, ஜப்பான் போன்ற பலமிக்க நாடுகளுடன் இரகசிய திட்டங்களை வகுத்து வந்தது. விடுதலைப் புலிகள் [illegible] அதனைப் [illegible]தற்கான நடவடிக்கைகளில்

ஈடுபட்டது. அமெரிக்காவுடன் பாதுகாப்பு ஒப்பந்தமொன்றினை ஏற்படுத்திக் கொண்டதுடன், திட்டமிட்ட வகையில் இளஞ் சமுதாயத்தினர் மத்தியில் பிளவுகளை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் ஆரம்பித்தது.

போர் நிறுத்த உடன்பாடு விதிகளுக்கமைய, சம்பந்தப்பட்ட தரப்புக்கள் இரண்டும் சமமான நிலை கொண்ட தரப்புக்களாக வாஷிங்ரன் மாநாட்டில் கலந்து கொண்டன. ஆறு சுற்றுப்பேச்சுகளின் முடிவில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்ளை நடைமுறைப்படுத்த அரச தரப்பு பின்னடித்தது. அதன் பலனாய் விடுதலைப் புலிகள் அமைப்பு பேச்சுகளை நிறுத்திக் கொள்ளும் நிலை உருவானது. ஆனாலும்,அவர்கள் சமாதான, நடவடிக்கைகளைக் கைவிட்டு விடவில்லை. அரசு முன்வைத்த இடைக்கால தன்னாட்சி அதிகார யோசனைக்கு மாற்றீடாகத் தமிழ் மக்கள் சார்பில் இடைக்கால நிர்வாக யோசனையொன்றை விடுதலைப் புலிகள் அமைப்பு முன் வைத்தது.

அவ்வித யோசனைகள் முன்வைக்கப்பட்ட தினத்துக்கு மூன்று நாள்கள் கழித்து திடீரென ஜனாதிபதி மூன்று முக்கிய அமைச்சுக்களின் பொறுப்புக்களை தம்வசம் எடுத்துக் கொண்டார். இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து சமாதான நடவடிக்கைகள் கைவிடப்பட்டன. தேர்தல் மூலமான வெற்றி இனவாதிகளின் கைகளில் சிக்க நேர்ந்தமையயடுத்து சமாதான நடவடிக்கைகள் பின்னடைவு நிலை அல்லது



ஸ்தம்பித நிலையை அடைந்தன. போர் நிறுத்த உடன்படிக்கையை மட்டுமே சம்பந்தப்பட்ட இரு தரப்புக்களும் தொடர்ந்தும் பேணி வந்தன.

சமாதான நடவடிக்கைகளைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல ஆர்வம் காட்டப்படாத நிலையில் இந்திய உளவு சேவையுடன் இணைந்து இலங்கை இராணுவ புலனாய்வுப் பிரிவு விடுதலைப் புலிகள் அமைப்புக்கு எதிராக நிழல் யுத்தமொன்றை ஆரம்பித்தது. விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு ஆதரவாகக் கருத்து வெளியிட்டு வந்த பத்திரிகையாளர் சிவராம் மற்றும் பல விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் படுகொலை செய்யப்பட்டனர். இந்த நிழல் யுத்தம் விரிவடைந்ததையடுத்து போர் நிறுத்த உடன்பாடு சிக்கலுக்கு உள்ளானது. போர் நிறுத்த உடன்பாடு அமுல்படுத்தப்பட்ட வேளையிலே வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் படுகொலை செய்யப்


சிங்களமூலம் : 'ராவய'
தமிழில் : வி.ஜெயஸ்ரீ


பட்டதைத் தொடர்ந்து அரசு அவசரகால நிலையை அமுலுக்குக் கொண்டு வந்தது. இதன் காரணமாக தமிழ் மக்கள் நியாயமற்ற வகையில் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்படும் சம்பவங்கள் அதிகரிக்கத் தொடங்கின.

இன்று சகல நிலைமைகளும் தலைகீழாக மாறியுள்ளன. பாதுகாப்பின்மையைக் காரணம் காட்டி, அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தமது அரசியல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்த தமது உறுப்பினர்களை விடுதலைப் புலிகள் அமைப்பு தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குத் திருப்பி அழைத்துக் கொண்டுள்ளது. நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த போர் நிறுத்த உடன்பாட்டின்

(VIII பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "...படித்த சிங்கள மாணவர்களிடமும் இனவாத உணர்வு ஊறிப்போய் இருந்தது...!"



ஆரம்ப காலத்தில் தமிழர், சிங்களவர் என்ற இரு இனங்களுக்கிடையிலான முரண்பாடுகள், பிரச்சினைகள் என்பன மாணவர் சமுதாயத்திடமும் பிரதிபலிக்கத் தவறவில்லை.

சிங்களப் பேரினவாதிகள் இன ஒடுக்குமுறைகளின் பிரதான அங்கமாகத் தமிழ் மாணவர்களின் கல்வியில் 'தரப்படுத்தல்' என்ற பெயரில் கைவைத்தனர். அதற்குப் பிறகு தமிழ் மாணவர்களையும் அவர்களது கல்வி அறிவையும் ஒடுக்குவதற்கு பேரினவாதிகள் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

தமது முன்னோரின் செயற்பாடுகளைக் கண்ணுற்ற சிங்கள இளம் சமுதாயம் தானும் அந்த வழியில் - தமிழ் மாணவர்களை தமது அடிமைகளாக, அடக்கப்பட வேண்டியவர்களாகவே நோக்கியது. தமிழர்கள் என்பதற்காக தங்களுடன் ஒன்றாகப்படித்த சக மாணவர்களைக் கூடத் தாக்கும் அளவுக்கு சிங்கள மாணவர் சமுதாயத்திடம் இனவாத நச்சுவிதை தூவப் பட்டிருந்தது. இனப் பிணக்கு மேலும் வலுவடைந்தது. உரிமைக்கான போராட்டத்தில் தமிழ் மாண வர்களும் குதிப்பதற்கும் அதுவே ஏதுவாகியது எனலாம்.

இந்த நிலையில் 1980 களின் முற்பகுதியில் பேராதனைப் பல்கலைக்கழக மாணவியாக இருந்து பின்னர் போராளியாக இணைந்து கொண்ட ஜனனி அக்கால நிலைமைகள் குறித்தும் இயக்கத்தில் அவர்கள் இணைந்து கொள்ளத் தூண்டுதலாக இருந்த புறநிலைகள் பற்றியும் எம்மோடு பகிர்ந்து கொண்டார்.

தற்போது செஞ்சோலை சிறுவர் இல்லத்தில் பொறுப்பாளராக இருக்கும் மூத்த போராளி ஜனனியின் கருத்துகளை இங்கு தருகிறோம்.

### சிறுவயதிலிருந்தே கொடுமைகளை அறிந்தோம்

இனக் கலவரங்களைப் பற்றி சிறு வயதிலிருந்தே கேள்விப்பட்டேன். 1958இல் நடந்த இனக்கலவரம் 1967இல் நடந்த சத்தியாக்கிரகம் பற்றியெல்லாம் அறிந்து



கொண்டேன். 1971ஆம் ஆண்டில் கல்வித் தரப்படுத்தல்கொண்டு வரப்பட்டபோது நான் பாடசாலை மாணவியாக இருந்தேன். 1974இல் அனைத்துலக தமிழாராச்சி மாநாட்டுக்குச் சென்று வந்தேன். இறுதிநாள் இரவு எமது தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளையும் கொடூரங்களையும் நான் அறிவேன். நாங்கள் போய் படிக்கின்ற யாழ்.நூலகம் 1981ஆம் ஆண்டு எரிக்கப்பட்டது.

சிறுவயதிலிருந்தே காலத்துக்குக் காலம் தமிழ் மக்களுக்குச் சிங்களவர்களால் இழைக்கப்படுகின்ற கொடுமைகளையும் அநீதிகளையும் கண்டு, கேட்டு அறிந்துகொண்டுதான் வந்தோம்.

### பேராதனைப் பல்கலையில் தமிழ் மாணவருக்கு அடி உதை

1981இல் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் இணைந்து கல்வி கற்றுக்கொண்டிருந்த வேளையில் அங்கும் சிங்களவர்கள் தமிழர்களைப் புறக்கணித்தார்கள்.

1983இல் மாணவர்களுக்கிடையே தேர்தல்கள் நடக்கும். சிங்கள மாணவர்கள் இரு குழுக்களாகப் பிரிந்து அதிலே போட்டியிடுவார்கள். அவ்வாறு போட்டியிடுகின்ற இரண்டு குழுக்களுக்கும் தமிழ் மாணவர்களின் ஆதரவு இருக்கும். அந்தத் தேர்தலில் யார் வெற்றிபெற்றாலும் தமிழ் மாணவர்களுக்குத்தான் அடிவிழும். தோல்வியடைகின்ற அணியினர் தமிழ் மாணவர்கள் மீது தாக்குதல் நடத்துவார்கள். ஒரே வகுப்பில் படிக்கின்ற சக மாணவர்களையே தமிழர்கள் என்பதற்காக தாக்குதல் நடத்துகின்ற வக்கிரத்தன்மை சிங்கள மாணவர்களிடம் இருந்தது. சிங்கள மாணவர்களால் தாக்கப்பட்டு காயமடைந்த நிலையில் அங்கிருந்து யாழ்ப்பாணத்துக்குத் தமிழ் மாணவர்கள் திரும்பி வந்தனர்.

சில நாள்களுக்குப் பிறகு அங்கு பொலீஸ்காவல் போடப்பட்டு மீண்டும் எங்களை வருமாறு கூப்பிட்டார்கள். அதனை நம்பி மீண்டும் அங்கு போனோம். அப்போதும் 1983ஆம் ஆண்டு ஆனி மாதமளவில் மீண்டும் தமிழ் மாணவர்கள் சிங்கள மாணவர்களால் படுமோசமாகத் தாக்கப்பட்டார்கள். இதனையடுத்து, ஆனிமாதம் 12ஆம் திகதி பல்கலைக் கழகம் மூடப்பட்டது. தமிழ் மாணவர்கள் அனைவரும் திரும்பி வந்தோம். சிங்களத்தினால் அப்போது நாங்கள் அவமானப்படுத்தப்பட்ட ஒவ்வொரு தடவையும் எங்களுக்குள் கோப உணர்வு மேலிட்டது.

### 1983இல் இனக்கலவரம்

இந்த நிலையில் ஆடி 15ஆம் திகதி இனக்கலவரம் ஏற்பட்டது. அன்று மட்டுமல்ல அதற்கு முன்னரே சிங்களப் பேரினவாதிகள் தமது இனவாத முகத்தை ஆங்காங்கு காட்டிக்கொண்டுதான் இருந்தார்கள்.

கலவரத்தில் பாதிக்கப்பட்ட தமிழர்கள் கப்பல்களில் கொண்டுவந்து இறக்கப்பட்டார்கள். தென்னிலங்கையில் இருக்கின்ற சகல பல்கலைக்கழகங்களையும் சேர்ந்த தமிழ் மாணவர்கள் அனைவரும் தத்தமது ஊருக்குத் திரும்பிவிட்டனர்.

### இடம் பெயர்ந்த பல்கலை மாணவர்களின் ஒன்றியம்

அப்போது இடம்பெயர்ந்து வந்த சகல பல்கலைக்கழகங்களையும் சேர்ந்த தமிழ் மாணவர்கள் இணைந்து ஒன்றியத்தை உருவாக்கினோம். இனி நாங்கள் தெற்குக்குச் செல்ல முடியாது. எமக்கு அங்கு பாதுகாப்பு இல்லை என்பதால் எமது பீடங்களை யாழ்.பல்கலைக் கழகத்துடன் இணைத்து நடத்துமாறு கோரி அடையாள உண்ணாவிரதம் நடத்தினோம். எமது கோரிக்கை மகஜரை அரசுக்கு அனுப்பினோம். ஆனால், பதில் வரவில்லை.

### உணர்வை எமக்குள் ஊட்டிய காசி அண்ணாவின் பாடல்கள்

அப்போது பல இயக்கங்கள் செயற்பட்டுக் கொண்டிருந்தன. மக்கள் எழுச்சியடையத் தொடங்கியிருந்தனர். அந்த நிலையில் சிங்களவரின் கொடுமைகளை அறிந்து-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூத்த பெண்புலிகளின் அனுபவப் பகிர்வுகள் 07

அனுபவித்து இருந்ததால் எங்களிடமும் போராட்டம் சம்பந்தமான ஒரு சிந்தனை இருந்தது. அடையாள உண்ணாவிரதத்தின் போது கவிஞர் காசி ஆனந்தன் அண்ணாவின் பாடல்கள் எங்களுக்குள் உணர்வு ஊட்டின; அவரது பாடல்களைக் கேட்ட போது இன உணர்வு வேகம் பெற்றது. சாகும்வரை உண்ணாவிரம் இருப்பதற்கு முடிவு செய்யப்பட்டது. வீட்டில் வழக்கம்போல அடையாள உண்ணாவிரதம் என்று கூறிவிட்டுப் புறப்பட்டேன்.

பல்கலைக்கழகத்தில் ஆண்கள் சிலர் உண்ணாவிரதம் இருந்தார்கள். பெண்கள் எவரும் இருக்கவில்லை. பிறகு எனக்கு அடுத்த பிரிவு மாணவியாக இருந்த மதிவதனி அங்குவந்து எங்களோடு உண்ணாவிரத்தில் பங்கேற்றார். ஆண்கள் ஐந்து பேரும் பெண்கள் இருவருமாகப் போராட்டம் ஆரம்பித்தோம். இரண்டாம் நாள் மேலும் இரு பெண்கள் வந்து எம்முடன் இணைந்து கொண்டார்கள். தண்ணீர் மட்டும் அருந்திக்கொண்டு சாப்பிடாமல் இருந்தோம்.

சந்திரமதனா

அப்போது யாழ்ப்பாணம் எங்கும் பரவலாகப் போராட்டங்கள் இடம்பெற்றுக்கொண்டிருந்தன.

### உண்ணாவிரதத்தைக் கலைக்க இராணுவத்தினர் முயற்சி!

ஒன்பதாவது நாள் எங்களுடைய உடல் நிலை மிகவும் பாதிப்படைந்திருந்தது. அன்று இராணுவத்தினரின் வற்புறுத்தலினால் பல்கலைக்கழகம் மூடப்பட்டது. இதனால், இராணுவம் பல்கலைக்கழகத்துக்குள் நுழையக் கூடிய சாத்தியம் இருந்தது. இதனால், அன்று பல்கலைக் கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் வந்து எமக்கு நிலைமையை விளக்கினார்கள். இராணுவத்தின் திட்டத்திலிருந்து எங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காக வீட்டுக்குச் செல்லுமாறும், இல்லாவிட்டால் இந்தியாவிற்கு அழைத்துச்சென்று எமது கல்வியைத் தொடர்வதற்கு ஏற்பாடுசெய்து தருவதாகவும் எம்மிடம் கூறினார்கள். இராணுவத்தின் கையில் சிக்காமல் இருப்பதற்கு இந்தியா செல்வதே சிறந்தது என்று முடிவெடுத்தோம்.

### ஆயுதம் ஏந்த விரும்பினோம்

விடுதலைப் புலிகளின் பொறுப்பில் இந்தியாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டோம். அங்கு போகும்வரையில் அவர்கள் எம்மோடு சகோதர உணர்வுடன் பழகியவிதம் எங்களுக்கு நம்பிக்கையையும் மரியாதையையும் ஏற்படுத்தியது. பாதுகாப்பாக எம்மை இந்தியாவுக்கு கொண்டு சென்று சேர்த்தார்கள். நாங்களும் போராளிகளாக மாறப்போகிறோம் என்று எமது விருப்பத்தைக் கூறினோம். சில நாள்களில் அண்ணை எங்களைச் சந்தித்தார். உங்களை அதற்காக இங்கு அழைத்து வரவில்லை. முதலில் உங்களது பெற்றோரைக் கூப்பிட்டு உங்களைப் பாதுகாப்பாக ஒப்படைக்கிறேன். அதற்குப் பிறகு நீங்கள் விரும்பினால் இயக்கத்துக்கு வரலாம் என்றார்.

இங்கிருந்து எங்கள் ஒவ்வொருவரது உறவினர்களையும் அழைத்து வந்து எம்மை ஒப்படைத்தார்கள். நான் இயக்கத்தில் சேர்வதற்கு எனது பெற்றோரும் சம்மதித்தனர். அதற்குப் பிறகு அண்ணாவிடம் எமது முடிவைக் கூறி இயக்கத்தில் இணைந்து கொண்டோம்.

## உறங்காத கண்மணிகள்...!

துஷா எப்போதும் சுறுசுறுப்பாகவே இயங்கிக் கொண்டிருக்கின்ற ஓர் இளநிலைத் தளபதி. சண்டை என்றால் துஷா ஓய்வெடுப்பதே இல்லை. தனது கடமையில் எப்போதும் கண்ணும் கருத்துமாக - இறுக்கமாக - இருக்கின்ற துஷாவிடம் கூடவே குறும்புத்தனமும் குடி கொண்டிருந்தது.

1997ஆம் ஆண்டு 'ஜெயசிக்குறு' இராணுவ நடவடிக்கை நெடுங்கேணியில் இருந்து ஆரம்பமாகிறது. நெடுங்கேணியில் மே மாதம் தொடங்கிய சண்டை ஜூன், ஜூலை மாதமளவில் புளியங்குளத்தை மையப்படுத்தி நகர்ந்தது.

அங்கு ஏ-9 வீதியை முதன்மைப்படுத்தித் தொடர் காவலரண்களையும் முகாம் ஒன்றையும் அமைத்து இராணுவ அணிகளை வழி மறித்து நின்றது மாலதி படையணி. படையணியின் சகல போராளிகளும் சமரில் பங்கேற்கவேண் டிய நிலை. விடுமுறையில் வீடு செல்வதைப் பற்றியோ, ஓய்வெடுப் பது குறித்தோ போராளிகள் எவரும் நினைத்துக் பார்க்க முடியாத இக் கட்டு அப்போது போராளிகளுக்கு இருந்தது.

இரவு பகலாக களமுனையில் நிற்பவர்களுக்கு நித்திரை கூட எட்டாக்கனிதான். துஷா எப்போதுமே இரவில் முன் னணி நிலைகளுக்கிடையில் நடந்து சென்று கண்காணிப்பில் ஈடுபட்டிருப்பாள். காவலரண்களில் இருக்கின்ற போராளிகள் உறங்கிவிடாமல் இருப்பதற்காக அவர்களுடன் கதைத்து அவர்களை உஷார்ப்படுத்திக் கொண்டிருப்பாள்.

அன்று மாலதி படையணியின் பிரதான தளபதி கேணல் விதுஷா களமுனையில் இளநிலைத் தளபதிகளோடு சண்டை நிலைவரம் குறித்துக் கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தார்.

கலந்துரையாடலின் முடிவுக் கட்டத்தில் திடீரென எழுந்த துஷா "... அக்கா எனக்கு ஒரு நாள் லீவு வேணும்..." தருவீங் களா...?" அங்கிருந்தவர்கள் துஷாவை ஆச்சரியத்துடன் பார்க்கி றார்கள்.. "... நான் லீவு எடுத்துக் கொண்டு வீட்டை போகப் போறன் எண்டு நினைக்காதேங்கோ....!

"அப்ப என்னத்துக்கு லீவு....?" "... ஒரு நாளைக்குப் பின்னேரம் ஆறுமணிக்கு நித்திரை கொண்டு அடுத்த நாள் காலை 6மணிக்கு எழும்பவேணும்..." ஒரு 12 மணித்தியாலம் நித்திரை கொள்ள ஆசையாக இருக்கு..." ... துஷாவின நகைச்சுவை எல்லோருக்கும் புரிந்துவிட அங்கு சிரிப்பொலி எழுகிறது... துஷாவும் சேர்ந்து சிரிக்கிறாள்... அந்த இடத்தில் நன்கச்சுவையாகத் தான் துஷா அதனைக் கேட்டாள். ஆனால், துஷாவின் நகைச்சுவையில் உள்ள அர்த்தம் உங்கள் மனதை நெருடுகிறதல்லவா...?

ஆம்... ஒரு நாள் இரவு விழித்திருப்பது எவ்வளவு கடினம் என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால், களமுனையில் எமது போராளிகள் தாங்கள் உயிரிலும் மேலாக நேசிக்கின்ற மக்கள் நிம்மதியாகத் தூங்க வேண்டும் என்பதற்காகத் தொடர்ச்சியாக எத்தனை நாள்கள் சிறிது நேர உறக்கமும் இன்றி விழித்திருக்கிறார்கள் என்று அறியும் போது உங்களுக்கு எப்படியிருக்கிறது....?

உறங்குவதற்கு ஒரு நாள் லீவு கேட்ட துஷா தொடர்ந்தும் சில நாள்கள் உறங்காமல் விழித்திருந்து பணி முடித்துவிட்டு, அந்தச் சண்டையிலேயே வீரகாவியமாகி மேஜர் துஷா என்ற நிலையோடு நிரந்தரமாகவே உறங்கிக் கொண்டிருக்கிறாள்...

துஷாவைப் போலவே ஓய்வு, உறக்கம் ஏதுமின்றி மண்காத்து கல்லறைகளில் ஆயிரக்கணக்கில் உறங்குகின்றன கண்மணிகள்...

## பிரளயத்தை நோக்கிய கலியுகத்தின் கடுகதி வேகம்!

2 அடக்குமுறையாளர்களும், ஏதேச்சதிகாரிகளும், ஏதிலிகளையும், சிறுபான்மையினரையும் அடக்கி ஒடுக்கிக் கொண்டே இருக்கிறார்கள். இதனால், அந்தந்த இனங்கள் "தாழ்வுற்று வறுமைமிஞ்சி, விடுதலை தவறிக் கெட்டுப் பாழ்ப்பட்டுக் கிடக்கின்றன". ஆங்காங்கே பயங்கரவாதமும் தீவிரவாதமும் மேலோங்கிப் பலியெடுப்புகளும் பகிரங்கத் தாக்குதல்களும் நடக்கின்றன. அப்பாவி மக்கள் கொல்லப்படுகின்றார்கள். தற்கொலைத் தாக்குதல்களும், கண்ணி வெடிகளும், ஏவுகணைத் தாக்குதல்களும், குண்டு வீச்சுகளும், பல்லாயிரக்கணக்கானோரைப் பலிகொள்கின்றன. மக்களைப் பாதுகாக்க வேண்டிய படையினரும், பாதுகாப்புத்துறையினரும் பாலியல் வன்முறைகள் மூலமும் அரச பயங்கரவாதம் மூலமும் மனித உரிமை மீறல்களைப் புரிகின்றனர். உலகப் பொதுமன்றம் போன்ற ஐக்கிய நாடுகள் சபையினாலேயே அவற்றைக் கட்டுப்படுத்த முடியாதுள்ளது. தத்தமக்கு ஏற்பில்லாத தீர்மானங்களை ஐ.நா.சபை எடுக்கும்போது வல்லரசுகள் தங்கள் தடை அதிகாரத்தைப் பயன்படுத்தி நிறுத்தி விடுகின்றன. கூட்டுச் சேரும் கொள்கைகளால் உலக அரசியலில் அணிகளாகச் சில நாடுகள் சேர்ந்து 'தட்டிக் கேட்க ஆளில்லாமல் சண்டப்பிரசண்டம்' செய்கின்றன. இதனால், நல்லதை நிலைநாட்ட முடிவதில்லை. இன்னொரு பக்கம் இன, மத, மொழி சார்பான அடக்குமுறைகள் உலகில் தாண்டவமாடுகின்றன. செல்வந்த நாடுகள், வறிய நாடுகள், வளர்முக நாடுகள் என்ற ரீதியில் - செல்வந்த நாடுகள் ஏனைய நாடுகளின் வளங்களைச் சுரண்டி அவற்றை அடிமைப்படுத்துகின்றன. இவை குழம்பிய குட்டையில் மீன் பிடிக்கின்றன.

மக்களை நல்வழிப்படுத்த என்று தோன்றிய சமயங்களும், சமயவாதிகளும், காமக் களியாட்டங்களிலும் ஏமாற்ற வேலைகளிலும் ஈடுபட்டுத் தங்கள் ஆசாபாசங்களைப் பூர்த்தி செய்கின்றார்கள். அரசியலிலும், ஆட்சி அதிகாரங்களிலும் ஆசை கொண்டு, அவற்றை அல்லோல கல்லோலப்படுத்தி விடுகிறார்கள். கோயில்களும் மசூதிகளும், தேவாலயங்கள் பன்சலைகளும் போர்ப் பாசறைகளாக மாறி விடுகின்றன. மத பீடாதிபதிகள் அரசியற் தலைமைகளையும் ஆட்சி அதிகாரத்தையும் மாற்றக்கூடிய வலுப்பெற்று விடுகிறார்கள். இவற்றைவிட பணம் படைத்தவர்களும் குழுவலிமை பெற்ற சண்டித்தனமுடையவர்களும் கூட அரசியலை ஆட்டிப் படைக்கிறார்கள். ஆரம்பத்திலிருந்து இக்கட்டுரையில் சொல்லப்பட்டவை பற்பல வடிவங்களில் இருந்து வந்தாலும் இந்த நூற்றாண்டில் உத்வேகம் பெறத்தொடங்கியுள்ளன. இதனால், இயற்கை சீற்ற மடையத் தொடங்கியுள்ளது. ஐம்பூதங்களின் இயக்கத்தில் மாற்றங்கள் தென்படத் தொடங்கியுள்ளன. யுகங்கள் தோறும் இப்படி மாற்றங்கள் ஏற்பட்டுப் பிரளயம் உண்டாவதாகக் கணிப்புகள் கூறுகின்றன. இவற்றைப் புறக்கணிக்கவும் முடியாது. உலகில் அற நெறிகுன்றித் தீநெறி ஓங்கிப் பரவும் காலங்களில் இப்படியான பேரழிவுகள் தோற்றம் பெற்றன என இலக்கியங்களும், புராண இதிகாசங்களும் சான்று பகருகின்றன. இக்காலங்களில் வால் நட்சத்திரங்கள் தோன்றி முன்னெச்சரிக்கையும் செய்துள்ளதாக அறியக் கிடக்கின்றது.

'பஃறுளி ஆறும் பன்மலை ஒடுக்கத்துக் குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள' என்று வருகின்ற சிலப்பதிகாரச் செய்யுளடியும் இதனைச் சுட்டுகின்றது. அந்தக் கொடுங்கடலின் கொதிப்பின்போது எங்கள் தமிழ் நிலம் அழிந்து போன வரலாறு மனங் கொள்ளத்தக்கது. தற்போது நடந்து வரும் நில அதிர்வுகள், துறைமுகஅலை அதாவது சுனாமி, எரிமலைக் குமுறல்கள், பூகம்பம், சுழல் மாசுபடல், வெப்ப அதிகரிப்பு வெள்ளப்பெருக்கு, சனத்தொகைப் பெருக்கம், பயங்கரநோய்கள் என்பன ஓர் பிரளயத்தை ஞாபகமூட்டுகின்றன என்று கூறலாம். முன்னைய காலங்களை விட இவை அதிகரித்து வருவதும் கண்கூடாக உள்ளது. பூமிப் பந்தைப் பொறுத்தவரையில் அதன் அகத்தே உள்ள வெப்பக் குழம்பு இன்னும் தணிந்ததாகஇல்லை. இதனால், கொதிப்பு அதிகரிக்கும் போது எரிமலைக் குமுறல்கள் ஏற்படுகின்றன. பூமிச் சுழற்சியின் வேகத்தால் பூமித்தகடுகள் நகருகின்றன. இதனால், நில நடுக்கம் ஏற்படுகிறது, பூமிக்கடியிலும் கடலின் அடியிலும் செய்யப்படும் அணுகுண்டுப் பரிசோதனைகளால் இந்த நடுக்கம் அதிகரிக்கின்றது. எத்தனை காலந்தான் இந்தப் பூமி அகழ்வாரைத் தாங்கப் போகின்றது. மண்ணைத் தோண்டித் தோண்டி கனிமங்களையும் எண்ணை வளங்களையும் எடுப்பதால் பூமியே குண்டும் குழியுமாய் ஏற்பட்டு விட்டதோர் பிரமை தோன்றுகின்றது. பூமியின் நன்னீர் வளம் அற்றுப்போய் வறட்சி கண்டுள்ளது.

(வளரும்)

– நாக.சண்முகநாதபிள்ளை

# அடர்ந்த காட்டுப்புறம் ஒன்றில் தனித்து வாழும் அதிசய மூதாட்டி

டென்மார்க்கின் றிபே (Ribe) மாநிலத்தில் உள்ள கிராமம் சார்ந்த காட்டுப் பிரதேசம்தான் 'போய்ரப்'. இங்கு எங்குபார்த்தாலும் பசுமையான, உயரமான மரங்கள் செழித்துக் காணப்படுகின்றன. கோடை காலமாகையால் அழகு இரட்டிப்பாகவே இருந்தது.

காடுகளின் மத்தியிலேயே பெரும் பரப்பளவில் வயல்களும் ஆங்காங்கே காணப்படுகின்றமை 'போய்ரப்' கிராமத்தின் எழிலுக்கு மேலும் மெருகூட்டியது.



தனது வளர்ப்பு மிருகங்களுடன் மூதாட்டி


எந்தளவிற்கு வெய்யில் அடித்தாலும் குளிர்மைக்குப் பஞ்சமில்லை.

இக்கிராமத்தில் வீடுகள் நிறைந்திருக்கும் பகுதியில் இருந்து சுமார் 25 கிலோமீற்றர் தூரத்தில் பரந்த காடுகளின் மத்தியில் ஓர் அழகிய தார் வீதி செல்கின்றது. அதன்வழியே நாம் காரில் சென்றுகொண்டிருந்தோம். திடீரென தார் வீதிகளில் இருந்து காட்டின் உள்ளே சிறிய பாதை ஒன்று சென்றது. அதனூடாக எமது காரைச் செலுத்தினோம். கரடுமுரடான அந்தப் பாதை வழியே சென்ற நாம் நேரத்தைச் சரி பார்த்தோம். நேரம் இரவு 8 மணியைக் காட்டியது. 8மணி என்றவுடன் எமது நாட்டை நினைத்து, இருளாக இருக்கும் என எண்ணி விடாதீர்கள். சற்று மழைமப்பாக இருந்ததே தவிர சூரியன் அடிவானை நோக்கி நின்றது. அதனை முகில் மூட்டம் மறைத்திருந்தது அவ்வளவுதான்.

சற்றுத்தூரம் உள்ளே போனதுதான் ஆச்சரியம் காட்டின் மத்தியில் பாரிய வீடு ஒன்று தெரிந்தது. 'திகில்' படங்களில் வரும் மர்ம பங்களாவை அது எனக்கு நினைவூட்டியது. இயல்பாகவே குளிராக இருந்தது. அதை விட பயப்பீதி நடுக்கத்தை வரவழைத்தது. அதனை தடுக்கவும் முடியவில்லை.

அந்த வீட்டின் முன் கார் நின்றதுதான் தாமதம், பெரிய ஒரு மிருகம் எமது காரை நோக்கிப் பாய்ந்து வந்தது. அதன் பின்னால் வயது முதிர்ந்த மூதாட்டி ஒருவர் கையில் தடியுடன் வந்தார். அதனைக் கண்ட போது இரத்தமே உறைந்து விடும்போல் இருந்தது.

அந்த மூதாட்டி எமது காரை நெருங்கி வந்து எம்மை விசாரித்தார். எம்முடன் வந்த ஒருவர் அவருடன் சரளமாக டெனிஸ் மொழியில் உரையாடினார். அவர் எம்மை அந்த மூதாட்டிக்கு அறிமுகம் செய்து வைத்தார். மூதாட்டியும் எம்மை இறங்கி வருமாறு அழைத்தார்.



நாயைக் கட்டுப்படுத்தும் மூதாட்டி

பாய்ந்து வந்த மிருகத்தைப் பற்றிக் கூற மறந்து விட்டேன். அதுதான் அந்த மூதாட்டி வைத்திருக்கும் நாய். நாயென்று சொன்னால்தான் அதனை அறிந்து கொள்ள முடிகின்றது. அதனை வெள்ளைச் சிங்கம் என்றே குறிப்பிடலாம். படத்தில் உள்ளது பாருங்கள். நாயைக் கையில் பிடித்து ஏதோ கூறினார் அந்த மூதாட்டி, அது அமைதியாக நின்றது. நாம் சற்றுத் தயக்கத்துடன் காரை விட்டு இறங்கினோம். எம்மை வரவேற்ற மூதாட்டி தனது நாயை எமக்கு அறிமுகப் படுத்தினார். பின்னர் திடீரென டெனிஸ் மொழியில் உரத்த சத்தமாகக் காட்டை நோக்கிக் கத்தினார். திடீரென தூரத்தில் 'டக்... டக்... டக்...' என்ற ஒலி கேட்டது. நாம் ஒலி வந்த திசையை நோக்கினோம். அங்கே இரண்டு குதிரைகள் எம்மை நோக்கிப் பாய்ந்து வந்தன. அவை மூதாட்டியின் அருகே வந்து நின்றன. அவற்றின் அருகே சென்ற மூதாட்டி டெனிஸ் மொழியில் ஏதோ கூறினார். அவையும் எம்மைப் பார்த்து தலையசைத்தன. பின்னர் மூதாட்டி ஏதோ கூறியதும் குதிரைகள் விரைந்து சென்று விட்டன.

பின்னர் மூதாட்டி தனது இரண்டு பூனைக் குட்டிகளை எமக்குக் காட்டினார். அவை பன்றிக் குட்டிகள் போன்று காணப்பட்டன. இந்த ஐந்து மிருகங்களுடனும் அந்த பங்களாவில் தனியாக இந்த மூதாட்டி வாழ்ந்து வருகின்றார்.

280 சதுர கிலோமீற்றர் பரப்பளவையுடைய பகுதியில் - காடுசார்ந்த சூழலில் - இந்த மூதாட்டி வாழ்ந்து வருகின்றார். இங்கு மிருகங்கள் வளர்வதற்குரிய காடு, மிருகங்கள் உணவாக உட்கொள்ளும் பயிர்கள் போன்றவை வீட்டினைச் சூழக் காணப்படுகின்றன.

மிருகங்கள் வெளியே போகாமலும் திருடர்கள் மற்றும் வேறு கொடிய மிருகங்கள் உள்ளே வராமலும் வீட்டினைச் சூழ பெரிய பரப்பளவிற்கு கம்பிகள் கட்டப்பட்டு அவற்றில் மின்சாரம் பாய்ச்சப்பட்டுள்ளது. இவற்றை எல்லாம் எமக்குக் காட்டிய மூதாட்டி, எம்மை வீட்டினுள் வரும்படி அழைத்துச் சென்றார். நாம் அவரின் அழைப்பை ஏற்று உள்ளே விரைந்தோம். என்ன ஆச்சரியம். இந்த பிரமாண்டமான காட்டின் மத்தியில் இப்படி ஒரு பங்களாவா என மூக்கில் விரலை வைக்கச் செய்தது.

வீட்டின் உள்ளே நவீன.வசதிகள் அனைத்தும் காணப்பட்டன. மூதாட்டி தனது வீட்டின் அனைத்துப் பகுதிகளையும் எமக்கு விளக்கமாகக் காட்டினார். நாம் செல்லும் இடமெல்லாம் மூதாட்டியின் நாயும் கூடவே வந்தது. சில பொருள்களை கையில் எடுத்துப் பார்க்கவே அச்சமாக இருந்தது. காரணம் எந்த நேரமும் நாய் எம்மீது பாயுமோ என்று உள் மனது உறுத்திக்கொண்டிருந்தது.

மூதாட்டியின் வீட்டில் தொலைத் தொடர்பு வசதிகளும் இருந்தன. வெளியில் இருந்தபோது காணப்பட்ட குளிர்



தனது வீட்டினுள்ளே மூதாட்டி

வீட்டின் உள்ளே தெரியவில்லை. காரணம் வீட்டின் உள்ளே தன்னியக்க வெப்பமாக்கிகள் இயங்கிக் கொண்டிருந்தன.

வீட்டின் உள்ளே ஒரு குறிப்பிட்ட இடத்தில் எம்மை அமரும்படி கூறி விட்டு மூதாட்டி சென்றுவிட்டார். நாம் மூதாட்டி குறிப்பிட்ட இடத்தில் அமர்ந்த படியே சுற்றும் முற்றும் நோக்கினோம். எங்கும் நேர்த்தியாக அனைத்துப் பொருள்களும் அடுக்கப்பட்டிருந்தன. அது ஒரு தொல்பொருள் காட்சியகம் போல் எமக்கு விளங்கியது.

திடீரென சுவரின் ஒரு பக்கத்தில் சில ஆயுதங்கள் அடுக்கப்பட்டிருந்ததை அவதானித்த நாம் ஆச்சரியமடைந்து மூதாட்டியை அணுகி அது தொடர்பாகக் கேட்க வேண்டும் என எமக்குள்ளே பேசிக் கொண்டோம். தொலைக்காட்சிப் பெட்டிகள் மூன்று, கணனிகள் நான்கு அதுவும் தற்போது வந்த புதிய 'மொடல்கள்' என நவீன மின்சாதனங்கள் அனைத்துமே மூதாட்டியின் இல்லத்தை அலங்கரித்திருந்தன.

இவ்வளவு பெறுமதிவாய்ந்த பொருள்களுடன் காட்டின் நடுவே - கூக்குரல் இட்டாலும் எவரும் ஓடிவரமுடியாத இடத்தில் - ஒரு பெண்ணினால் எப்படித்தான் தனித்து வாழ முடிகின்றது என்பதை எண்ணியபோது எமக்கு நாம் காண்பது கனவா நனவா என எண்ணவைத்தது.

சுவரில் மாட்டப்பட்டிருந்த படங்களை நோக்கினோம். அது மூதாட்டியின் இளமைக்கால படங்கள் என எம்மால் உணரமுடிந்தது. சில படங்களில் மூதாட்டி கணவருடனும், பிள்ளைகளுடனும் நின்றிருந்தார். இதனை உற்று நோக்கிய படி நாம் நின்றவேளை மூதாட்டி கையில் தேநீருடனும் நாம் உண்பதற்கு கேக், மற்றும் பிஸ்கட்

டென்மார்க்கிலிருந்து
**பகீர்**

போன்றவற்றுடனும் அங்கு வந்தார். போட்டோவில் இருப்பது தானும் தனது கணவர் பிள்ளைகளும் என எமக்கு சுட்டிக் காட்டிய அவர், எம்மருகே அமர்ந்து தேநீரை பருகும்படி கூறினார். தேநீரைப் பருகியபடி பிஸ்கட்டையும் கையில் எடுத்துக் கொண்டு மூதாட்டியிடம் பேச்சுக் கொடுத்தோம்.

சிறுபுன்முறுவலுடன் அவர் தனது கதையைக் கூறத் தொடங்கினார். நாமும் பாட்டியிடம் கதைகேட்கத் துடிக்கும் சிறார்போல மூதாட்டியின் கதையைக் கேட்க ஆவல்கொண்டோம். சரி, மூதாட்டியின் அனுபவங்களையும் எம்முடன் பகிர்ந்து கொண்ட விடயங்களையும் அறிய அடுத்த தொடர் வரை காத்திருங்கள்.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாவ, இராக தாள ஸாகித்திய அர்த்த புஷ்டியோடமைந்த பரத நிருத்தியார்ப்பணம்...



விழாவில் கலந்து கொண்ட அடையாறு கே.லஷ்மணன்



திருமதி சாந்தினி சிவநேசன்



தேவந்தி சிவநேசன்

நீண்ட நாள்களுக்குப் பின்னர் காத்திரமான அர்ப்பணத்தினை ஏகமனதாக அங்கீகரித்த அரங்கேற்ற நிகழ்ச்சி 03.07.2005 ஞாயிறன்று யாழ்ப்பாணம் வீரசிங்க மண்டபத்தில் அற்புதமாக நடைபெற்றது. பரதருடைய நாட்டிய சாஸ்த்திரம், இளங்கோ அடிகளாரின் சிலப்பதிகாரம் ஆகிய நூல்களில் கூறப்பட்ட நடன சம்பிரதாயங்களுக்கு மதிப்பளித்த ஒரு வரலாற்று ஆவணமாக இந்த அரங்கேற்றத்தினை யாழ். மண் பேணிப்பாது காக்கும் என்பது நிச்சயமானதாகும்.

கொக்குவில் கலாபவனத்தின் சிருஷ்ரியாக அமைந்த காரணத்தினால் போலும், வீரசிங்க மண்டபம் திருமதி சாந்தினி சிவநேசன் அவர்களது குருத்துவத்தால் நிரம்பி வழிந்தது.

கணீரென ஒலித்த தம்புராவின் சுருதியும், இசைக்கலைமணி திரு.தவநாதன் றொபேட் அவர்களது இரம்பியமான நாதப் பிரவாஹமும், லயஞான முதல்வராக மிளிரும் சி. மகேந்திரன் அவர்களது மிருதங்க ஜதிவார்ப்புக்களினால் சுவீகா ரம் செய்யப்பட்ட லயப் பிரமாணமும், இலங்கையின் கலைப் பாரம்பரியத்தில் ஒரு வரலாற்று நாயகியாகத் தன்னை அர்ப்பணித்த திருமதி சாந்தினி சிவநேசனின் குருத்துவ பலிதமும், தேவந்தியின் நடன அரங்கேற்றத்திற்கு நீடித்த ஆயுளைத் தந்தது எனலாம்.

ஆவலோடு காத்திருந்த கலாரசிகர்களுக்கு மனோலய விருந்தாக - தேவந்தியின் அரங்க வணக்கம், தெய்வனுகூலம் பெற்றுப் பேரின்பம் தந்ததெனலாம்.

அரங்க தேவதையாம் கலைவாணியையும், ஆடவல்லானாகிய நடராஜா பெருமானையும் வேண்டுதல் செய்து அரங்க ஆசியையும் ஆர்வலர்களின் கரகோஷ பலத்தையும் இது பெற்றது. தூய நிருத்த உருப்படியாகிய அலாரிப்பு, துளிர் விட்டு அலர்ந்து மண்டபத்தைக் களைக்கட்டச் செய்த வல்லமையை இறைவன் தேவந்திக்குத்தான் கொடுத்தானோ எண்ணுமளவிற்கு அது அமைந்ததாக எண்ணி விடமுடிகிறது.

தொடர்ந்து நிருத்த வகையைச் சேர்ந்த, ஜதிக் கோர்வைகளினால் விந்நியாசம் செய்யப்படுவதான ஜதிஸ்வரம் - கீத அநுஸரி நிருத்தமாகப் பரிணமித்து, வில்லிபுத்தூர் நச்சியார் கௌத்துவத்திற்கு நியம வழிசமைத்தது எனலாம்.

நிருத்த உருப்படிகள் இனிதே நிறைவேற பரத நிருத்தியார்ப்பணத்தில் பாவம், அபிநயம் என்பவற்றிற்கு அடி எடுத்துக் கொடுத்த கௌத்துவம் அடுத்து வந்த நாட்டிய உருப்படிகளுக்குக் கட்டியம் கூறிய தெனலாம். நர்த்தகியின் திறமையை அளவிடவழி காட்டுவதும், பரத நாட்டியக் கச்சேரியின் முக்கியமான உருப்படியுமான பதவர்ணம் காத்திரமான நடன வார்ப்பினைத் தந்ததெனலாம். ஷண்முகப்பிரியா இராகத்திலமைந்த, ஜதி நிருத்திய உருப்படியான பதவர்ணம் நாட்டியத்தின் இதயம் போன்றதாகும். இந்த உருப்படிதான், பரத நாட்டிய அரங்கேற்றத்திற்கு ஒரு சரியான தீர்ப்பை வழங்குவதாக அமையும்.

எங்கு கைகள் செல்கின்றதோ அங்கு கண்கள் செல்ல வேண்டும். கண்கள் செல்லுமிடமெல்லாம் மனம் செல்ல வேண்டும். மனம் செல்லுமிடமெல்லாம் பாவம் உண்டாக வேண்டும். பாவம் உண்டாகுமிடத்தில் ரஸம் உண்டாக வேண்டும். நிருத்தியத் தோடு ஆங்கிக, வாசிக, ஆஹார்ய, சாத்வீக அபிநயங்கள் பிரகாசிக்கும் வண்ணம், பாவ இராக, தாள விஸ்வாச- நர்த்தகியாக முத்திரை விநியோக வித்தகியாக தேவந்தி சபையோரால் அங்கீகரிக்கப்பட்டு விட்ட செய்தி மண்டபத்தில் ஒலித்து ஓய்ந்த பின்னர், முறையே சமகாலப் பாடல், இலக்கியப் பாடல், கீர்த்தனம், தில்லானா மங்களம் எனக் கச்சிதமான சம்பிரதாய உருப்படிகளால் இரசிகப் பெருமக்கள் பசியாறினார்கள்.

குறிப்பாக பதவர்ணம் கீர்த்தனையாக அமைந்த தேரேறி வருகிறாள் பூஷணி எனும் உருப்படி, தில்லானா ஆகிய மூன்றிலும் சாஸ்திரிய நடன சம்பிரதாய, பாரம்பரிய பாவனாம்சங்களை தேவந்தி சிவனேசன் அவர்கள், மிகவும் அர்த்த புஷ்டியோடு, லயப்பிரதானம் பிசகாமல், தீர் மானங்கள் மகுட அடவுகள், முத்திரைகள், விநி யோகம் பாத்திர இலட்சணம்,லாஸ்யம், அபி நயம், ஆடை ஆபரணங்கள், குரு பக்தி, இறை பக்தி, அரங்கத் தேவைகள்

**கே.எஸ்.சிவஞானராஜா**
*இசை ஆசிரியர்.*
*யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி,*
*சுன்னாம்.*

யாவும் குன்றாமல் நிறைவாகவும் நியம சுத்தமாகவும் பரதநிருத்தியார்ப்பணம் செய்தமை குருவாக அமைந்த தாயார் திருமதி சாந்தினிக்குக் கிடைத்த பேறாகும். தேவந்தியின் பரத நாட்டிய அரங்கேற்றம்

(VIIபக்கம் பார்க்க)

# பாம்பின் கால்— மனிதன் அறிவானா?



சிறுவயது முதலே இலங்கையிலுள்ள எல்லா மாவட்டங்களிலும் விஷப் பாம்புகளுடன் சாகசங்கள் பல புரிந்து வரவேற்புப் பெற்றவர் நஸீர் பரிசாந்தன்.

தனது பிறந்த இடமாகிய யாழ்ப்பாணத்திலும் சாகாசங்களை புரிவதற்காக அண்மையில் வருகை தந்த போது அவரைச் சந்தித்துப் பேசும் வாய்ப்புக் கிடைத்தது. அவரோடு பகிர்ந்து கொண்ட அனுபவப் பகிர்வு இது.

• முதலில் உங்களைப் பற்றி கொஞ்சம் கூறுங்களேன்.

❋ யாழ்ப்பாணத்தில் பிறந்து பின்னர் இடம் பெயர்ந்து வவுனியாவில் வாழ்ந்து வரு கிறேன்.

• நீங்கள் உங்கள் எத்தனையாவது வயதில் பாம்புகளுடன் சாகாசம் புரிவதற்குரிய ஆரம்ப நடவடிக்கையில் இறங்கினீர்கள்?

❋ எனது தந்தையாரும் பாம்புடன் சாகாசங்கள் பல புரிந்தவர் . நான் பிறப்பதற்கு முன்பிருந்தே பாம்புடன் சாகாசங்கள் புரிந்து வந்தார். அவரைப் பார்த்து நானும் சிறுவயதிலேயே செய்யவேண்டும் என்று எண்ணியதுண்டு. அதனால் தந்தையாரோடு சேர்ந்து பத்தாவது வயதில் சாகசம் புரிவதற்குரிய ஆரம்ப நடவடிக்கையில் ஈடுபட்டேன்.

• ஆரம்ப நடவடிக்கையென நீங்கள் எதனைக் கூறுகிறீர்கள்?

❋ ஆரம்ப நடவடிக்கை என்பது முதலில் பாம்பு தொடர்பான கூச்சங்கள், பயங்கள் என் பவற்றில் இருந்து விடுபடுதல். அதாவது எனது உடலில் ஒருசில பாம்புகளை விட்டு பயத்தையும் கூச்சத்தையும் எனது தந்தை யார் அகற்றினார். பின்னர்தான் நான் சாகாசம் புரிவதற்குத் தயாரானேன்.

• நீங்கள் எவ்வளவு காலம் பயிற்சி எடுத்துள்ளீர்கள்?

❋ நான் சுமார் இரண்டு வருடங்களின் நிறைவில் எனது பயிற்சியை முடித்தேன்.

• நீங்கள் சாகசங்களை புரிவதற்கெனப் பழக்கப்பட்ட பாம்புகளுடன் மட்டுமா சாகாசம் காட்டுகின்றீர்கள்?

❋ நிச்சமாக இப்படித்தான் பலர் கருதுகிறார்கள். ஆனால், அது தவறு. ஏனென்றால் நாங்கள் பாம்புகளைக் கொண்டு வந்து சாகசம் புரிகின்ற போது பார்வையாளர்களை நம்ப வைப்பதற்காக அவர்கள் பிடித்துக் கொண்டு வருகின்ற விஷப்பாம்புகளையும் வாங்கி அவர்களுக்கு முன்னாலேயே அவற்றுடன் சாகசம் புரிந்து வருகின்றேன்.

• உங்களுக்குப் பாம்புகளால் தீங்குகள் ஏற்பட்டதில்லையா?

❋ நான் பல தடவைகள் விஷப் பாம்புகளினால் கடியுண்டுள்ளேன். எனது உடலில் பாம்புகள் கொத்திய பல காயங்கள் உள்ளன. மூன்று தடவை மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று மீண்டிருக்கிறேன்.

• நீங்கள் மேலும் புதிது புதிதாக சாதனைகள் பல புரிய வேண்டுமென்று ஆசைப்படுகின்றீர்களா?



நஸீர் பரிசாந்தன் பாம்புகளுடன்

## விஷப் பாம்புகளோடு ஜீவிக்கும் நஸீர் பரிசாந்தின் அனுபவங்கள்...

❋ நான் இலங்கையில் பல சாதனைகளைப் புரிந்துள்ளேன். ஆனால், உலக சாதனைக ளைப் பதிவு செய்யும் கின்னஸ் புத்தகத்தில் இடம் பிடிப்பதற்காக 2002ஆம் ஆண்டில் 4அடி நீளமும் 4 அடி அகலமும் உள்ள கண்ணாடிப் பெட்டி ஒன்றில் பார்வையாளர்களாலும் நடுவர்களாலும் விடப்பட்ட விஷப் பாம்புகளோடு 960 மணித்தியாலங்கள் உயிர்வாழ்ந்து சாதனை படைப்பதற்கு முயற்சித்தேன். ஆனால், 37ஆவது மணித்தியாலத்தில் பாம்பினால் கடியுண்டு எனது உடல் மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டதனால் யாழ். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டேன். இதனால் எனது முயற்சி தோல்வியில் முடிந்தது.

• நீங்கள் இலங்கையில் படைத்த சாதனைகளில் குறிப்பிடத் தக்க சாதனைகள் என்ன?

❋ [illegible] தொண்டைப் பகுதி வரையும் விழுங்கி மீண்டும் எடுத்துள்ளேன். அது மட்டுமலாது நாட்டியம், நடனம், டப்பான் கூத்து போன்றவற்றுக்காக 'நடனக் கலைஞன்', 'நடனப்புயல்' போன்ற பட்டங்களை சில மாவட்ட செயலகங்கள் மூலம் பெற்றுள்ளேன்.

• நீங்கள் பாம்பினை தொண்டைக்குள் விழுங் கும் போது பாம்பினுடைய சுவாசம் உங்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தாதா?

❋ இது நல்ல கேள்விதான். பாம்பை தொண்டைக்குள் விழுங்குகின்ற போது அதனுடைய சுவாசம் எமது சுவாசப் பையினுள் செல்கின்றது. இதனால், பாதிப்புக்கள் ஏதும் ஏற்படாமல் இருப்பதற்காக காட்டில் இருந்து பெறப்படுகின்ற சில மூலிகைகளை உண்கின்றோம். இதனால் நச்சுத் தன்மைகள் அற்று விடுகின்றன. எனவே, எனக்குப் பாதிப்புக்கள் வருவதில்லை.

• நீங்கள் பாம்பு கடித்தால் அதற்குரிய வைத்தியக்கலைகளையும் கற்றுள்ளீர்கள் போலிருக்கிறது. அதனை மக்களோடு பகிர்ந்து கொள்வதுண்டா?

❋ நான் சாகசம் புரிந்து கொள்ளும் ஒவ்வொரு இடத்திலும் எனது சாகசத்தைப் பார்த்து வியந்த மக்கள் பலர் பாம்பு கடித்தால் என்ன செய்வீர்கள் அதற்கு, என்ன மருந்து பாவிக்கின்றீர்கள் எனக் கேட்பார்கள். அந்த சர்ந்தர்ப்பத்தில் பாம்புக் கடிக்கு நிரந்தர சிகிச்சை பற்றி எனக்கு தெரியாது. ஆனால், உடனடிச் சிகிச்சை எவ்வாறு வழங்க வேண்டும் என்ற ஆலோசனைகளைக் கூறுவதுண்டு.

• உங்கள் சாகாசங்களை எந்தெந்த மாவட்டங்களில் செய்துள்ளீர்கள்?

❋ மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, முல்லைத் தீவு, காலி, கண்டி போன்ற பிரதேசங்களில் சாகசங்களை புரிந்துள்ளேன். ஆனால், நான் பிறந்த இடத்தில் சாகாசத்தைப் புரிவதற்கு இப்பொழுது தான் கைகூடியுள்ளது. இது எனது நெடுநாள் ஆசையும் கூட. தற்பொழுது சில இடங்களில் ஆரம்பித்துள்ளேன். எனினும், யாழ்.மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான பாடசாலைகளில் எனது சாகசக் காட்சிகளை நடத்தவுள்ளேன்.

செவ்வி : சுதாகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகத்தில் ஒளிந்திருந்த வரதனை பொலீஸாரால் உயிருடன் பிடிக்க முடிந்ததா?

**2** *ஈழப்போராட்டத்தில் தமிழ் மக்களுக்கு எதிரான போரைத் தீவிரப்படுத்திய ஸ்ரீலங்கா ப் பாதுகாப்பு அமைச்சர்களின் வரிசையில் முக்கியமானவர் ரஞ்சன் விஜேரத்ன. கொழும்பில் ஒரு தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் அவர் உயிரிழக்க நேர்ந்தது. அந்தத் தாக்குதல் குறித்து சிங்களப் பத்திரிகை ஒன்றில் அண்மையில் வெளியான கட்டுரையின் தமிழ் வடிவம் இது.*

தற்கொலைப் புலிப்போராளி தமதுயிரைத் துச்சமாகக் கருதி பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினவின் உயிரைப் பறிகொண்டதோடு தமது உயிரையும் இழக்க நேர்ந்தது. ஆயினும் அதற்கான சகல



ஒழுங்குகளையும் திட்டமிட்டு ஏற்படுத்திக் கொடுத்துத் தாக்குதலை வெற்றிகரமாக நிறைவேற்றி வைத்தவர் வரதனே.

இதனிடையே அந்தப் படுகொலைச் சம்பவத்துடன் அந்தவேளையில் ஜனாதிபதியாகப் பதவி வகித்த பிரேமதாசவைத் தொடர்புபடுத்தி பரவலாகப் பேச்சுகள் உலவின. எதிர்க்காட்சியினர் அது குறித்து வெளிப்படையாக விமர்ச்சிக்கும் அளவுக்கு அச் செய்தி பிரபல்யம் பெற்றுத் திகழ்ந்தது.

படுகொலைச் சம்பவம் இடம் பெறுவதற்கு சில மாதங்களுக்கு முன்னர் 'கசினோ' சூதாட்ட மன்னன் எனப் பிரபல்யமாகப் பேசப்பட்ட வெளிநாட்டு நபரொருவர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுப் பின்னர் நாட்டை விட்டு வெளியேற்றப்பட்ட சம்பவம் முக்கியத்துவம் பெற்றுத் திகழ்ந்தது. நாடு கடத்தப்படுவதற்கு முன்னர் பொலீஸாரின் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்த அந்த நபருடன் அரசின் முக்கிய அமைச்சர்கள் சிலர் நெருக்கமான தொடர்பு வைத்திருந்ததாகவும் அச்சமயம் செய்திகள் உலவின. பொலீஸாரின் பாதுகாப்பில் இருந்த அந்த நபருடன் தொடர்பு கொள்ள வெளியார் எவரும் அனுமதிக்கப்படவில்லை. இவ்வாறு கடும் உத்தரவைப் பிறப்பித்திருந்த பதில் பாதுகாப்பு அமைச்சர் அச் சம்பவத்தில் அரச தரப்பைச் சேர்ந்த எவரும் தொடர்புபட்டிருந்தால் அவர்களையும் கைது செய்யுமாறு பொலீஸாருக்கு உத்தரவு வழங்கியிருந்தார். இதனால் அந்த வெளிநாட்டு நபருடன் தொடர்பு வைத்திருந்த அரசியல்வாதிகள், பெரும் புள்ளிகள் பலர் அமைச்சர் மீது அதிருப்தியும் ஆத்திரமும் கொண்டிருந்தனர். அந்த வெளிநாட்டு நபரை நாட்டை விட்டு வெளியேற்றியவேளை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தன தாமே நேரடியாக விமான நிலையத்துக்குச் சென்று நிகழ்வைக் கண்காணித்ததாகவும் செய்திகள் வெளியாகியிருந்தன. இதனால், அமைச்சரின் படுகொலை குறித்த பொலீஸாரின் சந்தேகம் பலகோணங்களில், பல தரப்பினர் மீது சென்றன. ஜனாதிபதி பிரேமதாச மீது கூட பொலீஸார் சந்தேகப்படுவதாகக் கதை உலவியமை இந்தப் பின்னணியின் அடிப்படையில் அமைந்ததொன்றே.


தமது 60 ஆவது வயதைப் பூர்த்தி செய்ய ஒருமாத காலமே பாக்கியிருந்த வேளையில் படுகொலையுண்ட அமைச்சரை, அத்தனை பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு மத்தியிலும், ஏறக்குறைய ஓராண்டு காலமாக உளவு பார்த்து, உரிய திட்டங்கள் வகுத்து தனது இலக்கை வெற்றிகரமாக நிறைவேற்றியதன் மூலம் நாட்டின் அரசுக்கும் பொதுமக்களுக்கும் அதிர்ச்சி வைத்தியம் பார்த்த வரதன் சம்பவத்தின் பின்னர் கொழும்புப் பகுதியை விட்டு வெளியேறி வட பகுதிக்குச் சென்று விட விரும்பினார்.

வரதனது இயற்பெயர் வரதராஜா ஸ்ரீதரன் என்பதாகும். 1984 ஆம் ஆண்டு ஜனவரியில் காத்தான்குடி வங்கிக்கொள்ளையைத் திட்டமிட்டு வெற்றிகரமாக நிறைவேற்றியவர் இந்த வரதனே. அந்த வங்கிக் கொள்ளை தொடர்பாகச் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் இருந்த வேளை பொலீஸார் அவரைப் புகைப்படமெடுத்துப் பாதுகாத்து வைத்திருந்தனர். இதனால், 1991 ஆம் ஆண்டு முதல் வரதன் தனது தோற்றத்தை பெருமளவில் மாற்றிக் கொண்டு உலவி வந்தார். ஆயினும், அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னவின் படுகொலைச் சம்பவத்தின் பின்னர் தாம் கொழும்புப் பகுதியில் உலவுவது ஆபத்து மிக்கதென்று வரதன் எண்ணினார். வட பகுதிக்குச் செல்வதானால் கூட பல சோதனைத் தடை முகாம்களைத் தாண்டியே செல்ல வேண்டியிருந்தது. எனவே, இப் படுகொலை பரபரப்பு அடங்கும் வரை தாம் எங்காவது வெளியிடமொன்றில் மறைந்து வாழ்வதே புத்திசாலித்தனமாகுமென வரதன் கருதினார். அந்தவேளையில் மலையக மக்கள் முன்னணிக் கட்சி விடுதலைப் புலிகள் அமைப்பின் நிலைப்பாட்டுக்கு ஆதரவு தெரிவிக்கும் விதத்தில் கருத்து வெளிப்படுத்தி வந்தது. எனவே, மலைநாட்டுப் பகுதியில் சிறிது காலம் மறைந்திருப்பதே உசிதமென எண்ணிய வரதன் அதற்கான வசதியை ஏற்படுத்தித் தருமாறு தமது மலைநாட்டுப் பகுதியைச் சேர்ந்த நண்பரொருவரைக் கேட்டுக் கொண்டார்.

பொலீஸாரின் சோதனைக் கெடுபிடிகளைத் தாண்டி மலைநாட்டுப் பகுதிக்குச் செல்வதன் சிரமம் குறித்து சிந்தித்துக் கொண்டிருந்தவேளையில், எதிர்பாராத வகையில் அதற்கான சந்தர்ப்பமொன்று வரதனுக்குக் கிட்டியது. வாய்த்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி குளிர்பானங்களைக் கொழும்பிலிருந்து மலைநாட்டுப் பகுதிக்கு ஏற்றிச்செல்லும் லொறியொன்றில் மறைந்திருந்து பயணித்து, வரதன் பொலீஸாரின் கையில் சிக்கிக் கொள்ளாது பாதுகாப்பாக மலைநாட்டின் தலவாக்கொல்லையைச் சென்றடைந்தார்.

மலையக மக்கள் முன்னணியின் முக்கிய உறுப்பினராயிருந்த ஆசிரியர் ராமகிருஷ்ணன் என்பவருடன் அவரது வீட்டில் மறைந்து வாழ்ந்த வரதன், மற்றையோருக்குச் சந்தேகம் ஏற்படாத வகையில் அருகிலிருந்த மரக்கறித் தோட்டங்களில் கூலியாளராக வேலை செய்து வந்தார். வரதனும் ஆசிரியர் ராமகிருஷ்ணனும் மட்டுமே தங்கியிருந்த அந்த வீட்டுக்கு அடிக்கடி வந்து செல்லும் மலையக மக்கள் முன்னணி கட்சியின் உறுப்பினர்களுடன் பேசிப் பழகிக் கலந்துரையாடுவதில் தமது ஓய்வு நேரத்தை வரதன் கழித்து வந்தார். அவர் தங்கியிருந்த சூழல் பொலீஸாருக்குச் சந்தேகம் ஏற்படாதவாறு [illegible] சூழல் கொண்[illegible] அமைந்திருந்தது. இருந்தபோதிலும் ஒருநாள் வரதன் தலவாக்கொல்லையில் தங்கியிருக்கும் இடம்குறித்த விவரம் பொலீஸாருக்குக் கிடைத்துவிட்டது. அவ்வேளையில் ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் மத்திய நடவடிக்கைக் குழுவின் உறுப்பினரொருவராலேயே வரதனின் மறைவிடம் குறித்த தகவல் பொலீஸாருக்குக் கிட்டியதாகப் பேசப்பட்டது.

அந்த இரகசியத் தகவலின் அடிப்படையில் உடனடியாக நடவடிக்கைகளில் இறங்கிய பொலீஸார், தலவாக்கொல்லைக்கு விரைந்து சென்று வரதன் தங்கியிருந்த வீட்டைத் திடீரென முற்றுகையிட்டனர். முதலில் ஆசிரியர் ராமகிருஷ்ணனை கைது செய்த பொலீஸார், துப்பாக்கி முனையில் அவரைப் பயமுறுத்தி வீட்டின் அறையொன்றினுள் மறைந்திருந்த வரதனை வெளியில் வருமாறு ஆசிரியர் ராமகிருஷ்ணனைக் கொண்டு அழைக்க வைத்தனர். ஆசிரியர் ராமகிருஷ்ணனின் குரலில் காணப்பட்ட பதற்றத்தைக் கொண்டு தான் ஆபத்தில் மாட்டிக் கொண்டுள்ளதை வரதனால் உணர்ந்து கொள்ள முடிந்தது. வரதனை உயிரோடு கைதுசெய்ய முடிந்தால் அவரிடமிருந்து ரஞ்சன் விஜேரத்ன படுகொலை உட்படப் பல தகவல்களைப் பெற்றுக்கொள்ள இயலுமெனப் பொலீஸார் நம்பினர்.



எனவே, எப்படியாவது வரதனை உயிருடன் கைது செய்வதற்கு அவர்கள் அக்கறை காட்டிச் செயற்பட்டனர்.

ஆனால், பாவம் பொலீஸாரால் வரதனை உயிருடன் கைதுசெய்ய முடியாது போய்விட்டது. தாம் எந்த விதத்திலும் அங்கிருந்து தப்பித்துக்கொள்ள இயலாதென்பதை உணர்ந்துகொண்ட வரதன்,

## கொழும்பைக் கலக்கிய முதல் தற்கொலைத் தாக்குதல்

தற்கொலை செய்து கொள் ளத் தீர்மானித்தார். எப்போதும் தம்முடனேயே வைத்திருக்கும் 'சயனைற்' வில்லைகளைக் கடித்த மறுகணம் வரதன் பூட்டிய அறையினுள்ளேயே உயிரிழக்க நேர்ந்தது.

பல தடவைகள் வெளியில் வருமாறு ஆசிரியர் ராமகிருஷ்ணன் ஊடாக வற்புறுத்தியும் வரதன் அறையை விட்டு வெளியேறாததால் ஆத்திரமுற்ற பொலீஸார் எச்சரிக்கையுடன் அறைக் கதவை உடைத்து உட்பிரவேசித்தவேளை வரதனின் உயிரற்ற உடலையே அவர்களால் கைப்பற்ற முடிந்தது.

பொலீஸாரால் வரதனை உயிருடன் கைதுசெய்ய இயலாத போதிலும் அங்கு கண்டெடுத்த ஆவணங்களின் அடிப்படையில் ஆரம்பத்தில் கொழும்பில் வரதன் கடமையாற்றிய வீடியோக்கடை உரிமையாளர் உட்பட வேறும் சிலர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர். இதன் தொடர்ச்சியாக அடிக்கடி தலவாக்கொல்லை நகரப் பகுதி பொலீஸாரின் கெடுபிடிகளுக்கு உள்ளனாது. திடீரென இலக்கத் தகடற்ற வெள்ளை வானில் வந்திறங்கும் குழுக்களால் அப்பகுதி இளைஞர்கள் மத்தியில் அச்சமும் பரபரப்பும் உருவாகியது. அவ்விதம் சிவில் உடை தரித்தோரால் அடிக்கடி அப்பகுதி இளைஞர்கள் கைது செய்யப்பட்டுத் தடுத்துவைத்து விசாரிக்கப்பட்டனர். மலைய மக்கள் முன்னணியின் தலைவரான சந்திரசேகரன் கூட இவ்விதம் ஒரு நாள் பொலீஸாரால் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டார்.

இச்சம்பவங்கள் அரசியல் அரங்கில் வாதப் பிரதிவாதங்களுக்கு உள்ளாகின. அந்தவேளையில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவராயிருந்த சௌமியமூர்த்தி தொண்டமான் இந்த விடயத்தில் தாம் தலையிடவிரும்பவில்லை எனப் பகிரங்கமாகக் கருத்து வெளியிட்டமை மலையக இளைஞர்கள் மத்தியில் கொதிப்பை ஏற்படுத்தக் காரணமாயிற்று. அதுமட்டுமன்றி, இந்த விடயத்தில் மலையக மக்கள் முன்னணித் தலைவர் சந்திரசேகரனுக்கும் கணிசமான அளவு தொடர்புண்டு என்ற வகையில் தொண்டமான் வெளியிட்ட கருத்து மலையக மக்கள் மத்தியில் மேலும் கோபம் அதிகரிக்கக் காரணமாயிற்று. தொண்டமான் விரும்பியிருந்தால் அந்தவேளையில் ஜனாதிபதியாயிருந்த பிரேமதாசவுடன் தொடர்புகொண்டு சந்திரசேகரனை விடுவித்திருக்க முடியுமென மலையக இளைஞர்கள் கருதினர். அந்த அளவுக்கு தொண்டமான் அந்த வேளையில் அரசில் பிரபல்யம் மிக்கவராக விளங்கினார். ஆனால், அந்த ஐ.தே. கட்சி அரசின் ஆட்சி முடிவடைந்த வேளையிலேயே சந்திரசேகரனால் சிறையிலிருந்து வெளியே வரமுடிந்தது.

1991 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் விடுதலைப் புலிகள் தமது உறுப்பினர் வரதனது வீரமரணச் செய்தியை பகிரங்கமாக வெளியிட்டனர். எப்படியிருப்பினும் வரதனின் மரணம் புலிகள் அமைப்பை பொறுத்தவரையில் அவர்களுக்கு பேரிழப்பேயாகும்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்னை



பத்து மாதம் சுமந்து எம்மைப்
பெற்றெடுத்தார் அன்னை
பற்றுடனே பாலூட்டி
வளர்த்தார் எம் அன்னை

வட்ட நிலாக் காட்டி உணவை
ஊட்டி வளர்த்தார் அன்னை
தட்டிக் தட்டிக் கொடுத்து
தாலாட்டி - வளர்த்தார் அன்னை

பட்டுச்சட்டை போட்டு அழகு
பார்த்தார் எம் அன்னை
பக்குவமாய் பள்ளி சென்று
படிக்க வைத்தார் அன்னை


உண்மை நேர்மையாக வாழ
வேண்டும் என்றார் அன்னை
பக்குவத்தோடு உழைத்து
உயர்வாய் என்றார் அன்னை

**க.கஸ்தனி**
யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி.

## உலக ஸ்தாபனங்கள்

* NATO -வட அத்திலாந்திக் ஒப்பந்த நாடுகள்
*ADB - ஆசிய அபிவிருத்தி வங்கி
* ITO - சர்வதேச வர்த்தக நிறுவனம்
* ILO - சர்வதேச தொழிலாளர் நிறுவனம்
* UNO - ஐக்கிய நாடுகளின் சபை
* UNICEF - ஐக்கிய நாடுகள் குழந்தை அவசரகால நிதியம்
* UNHCR - ஐக்கிய நாடுகளின் அகதிகள் நிறுவனம்
* WHO - உலக சுகாதார நிறுவனம்
* EEC - ஐரோப்பிய பொருளாதார சமூகம்
* OPEC - பெற்றோலிய உற்பத்தி, ஏற்றுமதி நாடுகளின் அமைப்பு
* NASA - தேசிய விண் பயணத்துறை, மற்றும் விண்வெளி நிறுவனம்

***சின்னத்தம்பி ஹெஜினா**, தரம் 10*
*யா/பண்டத்தரிப்பு பெண்கள் உயர் தர பாடசாலை.*



*செந்தூரன்,*
*தரம் - 3ஏ,*
*யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்.*



*தி.வைகுந்தன்*
*தரம் - 8 டி*
*யாழ்.இந்துக்கல்லூரி.*

# சிறுவர்களைப் பேணாத சமூகம் ஆரோக்கியமானதாக இருக்காது!

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற யுத்தத்தினால் அதிகம் பாதிப்புற்றவர்கள் சிறுவர்களே. இந்தப்போர் மேகங்களினால் பெற்றோரை இழந்தும் சகோதரர்களை இழந்தும் கவனிப்பார் யாருமின்றி நடுத்தெருவில் நிற்கின்றார்கள். அத்துடன், வறுமை நிலையிலும் நிற்பதும் சிறுவர்களே. இவர்களின் வாழ்வு கேள்விக் குறியாய் இருப்பதில் வியப்பில்லை. கல்வி கற்கும் வயதில் வறுமை காரணமாக சிறுவயதிலே தொழில்களுக்குச் செல்கின்றார்கள். ஆனால், தொழில் எத்தகையது? இதனால் பாதகம் இருக்கிறதா? என்ற சிந்தனை உணர்ச்சி இவர்களிடம் இல்லை. பணம் சம்பாதிப்பதே இவர்களின் நோக்கமாகும். பெற்றோர் களே இதற்கு வழி காட்டியாக இருப்பதுதான் கவலைக்குரிய விடயமாகும். தொழிலென்ற போர்வையில் பல சட்ட விரோத செயல்களுக்கு சிறுவர்கள் உட்படுத்தப்படுகிறார்கள். போதிய கல்வியறிவு இல்லாததால் இதனை விளங்கிக்கொள்ள இவர்களால் முடிவதில்லை. இவர்களது குடும்ப சூழ்நிலையும் அதற்கு உதவுவதில்லை.

பெற்றோர் உள்ள சிறுவருக்கே இந்த நிலைமையாயின பெற்றோரற்ற சிறுவரின் நிலையை என்ன வென்று கூறுவது? யாருமற்ற இவர்களை சட்டவிரோதக் கும்பல்கள் துணிவுடன் அணுகுகின்றன. பாதுகாவலர்கள் என்ற போர்வையில் அச் சிறுவர்களை பழிக்கு உள்ளாக்குகின்றனர். போதைப்பொருள் கடத்தல், பாலியல் துன்புறுத்தல் ஆகியவற்றிற்குச் சிறுவர்கள் பயன்படுத்தப்படுகின்றனர். இவர்களின் உரிமைகள் பலவந்தமாகப் பறிக்கப்படுகின்றன.

இன்று யாழ். மாவட்டம் உட்படப் பல மாவட்டங்களிலுமுள்ள ஏராளமான சிறுவர்கள் அநாதைகளாக உள்ளனர். இவர்கள் தவறான வழியில் வழி நடத்தப் படுகின்றனர். பெண்ணுரிமை பற்றிப் பேசும் எமது சமூகம், சிறுவர் உரிமை பற்றியும் சிந்திக்கவேண்டும். சிறுவருடைய தேவைகள் பற்றியும் உரிமைகள் பற்றியும் மக்களிடையே பேசவேண்டும். விழிப்புணர்வை உருவாக்க வேண்டும். வளர்ந்துவரும் உலகின் எதிர்காலச் சந்ததியினர் சிறுவர்கள். ஆனால், இவர்கள் தவறான பாதையில் நடத்தப்படுவதால் சிறுவர்களின் எதிர்காலம் மட்டுமல்ல, எமது நாட்டின் எதிர்காலமும் பாழாகிறது.



யாழ்.மாவட்டத்தைப் பொறுத்தவரை இலவசக் கல்வி இருப்பினும் எம் போன்ற பல சிறுவர்கள் கல்வியைத் தொடர முடியாத நிலையில் வாழ்கின்றார்கள். வேறு எந்த நாட்டிலும் இல்லாதவாறு எமது நாட்டில் இலவசக் கல்வி, சீருடை, சுகாதார வசதிகள், வறுமைக் கோட்டுக்கு கீழ்ப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணம் போன்ற பல சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஆனால், வாழ்க்கைச் செலவு அதிகரிப்பால் பணத்தின் தேவையும் அதிகரிக்க பல சிறுவர்கள் பெற்றோரின் விருப்பத்துடனும், தமது சொந்த விருப்பத்திலும் சிறு வயதிலேயே பல்வேறு வேலைகளுக்குச் செல்கிறார்கள். உதாரணமாக யாழ்ப்பாணத்தில் சைக்கிள் கடைகள், உணவகங்கள், பலசரக்குக் கடைகள் போன்றவற்றில் சிறுவர்கள் வேலை செய்வதை சாதாரணமாகக் காணலாம்.

மக்களிடையே நிலவும் அறிவின்மையால் மரபுத் தொழில் பழக்கம் தேவையென்று சிறுவர்களைத் தமது தொழில்களில் பெரியவர்கள் ஈடுபடுத்துவதையும் காணக்கூடியதாக உள்ளது. உதாரணமாக மீன்பிடித் தொழிலில் இந்த செயற்பாடு அதிகமாக உள்ளது. இதனால் சிறு வயதிலேயே இவர்களின் கல்வி பாதிக்கப் படுகிறது? அடுத்ததாகக் கூறவேண்டிய முக்கிய பாதிப்பு போருக்குப் பிந்திய பாதிப்பு ஆகும். போர் நடவடிக்கைகளால் பல சிறுவர்கள் பெற்றோரை இழந்தும் அங்கவீனர்களாகவும் காணப்படுகின்றனர். இவர்களின் மனநிலை பெரிதும் பாதிப்புற்றதாகவே உள்ளது. இவர்களில் அநாதைகளாக உள்ள சிறுவர்கள் வீடுகளில் வேலைக்கு அமர்த்தப்படுகின்றனர். சிறுவர் உரிமைகள் கூடுதலாக மறுக்கப்பட்டவர்களாகவே இவர்கள் காணப்படுகின்றனர். வேலைக்காரச் சிறுவர்களாக உள்ள இவர்களின் வேதனைகளும், சோதனைகளும், சொல்ல முடியாதவை. வேலைக்குச் செல்லும் சிறுவர்கள் உடல் ரீதியான துன்புறுத்தலுக்கு உள்ளாவதை காணக் கூடியதாக உள்ளது. இவை சமூகத்திற்கு வெளிக்கொண்டு வரப்படாதவையாக உள்ளன.

அவையெல்லாம் என்ன? சிறுவர் சிறுமியரின் உரிமைகளை அதாவது அவர்களின் அடிப்படைத் தேவைகளை பந்தாடும் செயல்களே ஆகும்.


ஒரு சமுதாயம் வளர்ச்சி பெற வேண்டுமாயின் அவர்களின் அடிப்படைத் தேவைகளை பெரியவர்கள் நிறைவேற்றுவதுடன் அவர்களின் உணர்வுகளை மதிக்கவும் வேண்டும். எனவே, நாம் சிறுவர்களின் அவல நிலையிலிருந்து அவர்களைப் பேணிப் பாதுகாப்போம்.

**"சிறுவர்களின் வளர்ச்சி பாரிற்கு உயர்ச்சி"**

**யூ.சதீஸ்**
தேன்தமிழ் சிறுவர் கழகம்
*(நன்றி - சிறுவர் குரல்)*




## வர்ணந் தீட்டி மகிழுங்கள்....!



**தம்பி, தங்கைகளே.....!**

மேலே காணும் படத்திற்கு வர்ணம் தீட்டி கத்தரித்து அனுப்பி வையுங்கள். அழகுற வர்ணம் தீட்டிஅனுப்புவோரில் மூவர் தெரிவு செய்யப்பட்டு அவர்களது பெயர்கள் சிறுவர் பொழில் பகுதியில் பிரசுரிக்கப்படும்.
எங்கே முயன்று பாருங்கள்! கை வண்ணத்தைக் காட்டுங்கள்!!

*அனுப்பவேண்டிய முகவரி:-*
**'வர்ணம் தீட்டுவோம்' - 03**
சூரியகாந்தி 'சிறுவர் பொழில்'
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

வர்ணம் தீட்டி மகிழுங்கள் போட்டியில் ஏராளமான சிறுவர்கள் ஆர்வத்துடன் பங்குகொண்டு படங்களை அனுப்பியிருக்கின்றனர். அவர்களில் பலர் தங்கள் பெயர் விவரம், பாடசாலை விவரம் என்பவற்றைக் குறித்து அனுப்பத் தவறியதால் அவர்களது வண்ணங்கள் தெரிவில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.
நீங்கள் வர்ணம் தீட்டி அனுப்பும் படத்துடன் உங்கள் பெயர், பாடசாலையின் பெயர், வகுப்பு போன்ற விவரங்களை தவறாமல் சேர்த்து அனுப்புங்கள்.
வர்ணம் தீட்டுவோம் போட்டி இலக்கம் - 02 இல் தெரிவு செய்யப்பட்ட ஐவரின் விவரங்கள் வருமாறு:-

- **செல்வகுமாரன் விஜயநாத், தரம் 10ஏ, அளவெட்டி அருணோதயா கல்லூரி.**
- **கு.தனுசியா, தரம் 5 பி, நெல்லியடி மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலை.**
- **ம.சுபேந்திரி, தரம் - 9, பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை.**
- [illegible] **கல்லூரி.**
- [illegible] **கல்லூரி.**

## கோள்கள் பற்றிய தகவல்கள்

- ☐ சூரியனுக்கு மிகத் தொலைவிலுள்ள கோள் - *புளூட்டோ*
- ☐ மிகப் பெரிய கோள் -*வியாழன்*
- ☐ மிகச் சிறிய கோள் - *புதன்*
- ☐ அதிக துணைக்கோள்களுடைய கோள் - *சனி*
- ☐ பூமியின் துணைக்கோள் - *சந்திரன்*
- ☐ மிகக் குளிர்ச்சியான கோள் - *புளூட்டோ*
- ☐ வெள்ளியின் வெப்பநிலை -*480* பாகை செல்சியஸ்
- ☐ மிகவும் பிரகாசமான கோள் - *வெள்ளி*
- ☐ செங்கோள் - *செவ்வாய்*
- ☐ மலட்டுக் கோள் - *புதன்*

*அழகராசா தர்ஸன் , தரம் 7சி*
*யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.*

## பெரு 'மை' க்குத் தேவையானவை

- உயிர் போக நேர்ந்தாலும் - நீ பேச வேண்டியது
  உண்மை
- மற்றவருடன் பேசும்போது - உன்னில் கலந்திருக்கவேண்டியது
  இனிமை
- வெற்றி பெற என்றும் - நீ ஒழுக வேண்டியது
  ஒற்றுமை
- கனவிலும் நனவிலும் - நீ செய்ய வேண்டியது
  நன்மை
- இறுதி மூச்சு வரை - நீ மீறாதே உன்
  கடமை
- வெற்றிக்கும் உயர்ச்சிக்கும் - உன்னில் வேண்டும் என்றும்
  வல்லமை
- உன்னையே நீ சிந்தித்தறிய - நீ அடிக்கடி தேட வேண்டும்
  தனிமை
- காலமெல்லாம் சிறப்புடன் வாழ - நீ அணிய வேண்டியது
  பொறுமை
- இவ்வாறு நீ ஒழுகிவிட்டால் - நாளை நீ பெறுவது
  பெருமை.

**வி.கீர்த்தனா**
தரம் - 10 ஏ,
யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகளிரின் கைவண்ணத்துக்கு மகுடம் சூட்டிய 'மங்கையர் கலசம்'

கிராமங்கள் தோறும் வாழும் மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தும் நோக்கில் கிராம அபிவிருத்தித் திணைக்களம் உருவாக்கப்பட்டது. மக்களின் சமூக, பொருளாதார, கலாசார உயர்வுக்காக கிராமங்களில் கிராம அபிவிருத்திச் சங்கத்தை உருவாக்கி அதனூடாக விவசாயம், போக்குவரத்து, கல்வி, கலாசாரம், சுகாதாரம், பண்பாட்டு விழுமியங்கள் போன்ற துறைகளில் இந்தத் திணைக்களம் அபிவிருத்தியை உருவாக்கி வருகின்றது.

இந்தத் திணைக்களம் பல்வேறு வகையான பயிற்சி நெறிகளை வழங்கி வருகின்றது. உதாரணமாக மாவட்ட, கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிநெறி, போதனாசியர்களுக்கான பயிற்சிநெறி, இளைஞர், யுவதிகளுக்கான பயிற்சிநெறி போன்ற பல்வேறு பயிற்சிநெறிகள் பல்வேறு பிரதேச மட்டங்களிலும் நடத்தப்பட்டு வருகின்றன. இவை தவிர சங்க உறுப்பினர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சிநெறிகளும் ஒவ்வொரு பிரதேச செயலகங்களிலும் ஒவ்வொரு வருடமும் நடத்தப்பட்டு வருகின்றன.

இத்திணைக்களம் மாதர் அபிவிருத்திச் சங்கங்களை உருவாக்கி அவற்றினூடாக சுயதொழில் முயற்சியில் கிராமப் பெண்களை ஈடுபடவைக்கின்றது.

இத்திணைக்களத்தின் கீழ் 57 கிராம அபிவிருத்திப் பயிற்சி நிலையங்கள் இயங்கி வருகின்றன. இதனூடாக ஆயிரத்து 700 பயிற்சியாளர்கள் ஒவ்வொரு வருடமும் டிப்ளோமாப் பயிற்சி பெற்று வெளியேறுகின்றார்கள். இப்பயிற்சியாளர்களுக்கு நாளொன்றுக்கு 50 ரூபா ஊக்குவிப்புத் தொகையாக வழங்கப்பட்டு வருகின்றது.

இப்பயிற்சிநெறி சுமார் 15 வருடங்களாகத் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றது. ஒவ்வொரு வருட முடிவிலும் பிரதேச மட்டத்தில் கண்காட்சிகளும் நடைபெற்று வருகின்றன. இதில் திறமையான, தரமான பொருள்கள் தெரிவு செய்யப்பட்டு மாவட்ட மட்டக் கண்காட்சிக்கு வைக்கப்படும். மாவட்ட மட்டக் கண்காட்சியில் தெரிவுசெய்யப்படும் பொருள்கள் மாகாணக் கண்காட்சியில் வைக்கப்படும்.

இந்த வருடத்திற்கான மாகாணக் கண்காட்சி நமது யாழ்ப்பாண மாவட்டத்தில் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. 'மங்கையர் கலசம்' என்ற பெயருடன் யாழ்.மத்திய கல்லூரியில் கடந்த 23ஆம், 24ஆம் திகதிகளில் மாகாணக் கண்காட்சி இடம்பெற்றது.

* திணைக்களத்தின் ஒரு பகுதிச் செயற்பாட்டைப் பொதுமக்களுக்குத் தெரியப்படுத்துதல் -
* கிராமத்திலுள்ள பயிற்சி பெற்ற பெண்களின் வெளிப்பாட்டினையும் ஆர்வத்தினையும் வெளிக்காட்டுதல் -
* கண்காட்சி ஊடாகச் சந்தை வாய்ப்பை ஏற்படுத்துதல் -
* பெண்களைத் தகைமை மிக்க குடும்பத் தலைவிகளாக மாற்றுதல் -
* கிராமத்திலுள்ள ஏனைய யுவதிகளையும் இப் பயிற்சிக்காக உள்வாங்குதல் -
* கிராமங்களில் நவீன தொழில் வாய்ப்பு முறைகளை அறிமுகப்படுத்துதல் -
* குடும்பத்தில் தங்கி வாழும் நிலையைக் குறைத்து, குடும்ப வருமான மட்டத்தை உயர்த்துவதற்கு உதவுதல் -
* பெண்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல் -

இவை போன்ற நோக்கங்களை மையமாகக் கொண்டே இக் கண்காட்சி நடத்தப்படுகின்றது.

இம்முறை யாழ்.மாவட்டத்தில் இடம்பெற்ற மாகாண மட்டக் கண்காட்சியில் மாகாணத்திற்கு உட்பட்ட யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், அம்பாறை, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய 8 மாவட்டங்களின் ஆக்கங்களும் காட்சிப்படுத்தப்பட்டன.

மகளிர் தம் கைவண்ணங்களை மிகத் திறமையாக வெளிப்படுத்தியிருந்தனர். கண்ணைக் கவர, கருத்தை நிறைக்க பல பொருள்கள் அமைக்கப்பட்டிருந்தன. அவற்றில் குறிப்பிடக்கூடிய விடயம் இயற்கையான, ஆனால், உயிரிழந்த பொருள்களைக் கொண்டு உயிரோட்டமான பொருள்கள் உருவாக்கப்பட்டிருந்தன.

அதாவது சிப்பிகள், சங்குகள், ஊரிகளைக் கொண்டு உயிரோட்டமான சில பொருள்கள் உருவாக்கப்பட்டிருந்தன. அவற்றில் குறிப்பிடக்கூடியது குருவியும்

**தீபா – கங்கா**
**படங்கள் : பிரபா**

கூடும், கூடைக்குள் குருவி போன்றவை. இவை மிக அழகாக அமைக்கப்பட்டிருந்தன.

இதைவிட, பனை வளங்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட கைப்பணிப் பொருள்கள் பூவேலைகள், உடையலங்காரம், முத்துவேலைகள், கழிவுப்பொருள் ஆக்கங்கள், சாறி அலங்காரம், பின்னல் வேலை, பெயின்ரிங் வேலை, மட்பாண்ட அலங்காரம் போன்ற பல்வேறு ஆக்கங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

இன, மத, மொழி பேதங்களின்றி தமிழ், சிங்கள, முஸ்லிம் மகளிர் அனைவரும் ஒன்றிணைந்து கண்காட்சியை நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கண்காட்சியில் கலந்துகொண்ட 8மாவட்டங்களையும் சேர்ந்தவர்களின் கருத்துக்களைத் தருகின்றோம்.



**ச.தியாகமூர்த்தி**
*கிராம அபிவிருத்தித் திணைக்கள யாழ். மாவட்ட உத்தியோகத்தர்*

இம்முறை எமது மாவட்டத்தில் இக்கண்காட்சி நடத்தப்படுகின்றமை எமக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது. எமது மாவட்டத்தில் 14 மகளிர் அபிவிருத்தி நிலையங்கள் உள்ளன. ஒவ்வொன்றிலும் 25 பெண்கள் வீதம் பயில்கின்றார்கள்.

இந்தக் கண்காட்சி ஊடாக எமது மாவட்ட மகளிர் புதுப்புது உற்பத்திகளை மேற்கொள்ளக் கூடிய வழிமுறைகளை அறிந்து கொள்வார்கள்.

எமது மாவட்டத்தில் போதனாசிரியர்களுக்கு மென்மேலும் பயிற்சிகளை அளிப்பதற்கு வளஆளணி குறைவு. இதனால், எமது வெளிப்பாடுகளை பூரணத்துவமாக வழங்க முடியாதுள்ளது. ஆயினும், எம்மால் முடிந்தளவு பயிற்சியாளர்களுக்கு கைத்தொழில் துறையில் பயிற்சிகளை அளித்து வருகின்றோம். எமது மகளிரின் அபிவிருத்தியைக் குறிக்கோளாகக் கொண்டே நாம் செயற்பட்டு வருகின்றோம்.

**திருமதி ரஞ்சினி பாஸ்கரன்**
*திருகோணமலை மாவட்டப் போதனாசிரியர்*

எமது பெண்களின் ஆற்றல்களை வெளிக்கொணர்வதாக இக் கண்காட்சி அமைகின்றது. எமது பெண்களும் மிக ஊக்கமாகத் தமது கைத்திறனை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். ஆனால், எமக்கு ஒரு குறையுள்ளது. நாங்கள் பல்வேறு ஆக்கங்களைச் செய்கின்றோம். மிகவும் நுணுக்கமாக விளைத்திறனுடன் உற்பத்தி செய்கின்றோம். ஆனால், அவற்றைச் சந்தைப்படுத்துவதற்கு எமக்கு வழியில்லை. திணைக்களமும் அதற்கு வழிசெய்யவில்லை.

எமது திருகோணமலை மாவட்டத்தின் ஆக்கப் பொருள்களைத் தேசிய ரீதியிலான கண்காட்சியில் காட்சிப்படுத்துவதற்கு பிரபல நூல் உற்பத்தி நிறுவனம் ஒன்று அனுசரணை வழங்குவதாக உறுதிதந்துள்ளது.

எமக்கொரு சந்தை வசதிதான் தேவை. அச்சந்தையும் விற்பனை செய்யக்கூடிய இடங்களில் அமைய வேண்டும். இதற்குத் திணைக்களம் போதிய ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்பதே எமது வேண்டுகோள்.

**கிருஷ்ணகுமார் நேசராணி**
*முல்லைத்தீவு மாவட்டப் போதனாசிரியர்*

எமது மாவட்டம் முதல்முறையாக மாகாணக் கண்காட்சியில் பங்குபற்றுகின்றது. இது எமக்கு மிக மகிழ்ச்சியாக இருக்கின்றது.



எமது மாவட்டம் வசதி குறைந்த இடம். அங்கு கிடைக்கக்கூடிய பொருள்களைக் கொண்டு ஆக்கங்களைச் செய்து கொண்டு வந்தோம். இங்கு வந்து பார்த்த பின்புதான் நாங்கள் இன்னும் கற்க வேண்டியது நிறைய உள்ளது என்பதை அறிந்தோம். அத்துடன் தொடர்ந்தும் மாகாணக் கண்காட்சியில் பங்குபற்ற வேண்டும் என்ற ஆர்வத்தை எமக்குள் தூண்டியது.

அடுத்தமுறை நடைபெறும் கண்காட்சியில் சிறப்பாக நாங்கள் பங்கேற்போம்.

**திருமதி வ.யோகேஸ்வரன்**
*அம்பாறை மாவட்டப் கிராம அபிவிருத்தி அலுவலர்*

இக்கண்காட்சி எமது ஆக்கங்களைக் காட்சிப்படுத்த உதவியதுடன் எமக்கிடையே ஓர் உறவுப் பாலமாகவும் திகழ்ந்தது.

ஆம், எம்முடன் வந்த பயிற்சி மாணவர்கள் கூறினார்கள் இது நாம் கண்காட்சிக்கு வந்த பயணமாகத் தெரியவில்லை. சமாதான யாத்திரையாகவே தெரிகின்றது என்று எங்களுக்கும் அப்படியே உள்ளது.

எம்முடன் முஸ்லிம் பெண்கள் வந்துள்ளனர். அவர்கள் இதுவரை யாழ்ப்பாணத்தைப் பார்த்ததேயில்லை. எமது இடத்தில் யாழ்ப்பாணம் என்றால் மக்களெல்லாம் பயந்து கொண்டு எங்குமே செல்லாமல் வீட்டுக்குள் இருப்பார்கள் என்ற கணிப்பே உள்ளது. ஆனால், யாழ்ப்பாணம் வந்ததும் பெரும் மாற்றத்தைக் கண்டோம். எல்லோருமே சுதந்திரமாக செயற்படுகின்றார்கள்.

**திருமதி சுசீந்திரன் காயத்திரி**
*மன்னார் மாவட்டப் போதனாசிரியர்*

நாம் எங்கள் காட்சிப் பொருள்களைக் கொண்டு வருவதற்குத் தான் பெரும் சிரமப்பட்டோம். நாம் கொண்டு வந்த பொருள்கள் அத்தனையையும் எண்ணி, அரச அதிபரிடம் கையொப்பம் வாங்கித் தான் கொண்டு வந்தோம். திருப்பி ஒரு பொருள் கூடக் குறையாமல் கொண்டு போகவேணும்.

மற்றப்படி இக்கண்காட்சி எமக்கு பூரண திருப்தியையே தந்தது.

**திருமதி கனகரட்ணம் பத்மராணி**
*வவுனியா மாவட்டப் போதனாசிரியர்*

எமது மாவட்டத்திலிருந்து இங்கு வருவதற்கு போக்குவரத்தில் .பெரும் சிரமப்பட்டோம். ஆயினும், இங்கு வந்ததும் எமது சிரமம் மறைந்துவிட்டது.

புதுப்புது ஆக்கங்களைப் பார்த்து எமது பயிற்சியாளர்களுக்குப் பயிற்றுவிப்பதற்கு இக் கண்காட்சி ஒரு களமாக அமைந்தது.

**திருமதி குகநாதன்**
*கிளிநொச்சி மாவட்டப் போதனாசிரியர்*

எமது பாரம்பரிய கலைகளை ஆழியவிடாது காப்பதற்கு பல கைப்பணி வேலைகளைப் பெண்களுக்கு நாம் பயிற்றுவிக்கின்றோம். அதன் மூலம் பெண்கள் சுயதொழில் வாய்ப்பைப் பெறுவதுடன் தமது தேவைகளை நிறைவேற்றவும் செய்கிறார்கள்.

பெண்கள் வீட்டில் சோர்ந்திருக்காது இப்படியான பயிற்சிகளைப் பெற்றுத் தம்மைத் தாமே முன்னேற்ற வேண்டும்.

**அ.அமிர்தவல்லி**
*மட்டக்களப்பு மாவட்டப் போதனாசிரியர்*

எமது மாவட்டமும் யுத்த சூழ்நிலையை எதிர்கொண்டதே. எனவே, அதைவிட அதிகமாகப் பயந்த சூழலையே யாழ்ப்பாணத்தில் எதிர்பார்த்து வந்தோம். எம்முடன் பயிற்சியாளர்களை அனுப்புவதற்கே பெற்றோர் பயந்தனர். தைரியப்படுத்தி அழைத்து வந்தோம்.

ஆனால், இங்கு வந்ததும் நாம் மனதில் கொண்ட பயம் அடியோடு மறைந்து விட்டது. இடிந்த கட்டடங்களே யுத்தவடுவாக இருக்கின்றது. மற்றபடி யாழ்.மக்கள் சுதந்திரமாகவே வாழ்கின்றதாக எண்ணுகின்றேன். இரவு 9 மணிக்குக் கூட வீதியில் நடமாடக் கூடியதாக இருக்கின்றது.

எமது பாரம்பரிய படைப்புக்களையும் இக்கண்காட்சியில் காணமுடிந்தது மிகச்சந்தோசம்.

## பாவ, இராக தாள ஸாகித்திய......

(VIIபக்கத் தொடர்ச்சி)

போல் இன்னுமோர் அரங்கேற்றம் இனிமேல் வருமா என்ற வினாவுக்கு கொக்குவில் கலாப வனம் விடையளிக்கத் தயாராக வேண்டும் என்பதை, அரங்கம் உணர்ந்தியுள்ளதை திரு மதி சாந்தினி சிவனேசன் அன்று உணர்த்திருக்க வேண்டும்.

ஆம்!

பாடலுக்கு ஆடலா, ஆடலுக்குப் பாடலா என்பதற்குப் பதில் பாடலும் ஆடலும் என்றே கூறமுடியும். இரண்டுமே விஞ்சி நின்ற சிறந்த ஒத்திகைக்குச் சங்கீத ரத்தினம், லயஞான வித்தகர், மிருதங்க விரிவுரையாளர் சின்னத் துரை மகேந்திரன் அவர்களது அற்புதமான லயப்பிரதான வாசிப்பே காரணமாகும். அதற்கிசைந்தாற்போல நட்டுவாங்கமும், அம்ப லவாணர் ஜெயராமனின் வயலின் ஒத்திசைவும் இராதாகிருஷ்ணன் வசந்தனின் வேணுகானமும் அரங்கேற்றத்தினை முழுமைபெறச் செய்தன. பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்களின் தலைமையுரையும் முதன்மை விருந்தினர் பத்மஸ்ரீ அடையார் கே.லஷ்மணன் அவர்களின் காத்திரமான உரையும் சிறப்பு விருந்தி னர்களான கலாநிதி திருமதி மனோன்மணி சண்முகதாஸ், கலாநிதி குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்களது சிறப்பு உரையும் - தேவந்தியின் தரத்தையும், ஸ்ரீமதி சாந்தினி சிவநேசனின் குருந்துவத்தையும் பேரனாகிய அமரர் கலைச்செல்வன் ஏரம்பு சுப்பையா அவர் களது ஆசீர்வாதத்தையும் மேலோங் கச் செய்தது எனலாம்.

மேடையின் அமைப்பு ஆலயச் சூழலை மனக்கண்ணில் நிறுத் திற்று. ஆடல் வல்லானின் திருவுருவத்தைத் தாங்கிய திரை நடுவே இருக்க இருபுறமும் தீபமேந்திய பாவையர்கள் மூலஸ்தானத்திலிருந்து வெளியே வரும் நர்த்த கியை வரவேற்பது போல் மேடை அமைப்புத் திகழ்ந்தது ஆலய முகப்புப் போன்ற இந்த அமைப்பு அரங்கத்தை பக்திமயமான சூழ லுக்கு அமைத்துக் கொடுத்தது.

பிற்பகல் 2.30 மணியளவில் வீரசிங்கம் மண்டபம் களைகட்டிய பெருமிதத்தோடு தன்னை விடுவித்துக் கொண்டது. அடுத்த அரங்கேற்றத்திற்காகக் கலாப வனம்.....?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம்



**நான்** வசிக்கும் ஒழுங்கைக்கு அடுத்த ஒழுங்கையில் அவர் வசிக்கிறார். வீட்டில் மனைவி மட்டுமே அவருக்குத் துணை. ஆண் மக்கள் இருவரும் ஆளுக்கொரு வெளிநாட்டில் தத்தமது மனைவி பிள்ளைகளோடு வசதியாய் வாழ்கின்றனர். இரண்டு மூன்று வருடங்களுக்கு ஒரு முறை தத்தமது குடும்பத்தாரோடு யாழ்ப்பாணம் வந்து ஒரு சில நாள்கள் பெற்றோருடன் தங்கிச் செல்வது பிள்ளைகளின் வழக்கம். மூன்றோ நான்கோ மாதங்களுக்கு ஒரு தடவை பிள்ளைகள் பெற்றோருக்கென அனுப்பி வைக்கும் பணம் அவரது வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும். பெற்று வளர்த்து ஆளாக்கிய பெற்றோர்களுக்கான நன்றிக்கடன் இந்த விதத்தில் தீர்க்கப்படுகிறது போலும்.

சரி, பிள்ளைகளை ஒரு புறம் விட்டு அந்த வயதான பெற்றோரைக் கொஞ்சம் கவனிப்போமா? அவர் உண்மையில் ஒரு வித்தியாசமான மனிதர்தான். யாழ்ப்பாணத்துப் பேச்சு வழக்கில் சொல்ல வேண்டுமானால் படுகஞ்சன்.

இத்தனைக்கும் அவரது மனைவி - அந்த மூதாட்டியோ இன்னொரு ரகம்; எந்தவொரு சந்தர்ப்பத்திலும், கணவரை எதிர்த்துப்பேசத் தெரியாத - கணவரின் கருத்துக்கு எதிர்க்கருத்து கூறத் துணிவில்லாத - அப்பாவி யாழ்ப்பாணத்துப் பெண்.

திருமணம் செய்து வாழ்க்கையை ஆரம்பித்த காலத்தில் வாழ்க்கையை ஓட்டச் சற்றுச் சிரமப்பட்டதால் ''பாவம், ஏதோ கட்டுமட்டாக நடக்க நினைக்கிறார்'' என அண்டை அயலார் கருதியதால் - அனுதாபப்பட்டதால் - அவரது உண்மைச் சொரூபம் - படுகஞ்சத்தனம் - வெளிப்படையாக மற்றவர்களது விமர்சனத்துக்கு உட்பட்டதில்லை. மொத்தத்தில் அவர் 'எச்சில் கையால் காகம் துரத்தாத' - விசித்திரப் பிறவியாக வாழ்ந்ததால் ஊரோடு ஒட்டி வாழ அவர் கற்றுக்கொண்டதில்லை. ஊரார் கூட அவரை அண்டி அரவணைத்து வாழ முன் வந்ததில்லை. மொத்தத்தில் அவர் 'மணலில் சுழலும் தனிப் பம்பரம்.'

பிள்ளைகள் வளர்ந்து வெளிநாடுகளுக்குச் சென்று டொலர் கணக்கில் பணம் கிடைக்கத் தொடங்கியதும் அவரது போக்கிலும் 'பெரிய மனிதத்தனம்' படிப்படியாகத் தலைகாட்டத் தொடங்கியது.

என்னதான் பண வசதி வாய்ப்பு இருந்தாலும் அண்டை அயலார், உறவினர் என சமூகமட்ட விழுதுகளுடன் பின்னிப் பிணைந்து வாழ முன்வராத - சமூக நீதிநியாயத்துக்குக் கட்டுப்பட்டு வாழ முன்வராத - எவரையும், பாரம்பரிய பண்பாடு கொண்ட யாழ்ப்பாணச் சமூகம் அண்டி அரவணைத்து வாழ முன்வராது என்பது காலங்காலமாய் தொடர்ந்து வரும் கலாசாரக் கட்டுக்கோப்பு.

'அற்பனுக்குப் பவிசு வந்தால் அர்த்தராத்திரியிலும் குடை பிடிப்பான்' என்பது முதுமொழி. 'பணத்திமிர்' என யாழ்ப்பாணச் சமூகம் அடையாளப்படுத்தும் வகையில் அந்த மனிதரின் நடத்தைகள் அமையலாயின. அண்டை அயலவர்களை ஒரு பொருட்டாய் மதிக்காது - சின்னச் சின்ன விடயங்களிலெல்லாம் விதண்டா வாதமாய் பேசி - அண்டை அயலாருடன் மல்லுக்கட்டி, போட்டா போட்டிக்கு அவர் முன் நிற்பதைப் பல தடவை நான் அவதானித்துள்ளேன். நீதி நியாயமற்ற

## ஊரோடு ஒத்து ஓடு

அவரது போக்குக்கண்டு அண்டை அயலாரும், தூரத்து உறவினரும் கூட அவரை விட்டுத் தூரஒதுங்கினர்.

இத்தனைக்கும் அவரது மூத்த மகனுடன் ஒன்றாகப் படித்தவன் என்ற காரணத்தால் இடையிடையே நான் அவர் வீடு சென்று சுக நலம் விசாரிப்பதுண்டு. அவரது போக்குக் குறித்து அவரது மனைவி - அந்த மூதாட்டியுடன் நான் பேசிய வேளைகளில் எல்லாம் , ''என்னால் என்ன செய்ய முடியும் தம்பி. இத்தனை காலமாய் திருத்தாத அவர் இனிமேல் தன்னை மாற்றிக் கொள்வார் என்று எதிர்பார்க்க முடியுமா?'' என்று விரக்தியாக அந்த மூதாட்டி பதிலளித்மதுண்டு.

'ஊரோடு ஒத்து ஓடு' என்ற முதுமொழி அலட்சியப்படுத்தப்பட்டால் என்றோ ஒரு நாள் நெருக்கடியையும் சிரமத்தையும் சந்தித்தாக வேண்டி ஏற்படும் என்பது எத்தனை யதார்த்த உண்மை.

ஒரு ஞாயிற்றுக்கிழமை விடுமுறையாதலால் பல நாள் இடைவெளி யின் பின் எனது பள்ளித் தோழனின் பெற்றோரா- அவரையும் அந்த மூதாட்டியை யும் கண்டுபேசிவரப் போயிருந்தேன்.

அப்போது கூட அடுத்த வீட்டுக்காரர்களுடன் மல்லுக்கட்டி சச்சரவுப் பட்டுக் கொண்டிருந்தார் அவர். பிரச்சினை சாதாரணமானதொன்று. அடுத்த வீட்டுக் காரர் எல்லை வேலியைத் திருத்திச் சீர் செய்தமை பிழையானதாம். தமது காணிக்குள் கதியால் போட்டுத் தமது காணியைக் கபளீகரம் செய்ய முயல்கிறாராம்.

இப்படி அடுத்த வீட்டுக்காரர் மீது குற்றம் சுமத்தி, சத்தம் போட்டுக் களேபரம் செய்து கொண் டிருந்தார். அடுத்த வீட்டுக்காரர் எவ்வளவோ பவ்யமாக நியாயத்தை எடுத்துக் கூறியபோதிலும் மனிதர் கொஞ்சம் கூடக் காது கொடுத்துக் கேட்பதாய்த் தெரியவில்லை. 'அந்த வேலியைப் போட முயன்றால் கதியால்களை வெட்டி எறிவேன்' என்று சண்டித்தனம் செய்து கொண்டிருந்தார். எவர் நியாயம் சொல்ல முன் வந்தாலும் அவர் அதனை ஏற்கப் போவதில்லை என்பதால் எவரும் அவர் விடயத்தில் மத்தியஸ்தம் செய்ய முன் வருவதில்லை. 'தான் பிடித்த முயலுக்கு மூன்று கால்தான்' என அடம் பிடிக்கும் ரகம் அவர். கடைசியில் கோடு ஏற நேர்ந்தாலும் அந்த எல்லை வேலியை அந்த விதத்தில் போட அனுமதிக்க மாட்டேன் என்று மல்லுக்கட்டி அடுத்த வீட்டுக்காரரின் முயற்சியைத் தடுத்து நிறுத்திவிட்டார்; அவரது மனைவியிடம் 'நாலுபேர் மதிக்கத் தக்கதாய் நடப்பதுதான் புத்திசாலித்தனம்' என்று மட்டும் கூறி விட்டு நான் புறப்பட்டு வந்துவிட்டேன்.

இன்று காலையில் நான் கேள்விப்பட்ட செய்தி வியப்பளிக்கும் ஒன்றாய் அமைந்தது.

நேற்று நள்ளிரவு வேளை அவருக்குத் திடீரென்று நெஞ்சுவலி. வேதனை தாங்காது துடித்திருக்கிறார். பாவம் அவரது மனைவி; அந்த வேளையில் தனித்து அந்த மூதாட்டியால் என்ன செய்து விடமுடியும்? அந்த மூதாட்டியின் கூக்குரல் கேட்டு அண்டை அயலார் எவருமே என்ன? ஏது? என்று கேட்க முன்வரவில்லை. கடைசியில் அந்த மூதாட்டியின் பரிதாப நிலைக்கு இரங்கி, அடுத்த வீட்டுக்காரரே முன்வந்து 'ஓட்டோ' பிடித்து வந்து அவரை வைத்தியசாலையில் கொண்டு போய் அனுமதித்தாராம்.

'நல்ல வேளை; சரியான நேரத்தில் கொண்டு வந்து அனுமதித்ததால் அவரைக் காப்பாற்ற முடிந்தது. தாமதித்திருந்தால் உயிருக்கே ஆபத்து ஏற்பட்டிருக்கும். அவருக்குச் சிகிச்சையளித்த டாக்டர் தெரிவித்த கருத்து இது.

கேள்விப்பட்டும் தவிர்க்கக் கூடாதென எண்ணி இன்று மாலையில் அவரைப் பார்க்க வைத்தியசாலைக்குச் சென்றிருந்தேன். உரிய சிகிச்சை உரிய வேளையில் கிட்டியதால் அவர் தெம்புடன் காணப்பட்டார்.

'ஆபத்து வேளையில் உற்றார், உறவுகள் உதவிக்கு ஓடிவர இயலாது. அண்டை அயல்தான் ஆபத்துக்கு உதவும்' அடுத்த வீட்டுக்காரருடன் வேலி போடுவதில் தகராறு பட்டுக்கொண்ட அவரது சின்னத்தனம் மனதில் உறைக்கட்டுமேயென்ற எண்ணத்தில் இவ்வாறு சொல்லி வைத்தேன்.

வைத்தியசாலைக் கட்டிலில் படுத்திருக்கும் நிலையிலும் அவர் சொன்ன பதில் என்னைத் திகைப்படைய வைத்துவிட்டது. 'உதுக்காகச் சும்மா விட்டிடுவன் என்று நினைக்கவேண்டாம். கோடு ஏறினாலும் சரி, அந்த வேலியை அப்படி அரக்கிப் போட்டு என்னுடைய காணியைப் பிடிக்க விட்டிட மாட்டான்'

நாலு பேரை வேணுமென்று நடக்க வேண்டும் என்று நான் கூறியதன் அர்த்தம் இப்போது கூட இந்த மனிதருக்குப் புரிய வில்லையே என்று எண்ணி மனது வேதனைப்பட்டது. உயிரிழந்த உடலத்தை மயானத்துக்குக் காவிச்செல்வதற்கு அந்த நாலு பேர் - வெறும் ஒப்புக்காக, வேண்டாவெறுப்பாக அன்றி - உண்மையில் அந்த இழப்புக்கு மனம் வருந்தித் தாமாக விரும்பி முன்வந்து தோள் கொடுத்துத் தூக்கிச் செல்லத்தக்க விதத்தில் சமூகத்தை மதித்து - சமூகத்துடன் கூடிவாழ முயல்வதே மனிதத்துவப் பண்பு என்பதை இவரைப் போன்றோர் எப்போது புரிந்து கொள்ளப் போகிறார்கள்?

இவரைப் போன்றோர் சமூகத்தில் விஷ விருட்சங்கள், இவர்கள் ஒரு போதும் திருந்தவே போவதில்லை.

நாய் வாலை ஒருபோதும் நிமிர்த்திவிட முடியாது என்று சும்மாவா சொல்லி வைத்தார்கள்.

**— பொன்வேளன்**

> வாராந்தம் வெளியாகும் இப்பத்தியில் குறிப்பிடப்படும் பாத்திரங்கள் எவையும், தனிப்பட்ட முறையில் எவரையும் சுட்டுவதில்லை. [ஆ-ர்]

## கடுகுக்கதை

## பாடம்



சோமசுந்தரம் ஆசிரியர் வகுப்புக்கு வந்தவுடன் ஏதாவதொரு சிந்தனைக் கதையைச் சொல்லி மாணவர்களை உற்சாகப்படுத்திவிட்டே பாடத்தைத் தொடர்வார்.
நாற்பது நிமிடநேரம் கடப்பதே பல மாணவர்களுக்குத் தெரியாமலிருக்கும். அவ்வளவு சுவையாகப் பாடம் புகட்டப்படும். அது அவரது பாணி.
வழமைபோல் பாடம் தொடங்கியது.
"சேர் கதை------------கதை சொல்லுங்கோ சேர்"
எல்லா மாணவர்களும் ஒருமித்துக் குரல் கொடுத்தார்கள்.

அமைதி!
"பக்கத்திலை வகுப்பு நடக்குது; இப்பிடிச் சத்தம் போட்டால் அந்தப் பிள்ளையள் எப்படிப் படிக்கிறது"
"நான் இண்டைக்குக் கதை சொல்லமாட்டன்"
"சேர்------சேர்"
"உங்களிட்டை ஒரு கேள்விதான் கேட்கப் போறன்"
"கேளுங்கோ சேர்"

"கடவுள் உங்களுக்கு முன்னாலை தோன்றினால் என்ன கேட்பியள் ??"
(சிறிது நேரம் அமைதி நிலவுகிறது)
துவாரகன்-----??
"நான் நல்லாப் படிச்சு வைத்தியராகி என்ரை தமிழ் மக்களுக்கு சேவை செய்ய அருள்தா" என்று வேண்டுவன்.
அனித்தா-----???
"பதினாறும் பெற்று சுகவாழ்வு வாழ வேண்டுவன்"
சுலோசன் ----???
"நுளம்பை ஏன் படைச்சாய் எண்டு கேட்பன்; ஏனெண்டா சேர்; நாங்கள் வன்னியிலை இடம்பெயர்ந்து இருக்கேக்கை எங்கடை அப்பா மலேரியா வந்துதானே செத்தவர்" (எல்லாப் புருவங்களும் ஏக்கத்துடன் உயர்ந்தன.)
நிற்றா----???
"சேர்! எங்கடை அம்மா சொன்னவா கண்ட படி ஒருத்தரோடையும் கதைக்கக் கூடாதென்று அதனால் நான் பேசாமல் போயிடுவேன்"
என்றாள் அப்பாவியாக.
எல்லோரும் அடக்கமுடியாமல் சிரித்து விட்டார்கள்.
கவிதன்-----???
"தமிழனாக என்னை ஏன் படைச்சாய்" எண்டு கேட்பன்
ஏனப்பன் ---??
சேர் உங்களுக்குத் தெரியாது.
காலைச் சாப்பிட்டிற்கு பாண் வாங்க கடைக் குப்போன அப்பா பயங்கரவாதியென்று கஞத்துறைச் சிறையிலை-----
பள்ளிக்குப்போன அண்ணாவை எழுதுமட்டு வாழிலை வெட்டிப் புதைச்சுப் போட்டாங்கள்.
அவனைக் கொண்டுதான் கிடங்கே வெட்டுவிச்சவங்களாம்---- எவ்வளவு சித்திரவதை நடந்திருக்கும்??" அம்மா மந்திகை ஆஸ்பத்திரியிலை நிரந்தர மனநோயாளி----
அக்காவுக்கும் எனக்கும் அநாதைப் பட்டம்!
அவள் சித்தப்பாவோடை-------
நான் மூத்த மாமியோடை----
நீங்களே சொல்லுங்கோ சேர்; கடவுள் உண்மையில் இருக்கிறாரா???
[illegible]
எல்லோரது முகங்களும் சோகத்தால் இறுகின!!

- ந.வினோதரன்

### சர்வதேச அழுத்தங்களையும் மீறி......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்காலம் கேள்விக்குரியதொன்றாக மாறியுள்ளது. உத்தியோகபூர்வமாகப் போர் நிறுத்த உடன்பாட்டிலிருந்து விலகிக் கொள்வதாகத் தெரிவிக்கும் நிலைவரை நிலைமை தீவிரமடைந்துள்ளது. இடம்பெற்றுவந்த நிழல் யுத்தம், உண்மையான, வெளிப்படையான யுத்தமாக மாற்றமுறும் ஏதுநிலை உருவாகி வருகின்றது. அந்த நிலை நாளுக்கு நாள் தீவிரமடைந்து வருவதாகக் கருத வேண்டியுள்ளது. கடந்த காலத்தில் சர்வதேச மற்றும் பிராந்திய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட அழுத்தங்களையும் மீறி மீண்டும் யுத்தமொன்று வெடிக்கும் அபாய நிலை உருவாகி வருவது ஆச்சரியமானதொன்றல்ல.

கடந்த மூன்றரை வருடகால அமைதிச் சூழலின் உண்மையான வரலாறு இதுவாகும். இந்த அமைதி நிலவிய காலப்பகுதியில் சமாதானத்தை எட்டுவதற்கான உற்சாகம் பாதிப்புக்கு உள்ளாக்கப்பட்டமைக்கும், போர் நிறுத்த உடன்பாட்டுக்குப் பின்னடைவுகள் ஏற்படுத்தப்பட்ட மைக்கும் தமிழர் தரப்பு மீது எந்த வகையிலும் பொறுப்பைச் சுமத்தி விட முடியாது. அதற்கான முழுப்பொறுப்பும் சிங்களப் பேரினவாதத் தரப்பினுடையதே.

**தமிழர்களின் வெற்றி அண்மிக்கிறது**

ஜயந்த தனபாலவின் அண்மைய நடவடிக்கைகள் 'முழுப் பூசணிக் காயைச் சோற்றில் மறைக்க முயலும் செய்கையை ஒத்ததாகும். இவ்வித அணுகுமுறை ஒரு போதும் நிரந்தர வெற்றியைப் பெற்றுத் தரப் போவதில்லை.

உண்மையான - இதய சுத்தியுடனான - நியாயபூர்வமான முயற்சிகளே கடைசியில் வெற்றியை ஏற்படுத்தவல்லது என்பது யதார்த்த உண்மையாகும்.

தமிழர் தரப்பின் வெற்றிக்கு நீண்ட காலம் செல்லப்போவதில்லை என்பது எனது நம்பிக்கை மட்டுமன்றி, நாட்டின் அரசியல் நிலைவரங்களை உன்னிப்பாக அவதானித்து வரும் புத்தி ஜீவிகளின் நம்பிக்கையுமாகும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org